

# நூற்றாண்டு விழா

## 1914-2014



# சதவிழுது

## கிளி / வேரவில் இந்து மகாவித்தியாலயம்

## கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி / வேரவில் இந்து மகாவித்தியாலயம்

பொது நூலகம்
பல்லவராயன்கட்டு, பூநகரி

எல்லாம் அறிவுடையார் உடையார்

ஆரம்பம் 1949

வேரவில் இந்து ம.வி

## நூற்றாண்டு விழா மலர்

1914- 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/ வேரவில் இந்து மகா வித்தியாலய
# நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்


நூலின் பெயர் : சதவிழுது

பக்கங்கள் : 154

அச்சுப்பதிப்பு : வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

வெளியீடு : பாடசாலை மலர்க்குழு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்க் குழுவினர்

தலைவர் : திருமதி ப. சோதிலிங்கம் (அதிபர்)

மலர் தொகுப்பாசிரியர் : திரு. சபாரத்தினம் லதீஸ்குமார்

**மலர்க்குழு உறுப்பினர்கள்**

திருமதி அ. அரிச்சந்திரன்
செல்வி. செ. சுகிர்தா
திரு.ந. செந்தூரன்
திரு. சி.ஆறுமுகதாசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது வித்தியாலயத்தின்
## மகுட வாக்கியம்
## "அறிவுடையார் எல்லாம் உடையார்"

## Vision (நோக்கக்கூற்று)

உலக சவால்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய ஒழுக்கம், அறிவு, ஆளுமை, மானிடப்பண்பு மிளிரும் நற்பிரஜைகளை உருவாக்குதல்

## Mission (பணிக்கூற்று)

தான் சார்ந்த சமூகத்திற்கும் நாட்டிற்கும் உலக ஒழுங்கிற்கும் ஏற்ற நற்பிரஜைகளாக இருப்பதற்குரிய அறிவு, திறன், மனப்பாங்கை பெறக்கூடிய கல்வியை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அதிபர்




திருமதி. பரமேஸ்வரி சோதிலிங்கம் (B.A, Dip Ed, SLPS 2-II)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

இணையில்லாத வேரவிலில் இலங்கு கல்விக்கூடம்
இருள் அகற்றும் இந்து மகா வித்தியாலயம் வாழி
( இணையில்லாத வேரவிலில்...)

செந்நெல் விளை களனிகளும் சிறந்த கடல் வளமும்
தென்னை பனை சேர்ந்து பசும் சோலை அது விளங்கும்
( இணையில்லாத வேரவிலில்...)

கணித விஞ்ஞானமுடன் சமூகக்கல்வி தனையும்
அணியுடைய தமிழ்மொழியும் விவசாயம் உடனே
தணிவில்லாது பல்கலையும் ஒல்லையினில் பெறுக.
( இணையில்லாத வேரவிலில்...)

ஆரமுதை அள்ளித்தரும் அதிபர் ஆசிரியர்
வாரமுடன் வழிநடத்தும் வலயப்பணி மனையும்
பேரன்பின் பெற்றோர்கள் மாணவர்கள் உடனே
வேரவில் இந்துமகா வித்தியாலயம் வாழி
வித்தியாலயம் வாழி
வித்தியாலயம் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/ வேரவில் இந்து மகா வித்தியாலயம்

| | |
|---|---|
| வித்தியாலயத்தின் பெயர் | : கிளி / வேரவில் இந்து மகா வித்தியாலயம் |
| பாடசாலையின் ID இலக்கம் | : 1104004 |
| பாடசாலை மதிப்பீட்டு இல | : 10014 |
| மாகாணம் | : வடமாகாணம் |
| மாவட்டம் | : கிளிநொச்சி |
| வலயம் | : கிளிநொச்சி |
| கோட்டம் | : பூநகரி |
| கிராம சேவையாளர் பிரிவு | : பொன்னாவெளி KN/ 76 |
| பாடசாலையின் தரம் | : 1C |
| பாடசாலை முகவரி | : வேரவில் பூநகரி |
| தொலைபேசி இல | : 021320 8219 |
| மின்னஞ்சல் முகவரி | : Veravilhindu@hotmail.com |
| இலங்கை அதிபர் சேவை | : 1 |
| இலங்கை ஆசிரியர் சேவை | :21 |
| சிற்றூழியர் | : 02 |
| மாணவர் | :380 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


## வாழ்த்தியல்

| | |
|---|---|
| 1. ஆசிச்செய்திகள் | IX - XI |
| 2.வாழ்த்துச் செய்திகள் | XII- XXX |
| 3.முன்னுரை | XXXI - XXXII |

## பதிவியல்

| | |
|---|---|
| 1. வரலாற்று நோக்கு.... | 1-19 |
| 2. வித்தியாலய அதிபர்..... | 20 |
| 3. வித்தியாலய ஆளணியினர்... | 21 |
| 4. காலப்பதிவுகள் | 22 |
| 5. வித்தியாலய பழைய ஞாப..... | 23-25 |
| 6. எண்பதுகளின் நடுப்..... | 26-28 |
| 7. மாணவனாயிருந்த போது... | 29-30 |
| 8. நிழல்கள் | 31 |
| 9. அரசோடு என்னை... | 32-33 |
| 10. எனை ஏற்றி வைத்த ஏணி... | 34-36 |

## பொதுவியல்

| | |
|---|---|
| 1. மனிதன் மனிதனா.. | 37-39 |
| 2. விஞ்ஞானம் கற்பத..... | 40-41 |
| 3. சமூக வலைத்.... | 42-43 |
| 4. சொல்லுமையா.. | 44 |
| 5. தமிழ் மொழியை.... | 45-47 |
| 6. பாடசாலையில் பண்பாட்... | 48-50 |
| 7. பள்ளியே அவள் குடும்.... | 51-52 |
| 8. Advantages.... | 53 |
| 9. ஆசிரியர்கள்... | 54-56 |
| 10. மனித வாழ்வின்... | 57 |
| 11. நண்பர்கள் | 58 |
| 12. How To .... | 59-60 |
| 13. ஆபிரகாம் லிங்க... | 61-62 |
| 14. விசேட தேவையுடைய... | 63-67 |
| 15. கல்வியும் பாடசாலை... | 68-72 |
| 16. பிள்ளைகளுக்கு கற்பித்த... | 73 |
| 17. தகவல் தொழில்நுட்பம்.. | 74-76 |
| 18. என் பாடசாலை | 77 |
| 19. சிறந்த மாணவர்களே... | 78 -79 |
| 20. இந்து சமூக சீர்... | 80-81 |
| 21. உலக மயமாதல்.. | 82-86 |
| 22. பிள்ளையின் சமூக ... | 87-89 |
| 23. மானிடமே... | 90-91 |
| 24. உலகின் சனத்தொகை.... | 92-94 |
| 25. ஆளுமை | 95-97 |
| 26. என்னதான் மிஞ்சும்.. | 98 |
| 27. நனோ உயர்... | 99 |
| 28. வாழ்த்துவோம் இந்துவை.. | 100 |
| 29. ஈழத்துக் கவிதை நோக்கு... | 101-105 |
| 30. புதிய சிந்தனை.. | 106 |
| 31. நான் விரும்பும்... | 107-108 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சின்மயா மிஷன்**
**9, செட்டித்தெரு ஒழுங்கை,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

## ஆசிச்செய்தி

கிளிநொச்சி மாவட்டத்திலே வேரவில் கிராமத்திலே கல்விப்பணி எனும் அறப்பணியை ஆற்றி வருகின்ற வேரவில் இந்து மகா வித்தியாலயம் தனது நூற்றாண்டை இவ்வருடம் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது. கல்விப்பணி மூலமாக சனாதன தர்மத்தை வன்னியிலே வளர்த்து வருகின்ற வித்தியாலயமாகத் திகழ ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

இறைபணியில்

ஜாக்ரத சைதன்யா,
வதிவிட ஆச்சாரியார்,
சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்ரனி வின்சன் சில்வேஸ்ரர்தாஸ்
பங்குத்தந்தை
தூய அன்னாள் ஆலயம்
வலைப்பாடு.

# ஆசிச் செய்தி

**கல்விப்பணியில் நூறு ஆண்டுகளைக் கடந்து விழாக் கொண்டாடும் கிளி /வேரவில் இந்து மகா வித்தியாலய குழுமத்தை வாழ்த்தி, பாராட்டி வெளியிடப்படும் நூற்றாண்டு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.**

வலைப்பாடு, வேரவில், பொன்னாவெளி, கிராஞ்சி ஆகிய நான்கு பெரிய கிராமங்களை உள்ளடக்கி வசதி வாய்ப்புக்கள் அற்ற நிலையில் தனது கல்விப்பணியை ஆரம்பித்து இன்று வரைக்கும் குறிப்பிட்டு சொல்லக் கூடிய வசதிகளற்ற நிலையில் கல்விப்பணியை சிறப்பாக ஆற்றி, வறிய மாணவர்களின் உயர்ச்சிக்கும், இந்தச் சமூகத்தின் எழுச்சிக்கும், இப்பாடசாலை ஒரு கருவியாக இருக்கின்றதை நினைத்து மகிழ்வடைகின்றேன். கல்விப் பணியோடு இறைபக்தி, கலை, பண்பாடு, விளையாட்டு தெளிவான எதிர்நோக்கு என்பவற்றை முன்னிலைப்படுத்தி மாணவர்களை வளப்படுத்தி வழிப்படுத்துவதும் இப் பாடசாலையின் சிறப்பம்சமாக கருதப்படுகின்றது.

இக் கட்டான சூழ்நிலைகளிலும் நகர்புறப் பாடசாலைகளோடு போட்டி போடக்கூடிய அளவிற்கு அதனையும் விஞ்சும் அளவிற்கு இப்பாடசாலையின் வெளியீடுகளும், செயற்றிறன்களும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

எனவே இனிவரும் காலங்களிலும், வரும் எத்தடைகளையும் தாண்டி, உயரிய இலட்சியத்தோடு பயணித்து, நிகழ்கால , எதிர்கால சமூகத்தின் விடிவிற்கு கதிரவனாக செயற்பட இறை அருள் கேட்டு, இந்நூற்றாண்டு விழாவில் களிகூரும் இப் பாடசாலையின் முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் வாழ்த்தி ஆசித்து நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாச்சாரியார் திலகம்,
சிவஸ்ரீ ஜெக ஜெகதீஸ்வரக்குருக்கள்
ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்,
குமரபுரம் பரந்தன்.

## ஆசிச் செய்தி

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்"


என்பதற்கிணங்க கொஞ்சும் மழலைச் செல்வங்களின் விடியலுக்காக விழுதாக நின்று தாய்மடி சுமந்த செல்வங்களை தம்மடி சுமந்து கற்பவை கற்க ஆவன செய்து நல்வழி காட்டி நானிலம் போற்றி நிற்கும், கிளிநொச்சி வேரவில் மகா வித்தியாலயம் ஆனது இன்று நூறாவது அகவையில் காலடி வைத்து ஒரு சதாப்தத்தை எட்டி நிற்கின்றது என்பது மிகவும் பெருமைக்குரிய விடயமாகும். அரிச்சுவடி முதல் உயர்கல்வி வரை மாணவர்களை புடம்போட்டு பாரிலே சிறந்த கல்வி மான்களாக மிளிர, வழி செய்யும் பணி அளப்பரியது. இப்பொன்னான நன்நாளில் இம்மலருக்கு ஆசி வழங்குவதில் பெரிதும் உவகையடைகின்றேன்.

மலரும் மலர்கள் சகல துறைகளிலும் விடிவெள்ளியாக மிளிர்வார்கள் என்பது "உள்ளங்கை நெல்லிக்கனி" போன்றது. இப்பள்ளி மென்மேலும் வளர்ச்சி பெற்று உண்மைக்காகவும், உயர்வுக்காகவும் உழைக்கும் செல்வங்களை அறுவடை செய்ய வேண்டும் என்பதே எனது பேரவா, இச்செல்வங்களை தாங்கி ஆலமரம் போன்று கிளைபரப்பி ஒய்யாராமாக வீற்றிருக்கும் மகா வித்தியாலயம் மேலும் பல தலைமுறைகள் கடந்து சிறப்பான சேவையாற்ற எல்லாம் வல்ல வேரவில் வெள்ளிப்பள்ளத்து விநாயகனை வணங்கி எனது ஆசிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணசபை
யாழ்ப்பாணம்.

# வேரவில் இந்து மகாவித்தியாலயம் நூற்றாண்டு விழா மலருக்கான ஆசிச்செய்தி [1914–2014]

பூநகரிப்பிரதேசத்தில் மிகவும் வசதிகள் குறைந்த வேரவில் பகுதியில் அமைந்துள்ள வேரவில் இந்து மகாவித்தியாலயம் கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கான தாய்ப் பாடசாலையாக அமைந்துள்ளதுடன் கடந்த நூறு வருடங்களாக இப்பகுதி மாணவர்களுக்கான சிறந்த கல்விச் சேவையினை வழங்கி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அதன் நூற்றாண்டு விழா மலருக்கான ஆசிச்செய்தி ஒன்றினை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

போக்குவரத்து மற்றும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இக்கல்லூரியின் மாணவச்செல்வங்களுக்கு தம்மாலான கல்விச்சேவையினை வழங்குவதற்காக தூர இடங்களில் இருந்து இங்கு வந்து கல்வி கற்பித்துக்கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர்களை மனநிறைவுடன் பாராட்டுகின்றேன்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற ஔவைப்பிராட்டியின் கூற்றுக்கு அமைவாகச் சிறந்த கல்வியறிவை வழங்கி எதிர்காலத்தில் இம்மாணவர்கள் ஏனைய பிரதேசங்களுக்கீடாக கல்வியில் தலைநிமிர்ந்து நிற்பதற்கு ஆசிரியர்களாகிய நீங்கள் அனைத்து வளங்களையும் முழுமையாகப் பிரயோகித்து இம்மாணவர்களை முதல் நிலைக்கு கொண்டு வரவேண்டுமென வினையமாக வேண்டி இக்கல்லூரி பல வகைகளிலும் சிறப்புற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணசபை
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வேரவில் இந்து மகா வித்தியா லயத்தில் நூற்றாண்டு விழா மலரிற்கு வடக்கு மாகாணசபையின் கல்வி அமைச்சின் சார்பாக வாழ்த்துக்களை வழங்குவதிலே பெருமிதம் அடைகிறேன்.**

1914 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 14 ம் திகதி திரு. ச. செகநாதன், திரு. மு.தில்லைநாதன் என்பவர்களால் வேரவில் முத்துக்குமாரசாமி வித்தியா சாலைக்கு, முத்துக்குமாரசாமியினுடைய ஆரம்ப பிரவேச கொண்டாட்டம் பற்றிய , யாழ்ப்பாணம் சுகுண யந்திரசாலையில் அச்சிடப்பட்ட அழைப்பிதழ் பிரதி நூறு ஆண்டுகள் பதிவு செய்துள்ளது என்ப தனை குறிப்பிட விரும்புகிறேன்.

முத்துக்குமாரசாமி வித்தியாசாலை யாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை இன்று வேரவில் இந்து மகா வித்தியாலயமாக மாறி இப்பிரதேச மக்களுக்கு பெரும் சேவையாற்றி வருகிறது என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

கடலும் கடல் சார்ந்த நிலங்களிலும் எமது மூதாதையர் ஊன்றி வேர் பதித்து மக்கள் கூட்டத்தினராய் சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்கள் என்பதற்கு இப்பிரதேசம் ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது.

தமிழருடைய பாரம்பரிய கலைகளை இன்னும் இங்கே பேணிக் காக்கிறார்கள். அகழ்வா ராச்சிகள் பல செய்யப்பட வேண்டிய பண்பாட்டுக் கோலங்களை கொண்ட ஓர் எழில் கொஞ்சும் கிராமமாகும்.

இப்பகுதியின் பள்ளி நூற்றாண்டைக் காணும் போது சுற்றுவட்டாரத்தினர் அனைவரும் எமது பாரம்பரியங்களையும் வரலாற்றையும் இவ் நூற்றாண்டு வைபவத்தி னூடாக அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

நூறோடு நூறாக இன்னும் பல்லாண்டு காலம் வேரவில் மக்களுக்கு கல்விப் பணியாற்ற வேரவில் இந்து மகா வித்தியா லயத்தை பாராட்டி வாழ்த்துகிறேன்.

த. குருகுலராசா
கல்விப் பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகேசு சந்திரகுமார்
பாராளுமன்ற உறுப்பினரும்,
பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவரும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூத்த பாடசாலைகளில் ஒன்றான வேரவில் இந்து மகா வித்தியாலயம் தற்போது நூற்றாண்டு விழா கொண்டாடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். வரலாற்றுச் சிறப்பும் பாரம்பரியமும் மிக்கது பூநகரிப்பிரதேசம்.

அதிலும் பொன்னாவெளி என்ற தொல்குடியிருப்பு வரலாற்றுக்கு முற்பட்ட காலச்சிறப்பைக் கொண்டது. இந்தப் பொன்னாவெளிப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் வேரவில் இந்து மகா வித்தியாலயம் இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் சிறப்பான வாழ்விற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றது. **இந்த வகையில் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வேரவிலில் ஒரு பாடசாலையை அமைக்க வேண்டும் என்ற சிந்தனையும், அவசியமும் ஏற்பட்டது.**

# நூறாவது அகவையில் வேரவில் இந்து...

இதனால் இந்தப் பகுதியில் வாழ்ந்த மக்களின் முயற்சியினாலும் கல்வியின் மீது அவர்கள் கொண்டிருந்த உயரிய மதிப்பினாலும் இங்கே இந்தப் பாடசாலை உருப்பெற்றது.

பிரித்தானியருடைய ஆட்சிக்காலத்தில் எழுச்சியடைந்த கல்வி மீதான நாட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கடந்து வேரவில் என்ற சிறு கிராமம் வரை வியாபித்தது மகிழ்ச்சிக்குரியதே. அப்பொழுது வேரவில் பிரதேசத்தில் இருந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த சைவப்பிரகாச வித்தியாசாலையினருடன் தொடர்புகொண்டு தமது பகுதியிலும் ஒரு பாடசாலையை அமைக்கவேண்டும் எனச் சிந்தித்து இந்தப் பாடசாலையை ஸ்தாபித்ததாக அறியமுடிகிறது. இதன்படி 1914ஆம் ஆண்டு புரட்டாதிமாதம் 14ம் திகதி இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின்னரான நூறு ஆண்டு காலப்பகுதியில் இந்தப் பாடசாலையும், இந்தப் பிரதேச மக்களும் பல இன்னல்களையும் இடப்பெயர்வுகளையும் சந்திக்கவேண்டி இருந்தது. ஆனாலும் பாடசாலையின் இயங்குநிலையைத் தொடர்ந்தும் பேணினர். இவ்வாறு தொடர்ச்சியாக இயங்குநிலையை பேணியதன் நிமித்தமாக இப்பொழுது நூற்றாண்டு விழாவை பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் கொண்டாடக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக இந்தப் பாடசாலையின் உருவாக்கத்துக்கும், வளர்ச்சிக்கும் உழைத்த அனைவரையும் நினைத்துப் பார்க்கிறேன். அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். தற்பொழுது வேரவில் இந்து மகாவித்தியாலயம் நூற்றாண்டு விழாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொட்டி அனைத்து வளங்களையும் உள்ளடக்கிய பாடசாலையாக விளங்கு வதற்கு நாம் ஏற்பாடுகளைச் செய்திருக்கி றோம். புதிய இடத்தில் இயற்கை வளம் பொருந்திய அழகான சூழலில் மிகப் பிரமாண்டமான கட்டடத் தொகுதிகளுடன் இந்தப் பாடசாலையை வளமாக்கியிருக் கிறோம். இதேவேளை வேரவில், வலைப்பாடு, கிராஞ்சி உள்ளடங்கலான பொன்னாவெளிப் பிரதேசத்தை முழுமை யான அளவில் பௌதீக வளங்களை நிறைவு செய்து மக்களின் வாழ்வை மேம்படுத்தி வருகிறோம். மின்சாரம், போக்குவரத்து உள்ளடங்கலான அத்தியாவசிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் போதே மக்கள் தங்கள் பிரதேசங்களில் குடியமர்ந்து தமது பிரதேசத்தையும், பாடசாலையையும் வளமாக்க முடியும். இந்த ஜதார்த்த உண்மையின் அடிப்படையில் செயற்பட்டதன் பயனாக நூற்றாண்டு விழாக்காணும் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தப் பாடசாலை மனநிறைவு தரும் நிலையைப்பெற்றுள்ளது. இது அனை வருக்கும் மகிழ்ச்சியான ஒரு நிலையாகும். இந்த நிலையை மேலும் சிறப்புற வைப்பதற்கு போதிய ஆசிரிய வளம் நிறைவுசெய்யப்பட வேண்டும். கல்வி மற்றும் மாணவர்களின் ஏனைய ஆற்றல் மற்றும் வினைத்திறன்களில் உயர்நிலையை எட்டுவதற்கு உழைக்க வேண்டும். நாம் முழுநிறைவான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு ஆற்றிவரும் பங்களிப்பில் கல்வியை முதல் நிலைப்படுத்தியுள்ளோம். வேரவில் இந்து மகா வித்தியாலயம் கிளிநொச்சி மாவட்டத்தில் மூத்த பாடசாலை என்ற வகையில் எமது கூடுதல் கரிசனை யைக் கொண்டுள்ளோம். நூற்றாண்டு விழாவிற்கு எனது வாழ்த் துக்கள்.

நன்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், வளப்பாசிரியருடன்
தரம் 13 கலைப்பிரிவு மாணவர்கள்



பாடசாலை மாணவத் தலைவர்கள் – 2014



பழைய மாணவர் சங்கம் – 2014



வலைப்பந்தாட்ட அணி – 17 வயது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூற்றாண்டு காணும் கிளிநொச்சியின் சொத்து

சிவஞானம் சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
கிளிநொச்சி.

**கிளிநொச்சி** மாவட்டத்தில் பெருமை கொள்ளும் பள்ளித்தலங்களில் ஒன்றாக இருக்கக்கூடிய கிளிநொச்சி பூநகரி மண்ணின் பெருமையாக இருக்கக்கூடிய கிளிநொச்சி வேரவில் இந்து மகா வித்தியாலயம் நூறு அகவை காண்பதையிட்டும் அதன் வரலாற்று மகிழ்வில் பங்கு கொள்வதையிட்டும் நான் மிக மகிழ்ச்சி அடைகின்றேன். கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி மண் தன்னுள்ளே தமிழர் வரலாற்று பொக்கிஷங்களைக் கொண்டுள்ளது.தமிழர் வரலாற்றை தேடுகின்றவர்கள் பூநகரி மண்ணின் வாசனையை நுகராது போகமுடியாது. ஈமத்தாழிகளையும் கோட்டை கொத்தளச் சுவடுகளையும் தாங்கி நிற்கும் இத்தகு மண்ணில் கல்வி எனும் சிந்தனையால் காலூன்றி இன்று அகன்று விரிந்த பள்ளியாக இருக்கும் வேரவில் மகா வித்தியாலயத்தின் தடங்கள் எப்போதும் பிரமிப்பு மிக்கவையாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. 1914ல் உருவாகி ஆரம்பத்தில் முத்துக்குமாரசாமி வித்தியாலயமாக இருந்து பின் வேரவில் மகா வித்தியாலயமாக உயர்ந்து இன்று அதிபர் திருமதி . பரமேஸ்வரி சோதிலிங்கம் அவர்களின் உயரிய வழிநடத்தலில் திறம்பட இயங்கி வருவதை நான் அறிவேன். கிளிநொச்சியின் ஒரு தாய்ப்பாடசாலைக்கு ஒரு பெண் அதிபராக இருப்பது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தருகின்றது வேரவில் மகா வித்தியாலயம் சுற்றியுள்ள கிராமத்து பிள்ளைகளின் எதிர்கால ஒளியாக வழிகாட்டியாக கலங்கரையாக திகழ்கின்றது. ஒரு நூறு வருட காலத்தில் இந்தப்பள்ளித்தாய் பெற்றெடுத்த பிள்ளைகள் எத்தனை எத்தனை அவர்களில் வல்லவர்கள் நல்லவர்கள், தியாகிகள் என எத்தனை எத்தனை பேர் அத்தனை பேரின் பெருமையில் கிளிநொச்சி வேரவில் மகாவித்தியாலயம் நிமிர்ந்து நிற்பதை மனதார காணமுடிகின்றது. இது நல்ல தருணம் இந்தப் பாடசாலையின் வரலாற்றுத் தடத்தில் நடந்த அந்த அற்புதமான மனிதர்களை நினைத்துப்பார்க்க நல்ல வாய்ப்பு. அவர்களை வணங்கவும் புகழவும் பெருமைக்குரிய தருணம். இந்தத் தருணத்தில் நானும் உங்களோடு இணைந்துகொள்கின்றேன். இந்தப்பள்ளியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் என் நூற்றாண்டு தின வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

**தாய்மொழி மூலம் தமிழையும் சைவத்தையும் வளர்த்து வருகின்ற பாடசாலைகளில் கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலயம் குறிப்பிடத்தக்கதாக விளங்குகின்றது.**

இப்பாடசாலை ஆரம்பித்து நூறுவருடங்களைக் கடந்துள்ளமைக்காக எடுக்கப்படும் விழா இக்கிராமத்திற்கே உரியவிழாவாகும்.

தற்காலிக வகுப்பறைகளில் கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்ட மாணவர்களுக்கு தற்போது அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிரந்தர வகுப்பறைகள் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என நம்புகின்றேன். மாணவர்கள் தமக்குக் கிடைக்கும் சொற்ப வளங்களைப் பயன்படுத்தி உச்சப்பயன்களைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

இந்நூற்றாண்டு தினத்தையொட்டி வெளிவருகின்ற மலரின் மூலம் மாணவர்கள் பெற்றுள்ள வெற்றிகள், சாதனைகள் என்பவற்றைப் பாராட்டி மகிழ்கின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு அனர்த்தங்களுக்கு மத்தியிலும் தன்னை நிலைநிறுத்தி நூறு ஆண்டுகளைக் கடந்து வெற்றிகரமாக வீறுநடை போட்டுவரும் வேரவில் இந்து மகாவித்தியாலயத்தின் மலர் வெளியீடு சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்களை வழங்கியமைகின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. றூ. கேதீஸ்வரன்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலகம்
கிளிநொச்சி மாவட்டம்.

# ஆசிச் செய்தி

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே சிறந்து விளங்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சைக் கம்பளங்கள் விரித்தாற் போன்று பச்சைப் பசேலென காட்சியளிக்கும் அழகிய நெற்களனிகளால் சூழப்பெற்ற மருதநிலச் சோலைகளும் நெய்தலும் வளம் கொழிக்கும் இயற்கை எழில் கொண்ட பழைய கிராமமாக விளங்குவது வேரவில் கிராமமாகும்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வேரவில் கிராமத்தில் 1914/09/14 ம் திகதி இந்து போட் சபையினால் வேரவில் முத்துகுமாரசாமி வித்தியாசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு 1949 இல் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட கிளி/ வேரவில் இந்து மகா வித்தியாலயம் படிப்படியாக தனது கல்விச் சேவையில் வளர்ச்சிக் கண்டு 1C தரத்தினைக் கொண்ட முன்னணிப் பாடசாலையாக திகழ்கின்றமை போற்றுதற்குரியதாகும்.


1999 இல் க.பொ.த உயர்தர கலைப்பிரிவு வரை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு 40 இற்கும் மேற்பட்ட மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி பெருமை கொண்டுள்ளமை பாராட்டிற்குரியதாகும்.

கிராஞ்சி, வேரவில் , வலைப்பாடு போன்ற பின் தங்கிய கிராமங்களில் வசிக்கும் அனைத்து மாணவர்களும் இங்கு கல்வி கற்கும் ஒரு தாய்ப் பாடசாலையாக இது மிளிர்கிறது.

2008 ஆம் ஆண்டு இடம் பெற்ற அசாதாரண சூழ்நிலைகளினால் இடம் பெயர்ந்து முற்றாக பாதிப்பிற்குள்ளான போதும் 2010 ஆம் ஆண்டளவில் அரசின் மூலம் கொரிய நிதியுதவியுடன் மீண்டும் புத்துயிர் பெற்று மக்கள் பங்களிப்புடன் கல்வி வளர்ச்சிப் பாதையில் வீறுநடை போட்டு வருவதோடு, கிளிநொச்சி மாவட்டத்தில் முதன் முதலாக நூற்றாண்டு விழாக்காணும் பெரும்பேறு பெற்றுள்ளமை மிக்க மகிழ்ச்சியை தருவதுடன் மென் மேலும் வளர்ச்சியும் உயர்ச்சியும் பெற்றுத் தரமுயர்ந்த கல்லூரியாக திகழவும், மாணவர்களுக்கு நல்ல பெறுபேற்றினைப் பெற்றுக் கொடுக்கவும் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ப.அரியரத்தினம்
ஓய்வு நிலை மேலதிக
மாகாணக்கல்விப் பணிப்பாளர்
வடமாகாணம்.

**கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஒன்றான வேரவில் இந்து மகா வித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவை இவ்வருடம் கொண்டாட இருப்பதையிட்டு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் அக மகிழ் வெய்துகிறேன்.**

# வளம் பல காண வாழ்த்துகிறேன்

ஒரு நூற்றாண்டு கால வளர்ச்சியின் வெளிப்பாடாகவும் கிராமிய பாடசாலை ஒன்றாக 1914ம் ஆண்டில் ஆரம்பித்து இன்று நகரப்பாடசாலைகளுக்கு இணையாக வளர்ந்து வருவதையிட்டும் பெருமையடைகிறோம். 14.09.1914ம் நாள் முத்துக்குமாரசாமி வித்தியாலயம் எனும் நாமத்தோடு உருவாகிய பாடசாலை 1999இல் வேரவில் இந்து மகா வித்தியாலயமாக வளர்ச்சி பெற்றது.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் இப்பாடசாலையின் பெற்றோர் இப்பாடசாலையை வளர்ப்பதில் அளப்பெரும் பங்காற்றியவர்கள் என்பதை வேரவில் வாழ் மக்களும் கல்வித்திணைக்களமும் நன்கறியும். இதனால் இப்பாடசாலையை தரம் உயர்த்துவதில் பலர் பலகாலமாக வேண்டுகோள்களை விடுத்து வந்தனர். வேண்டுகோளை விடுத்ததுடன் நிற்காது அதற்காக பாடசாலைக்கு நிரந்தரமாக காணிபெறுதல், கட்டடங்கள் அமைத்தல் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டனர். 1999ம் ஆண்டு கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளராக நான் நியமிக்கப்பட்டபோது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விடுத்த வேண்டுகோளின் பெயரில் எனது சிபார்சின் அடிப்படையில் கல்வி அமைச்சால் இப்பாடசாலை வேரவில் இந்து மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது.

அத்துடன் க.பொ.த. உயர்தரம் கற்பிப்பதற்கும் அனுமதி அளிக்கப்பட்டது. அதனடிப்படையில் முதல் முதலாக க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவனாக கல்வி கற்ற ஜெ.ஶ்ரீரங்கன் 2001ம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு பாடசாலையின் முதற்பட்டதாரி ஆகியதுடன் தனது பாடசாலையிலேயே ஆசிரியனாகவும் இன்று உள்ளார். திரு.ஜெ.ஶ்ரீரங்கனின் இச் செயற்பாடானது இன்று இப்பாடசாலையின் சிறப்பான கல்விச் செயற்பாடுகளுக்கு வித்துட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடவசதி போதாமை காரணமாக இன்று இவ்வித்தியாலயம் புதிய இடத்தில் பல புதிய கட்டடங்களுடன் மிளிர்வது அனைவரதும் மனங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உளது. முன்னைநாள் அதிபர்களான அமரர். சிவசாமி, சிவபாலசுந்தரம் இளைப்பாறிய கோட்டக்கல்வி அதிகாரி திரு. தி.கணபதிப்பிள்ளை ஆகியோரது காலங்களில் பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்று இடப்பெயர்வுக்காலத்தில் நலிவுற்று மீண்டும் திருமதி. ப.சோதிலிங்கம் அதிபர் தலைமையில் புதிய பாதை ஒன்றை எடுத்து வைத்துள்ளது. கடந்த 3 வருட பாடசாலை வளர்ச்சிப் போக்கில் தமிழ்விழாக்கள், பேச்சுப்போட்டிகள், விளையாட்டுப்போட்டிகள், வினாடி வினாப் போட்டிகள் முதலான பலபோட்டிகளில் கிளிநொச்சி நகரப்பாடசாலைகளோடு போட்டியிட்டதுடன் மாவட்டப்போட்டிகளில் சாதனை படைத்து வருவதை யாவரும் அறிவர்.

ஒட்டுமொத்தத்தில் வேரவில் மகா வித்தியாலயத்தின் அபார வளர்ச்சி பெற்றோரதும் , பழைய மாணவரதும் , அதிபர் , ஆசிரியர், மாணவர்களதும் ஒரு கூட்டு முயற்சியின் விளைவு என்பதை யாவரும் அறிவர். மாவட்டத்தின் போக்குவரத்து சீரில்லாத ஒரு பகுதியில் அமைந்திருந்தாலும், நாளாந்தம் நீண்ட தூரத்தில் இருந்து வரும் ஆசிரியர்களை உள்ளடக்கி இருந்தாலும் அதிபர் ஆசிரியர்களது கூட்டுப்பொறுப்பு , தியாக மனபான்மை , மாணவர்களது ஒழுக்கம், பொறுப்புணர்வுச் செயற்பாடுகளால் இப்பாடசாலை துரிதமாக வளர்வதைப் பாராட்டுவதுடன் மேலும் மேலும் வளர்ச்சி காணவேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.ஆ.ராஜேந்திரன்
மாகாணக்கல்விப்பணிப்பாளர்
வடமாகாணம்

# வேரவில் விடிவெள்ளியே வாழ்க!

கிளிநொச்சி மாவட்டத்தில் வேரவில் அன்னை அகவை நூறு எய்துவதையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன். மருதம், நெய்தல், முல்லைநிலங்களால் சூழப்பெற்று கிராமப்புறத்தின் இலக்கணங்களைக் கொண்டுவிளங்கும் வேரவிலில் வாழும் மாணவச்செல்வங்களின் அறிவுப் பசியைப் போக்கிஅவர்களையும் எதிர்காலத்தில் உலக சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் உருவாக்கும் இந்து அன்னைக்கு நாம் தலைவணங்க வேண்டும்.

புவியியல் ரீதியாக கரையோரப் பிரதேசமாகவும், அதிகஷ்ட பிரதேசமாகவும் காணப்படும் வேரவில் கிராமத்தில் சேவையாற்ற அநேகர் பின்னிற்கின்ற வேளையிலும் கூட அச்சேவையை மனமுவந்து ஏற்று கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களையும் ஒரு தடவை நினைவு கூருகின்றேன். ஏனெனில் இப்பாடசாலை கல்வித்துறையில் மட்டுமல்லாது இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் தேசியரீதியில் தடம் பதித்துவருவதே இதற்குச் சான்றாக அமைகின்றது.

இப்பாடசாலைக்குரிய போதிய பௌதீகவளங்கள் இல்லாத நிலையில் மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை மனம் வருந்தத்தக்க விடயமாகும். தற்போது கல்விபயிலும் மாணவர்களுக்கே தமது கிராமத்தையும், பாடசாலையையும் உயர்த்த வேண்டிய பாரிய பொறுப்பு காணப்படுகின்றது. உண்மையிலேயே இப்பிரதேசமக்களுக்கும் மாணவர்களுக்கும் வேண்டிய வளங்களும் வசதிவாய்ப்புகளும் உடனுக்குடன் கிடைக்க வேண்டும் என்பதே எனது பேரவா. பல சிரமங்களுக்கு மத்தியிலும் தன்னை வளர்த்து உதயமாகும் விடிவெள்ளிக்கு எனது நூற்றாண்டு தின வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

" நன்றி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க. முருகவேல்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
கிளிநொச்சி.

## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

பூநகரிக் கல்விக்கோட்டப் பாடசாலைகளில் தலைசிறந்து விளங்கும் பாடசாலைகளில் ஒன்றாக கிளி / வேரவில் இந்து மகாவித்தியாலயம் விளங்குகின்றது. 1914 இல் ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயமானது நூறாவது விழாவினைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் வலயக்கல்விப்பணிப்பாளர் என்ற வகையில் நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கிளி / வேரவில் முத்துக்குமாரசாமி வித்தியாசாலை எனும் நாமத்தோடு நடப்பட்ட முளையானது இன்று விழுதுவிட்டுச் சடைத்து, பெருவிருட்சமாக கிளி / வேரவில் இந்து மகாவித்தியாலயம் என்ற நாமத்தோடு தலைநிமிர்ந்து நிற்கின்றது. மிகநீண்ட கல்விப்பாரம்பரியம் கொண்ட இவ்வித்தியாலயமானது போர்க்கால இடப்பெயர்வின் போது பல இன்னல்களைச் சந்திக்க நேரிட்டபோதும் சவால்களைச் சாதனைகளாக்கி, கல்வியுலகில் தனக்கென ஒரு தனியிடம் பிடித்து முன்மாதிரியான பாடசாலையாக விளங்குவது எல்லோர்க்கும் பெருமையளிக்கும் விடயமாகும்.

நாகரிகமுள்ள மனிதர்களாக சமுதாய உலகில் தலைநிமிர்ந்து நிற்பவர்கள் தமதுமொழி மதம், நிலம், பண்பாடு என்பவற்றைப் பேணிப்பாதுகாத்து ஒழுக்க சீலர்களாக விளங்குகின்றார்கள் என வரலாறு கூறுகின்றது. அந்த வகையில் வரலாற்றுத்தொண்மையும் பாரம்பரியச் சிறப்பும் மிக்கவர்களாக இப்பிரதேச மக்கள் விளங்குகின்றார்கள். அழகிய கிராமச்சூழலில் வாழும் இப்பகுதி மக்களின் கல்வித்தேவைகளைப்பூர்த்தி செய்யும் அறிவாலயமாக விளங்கும் இவ்வித்தியாலயத்தின் கல்விப்பெறுபேறுகள் அதிகரித்துள்ளன. வருடந்தோறும் மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றவண்ணமுள்ளனர். தமிழ்மொழித்திறன் போட்டிகளில் விளையாட்டுப்போட்டிகள் கணித , விஞ்ஞானப்போட்டிகள் போன்ற இணைபாட விதானச் செயற்பாடுகளில் இவ்வித்தியாலய மாணவர்கள் மாவட்ட , மாகாண நிலைகளில் சாதனைகளைப் படைத்துள்ளனர். இதன்பொருட்டு அயராதுழைத்த அதிபர், ஆசிரியர்கள், கல்விச்சமூகத்தினர் , மாணவச்செல்வங்கள் யாவரையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இனிவரும் காலங்களில் கணித, விஞ்ஞான , தொ.நு.பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு மாணவர் விரும்பிய துறைகளில் கல்விபயில வழிபிறக்கும் என நான் நம்புகின்றேன். நூற்றாண்டு விழாவினையொட்டி வெளியிடப்படும் சிறப்பு இதழானது வேரவில் இந்து மகாவித்தியாலயத்தின் மேன்மைகளைப் பேசும் காலப்பதிவாகி நிலைத்து நிற்கும் நூற்றாண்டு விழா நிகழ்வுகளும் மலர்வெளியீடும் இனிதே நிறைவெய்த எல்லாம் வல்ல ஶ்ரீரங்கநாதப் பெருமாளை இறைஞ்சி நல்லாசிகளை வழங்குகின்றேன்.

வாழ்க ! வேரவில் இந்து மகாவித்தியாலயம் !

வளர்க ! அதன் புகழ் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dr. த.சத்தியமூர்த்தி
தலைவர்,
கல்வி வளர்ச்சி அறக்கட்டளை
கிளிநொச்சி.

# நூற்றாண்டு அகவை காணும் வேரவில் இந்துவை வாழ்த்துகிறேன்

பூநகரிக் கோட்டத்தில் அமைந்துள்ள மிகப் பழமை வாய்ந்த பாடசாலையான வேரவில் இந்து மகாவித்தியாலயம். தனது நூற்றாண்டினை நிறைவு செய்வதினையோட்டி இம்மலர் வெளியிடவுள்ளதை அறிந்து மகிழ்ச்சியுற்றேன்.

இந்நூற்றாண்டு விழா சீரும் சிறப்புடனும் இனிதே நடந்தேற வேண்டி எல்லாம் வல்ல இறைவனின் அருளையும் ஆசியையும் வேண்டுவதோடு என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு 1914ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வேரவில் முத்துக்குமாரசாமி வித்தியசாலை அக் காலப்பகுதியில் அக்கிராம மக்களுக்கு ஒரு வரப்பிரசாதகமாகவே இருந்தது எனக் குறிப்பிட்டால் அது மிகையாயாகாது . இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை பல ஆண்டுகள் வளர்ச்சிப் பாதையில் சென்று வேரவில் இந்து மகாவித்தியாலயமாக மாறி இன்று நூற்றாண்டு காண்பது என்பது மிகப் பெரிய சாதனையாகும். எமது மாவட்டத்தின் மிகப்பழமை வாய்ந்த பிரபல்யமான இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த பெற்றோர்கள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டுகின்றேன். இவர்கள் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மற்றவர்களுக்கும் முதியவர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் கொடுப்பவர்களாகவும் உதவி செய்யும் மனப்பாங்குள்ளவர்களாகவும் எமது மாவட்டத்திலும் நாட்டிலும் முதல்தர மாணவர்களாக வளர வேண்டும் என இறைவனை வேண்டுவதோடு அனைவருக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.சு.தர்மரத்தினம்
கோட்டக்கல்வி அதிகாரி,
பூநகரி.

**செந்** நெல்லும் "ஆ" நிரையும் ஒருங்கே ஒன்றுகூட்டி கிழக்கே மீன் பாடும் வலைப்பாடு துறைமுகத்தையும் கொண்டு பாலோடு முக்கனிகளையும் ஒரு நொடிப்பொழுதில் ஒன்றுசேர்த்து உணவு வழங்கும் வேரவில் கிராமத்திலே ஒரு காலத்திலே பெரும் வணிகக் கூட்டத்தினரை ஒன்று கூட்டி பாலாவியிலும் பொன்னாவெளியிலும் மடங்கள் அமைத்து அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் உண்டியும் உறையுளும் வழங்கி தூய சைவமரபும், தமிழும்பரப்பி பண்டிதர்களையும், புலவர்களையும் வளர்த்து வேதங்கள் ஓதி பாடல்கள் வளர்த்து பொன்னும், பொருளும் கொடுத்து தனவந்தர்களும், கொடையாளிகளும் வாழ்ந்து அருகி தேன் கமளும் வேரவில் கிராமத்திலே ஒரு உயர்ந்த பள்ளி அமைத்து அதிலே அறிவு குன்றிடா சைவமும், தமிழும் வளர்ந்தோங்கும் இக் கல்வி நிறுவனமானது நூற்றாண்டு விழாக்காண்பதையிட்டு இப் பிரதேசத்தின் கல்வி அதிகாரி என்ற வகையில் மட்டில்லாத மகிழ்ச்சி அடைகின்றேன்.

முன் ஒரு காலத்தில் பெரும் வணிகப்பட்டணமாக விளங்கிய வேரவில் கிராமமானது நாகதேவன் துறைமுகம், வலைப்பாடு துறைமுகம், மாதோட்ட துறைமுகம் என பூநகரியின் கடற் கரையின் பால் அமைந்திருந்ததால் அறிவிலும் ஆற்றலிலும் மிகுந்த கல்விமான்களும் தூய தர்ம வழி காத்த வணிகர்களும் வாழ்ந்து அக்காலத்தில் தொண்டுகள் பல செய்து கொடைகளும் தர்மங்களும் நிகழ்த்தி அறத்தின் வழி ஒழுகிய ஆன்றோர்கள் பலரை இக்கிராமம் தோற்றுவித்திருந்ததால் இவர்களுக்கு என பெரும் புகழும் பெயரும் ஓங்கி ஒலித்து பெரும் சிகரத்தை அடைந்து இக் கிராமம் காலவோட்டத்தில் இயற்கையின் அனர்த்தங்களால் செழிப்பிழந்து போயுள்ளது.

வேரவில் பள்ளி சிறுக சிறுக ஒன்று சேர்த்து இன்று ஒரு பெரிய விருட்சமாக வளர்ந்து இக் கிராமத்தில் ஒளி விளக்காகிய இப் பள்ளி இன்று நூற்றாண்டு விழாக்காண்பதை எண்ணும் போது எனது மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது.

# கோட்டக்கல்வி அதிகாரியின் இதயத்திலிருந்து......

அதிகரித்த தொலைபேசிப் பாவனை, கணினி மற்றும் புதிய தொழில்நுட்ப பாவனை காரணமாக எழுத்துருவில் ஒரு கடிதத்தை தானும் எழுத எவரும் முன்வராத இக் காலக்கட்டத்தில் ஒரு பெரிய இதழ் வெளியிட்டு அதில் இப்பிரதேசத்தின் புகழையும் சிறப்பையும் எடுத்தியம்பி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கற்றோர்களின் படைப்புக்களையும் தாங்கி ஒரு புதியதேடும் உத்திக்கும் வலுச்சேர்த்து விளங்கும் இந்த நூற்றாண்டு மலர் எல்லோர் இதயங்களையும் வெல்லும் என நான் நம்புகின்றேன்.

இந்தப் பள்ளியிலே நூற்றாண்டு விழாக் காண்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் பல செய்து திட்டங்கள் பல தீட்டி துடிப்புடன் உழைக்கும் அதிபர் திருமதி ப.சோதிலிங்கம் அவர்களும், நூற்றாண்டு விழாவையும் அவ்விழாவை சிறப்பிக்க இந்த நூலை முறைப்படி ஒன்று கூட்டி அச்சேர்த்தும் ஆசிரியர் குழாத்தினருக்கும் திரை மறைவில் நின்று தியாக சிந்தனையுடன் உழைக்கும் இக் கிராம மைந்தர்களுக்கும், இப் பாடசாலை மாணவர்கள், பெற்றோர் சமூகத்தினருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் நூற்றாண்டு விழா சிறந்தோங்க எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. சி. சத்தியசீலன்
பிரதேச செயலாளர்,
பூநகரி.

# வாழ்த்துச் செய்தி

வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பூநகரியில் சைவமும் தமிழும் தழைத்தோங்கிடும் இப்புலத்தில் வயலும் கடலும் காடும் சூழ்ந்த இயற்கை எழில் கொண்ட பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவின் பழம்பெரும் கிராமமாய் பொலிவுடன் விளங்கிடும் ஊராய் வேரவில் கிராமம் திகழ்கின்றது. வேரவில்லில் சேவைகளை வழங்கிடும் மையமாய் பல்துறைசார் விற்பன்னர்களை, கல்விமான்களை உருவாக்கிடும் பணியினை பத்து தசாப்தங்கள் கடந்தும் இன்று வரை செவ்வனே நிறைவேற்றி வருவது இப்பாடசாலையாகும். வேரவில் பிரதேச மக்கள் சமயப்பற்று மிக்க பண்பாளர்களாகவும், மண்பற்று மிக்க மனிதர்களாகவும், அறிவும் செயற்றிறனும் மிக்க பிரஜைகளாகவும் உருவாவதற்கு இக்கல்லூரியின் பணி மகத்தானது. எதிர்கால நற்பிரஜைகளை அறுவடை செய்யும் இக்கல்லூரி அளப்பரிய பணிகளை முன்னெடுத்து, இவ்வருடம் நூற்றாண்டு நிறைவினைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையாக 1914.09.14இல் ஆரம்பித்து பல்வேறு சிரமங்களினைத் தாண்டி படிப்படியாக பல முன்னேற்றங்கள் கண்டு தற்போது அனைத்து துறைகளிலும் சாதனைகளைப் படைத்து வருகின்றமை பாராட்டுதற்குரியதாகும். அத்துடன் மாணவர்கள் பாடவிதான மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளில் கோட்ட, வலய, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் சாதனையாளர்களாக மிளிர்ந்து பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்க்க அரும்பாடுபட்டு வருகின்றனர். அவர்களுடன் காலத்தின் தேவையறிந்து இம்முயற்சியின் பங்காளிகளாக ஆசிரியப் பெருந்தகைகள், மாணவச் செல்வங்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் ஒருங்கிணைந்து கல்லூரிக்காக கைமாறு கருதாமல் செயற்பட்டு வருவதை பாராட்டுகின்றேன். வேரவில் கிராமம் நிலைத்திருக்கும் வரை கல்லூரித்தாயின் பெயரும் புகழும் நிலைத்திருக்க வேண்டுமென வாழ்த்தி நூற்றாண்டு விழா மலர் சிறப்புற வெளிவர எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் மனதார தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. ப.சோதிலிங்கம்
அதிபர்
கிளி /வேரவில் இந்து மகாவித்தியாலயம்

# வித்தியாலய அதிபரின் உள்ளத்திலிருந்து

**கி**ளிநொச்சி மாவட்டத்தில் மிகத் தொலைவில் உள்ள பழம் பெருமை கூறும் கிராமம் தான் ஈழவூர் என்று அழைக்கப்படும் வேரவில் கிராமம். வயலோடு கடலும், கடலோடு பனையும் சூழ்ந்த இயற்கை அன்னையின் இனிய பிரசவிப்புத் தான் இவ்வூர். இங்கே தாரகை நடுவே தண்மதிபோல காட்சி தருபவள் தான் கிளி / வேரவில் இந்து மகாவித்தியாலயம் என்னும் அன்னை.

அந்த அறிவு அன்னை 10 தசாப்தங்களைக் கடந்து இன்று தனது நூற்றாண்டு விழாவை மிகப்பூரிப்புடன் கொண்டாடிக் கொண்டிருக்கிறாள்.

இவ்வேளையிலே இப்பாடசாலையின் அதிபர் என்ற வகையில் நான் மிகவும் பெருமையடைகிறேன். மனிதனாகப் பிறந்த ஒருவன் பிறந்தான் வாழ்ந்தான் இறந்தான் என்றில்லாமல் அவன் வாழ்க்கைக் காலத்திலே ஏதோ ஒன்றை சாதித்தான் என்ற பெருமையினை கூறும் வகையிலே இந்த விழாவை இங்கே ஏற்பாடு செய்து எனது வாழ்நாளிலே சிறந்த ஒரு பணியை ஆற்றிய திருப்தியை ஆண்டவன் எனக்கு அளித்திருக்கின்றான்.

அன்னையானவள் தனது நூற்றாண்டு பணியிலே கல்வி விளையாட்டு சாரணியம், தமிழ்மொழித்தினம் இன்னும் இன்னோரன்ன நிகழ்வுகளிலே பல அரிய சாதனைகளைப் படைத்திருக்கிறாள்.

போர் அனர்த்தத்தினால் ஏதுமற்ற ஏதிலியாக அன்னையும் சோதனைகளைச் சந்தித்தாள். இச் சோதனைகள் எல்லாவற்றையும் சாதனையாக்கி 2010 மீள்குடியேற்றத்தின் பின்னர் திரும்பி தனது கல்விப் பணியிலே உச்சத்தினை எட்டி இருக்கின்றாள். அன்னையாவள் இந்நாளிலே நூற்றாண்டு விழா மலர் வெளியீடானது இப்பிரதேசத்தில் ஒரு வரலாற்றுச் சாதனையாக நிகழ்ந்திருக்கின்றது.

இந்த விழாவின் வெற்றிக்கு வழி சமைத்த அனைவருக்கும் நன்றி கூறி விழா சிறக்கவும், மலர் வெற்றி பெறவும் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்வடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.கி.மதுரநாயகம்
உப அதிபர்
கிளி / வேரவில் இ.ம.வி

# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க பிரதேசங்களில் ஒன்றான பூநகரிப் பிரதேசத்தில் அமைந்துள்ளபொன்னாவெளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமமாகிய வேரவில் பகுதியில் அமைந்துள்ள எனது பாடசாலையான கிளி / வேரவில் இந்து மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா சிறப்பு மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ் வடை கின்றேன்.

இப்பாடசாலை 1914ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதி லிருந்து நூறு ஆண்டுகளைக் கடந்துள்ளது என்பதை எண்ணி திகைத்து நிற்கின்றேன். நான் 1999ம் ஆண்டு இப்பாடசாலைக்கு நியமனம் பெற்றுவந்த போது இப்பாடசாலையானது எதுவிதா வசதிகளுமின்றி பின் தங்கிய நிலையிலேயே காணப்பட்டது. அக்காலப்பகுதியில் எமது பாடசாலையானது போதுமான பொருத்தமான ஆசிரியர்கள் இல்லாத நிலையிலும் உள்நாட்டு இடப்பெயர்வு காரணமாக அதிகளவான மாணவர்களையும் கொண்டிருந்தது.


நான் இப்பாடசாலையில் கடமையேற்ற போது இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பினால் எமது பாடசாலை வளர்ச்சியடைந்து 1-13 வரையான வகுப்புக்களைக் கொண்டு இயங்குகின்றது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலின்போது எமது பாடசாலையின் சகல வளங்களும் அழிக்கப்பட்டு மீண்டும் புதுப்பொலிப்புடன் மிளிர்ந்து பல அரிய சாதனைகளைப் படைத்து நிற்கின்றது.

இவ்வேளையில் இப்பாடசாலையில் நூற்றாண்டு விழா நூல் வெளியீட்டினையும் இவ்விழாவினையும் ஒழுங்கு செய்வதற்கு காரணமாய் அமைந்த எமது பாடசாலையின் தற்போதைய அதிபர் திருமதி . ப.சோதிலிங்கம் அவர்களையும் அவரோடு இணைந்து இப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் மனதாரப்பாராட்டுவதோடு இம் மலரிற்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்து இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.செ.குழந்தைவேல்
உறுப்பினர் பூநகரி மத்தியஸ்தர் குளாம்
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திக் குழு
தலைவர் கிராம அபிவிருத்திச் சங்கம்
வேரவில்.

# பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்

எனது ஊரில் அமைந்த கிளி / வேரவில் இந்து மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவிற்கு வாழ்த்து செய்தியை வழங்கு வதில் பெருமகிழ்வடைகிறேன். இயற்கை அன்னையின் இனிய கொடையாக கிளி நொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தின் தென்புலத்தில் தெற்கே கடலையும், மேற்கே வீரபாண்டியன் முனையையும், கிழக்கே சுண்ணாவில்லையும் வடக்கே பொன்னா வெளி போன்ற ஊர்களையும் எல்லைகளாகக் கொண்ட பழமை பொருந்திய வரலாற்றுத் தடயங்களைத் தன்னகத்தே கொண்ட பாண்டியர் பல்லவர்கள் போன்ற மன்னர்கள் வருகை தந்த தமிழும் சைவ மரபும் ஒருங்கே சிறப்புடன் அமையப்பெற்ற ஈழவூர் என சிறப்புப பெயர் கொண்ட இயற்கை வளங்களைத் தன்னகத்தே கொண்ட ஊர் வேரவில் ஆகும். இக்கிராமத்தின் அறிவு பசியைப்போக்கும் அறிவுக் களஞ்சியமாகக் அமைந்து சிறப்பு பெறுவது வேரவில் இந்து மகா வித்தியாலயம் ஆகும். இவ்வித்தி யாலயம் ஆரம்பிக்கப்பட்டு பத்துதசாப்தங்களுக்கு மேலாகி விட்டதா யினும் ( பத்து தசாப்தங்களுக்கான சான்று மட்டுமே உள்ளது.) எனவே இத்தனை ஆண்டுகளைக் கடந்து வெற்றி நடை போடுவதை எண்ணுகையில் பெருமை கொள்கிறேன். பிறந்து வளர்ந்து கல்வி கற்ற எனது பள்ளிக்கோ அகவைநூறு.

இப்பாடசாலை அபிவிருத்திச் சங்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் செயலாளராக ஆறு தடவைகளுக்கு மேல் நான் இருந்துள்ளேன். இப்பாடசாலையின் அதிபர்களாகப் பலர் பணியாற்றியுள்ளனர். எனினும் பாடசாலையின் எழுச்சியிலும், வளர்ச்சியிலும், திரு. கனகரத்தினம் சிவசாமி அவர்களது காலம் குறிப்பிடத்தக்க திருப்பு முனையாகும். இவரது காலத்தில் இவ்வூரும் எழுச்சிபெற்றது.

இதன் பின்னர் திரு.திருநாவுக்கரசு கணபதிப்பிள்ளை அதிபர் அவர்களின் காலம் சிறப்பு மிக்க காலம். இவரது தலைமையின் கீழ் கடமையாற்றிய கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களது பணி அளப்பெரியது. இவரது அர்ப்பணிப்பான சேவையின் வெளிப்பாடாக விளையாட்டுத்திடல் இல்லாதிருந்த வித்தியாலயத்திற்கு விளையாட்டு மைதானம் பெறப்பட்டதுடன் இல்ல விளையாட்டுப்போட்டிகள் முதலாவதாக இடம்பெற்றன. கலை நிகழ்வுகள் பல நடைபெற்றன. இவர் பாடசாலை இலச்சினை, பாடசாலைக்கீதம் என்பனவும் உருவாக்கினார். பல மாணவர்களை கல்வி யாளர்களாக உருவாக்கிய பெருமையும் இவரையே சாரும்.

இவர்களது காலத்திற்கு பின்னர் அதிபர் திரு.துரைராசா இளங்குமரன் அவர்களின் தலைமை எழுச்சி கொண்ட திருப்பு முனையாக அமைந்தது. இவரது பெருமுயற்சியின் பயனாக இடப்பற்றாக் குறையாக இருந்த பாடசாலையை நிறைவான புதிய இடத்திற்கு நகர்த்துவதில் கடுமையாக உழைத்தார். இன்று வளங்களுடன் பாடசாலை அமைவதற்கு வித்திட்டு நின்றவர் இப்பெருமை திரு.து.இளங்குமரன் அதிபர் அவர்களையே சாரும். முன்னதாக பாடசலையை புதிய இடத்திற்கு மாற்றுவதற்கு திரு.சே.கோடிஸ்வரன் அவர்கள் அதிபராக இருந்தபோது முயற்சி மேற்கொண்டபோதும் அது கைகூடவில்லை.

தற்போது திருமதி பரமேஸ்வரி சோதிலிங்கம் அதிபர் அவர்களது பணி மிகவும் காத்திரமானதாக அமைந்துள்ளது. இவரது முயற்சியால் பாடசாலை பலவகையிலும் உயர்ச்சி பெற்றுள்ளது. இத்தனைக்கும் மேலாகப் பாடசாலையின் நூற்றாண்டு விழாவை நிகழ்த்துவதற்கு விடாமுயற்சியுடன் அயராது உழைத்து வந்துள்ளார். இவ்விழாவை நிகழ்த்துவதன் ஊடாக பாடசாலையினதும், ஊரினதும் வரலாறு ஆவணமாக வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. இதனை நாடறியும் இவ்வரிய நிகழ்வை நடாத்துவதற்கு திரு.கா.அ.ஜெயக்குமார் அதிபர் காலத்திலும் சிந்திக்கப்பட்டது. எனினும் அன்றைய சூழல் நிலையில் சாத்தியமாகவில்லை. இன்று காலம் கனிந்துள்ள நிலையில் அதிபர் திருமதி. ப.சோதிலிங்கம் அவர்களின் முயற்சியின் பெறுபேறாக இந்நூற்றாண்டு விழா அமைகிறது. எனவே இத்தகைய நூற்றாண்டு விழா நிகழ்த்துவதற்கு காரணமாக அமைந்த வேரவில் இந்து மகாவித்தியாலய அதிபர் திருமதி ப. சோதிலிங்கம் அவர்களையும், அவரோடு சேர்ந்து பணி செய்யும் அனைத்து ஆசிரியர்களையும் மனதாரப்பாராட்டுவதோடு நூற்றாண்டு விழாச் சிறக்க இறைவனை வேண்டி நல்லாசிகளையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் அக மகிழ்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ச.கேதீஸ்வரன்
பழைய மாணவர்
கிளி / வேரவில் இ.ம.வி

# பழைய மாணவர் சங்க செயலாளர் உள்ளத்திலிருந்து...

எமது பாடசாலை கிளி / வேரவில் மகா வித்தியாலயம் நூறு அகவை கடந்து வெளிவரும் நூற்றாண்டு மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனம் பூரிப்படைகிறேன்.

எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நூறு வருடங்கள் கடந்த நிலையில் எமது கிராமத்தில் எழில்கொஞ்சும் இளமையுடன் மிளிர்ந்து இணையில்லா கல்விச் செல்வத்தை வழங்கி எம் மாணக்கரின் அறிவுப் பசியை தீர்த்து அவர்தம் ஆற்றல்களையும் வளர்த்தெடுத்து அன்னையானவள் சீரோடு தனது நூறு அகவையை கடந்து வெற்றிக்களிப்பில் திகழ்கின்றாள்.

எமது கிராம மத்தியில் தனது விழுதுகளை பரப்பி விருட்சமாக வளர்ந்து உயர்ந்து உவப்போடு கல்விச்செல்வத்தை வளங்கி நிற்கும் எமது வித்தியாலயத்தின் நூறு அகவைக்கு எடுக்கப்படும் விழா மலரிற்கு எனது மனநிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

"நன்றி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ச.லதீஸ்குமார்
ஆசிரியர்
கிளி / வேரவில் இந்து மகாவித்தியாலயம்.

# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...

பதியெழுவறியாப் பழங்குடி மண்ணில் பத்து தசாப்தங்களை கடந்து

எம் கல்லூரி இன்று நூற்றாண்டு அகவையில் தடம்பதிப்பதில் பேருவகை அடைகின்றது. ஐவகை நிலங்களுள் மருதநில, முல்லை நில , நெய்தல் நில அழகுகளால் சூழப்பெற்ற பூநகரி வேரவில் கிராமத்தில் மூலமூர்த்தியாய் அமர்ந்திருந்து கல்வி உலகிற்கு பொருத்தமானவர்களை உருவாக்கிக் கல்விச் சேவைதனை வழங்கிவரும் எம் கல்லூரி நிறுவப் பெற்று நூறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்த பெருமையினை இவ்வாண்டில் பெருமிதத்துடன் கொண்டாடுகின்றது. சைவ சமயத்தின் விடிவெள்ளியாக போற்றப்படும் நாவலர் பெருமானால் முன்னெடுக்கப்பட்ட திண்ணைப்பள்ளிக்கூட மரபினை அடியொற்றி ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி முத்துக்குமாரசாமி வித்தியாசாலை என்ற ஆரம்பப் பெயருடன் 1914.09.14 இல் இம்மண்ணில் வேர்விடத் தொடங்கியது.

பின்னர் ஏற்பட்ட உலக மாற்றத்திற்கு அமைவாக தன்னையும் தகவமைத்துக் கொண்ட இப்பாடசாலை 1949 களில் அரச பாடசாலையாக அங்கீகாரம் பெற்றது. அன்று முதல் தனது கல்விச்சேவையை அரச சேவையாக முன்னிறுத்தி இப்பிரதேசத்தின் அறிவுப்பசிக்கு தீனி போடத் தொடங்கியது.

பின்னர் பல கல்விமான்களது திட்ட மொழிவுகளும் , அமுல்படுத்தல்களும் செயற்படுத்தல்களும் பாடசாலையின் வளர்ச்சிக்கான உந்துதல்களாக அமைய இக்கல்லூரியானது தன்னிரகற்ற கல்வி செல்வத்தை பொழிந்து எல்லோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்களிலும் புதுப்பொலிவுடன் வீறு நடை போடத் தொடங்கியது இவ்வகையில் சில மதிநுட்ப தலைமை நிர்வாகிகள் வழிகாட்டலின் கீழ் க.பொ.த. சாதாரண , க.பொ.த. உயர்தர தரமுயர்த்தலுடனும் பௌதீகவள விஸ்தீரணத்துடனும் வளர்ச்சி கண்ட பாடசாலை மாவட்டத்தில் உள்ள முன்னணி சிரேஷ்ட பாடசாலைகளில் ஒன்றாக 1999 ல் மகாவித்தியாலயமாக தரமுயர்வு பெற்று அன்று தொட்டு கலைத்திட்டத்திலும், இணைக்கலைத்திட்டத் திலும் முதன்மை யான விளைதிறன்களை வெளிப்படுத்திய இப்பாடசாலை பலராலும் புகழோடு பேசப்படு கின்ற , பாராட்டப்படுகின்ற மதிப்பினைப் பெறத்தொடங்கிற்று ஆலய மரபோடு, ஆன்மீக நோக்கோடு அறநெறிப் பாடசாலை யாக உருவாக்கப்பட்ட இப்பாட சாலை இன்றைய நிலையில் பல்கலைக் கழகம், ஆசிரியக்கல்லூரிகள் என தமது உயர்பட்டப் படிப்பிற்கான மாணவ சமூகத்தினை உருவாக்கி வந்துள்ளமை இக்கல்லூரி வரலாற்றுத் திருப்பு முனையான தொன்றா கும். இதனை நாடெங்கிலும் உள்ள பல்கலைக்கழகங்கள், ஆசிரியர்கள் கல்லூரி களில் கல்வி பயிலும் மாணவர் புள்ளி விபரம் பறைசாற்றி நிற்கின்றது.

இத்தகையதொரு நீட்சியானதொரு இருப்பு வரலாற்றையும் கல்விப்புலமை வரலாற்றையும் ஒருங்கேகொண்டு மாவட்ட நிலையில் முதலாக ஆரம்பிக்கப்பட்டதென பெருமையான வரலாற்றைக்கொண்ட இப்பாடசாலையின் பதிவுகள் தேடப்பட்டு அவை ஒரு ஆவணமாக நூற்றாண்டைக் கடந்த நிலையிலும் போற்றப்படவேண்டும் எனும் அரிய சிந்தனை எம் பள்ளிமுதல்வரின் உள்ளத்தில் உதித்ததன் விளைவே இம் மலர் முயற்சியாகும்.

இவ்வகையில் இப்பாடசாலை முன்னைய காலங்களின் முதல்வர்களினதும் , முதன்மையான ஆசிரியர்களினதும், அவர் தம் மாணவர்களினதும் மனமுகிழ்ப்புக்கள் நூற்றாண்டு மலரின் வரலாற்றுப் பதிவுகளாகவும் , எம் கல்லூரி மாணவர்களது உள்ளத்துச் சிந்தனைகளும், தேடல்களும் கட்டுரைவடிவங்களாகவும், கல்விப்பயணத் தில் கரம்பற்றியுள்ள ஆசிரியர் சிந்தனைகளும் , தேடல்களும் ஆக்க வடிவிலும் இம்மலரின் இதழ்களாக வெளிவரு கின்றது. இம் மலரின் கனதியை பேண் தகவாகக் கொண்டு துறைசார் கட்டுரை களும் மலரினை அழகு படுத்துகின்றது. இவற்றிற்கும் மேலாக கல்வி மான்களினதும் , இறைபணிய ருளார் களதும் ஆசீர்வாத அருள் வாக்குகளும் இம் மலரினைத் தூய்மைப் படுத்தி மிளிர வைக்கின்றது.

இவ்வகையில் எம் கல்லூரியின் நூற்றாண்டு அகவை யினை சிறப்புற கொண்டாட வேண்டு மென்ற எம்கல்லூரிக் குடும்பத்தின் அயராத ஈடுபாட்டினதும் அர்ப்பணிப்பினதும் விளைவாகவே இம்மலரின் உதயமானது அமைந்திருக் கின்றது. இவ்வரிய முயற்சியில் எம்முடன் சோர்ந்து உழைத்த அனைவரையும் மிகுந்த நன்றியுடன் மலர்க்குழு கரம்பற்றிக் கொள்கிறது. இம்மலரின் நின்று எழும் மணமானது எல்லாத்திக்குகளிலும் எம்பள்ளி யின் வரலாற்று சுகந்தத்தை வீசும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது இவ்வகையில் இம்மலர் சிறப்புற இதழ் விரிக்க மலர்க்குழு சார்பில் வாழ்த்துக் கூறி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூற்றாண்டு விழாக் காணும் எம் கல்லூரியின் வரலாற்று நோக்கு..............

“கற்றதானாலாய பயன் கொல் வாலறிவன்
நற்றார் தொழாரெனின்”

“கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”

“கற்கை நன்றே கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”

இவ்வாறு கல்வியின் பெருமையினையும், சிறப்பினையும் கற்றறிந்த முன்னோர்கள் மிகவும் அழகாகவும், ஆழமாகவும் எடுத்தியம்பியுள்ளனர். இந்த வகையில் இன்னறுங்கனிச் சோலைகள் அமைத்தல் இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல் அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல் பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி யொளிர வைத்தல் அன்னயாவினும் புண்ணியம் கோடி அங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் உலகிலே ஆற்றப்படும் தருமங்கள் அனைத்திலும் உயர்வான தருமமாக கொள்ளப்படுவது “ஏழைகளுக்கு எழுத்தறிவித்தல்” ஆகும்.

இந்த வகையில் ஈழமணித்திரு நாட்டில் வன்னிப் பெருநிலப்பரப்பில் இயற்கை அன்னையின் எழில் கொஞ்சும் கிளிநொச்சி மாவட்டத்தில் வரலாற்று தடயங்களைப் பதிவுகளாகக் கொண்ட பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் தென்புலத்திலே முல்லை, மருதம், நெய்தல் ஒருங்கமையப் பெற்ற மன்னார் வீதிக்கு, (A32) மேற்கு புறமாக பன்னிரெண்டாம் கட்டைச் சந்தியிலிருந்து ஏழுகல் மைல் தொலைவில் அமைந்துள்ள இயற்கை அன்னையின் அரிய கொடையாக அமைந்துள்ள பழம் பெரும் வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட கிராமம் தான் “ஈழவூர்” என்ற சிறப்புப் பெயருக்கு உரித்துடைய வேரவில் கிராமம் ஆகும்.

இங்கு வடக்கே வயல் வளம் சூழ் பொன்னாவெளிக் கிராமமும், கிழக்கே தென்னஞ்சோலை வளம் கொழிக்கும் கிராஞ்சிக் கிராமமும் தெற்கே கடல் அலை தாலாட்டும் கடற்கரையும் மேற்குப் பக்கமாக கடற்கரை சூழ் வலைப்பாட்டுக் கிராமமும் அமையப் பெற்றுள்ள இக்கிராமங்களில் விவசாயம், கடற்தொழில் என்பன பிரதான தொழில்களாகக் கொள்ளப்பட்டாலும் சிறு கைத் தொழில்களும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இப்பகுதியின் அருளை அள்ளிவழங்கும் ஆலயங்களாக வேரவில் பகுதியிலே வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகர் ஆலயமும், பெரிய சிவன் ஆலயமும், சத்தி ஐயனார் ஆலயமும் அமைந்துள்ளன. அத்துடன் பொன்னா வெளிக் கிராமத்திலே வரலாற்றுக் காலத்தி னோடு தொடர்புபட்ட பழமையான சிவனால யமும், பிள்ளையார் ஆலயமும், கண்ணகை அம்மன் ஆலயமும் அமையப்பெற்றுள்ளன. கிராஞ்சியிலே கற்பகப் பிள்ளையார் ஆலயம், அம்மன் ஆலயம், சிவசுப்பிரமணியர் (முருகன்) ஆலயமும் அமையப் பெற்றுள் ளன. இத்தோடு பல்வேறு காவல் தெய்வங் களும் அமைந்துள்ளன. கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டிற்காக வலைப்பாட்டில் புனித அன்னம்மாள் ஆலயமும், கிராஞ்சியில் கிறிஸ்துராசா ஆலயமும் அத்துடன் குழந்தையேசு, சதாசகாயமாதா ஆகிய ஆலயங்களும் அமைந்து சைவசம யத்தையும், கிறிஸ்தவ சமயத்தையும் வளர்ப்பதற்கு நிலைக்களமாய் அருளை அள்ளி வழங்கி நிற்கின்றன. இத்துடன் இக்கிராமங்களின் நோய் பிணியை தீர்க்கும் வைத்தியசாலை இவ்வேரவில் கிராமத்தி லேயே அமையப் பெற்றுள்ளது. இவ்வகை யிலே இவை அனைத்துக்கும் மேலாக இக்கிராம மக்களின் அறிவுக் கண்ணைத் திறக்கும் அறிவாலயமாக வேரவில்லில் அமைந்துள்ள "பள்ளி தான்" இன்று கிளிநொச்சி வலயத்திலே "நூறு அகவையை நிறைவு செய்து நூற்றாண்டு விழாக்காணும் "கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயமாக" அமைந்து சிறப்புப் பெறுகின்றது.

இப்பாடசாலையானது இற்றைக்கு கி.பி 1900ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டு இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையில் அன்னியராட்சி மேலோங்கி சைவமும், தமிழும் புறக்கணிக்கப்பட்ட காலத்தில் ஆறுமுகநாவலர் எழுந்து தமிழுக்கும் சைவத்திற்கும் பெரும் பணியாற்றினார் என்பது வரலாறு. இக்கால கட்டத்திலே ஆறுமுகநாவலரினால் உருவாக் கப்பட்ட "திண்ணைப் பாடசாலைகளில்" இப்பாடசாலையும் ஒன்றாகும்.

இந்த வகையில் இப்பாடசாலையானது 1914.09.14ம்



பிரவேச கொண்டாட்டம்.

திகதி திங்கட்கிழமை புதுக்கட்டிடம் அமைக்கப் பெற்று அதில் பிரவேசம் செய்தமைக்கான சான்று எமது பகுதி பெரியவர்களில் ஒருவரான திரு.குமாரசாமி திருநாவுக்கரசு என்பவரி னால் நீண்டகாலம் பாதுகாக்கப்பட்டு 2005ம் ஆண்டு எமது முன்னாள் அதிபர் திரு.து.இளங்குமரன் அவர்களிடம் கையளிக்கப்பட்டு அவர்களி னால் அனர்த்த காலத்திலும் பாதுகாக் கப்பட்டு தற்போது எமது கைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இவ்வாதாரம் ஒன்றே எமது பாடசாலையின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடுவதற்கு வாய் மொழித்தகவல்கள் பலவற்றையும் ஊர் பெரியவர்கள் மூலம் பெற்றுக்கொண்டோம். இவற்றை ஆதாரமாக இவ் ஆவணத்தைப் பாடசாலை சமூகம் வெளியிடுகிறது.

ஒரு காலத்தின் கண்ணாடி அக்கால இலக்கியங்கள் ஆகும். வன்னி மண்ணைப் பொறுத்த வரையில் வரலாற்று ஆதாரங்கள் எதுவும் பாதுகாக்க முடியாமல் போனமை எமது துரதிஸ்ட வசமாகும். இவ் ஆவணத் தின்படி இப்பாடசாலையானது 1914-09-14 அன்று "முத்துக்குமாரசுவாமி வித்தியா சாலை" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்துள்ளது. அக்காலத்தில் இப்பாடசாலைக்குப் பொறுப்பாக திரு.மு.தில்லைநாதன், திரு.ச.ஜெசநாதன் ஆகியோர் கடமையாற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளனர். ஆரம்பத்தில் இது ஓர் ஆரம்பப் பாடசாலையாகவே (1 - 5) வகுப்புக்களைக் கொண்டு அமைந்துள்ளது. இப்பாட சாலையை நிர்வகிக்கும் பணியினை சைவவித்தியாவிருத்திச் சங்கமே மேற் கொண்டிருந்தது. இவ்வாறு இப்பாடசா லையானது பல அதிபர்களையும் ஆசிரியர் களையும் மாணவர்களையும் தன்னகத்தே கொண்டு இயங்கி வந்துள்ளது. அக்கால கட்டத்தில் பாடசாலைக்கு சேவைகளை வழங்கியவர்களின் முயற்சியும் செயற்பாடு களுமே இன்று இப்பாடசாலை பெரும் விருட்சமாக வேரூன்றி விரிந்து, பரந்து, உயர்ந்து நிற்பதற்கு காரணமாக அமைந்தது எனலாம்.

1935ம் ஆண்டளவில் திரு.நாகநாதர் என்பவர் பாடசாலையின் பொறுப்பினை யேற்று அதிபராகக் கடமையாற்றி உள்ளார். அவர் காலத்தில் பல மாணவர்களை இப்பாடசாலை உருவாக்கி உள்ளது என்றே கூறலாம். இவரைத் தொடர்ந்து திரு. இராமுப்பிள்ளை என்பவர் 1940 காலப்பகுதியில் இப்பாடசாலையின் முதல்வ ராகக் கடமையாற்றி உள்ளார். அவர் சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரிடம் காணப்பட்ட கல்விப்புல மையையும், புராண படனத் திறனையும் உள்வாங்கி சிறந்து விளங்கியவர். எமது வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகர் ஆலயப் பூசகரான திரு. அமரர் க.குமார சுவாமிஜயா அவர்கள் ஆவார். இவரைப் போன்று பல வல்லவர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர் இம்முதல்வர் ஆவார்.

இவர் அதிபராக இருந்த காலத்திலேயே பாடசாலைகள் அனைத்தும் 1949ம் ஆண்டு அரசாங்கம் பொறுப்பேற்கும் நிகழ்வு இடம் பெறுகிறது. இந் நிகழ்வில் எமது பாடசாலையும் "யா/வேரவில் இந்து அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை" என்ற பெயருடன் அரச பாடசாலையாக 1949ம் ஆண்டு பதிவு செய்யப்படுகின்றது. தொடர்ந்து இப்பாடசா லையில் இராசையா என்பவர் அதிபராகக் கடமையாற்றி பல மாணவர்களின் உயர்வுக்கு வழிகாட்டி உள்ளார்.

தொடர்ந்து திரு. மாணிக்கவாசகர் என்பவர் முதல்வராக கடமையேற்று பாடசாலையை சிறந்த முறையில் வழிநடாத்தி வந்தார். அவர்காலத்திலேயே இப்பாடசாலை தரம் 08ற்கு வகுப்புக்கள் உயர்த்தப்பட்டு கல்வி போதிக்கப்பட்டு வந்துள்ளது. அக்காலத்தில் அவ்வாசிரியரிடத்தே கல்வி கற்ற மாணவர்கள் சமகாலத்தில் வாழ்ந்து கொண்டு இருப்பதால் இத்தகவலை அறியக் கூடியதாக உள்ளது. அவரிடம் கல்வி கற்ற மாணவர்களின் கூற்றுக்களும் அவர்கள் சமூகத்திற்கு செய்யும் சேவைகளும் அவர்களை வழிப்படுத்திய அதிபரின் பெருமையினை எடுத்தியப்புவனவாக உள்ளது.

இவரைத் தொடர்ந்து 1962ம் ஆண்டு திரு. கனகசபாபதி என்பவர் அதிபராக கடமையேற்று இப்பாடசாலையை நடாத்தி வந்தார். இவருடைய காலத்தில் தான் குண்டு, தட்டு, ஈட்டி, நீளம், உயரம் போன்ற விளையாட்டுக்கள் முதன்முறையாக இப்பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு விளையாட்டுக்களில் ஈடுபட்ட தாகவும் அறியமுடிகிறது. இவ்வதிபர் சமுதாயத்தில் புரட்சியை ஏற்படுத்தி மாணவர்களின் கல்வி நடவடிக்கையில் சிறப்பாக செயற்பட்டவர். இதற்கு ஆதாரமாக அவர் இரவு நேரங்களில் மாணவர்கள் கற்பித்தலில் ஈடுபடுகின்றனரா? என்பதினை அவதானிப்பதற்காக அரிக்கன் இலாம்புடன் மாணவர்கள் வீடுகளுக்குச் சென்று கற்றலை அவதானித்ததாகவும் அவ்வாறு இப்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கண்ணும் கருத்தாகவும் இருந்து தனது சேவையை திறம்பட ஆற்றி பல மாணவர்களை உருவாக்கியும் உள்ளார்.

இவ்வாறு இவர் விடை பெற்றுச் செல்ல 1967ல் திரு. சாம்பசிவமூர்த்தி என்பவர் முதல்வராக கடமையேற்று பாடசாலையை நடாத்தி வந்துள்ளார். அவர் சேவைக்காலத்தில் பல மாணவர்களை கல்வியில் சிறப்புற வழிப்படுத்தி தனது சேவையை சிறப்பாக்கிக் கொண்டார். இவர் காலத்தில் கல்வி கற்ற மாணவர்கள் சிறப்புடன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். இதனால் இவரின் கல்விப் பணியை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

1970ம் ஆண்டளவில் திரு. க.சுப்பிரமணியம் என்பவர் அதிபராக கடமையாற்றி வந்துள்ளார். இவர் தனது காலத்தில் தன்னால் இயன்ற சேவையினை இப்பகுதி மாணவர்களுக்கு வழங்கி மாணவர்களை வழிப்படுத்தியும் உள்ளார்.

இம்முதல்வர் விடை பெற்றுச் செல்ல 1975ம் ஆண்டு எமது பாடசாலைக்கு அதிபராக திரு. மு. இளையதம்பி என்பவர் முதல்வராக கடமையேற்று பாடசாலையை நடாத்தி வந்தார். இவரை 'கண்ணாடி வாத்தியார்" என்றே அனைவரும் அழைப்பர். கையிலே பிரம்பும் நீண்ட மேற்சட்டையும், வேட்டியும் அணிந்து இருப்பார். " சட்டம்பியார்" என்ற சொல்லுக்கு மிகவும் பொருத்த மானவர். இவர் காலத்தில் திரு.க. சிவசாமி அவர்களும் ஆசிரியராக கடமையாற்றியவர். இவர் தனது காலத்திலே மாணவர்களை கல்வியிலோ, விளையாட்டுக்களிலோ அன்றி ஒழுக்கத்திலே சிறந்த முறையில் தன்னால் முடிந்த சேவையினை இச்சமூகத்திற்கு வழங்கிச் சென்றவர். அவரிடம் கல்வி கற்றவர்களில் பலர் இன்று உயர்நிலைகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1979ல் இம் முதல்வர் விடை பெற்றுச் செல்ல திரு.க.சிவசாமி என்பவர் புதிய அதிபராக கடமையைப் பொறுப்பேற்றுக் கொள்கின்றார். இவர் முதல்வராகிய பின்னரே எமது பாடசாலை வரலாற்றில் பாரிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. கல்வி மட்டுமன்றி சமூகத்தில் புரையோடிப் போயிருந்த அடிப்படைப் பிரச்சினைகளுக் கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து சமுதாயத்தில் புரட்சியை ஏற்படுத்தி சகலதுறைகளிலும் வளர்ச்சியில் எமது பாடசாலை முன்னோக்கி நகர்வதற்கு வழிகோலி யவர் முதல்வர் சிவசாமி என்றே கூறலாம்.

"தோன்றிற் புகழுடன் தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க தனது சேவையினை தாராளமனதுடன் செய்து காட்டியவர். இவர் காலத்திலேதான் வேரவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) வகுப்பிற்கு தரம் உயர்த்தப்பட்டது. இவ்வாறு தரம் உயர்த்தப்பட்டமையால் எமது கிராமத்தில் வாழ்ந்த அனைத்து மாணவர்களும் க.பொ.த (சா.த) வரை கல்வி கற்றுக் கொள்ளக் கூடிய அரிய வாய்ப்பைப் பெற்றுக் கொண்டனர்.

இவருடைய காலத்திலே திரு. ஜெயசிங்கன் என்னும் ஆங்கில ஆசிரியரும் திரு.க.சண்முகலிங்கம் என்பவர் தொண்டர் ஆசிரியராகவும் கல்வி கற்பித்ததுடன் சமயபாடத்திற்கு செல்வி. கு.பரமேஸ்வரி அவர்களும் கடமையாற்றியமை குறிப்பிடத் தக்கது.

இக்காலத்திலேதான் முதன்முறையாக எமது பாடசாலையில் இருந்து க.பொ.த. (சா.த)த்தில் திரு.ஏ.சுந்தரலிங்கம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவன் சகல பாடங்களிலும் சித்தி யடைந்து உயர்கல்வியைத் தொடர்ந்த நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் குறிப்பிட்ட சில ஆசிரியர்கள் மட்டுமே தமது அயராத பணியினால் எம் மாணவர் சமூகத்தை தட்டி எழுப்பி உள்ளனர். அந்தவகையில் திரு.க.பாலகெங்கதரன், திரு.கிஸ்ணதாசன், திரு. சிவனொளிபாதம் போன்றவர்களின் சேவையும் எமது பாடசாலைக்கு பெரும்பணியாக அமைந்து எமது மாணவர் சமூகத்தை உயர ஏற்றி வைக்க வித்திட்டது எனலாம்.

சிவசாமி அதிபர் அவர்கள் தனி மனிதனாக நின்று சமூகத்தை ஒன்று படுத்தியதோடு கிராமத்திலுள்ள சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், விளையாட்டுக் கழகம் என்பவற்றினை ஒன்றிணைத்து வேரவில் கிராமத்தில் ஆண்டு விழாவினையும் விளையாட்டுப் போட்டியினையும் இரவு நேரக் கலை விழாவினையும் பாடசாலையுடன் இணைந்து நடாத்தியவர். அவர் காலத்திலேயே பொன்னாவெளி, பாலாவி, வலைப்பாடு, கிராஞ்சி போன்ற கிராமங்கள் கழக ரீதியாக வந்து போட்டிகளில் பங்குபற்றிய நிகழ்வுகளும், மரதன் ஓட்டம், துவிச்சக்கர வண்டி ஓட்டம், வழுக்கு மரம் ஏறுதல், தலையணைப் போர் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றமை இன்றும் எம் மனங்களில் நினைவாக நிற்கின்றது.

இது மட்டுமன்றி 40 அடி கட்டிடம் ஒன்றும் ஒரு சிறிய ஓலைக் கொட்டிலுமே எமது பாடசாலை வளவினுள் அப்போதைய வகுப்பறைகளாகக் காணப்பட்டன. அத்துடன் தற்போது ஆண்கள் விடுதியாக இருக்கின்ற கட்டிடம் மட்டுமே காணப்பட்டது. அதில் இருந்த மிகவும் சிறிய அறை அதிபர் அலுவலகமாக இருந்து வந்தது. பாடசாலை வளவினுள் பலா, தேசி, தென்னை, வேம்பு போன்ற மரங்கள் காணப்பட்டன. அங்கு காணப்பட்ட பலா மரத்தின் பழங்களை பறித்து பங்கிட்டு மாணவர்களுக்கு வழங்கும் விதம் அதை மாணவர்கள் சுவைத்து சாப்பிடும் விதம் என்றும் மறக்க முடியாத வரலாற்று உணர்வுகளாகும்.

இரண்டாம் தவணைக்காக பாடசாலை ஆரம்பமாகும் போது இடம்பெறும் போர்த் தேங்காய் அடித்தல், முட்டி உடைத்தல், அதிபருக்கு கைவிஷேடம் வழங்குதல் என்பன மிகவும் சிறப்பான நிகழ்வுகள் ஆகும். இவற்றின் தொடர்ச்சியினை இன்று எமது பாடசாலையில் அவதானிக்க கூடியதாக உள்ளது.

இதுமட்டுமன்றி நவராத்திரி விழா என்றால் பாடசாலையே புதுப்பொலிவு பெறும். பாடசாலை மாணவர்களின் பாடல்கள், ஆடல்கள், கும்மி, கோலாட்டம், வில்லிசை என்பவற்றை தானே பயிற்றுவித்து அரங்கேற்றியவர், மாணவர்களை அன்புடன் அரவணைத்து அவர்களுக்கு விஜய தசமி நிகழ்விலே ஏடு தொடக்கி வைப்பார். மேலைத்தேய நடனக்காரர்களை அழைத்து வந்து மேலைத்தேய நடனப் பயிற்சியை எமது மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்தவர். இதுமட்டுமன்றி இரண்டு தடவை இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தினரை வரவழைத்து நிகழ்வுகளையும் ஒழுங்குபடுத்திக் காட்டியவர் சிவசாமி அதிபர் அவர்களே எனலாம்.

இதுமட்டுமல்லாது 20x40, 60x40 ஆகிய இரண்டு கட்டிடங்கள் இவருடைய காலத்திலேயே எமது பாடசாலையில் கட்டப்பட்டு வகுப்பறைகள் ஒழுங்கமைக்கப் பட்டு வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் சிவசாமி அதிபரின் காலம் எமது பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் ஒரு "பொற்காலமாக" திகழ்ந்துள் ளது எனலாம்.

தன்நலம் பாராத தனது சேவையினால் பல மாணவர்களை க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்திபெறச் செய்து உயர்கல்வி கற்பதற்கு வழிசமைத்துக் கொடுத்தவர். அவரது கணீர் என்ற குரலும் பேச்சாற்றலும் எமது சமூகத்தை விழிப்படையச் செய்தது என்றே கூறலாம்.

அவர் காலத்தில் கல்வி கற்ற மாணவர் சமூகம் இன்று உயர் பதவிகளில் உள்ளமை அவரின் சேவையின் உச்சத்தினை நிரூபித்து நிற்கின்றது. பாடசாலையை மட்டுமல்ல பொதுமக்களை, பொது அமைப் புக்களை, பாடசாலையுடன் இணைத்து பல சாதனைகளை படைத்தவர் திரு.க.சிவசாமி அதிபர் அவர்களே! தனது உயர்ந்த சேவையினால் எம் மக்கள் மத்தியில் என்றும் போற்றப்படுபவரும் அவரே! அவரது சேவையினால் எமது மக்களும் எமது பாடசாலையும் எமது கிராமமும் சிறப்புப் பெற்றமையை என்றும் எவரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாத விடயமே ஆகும்.

1983ம் ஆண்டு திரு. க. சிவசாமி அதிபர் விடைபெற்றுச் செல்ல திரு. மூத்ததம்பி அதிபர் அவர்கள் எமது பாடசாலையின் புதிய அதிபராக கடமையேற்றுக் கொள்கின்றார். இவருடைய காலத்திலேயே எமது பாடசாலை யின் முன்னாள் அதிபரும் பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் இருந்த திரு. தி. கணபதிப்பிள்ளை அவர்களும் தமிழ்ப்பாட ஆசிரியராக எமது பாடசாலைக்கு நியமிக்கப்படுகின்றார். இவர்களுடன் 1984இல் திரு. க. ஸ்ரீகணேசன், திரு. சு. சிவானந்தன், திரு. பொ. விநாயகமூர்த்தி, செல்வி. ஜெயலட்சுமி, செல்வி. கனகராணி, செல்வி. லலிதா, திரு. சிதம்பரநாதன் போன்ற நிரந்தர ஆசிரியர்களும் திரு. தீ. யஸ்ரின், திரு. ந. சதாசிவம் ஆகிய ஆசிரியர்கள் தொண்டர் ஆசிரியர்களாகவும் கடமையாற்றி வந்தனர். இக்கால கட்டத்தில் திரு. வே. மூத்ததம்பி அதிபர் 01.02.1985ம் திகதி தொடக்கம் பூநகரி விநாசியோடை அ.த.க.பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல திரு.தி.கணபதிப்பிள்ளை அவர்கள் எமது பாடசாலையின் அதிபராக 01.02.1985 ம் திகதியிலிருந்து கடமையைப் பொறுப் பேற்றுக் கொள்கின்றார்.

வீழ்ச்சியும் எழுச்சியும் உயர்வும் தாழ்வும் எந்த ஒரு விடயத்திலும் நடைபெறுவது உலகத்தின் இயல்பே எமது பாடசாலையும் இதற்கு விதிவிலக்கானது அல்ல. அந்த வகையில் "பரிதியைக் கண்ட பனிபோல" எமது பாடசாலையின் வரலாற்றில் திரு.தி.கணபதிப்பிள்ளை முதல்வரின் காலம் மிகவும் எழுச்சி மிக்க காலமாகவே காணப்பட்டது. பாடசாலை கல்வி, கலை, விளையாட்டு போன்ற சகலதுறைகளிலும் வளர்ச்சிப்பாதையை நோக்கியதாகவே அமைந்துள்ளது.

கடந்த காலங்களெல்லாம் ஒரு நிறைவான ஆசிரியர் வளம் அற்ற நிலையிலேதான் கல்வியின் நகர்வு அமைந்து இருந்தது. இம் முதல்வரின் காலம் சிறப்பான காலமாக அமைந்ததால் ஆற்றல் மிக்க ஆசிரியரணி எமது பாடசாலையில் முதன்முறையாக அமையப்பெறுகிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மேலதிக சேவை இவையே எமது பாடசாலையின் கல்விக்கு அத்திவாரமாக அமைந்தது எனலாம்.

திரு. தி. கணபதிப்பிள்ளை முதல்வரின் முயற்சியும், திரு. க.ஸ்ரீகணேசன் ஆசிரிய ரின் உயர்சிந்தனையும் எமது பாடசாலைக் கான பாடசாலைக்கொடி, கீதம், இலட்சினை மாணவர்களுக்கான கழுத்துப் பட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவற்றை ஆக்கித்தந்தது அந்த வகையில் எமது பாடசாலை கீதமான

"கூர் அறிவின் கல்விதனை பேறுதரும் மாதா

வேரவில்லின் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை"

என்ற பாடலை மறைந்த பேராசிரியர் திரு. வீரமணி ஐயர் அவர்களினால் இயற்றப்பட்டு திரு. க. ஸ்ரீ கணேசன் ஆசிரியரினால் இசையுடன் பாடுவதற்கு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு நாள்தோறும் பாடப்பட்டு வந்தது என்பது முக்கிய விடயமாகும்.

இத்துடன் எமது பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டி நடாத்துவதற்காக பாரதி, இளங்கோ, கம்பர் என இல்லங்கள் பிரிக்கப்பட்டு முதன்முறையாக விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டதும் இவர்கள் காலத்தில் தான். இந்நிகழ்விற்கு கிளிநொச்சி மாவட்டக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய எம்.என். மன்சூர் என்பவர் கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலையில் முதன்முதல் இல்ல விளையாட்டுப் போட்டி நடாத்துவதற்கு விளையாட்டு மைதானம் பெரும் பிரச்சினையாக இருந்தது.

அயலில் உள்ள காணிகளை பெற்றோர் கள் நலன்விரும்பிகள் போன்றவர்களின் உதவிகளைப் பெற்று இரவு பகலாக திரு. செ. குழந்தைவேலு, திரு. நா. குணசேகரன், திரு. சி. அருளிளங்குமரன், திரு. சி.இராசலிங்கம் போன்றவர்களின் உதவியுடன் திரு.க.ஸ்ரீகணேசன், திரு.சு.சிவானந்தன் ஆசிரியர்களும், முதல்வர் கணபதிப்பிள்ளை அவர்களும் இணைந்து துப்பரவு செய்து விளையாட்டுப் போட்டியை முதல்முறையாக சுவடுகளிலும் மைதானத்திலும் நடாத்தி முடித்த நிகழ்வு இன்றும் வரலாறாக எம் மனங்களில் நிலைத்து நிற்கின்றது.

விளையாட்டுப் போட்டி மட்டுமன்றி இரவு கலைவிழா நிகழ்வும் நடாத்தியமையும் இக்கலைவிழாவில் நாடகங்கள், கவியரங்கம், நடனம், நாடகம் இடம்பெற்ற மையும் இவ்விழாவையொட்டி பேச்சு, கவிதை, கட்டுரை போன்ற போட்டி நிகழ்வுகள் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்ட துடன் இந்நிகழ்விற்கு அன்றைய கால கட்டத்தில் வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்த "இனாநூன்" கலந்து சிறப்பித்தமை யும் குறிப்பிடத்தக்கது.

பெரு விளையாட்டுக்களான வலைப் பந்து, கால்பந்து போன்ற விளையாட்டுக்க ளுக்கான கம்பங்கள் அமைக்கப்பட்டு விளையாட்டுக்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து திரு.சு.சிவானந்தன் ஆசிரியரினால் கால்பந்து அணியும் செல்வி ரஞ்சிதா ஆசிரியை அவர்களினால் வலைப்பந்து அணியும் முதன் முறையாக போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலையில் முதன்முறையாக திரு.க.ஸ்ரீகணேசன் ஆசிரியரின் தலைமை யில் சாரணியர் பாசறை ஒழுங்கமைக்கப்பட்டு சாரணங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு சாரணர் சீருடை அணிவிக்கப்பட்டு இரவு "சாரணர் பாசறை தீ" நடாத்தப்பட்டதுடன் மாணவர்களின் இரவுக் கலைநிகழ்வுகளும் எமது முன்னைய பாடசாலை ஆலமர முன்றலில் நடாத்தப்பட்ட நிகழ்வு இன்றும் எம் கண்முன் படமாக உள்ளது.

இவ்வாறு கல்வியிலும் சாதனைகள் இடம் பெறத்தொடங்கின இதுவரை முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இன்மையும் மாணவர்களின் கல்வி நிலை மிகவும் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கிய நிலையேலே காணப்பட்டது. கணிதம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக்கல்வி, சமயம், மனைப்பொருளியல் போன்ற பாடங்களுக்கு ஆசிரியவளம் கிடைத்தமையால் பரீட்சைப் பெறுபேறுகளிலும் உயர்ச்சி ஏற்பட்டு பல மாணவர்கள் உயர் கல்வி கற்கும் வாய்ப்பையும் பெற்றுக் கொண்டனர். 1987ம் ஆண்டு எமது பாடசாலை மாணவன் செல்வன் திருநீலகண்டர் நகுலேஸ்வரன் க.பொ.த (சா.த) பரீட்சையில் எட்டுப்பாடங்களிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கணிதப் பிரிவில் உயர்கல்வியைக் கற்றுக் கொண்டவர் என்பது முக்கிய விடயமாகும்.

இவ்வாறு கல்வி, விளையாட்டு, தமிழ்த்தினம், ஆங்கில தினம் என சகல துறைகளிலும் சாதனை படைத்து நின்றது வேரவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை என்பது முக்கிய விடயமாகும். அப்போது இங்கு கல்வி கற்பித்த ஆசிரிய குழாத்தின் சேவை பாடசாலையுடன் மட்டும் நின்றுவிடாது சனி, ஞாயிறு மாலை நேர வகுப்பு, இரவு நேர வகுப்புக்கள் என மாணவர்களின் கல்வி உயர்வுக்கு தம்மை அர்ப்பணிந்து சேவை செய்தனர். இக்காலத்தின் அதிபர் ஆசிரியர்களின் உயர்ந்த சேவையினால் அவர்களிடம் கல்வி கற்ற பல மாணவர்கள், அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் வேறு நிருவாக உத்தியோகஸ்தர்களாகவும் உயர்ந்த நிலையில் இருப்பது அவர்களின் சேவையின் அர்த்தத்தை விளக்கி நிற்கின்றது.

அன்றைய காலகட்டத்தில் போக்குவரத்து வசதிகளற்ற நிலையில் எமது ஆசிரியர் குழாம் பல மைல் தொலைவிலிருந்து பல்லவராயன் கட்டுச் சந்திவரை பயணம் செய்து பிற்பாடு அப்போது கல்வி கற்ற உயர் வகுப்பு மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகளில் பல்லவராயன்கட்டுச் சந்திக்கு சென்று ஏற்றிவந்து இங்கு தங்கி நின்று தமது உணவுத்தேவையை தாமே சமைத்து நிறைவு செய்து மாணவர்களின் கல்வியில் கண்ணும் கருத்தாக இருந்து எமது மாணவர் சமுதாயத்தை ஏற்றி வைத்த ஏணிப்படிகள் என்பது எவராலும் மறைத்திட முடியாத விடயம் ஆகும். இவ்வாறு கணபதிப்பிள்ளை அதிபர் காலத்தில் 1989ம் ஆண்டுவரை காலவரை மேலே குறிப்பிட்ட ஆசிரியர் குழாமும் 1989ற்கு பின்பு திரு. சு. செல்வரத்தினம், திரு. ஐ.கேசவன், திரு. த. விநாயகமூர்த்தி, திருமதி.இ.சங்கரப்பிள்ளை செல்வி.மஞ்சுளா போன்ற பல ஆசிரியர்கள் இணைந்து மாணவர்களின் கல்வியிலும் விளையாட்டிலும் ஏனைய சகல நிகழ்வுகளிலும் சாதனை படைத்து வேரவில் இ.த.க.பாடசாலையின் பெருமையையும் புகழையும் நிலைநிறுத்தி வைத்தனர் என்றே கூறலாம்.

முதல்வர் தி. கணபதிப்பிள்ளை அவர்கள் பூநகரி கறுக்காய்த்தீவில் இருந்து துவிச்சக்கர வண்டி மூலமே எமது பாடசாலைக்கு வந்து தனது சேவையைச் செய்தவர். நேரத்திற்கே வந்து விடுவார் மாணவர்களிடம் மிகவும் அன்பாகப் பழகுவார். தமிழ்ப்பாடத்தை மிகவும் சுவைபட விளங்கக் கூடியவிதத்தில் கற்பிப்பார். "காங்குலும் பகல்பட வந்தாள்" என்று தமிழிலே கம்பராமாயணத்தை கற்பிப்பது இன்னும் ஒவ்வொரு பாடல்களும் மனதில் அப்படியே பசுமரத்தாணி போலுள்ளது. தமிழை வளர்த்த ஆசிரியர் மட்டுமன்றி தமிழ்ப்பற்றையும் ஊட்டியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் திரு. தி.கணபதிப்பிள்ளை அதிபர் காலத்தில் செல்வி குமாரசுவாமி வாசுகி என்பவர் முதல்முதல் தரம் 5 புலமைப்பரிசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சையில் சித்தி அடைந்தமை எமது பாடசாலை வரலாற்றில் குறிப்பிட வேண்டி விடயம் ஆகும்.

இவருடைய காலத்திலேயே 1989ம் ஆண்டு ஒரு மாடிக் கட்டிடமும் ஆசிரியர் விடுதியும் அமைக்கப்பட்டது. ஆசிரியர் விடுதி அமைப்பதற்கு இடம் பிரச்சினையாக இருந்ததால் அயலிலே உள்ளவர்களை அணுகி காணியினைப் பெற்று ஆசிரியர் விடுதியினை கட்டி முடித்தவர். இவ்வாறு எமது பாடசாலையில் சிறந்த சேவையாளனாய் மக்களோடும் மாணவர்களோடும், ஆசிரியர்களோடும் இணைந்து எமது வேரவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலையை உயர்த்திய பெருமைக்குரிய முதல்வர் இவர் என்பதில் ஐயமில்லை.

1991.04.30ம் திகதியுடன் திரு.தி.கணபதிப்பிள்ளை அவர்கள் விடைபெற்றுச் செல்ல மீண்டும் திரு.க.சிவசாமி அவர்கள் 1991.04.30 முதல் புதிய முதல்வராக கடமையை ஏற்றுக் கொள்கின்றார். இக்காலத்தில் சிவசாமி முதல்வருடன் பல புதிய ஆசிரியர்களும் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். "புதியன புகுதலும் பழையன கழிதலும்" என்பதற்கு இணங்க வேரவில் பாடசாலையில் பல புதிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. பாடசாலை கல்வி விளையாட்டு, நாடகம், தமிழ்த் தினப் போட்டி, ஆங்கில தினம் என சகல துறைகளிலும் பாரிய வளர்ச்சியை அடைந்து நின்ற காலம். 1992ம் ஆண்டு இடம் பெற்ற திரு. சூ.அகஸ்ரின் (அமரர்) அவர்களின் தலைமையில் ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி இப்பாடசாலையில் நடாத்தப் பட்டது. இக்கண்காட்சியை கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து மாணவர்கள் வந்து பார்வையிட்டு பயன்களையும் பெற்றுக் கொண்டனர் என்பது வரலாறு.

1993ம் ஆண்டு திரு.பொ.விஜயநாதன் அவர்களினால் "புலியாசனம்" என்கின்ற சிறுவர் நாடகம் தமிழ்த்தினப் போட்டியில் அரங்கேற்றப்பட்டு கோட்ட, மாவட்ட, தேசிய நிலைகளில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டமையும் அத்துடன் திரு. சண்முகநாதன் ஆசிரியரினால் "பஞ்சாலி சபதம்" என்கின்ற நாடகம் தேசிய மட்டத்தில் முதல் இடத்தினைப் பெற்றமையும் இது மட்டுமன்றி கதாபிரசங்கம், பேச்சு போன்றன முதலிடங்களைப் பெற்றுக் கொண்ட கலை நிகழ்வுகள் ஆகும். 1993இல் வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் சாதனைகளைக் கண்ணுற்ற அன்றைய கல்விப் பணிப்பாளர் திரு. பொன் சபாபதி அவர்கள் வேரவில் இந்து வித்தியாலயத்திற்கு வருகை தந்து இந்நிகழ்வுகளில் பங்கு பற்றிய மாணவர்களையும் பெற்றோர்களையும் கௌரவித்துச் சென்றமையானது அக்கால கட்டத்தில் கடமையாற்றிய அதிபர், ஆசிரிய ர்களின் ஆக்கமும் ஊக்கமுமே என்று கூறலாம்.

விளையாட்டை எடுத்துக் கொண்டால் கோட்டமட்ட பெரு விளையாட்டுக்கள் எமது பாடசாலையில் நடாத்தப்பட்டமையும் அத்துடன் கூடைப்பந்து போட்டிக்காக கரைச்சி, கண்டாவளை போன்ற கோட்டங்களில் இருந்து எமது பாடசாலைக்கு வருகை தந்து போட்டியில் பங்கு பற்றிச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. இக்கால கட்டத்தில் எமது பாடசாலை பா.றிச்மன்ட், திருமதி.செ.திருநாவுக்கரசு போன்றவர்கள் பெண் ஆசிரியர்களாக இருந்து வலைப்பந்து போட்டியில் மாவட்ட மட்டத்தில் 17, 15 வயது அணிகள் முதலிடத்தையும் பெற்றுக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துடன் உதைபந்து, கரப்பந்து போன்ற போட்டிகளிலும் மெய்வல்லுனர் விளையாட்டுக்கள், உடற்பயிற்சி போட்டிகளி லும் திரு.சு.செல்வரத்தினம், திரு.சு. திருநாவுக்கரசு, திரு.ஐ.கேசவன், திரு.தீ.யஸ்ரின், திரு.த. விநாயகமூர்த்தி, திரு.சே.கோடீஸ்வரன் போன்ற ஆசிரியர்களும் கோட்ட, மாவட்ட, தேசிய மட்டங்களில் வேரவில் இந்துவின் இடத்தை பதிய வைத்தனர் என்றே கூறலாம்.

இக்கால கட்டத்தில் நடைபெற்ற ஊர்திபவனி போட்டியில் திரு.க. சிவசாமி முதல்வரின் வழிகாட்டலில் திரு.தீ.யஸ்ரின் அவர்களின் கைவண்ணத்தில் வேரவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டமை வரலாற்றில் குறிப்பிட வேண்டிய விடயமாக அமைகின்றது. இப்படியாக சிவசாமி முதல்வர் அவர்கள் தான் விட்டுச் சென்ற பணியை மீண்டும் வெற்றியின் விளிம்புக்கு இட்டுச் சென்றார் எனலாம்.

இவருடைய காலத்திலே தான் 1995ம் ஆண்டு முன்னோடித் தேர்வில் எமது பாடசாலை மாணவியாக இருந்த செல்வி பவிளினப்பர் மேரிறொக்சி கிளிநொச்சி மாவட்டத்திலேயே சிறந்த பெறு பேற்றைப் பெற்று அன்று இருந்த நிர்வாகத்திடம் பெரும் பாராட்டையும் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார். இக்காலத்தில் கடமையாற்றிய முதல்வரும் ஆசிரியர்களுமே இப்பெருமைக் குரியவர்கள். அவர்களின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்பான சேவையுமே பல மாணவர்களை உயர்கல்வி கற்பதற்கு வழி கோலியது எனலாம். அன்றைய மாணவர்கள் இன்று சமூகத்தில் ஆசிரியராக அதிபர்களாக பல்வேறு உயர்பதவிகளில் உள்ளனர்.

இவ்வாறு எமது பாடசாலையில் வரலாற்றுத் தடயங்களை பதிவு செய்து தனது பதவி உயர்வின் பொருட்டு 1995.9.25 திகதி எமது பாடசாலையிலிருந்து முதல்வர் திரு.க.சிவசாமி அவர்கள் விடைபெற்றுச் செல்ல திரு. குழந்தை கனகலிங்கம் அன்றிலிருந்து எமது பாடசாலை புதிய அதிபராக கடமையேற்றுக் கொள்கின்றார்.

இவர் பதவி ஏற்றுக் கொண்டகாலம் தமிழ்மக்களின் வாழ்விலும் பெரும் சோதனைகளைத் தந்த காலம். இவர் பதவியேற்று இரண்டு மாதங்களிலே யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய இடப்பெயர் வினை 'வலிகாமம்" இடப்பெயர்வு இடம்பெறுகின்றது. 1995.11.30ம் திகதியுடன் எமது பாடசாலை யாழ்ப்பாணத்தில் இருந்து ஏதுமற்ற ஏதிலிகளாக வந்த மக்களைத் தாங்கி கொண்டது. அன்று தொடக்கம் எமது பாடசாலை கட்டிடங்கள் அனைத்தும் நலன்புரி நிலையமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட பாடசாலை ஆலமரத்தின் கீழ் வகுப்பறைகள் அமைக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்தது.

இக்கால கட்டத்தில் எமது பாடசாலை 2000 மாணவர்களைக் கொண்டதாக மாற்றம் பெறுகின்றது. இது மட்டுமன்றி யாழ் மாவட்டத்தின் பல ஆசிரியர்கள் எமது பாடசாலையை தமது இணைப்புப் பாடசாலையாகவும் மாற்றிக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு எமது மாணவர்களின் செயற்பாட்டை திறம்படச் செய்யமுடியாமல் போனாலும் முடிந்தவரை செய்யக்கூடியவற்றை மாணவர்களுக்கு ஒழுங்கமைத்து பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அன்றைய முதல்வரும் ஆசிரியர் குழாமும் பெரும் பிரயத்தனங்களை கொண்டிருந்தனர். இக்கால கட்டத்தில் தான் 1996ம் ஆண்டில் இருந்து வேரவில் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த.(சா.த)பரீட்சை நிலையமாக மாற்றம் பெற்றது. இதுவரை காலமும் பூநகரி, ஜெயபுரம், முழங்காவில் என பரீட்சை எழுதுவதற்குச் சென்ற மாணவர்கள் தமது பாடசாலையில் பரீட்சை எழுதும் வாய்ப்பைப் பெற்றனர். அன்று தொடக்கம் இன்று வரை இப்பாடசாலையானது பரீட்சை நிலையமாக இருந்து வருகின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

பாடசாலையின் ஒருபுறம் இடம்பெயர்ந்த மக்களும் இன்னோர் புறம் மாணவர்களின் வகுப்பறைகளாகவும் மாணவர்களின் கல்விச் செயற்பாடு உருண்டோடுகிறது. இவ் இக்கட்டான சூழ்நிலையிலும் உடற்பயிற்சி, தமிழ் மொழித்தினம், ஆங்கிலதினம், பெருவிளையாட்டுக்கள், சாரணர் பாசறை போன்றவற்றில் எமது பாடசாலையும் பங்கு பற்றி மாவட்ட, தேசிய மட்டங்களில் முதன்மை இடங்களையும் பெற்று சாதனை படைத்து நின்றது எமது பாடசாலை. ஜெயபுரம், முழங்காவில், அக்கராயன் போன்ற இடங்களில் போட்டிகளில் பங்கு கொள்வதற் காக பயணம் செய்வது துவிச்சக்கர வண்டிக ளிலும் அல்லது கோடீஸ்வரன் ஆசிரியரின் உழவு இயந்திரமாகத் தான் இருக்கும். மாணவர்கள், பொறுப்பாசிரியர்கள், முதல்வர் போன்றவர்கள் எந்தச் சலனமும் இன்றி சென்று போட்டிகளில் பங்குபற்றி வென்று வருவார்கள் என்பது இங்கு நினைவில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

திரு. கு. கனகலிங்கம் அதிபர் மிகவும் அன்பாகப் பழகும் சுபாவம் உடையவர். எவரது மனதையும் நோகடிக்கமாட்டார். தனது உடல் நிலையையும் கருத்தில் கொள்ளாது கரியாலைநாகபடுவானில் இருந்து துவிச் சக்கரவண்டி மூலம் 15 மைல்கள் பயணம் செய்து உரிய நேரத்திற்கே பாடசாலைக்கு வந்து விடுவார். ஆக்கம், அழகியல் போன்ற செயற்பாடுகளில் மிகவும் ஈடுபாடு உடையவர். ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு கழிவுப் பொருட்களைக் கொண்டு ஆக்கச்செயற்பாடு களைச் செய்து மகிழ்விப்பதில் வல்லவர். இனிமையாகப் பாடும் வல்லமை உடையவர். எமது பாடசாலையில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளில் அதிபரின் பாடலும் இடம் பெறுவது வழமையான விடயமாக அமையும். இவ்வாறு இக்கட்டான காலகட்டத்தில் எமது பாடசாலையைப் பொறுப்பேற்று தன்னால் முடிந்தவரை தன்னுடன் இருந்த ஆசிரியர் வளத்தைப் பயன்படுத்தி பல சாதனைகளை வேரவில் இ.ம.வியில் படைத்துக் கொள்ள வழி சமைத்து நின்றவர் முதல்வர் திரு. கு.கனகலிங்கம் அவர்கள் என்பது உண்மையே. மக்களுடனும் மாணவர்களுட னும் இணைந்து சேவையாற்றிய உத்தமர் எனலாம்.

இவ்வாறு 1995 - 1999 வரை தனது வரலாற்றை வேரவில் இந்துவில் பதிவு செய்து தனது உடல் நலனினைக் கருத்தில் கொண்டு எமது பாடசாலையில் க. பொ. த. (உ.த) வகுப்பை உருவாக்குவதற்கு அரும்பாடுபட்டு எமது பாடசாலை

கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயமாக திகழ்வதற்கு காரண கர்த்தாவாகி அன்று இருந்த ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர்கள், மாணவர்கள் அனைவரு டனும் ஒத்துழைத்து பாடசாலையின் உயர்வுக்கு வழிகோலி விடைபெற்றுச் செல்கின்றார்.

1999 பிற்பகுதியில் திரு. கனகலிங்கம் முதல்வர் விடைபெற்றுச் செல்ல திரு.சு.சிவபாத சுந்தரம் முதல்வராக கடமை யேற்றுக் கொள்கின்றார். எல்லோருடனும் அன்பாகப் பழகும் இயல்பு கொண்டவர். கடமையில் மிகவும் கண்ணியமானவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகலிங்கம் முதல்வர் காலத்தில் க.பொ.த.(உ/த) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டாலும் அவரின் வழியனுப்புதல் நிகழ்வும் க.பொ.த (உ/த) மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும் ஒரே தினத்தில் திரு. சிவபாதசுந்தரம் முதல்வரினால் நடாத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது. இந்நிகழ்வுக்காக வேரவில் வலைப் பாடு, கிராஞ்சி, பொன்னாவெளி மக்களின் உதவியை நாடி அதிபர், ஆசிரியர்களும் வீடு வீடாகச் சென்றமை இன்றும் மறக்க முடியாத நிகழ்வாக மனங்களில் பதிந்துள்ளது.

இவர் காலத்தில் செல்வி பா.றிச்மன்ட் ஆசிரியை உபஅதிபராக இருந்து எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு மிகவும் உதவியவர் ஆவார். அத்துடன் எமது பாடசாலைப் பெண் மாணவர்களின் ஒழுக்க நடவடிக்கையில் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு மாணவர்களை சிறந்த முறையில் வழிப்படுத்தியவர் என்பது குறிப்பிட வேண்டிய விடயமாகும். திரு.சிவபாதசுந்தரம் முதல்வ ரின் காலத்திலும் எமது நாட்டுச் சூழல் மிகவும் சிக்கலானதாக அமைந்து இருந்தாலும் எமது பாடசாலையில் க.பொ.த (உ/த) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டமை எமது பகுதி மாணவர் சமுதாயத்திற்கு மிகவும் ஓர் வரப்பிரசாதமா கவே அமைந்தது எனலாம் பல்வேறு இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்த மாணவர்களுக்கும் தமது உயர்கல்வியை எமது பாடசாலையிலேயே நிறைவேற்றிய பல்கலைக்கழக அனுமதியையும் பெற்றுள்ள னர். இவ்வாறு சாதனை படைத்து நிற்பதற்கு காரணமாக அமைந்தவர்கள் அன்றைய முதல்வரும் அவருடன் இணைந்து பணியாற்றிய ஆசிரியர்கள் குழாமுமே ஆகும்.

கல்வி பொ.த (உ/த) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டாலும் தமிழ், புவியியல் போன்ற பாடங்களைத் தவிர ஏனைய கிறிஸ்தவ நாகரீகம், இந்து நாகரீகம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் இன்மை பெரும் குறைபாடகவே இருந்தது. காணப்பட்ட வளத்தில் உச்சப் பயனைப் பெற்று உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட முதல் வருடத்திலேயே கலைப்பிரிவில் இருந்து எமது பாடசாலையின் முதல் பல்கலைக்கழக மாணவனாக திரு ஜெயபாலன் ஸ்ரீரங்கன் என்பவர் பதிவினை ஏற்படுத்தி பல்கலைக்கழக அனுமதியையும் பெற்றுக் கொள்கின்றார். இது எம் பாடசாலை வரலாற் றில் " பொன் எழுத்துகளால்" பொறிக்கப்பட வேண்டிய விடயமாக அமைந்தது. அதிபர், ஆசிரியர்களை பெற்றோரை ஆனந்தத்தி லும் ஆழத்திய ஒரு நிகழ்வும் எனலாம். இதனைத் தொடர்ந்து எமது பாடசாலை வருடாவருடம் மாணவர்களை பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிய வண்ணமே உள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

திரு.சு.சிவபாதசுந்தரம் அதிபர் காலத்தில் திரு.பொ.விஜயநாதன் ஆசிரியர் தலைமையில் அன்று இருந்த ஆரம்பக்கல்வி ஆசிரியர்களினால் ஆரம்பக்கல்வி கண்காட்சி நடாத்தப்பட்டு அது மாவட்டத்தில் கிளி / வேரவில் இ.ம.வி முதல் இடத்தைப் பெற்றுகொண்டமையும் குறிப்பிடக்கூடிய சாதனையாக அமைந்துள்ளது. இது மட்டுமன்றி தமிழ்மொழித்தினம், பெருவி ளையாட்டு, மெய்வல்லுனர்போட்டிகள், ஆங்கிலதினம் போன்ற சகல நிகழ்வுகளி லும் மாணவர்கள் பங்குபற்றி பல சாதனை களையும் படைத்துள்ளனர் எனலாம்.

இவ்வாறு தன்னுடைய காலப்பகுதியில் தன்னால் இயன்றவரையில் காணப்பட்ட ஆசிரியர் வளத்தைப்பயன்படுத்தி பலசாத னைகளைப் படைத்தவர். 2002ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் இரண்டு மாணவர்கள் சித்தியடைந்ததுடன் ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் சித்திப்புள்ளியினை பெற்றுக் கொண்டமையும் இவருடைய காலத்தில் முக்கியமான விடயம் ஆகும்.

2003ம் ஆண்டு திரு.சு.சிவபாதசுந்தரம் அதிபர் விடைபெற்றுச் செல்ல திரு.அ.ஜெயக்குமார் அதிபராக கடமையைப் பொறுப்பேற்றுக்கொள்கின்றார். மிகவும் சுறுசுறுப்பானவர் கலகலப்பாகப் பேசும் சுபாவம் படைத்தவர். சிரித்துப் பேசி மாணவர்களையும் ஆசிரியர்களையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர் என்றே சொல்லலாம். இவருடைய காலத்தில் திருமதி.இ.மதுரநாயகம் உபஅதிபராகக் கடமையாற்றியவர். இம் முதல்வரின் குடும்பம் வன்னேரிக்குளத்தில் வசித்து வந்தாலும் எமது பாடசாலை அதிபர் விடுதியில் தங்கி இருந்தே தனது சேவையை திறம்படச் செய்தவர். இவர் காலத்தில் விளையாட்டு, உடற்பயிற்சி தமிழ்த்தினப்போட்டி அனைத்திலும் சாதனை களை மாணவர்கள் படைத்து நின்றனர். இவ்முதல்வர் ஆரம்பக்கல்வியில் ஆர்வம் கொண்டவர் .தரம்-5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு இரவு நேர வகுப்புக்களை ஒழுங்குபடுத்தி நடாத்தியவர்.

இவர் வேரவில் இந்து மகாவித்தி யாலயத்தில் சிறிது காலம் சேவையாற்றி னாலும் சிறப்பான முறையில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரு டனும் அன்பாகப்பழகி பெற்றோர் மனதினை வென்று நின்றவர் எனலாம்.

இவர் 2004இல் விடைபெற்றுச் செல்ல திரு.சே.கோடீஸ்வரன் அதிபராகக் கடமை யேற்று சிறிதுகாலம் பாடசாலையை வழிநடாத்தி வந்தார். அவர் தனது கடமைக்காலத்தில் பாடசாலை விளையாட்டுப் போட்டி , தமிழ்த்தினம் , ஆங்கில தினம் பெருவிளை யாட்டு என சகல துறைகளிலும் மாணவர்களைப் பங்குபற்றச் செய்து மாணவர்களை திறம்பட வழிப்படுத்தியவர். . மாணவர் பங்குகொண்ட போட்டிகளில் கோட்டம், மாவட்டம் என இடங்களைப் பெற்று சாதனையும் படைத்தனர் எனலாம்.

திரு.சே.கோடீஸ்வரன் அதிபராக இருந்த காலத்தில் 2005ம் ஆண்டு காலப்பகுதி யிலே தான் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்தில் எமது பாடசாலைக்கு ஒரு பெரிய தொகுதி ஆசிரியவளம் நியமிக்கப் படுகிறது. இவ் அதிபர் , ஆசிரியர்கள் அனை வரும் இணைந்து நடாத்திய விளையாட்டுப் போட்டி இன்று மறக்க முடியாத நினைவாக உள்ளது.

கோடீஸ்வரன் முதல்வராக நடாத்திய விளையாட்டுப் போட்டியின் போது ஏற்பட்ட மைதானப் பிரச்சினையால் எமது பாடசாலை இன்னும் வசதியான ஓர் இடத்திற்கு நகரவேண்டும் என்பதை எண்ணி தன்னால் முடிந்தவரை ஒருவசதியானை இடத்தில் காணியைப் பெற்றுக்கொள்வதற்கு முயற் சித்து நின்றவர். இச்சந்தர்ப்பத்திலே தனது சில சொந்த விடயங்களையும் கருத்தில் கொண்டு கோடிஸ்வரன் ஆசிரியர் விடை பெற்றுச் செல்ல எமது பாடசாலையின் பொறுப்பை உபஅதிபராக இருந்த திருமதி.கி மதுரநாயகம் அவர்கள் ஏற்று நடாத்தி வந்தார். இவ்வாறு சில காலம் உருண்டோடியது.

இக்காலகட்டத்தில் தான் 2005ம் ஆண்டின் பிற்பகுதியிலேயே திரு.து இளங்குமரன் அவர்கள் முதல்வராக எமது பாடசாலையைப் பொறுப்பேற்றுக்கொண்டார். திரு.து.இளங்குமரன் முதல்வர் மிகவும் துடிதுடிப்பானவர் வித்தியாசமான பண்புகளைக் கொண்டவர். ஆசிரியர் களையோ, மாணவர்களையோ அவர்க ளைத் தனித்தனியே அணுகி பிரச்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை இனங்கண்டு அவற்றை தீர்ப்பதில் வல்லவர். எவர் மனம் கோணவும் நடக்காத இயல்பு கொண்டவர். அனைவரையும் சமமாக மதித்து நடப்பவர். எந்த விடயத்தையும் அனைவருடனும் கலந்து ஆலோசித்து நடைமுறைப்படுத்துபவர். இவர் எமது பாடசாலையை பொறுப்பேற்றுக் கொண்ட காலம் நாட்டுச் சூழலும் சற்று இறுக்கமடைந்திருந்த காலம் மாணவர்கள், மக்கள் அச்சத்துடன் வாழ்ந்த காலம், மாணவர் வரவில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்ட காலம். இவ்வளவு இக்கட்டான சூழலிலும் தன்னால் இயன்ற சேவையை மாணவர்களுக்கு ஆற்றி நின்றவர்.

இவருடைய காலத்தில் தான் எமது பாடசாலையின் பெரும் பிரச்சினையாக இருந்த காணிப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு எமது பாடசாலை ஒரு நிறைவான காணியில் பிரவேசிக்கப்பட்டது என்று கூறலாம். இந்தவகையில் இவரின் இவ் அரிய சேவையை எமது மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். தான் கடமையேற்று சிறிது காலத்திலேயே ஒரு குறுகிய நிலப்பரப்பில் இயங்கிய எமது பாடசாலை ஒருநிறைவான இடத்திற்கு நகர்த்தப்பட்டதுடன் தனது பெருமுயற்சியினால் பெற்றோர்களான திரு.க.சிவநேசன், திருமதி அ.பவளம் ஆகியோரிட மிருந்து நன்கொடையாகவும் மற்றும் அரச காணியையும் பெற்று உரிய இடத்தில் பாடசாலையை நிலை நிறுத்துவதற்கு அயராது உழைத்தவர் முதல்வர் இளங்குமரன் என்பதில் ஐயமில்லை. அன்று அவருடன் சேவையாற்றிய ஆசிரிய குழாமும் இதற்கு உறுதுணையாக நின்றது எனலாம்.

எமது பாடசாலை விஸ்தீரணமான இடத்தில் அமைக்கப்பட்டதுடன், விளையாட்டுப் போட்டி முறையாக சுவடுகள் அமைக்கப்பட்டு விளையாடியது திரு.து.இளங்குமரன் அதிபர் காலத்தில் எனலாம். எமது பாடசாலையின் காணிப்பிரச்சினை தீர்க்கப்பட்டு எமது பாடசாலையில் நான்கு கீற்றுக் கொட்டில்களும் ஒரு நிரந்தர கட்டடமும் அமைக்கப்பட்டதுடன் இந்து மாணவர்களின் நிரந்தர வழிபாட்டு இடமாகக் காணப்படுகின்ற ஆலயத்தை திரு.க.குமாரசுவாமி ஐயா அவர்களினால் அத்திவாரம் இடப்பட்டு கோவில் அமைக்கப்பட்டமையும் இவரின் காலத்தில் என்றே கூறலாம். வேலைகள் அனைத்தும் பூர்த்தியாக்கப்பட்டு 2006.10.14 விஜயதசமி தினத்திலேயே புதுக்கட்டிடத்தில் பிரவேசம் செய்தமையும் புதுக்கட்டிடத்தை அப்போதைய கல்விப் பணிப்பாளர் திரு.த.குருகுலராசா அவர்களால் திறந்து வைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இக்காணியைப் பெற்றுத்தருவதற்கு அன்று பூநகரி உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு.ஸ்ரீஸ்கந்தகுமார் என்பவரின் சேவையும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயம் ஆகும்.

பெற்றோர்கள் , பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் என்பவர்களின் உதவியுடன் காணி துப்பரவு செய்யப்பட்டதுடன் 2007ம் ஆண்டு ஒரு சிறப்பான விளையாட்டுப்போட்டியையும் ஒழுங்கமைத்து நடத்தியவர் இவருடன் அக்காலத்தில் திரு.கு.சுழுகலிங்கம், திரு. ஸ்ரீஸ்கந்தராசா ஆகிய ஆசிரியர்களும், இவருக்கு ஒத்தாசையாக நின்று ஒத்துழைத்தவர்கள் என்ற பெருமைக்கு உரியவர்கள் எனலாம்.

இதுமட்டுமன்றி 2006ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களை ஒழுங்குபடுத்தி அவர்களுக்கு இரவு, பகல் வகுப்புக்களை அமைத்துக்கொடுத்து புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வி அலோசியஸ் மேரி ஜோண்சி என்ற மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி அடைந்தமையும் ஏனைய மாணவர்கள் 100க்கு மேல் புள்ளிகளைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதுமட்டுமன்றி ஆலமரத்தைச் சுற்றி கம்பி வேலி அமைத்து சிறுவர் பூங்கா ஒன்றை வடிவமைத்து எமது பாடசாலை ஆரம்பக் கல்வி மாணவர்களின் உயர்வுக்கு வழிகோலி நின்றவர் இவர்காலத்தில் 2006ம்ஆண்டு க.பொ.த (சா / த) பரீட்சையில் பல மாணவர்கள் சித்தியெய்தியதுடன் அவர் கல்வியில் கொண்டிருந்த ஆக்கமும் ஊக்கமும் ஆகும். இவர் காலத்தில் கல்வி கற்ற மாணவர்கள் இன்று உயர்கல்வியினை கற்றுக்கொண்டு உள்ளனர். இவர் காலத்தில் எமது பாடசாலையானது கல்வி, விளையாட்டு ஏனைய சகல துறைகளிலும் சிறந்தோங்கியது எனலாம்.

இவர் கடமையாற்றிய காலம் சிறிதெனினும் தன்னலம் பாராது விருப்புடன் தனது சேவையை எமது பாடசாலைக்கு மனப்பூர்வமாக வழங்கி நின்றவர். எமது பாடசாலை ஓர் கல்லூரியாக மிளிரவேண்டும் என வாழ்த்தி நின்றவர். அவரின் வாழ்த்துக்களும் சேவைகளும் எமது பாடசாலையை என்றும் உயர்த்தி வைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இவ்வாறு மக்களுடனும், மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் மிகவும் அந்நியொன்னியமாகப் பழகி மக்கள் மனதை வென்று கொண்டவர் என்றே கூறலாம். இவ்வாறு தனது உயர்வு கருதியும் , தனது உயர்கல்விக்காகவும் அவர் எமது பாடசாலையில் இருந்து விடைபெற்றுச் செல்ல யாரும் அதிபராக கடமை யேற்காத நிலையில் உபஅதிபர் திருமதி.கி.மதுரநாயகம் அவர்களினால் எமது பாடசாலை நிருவகிப்பட்டுவந்தது. அன்றைய போர்ச் சூழலும் எமது கல்வி நடவடிக்கை பெரும் இடைஞ்சலாக அமைந்தாலும் பாடசாலைச் செயற்பாடுகள் யாவும் சிறந்தமுறையில் நடாத்தப்பட்டு வந்தன என்றே கூறலாம்.

இதுவரை காலமும் ஆண் அதிபர்களினால் நிருவகிப்பட்டு வந்த எமது இந்து மகாவித்தியாலயம் ஒரு பெண் அதிபரின் கைகளிலே முதல் தடவையாக நிருவகிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்படு கின்றது. 2008.01.02ம் திகதியிலிருந்து திருமதி. பரமேஸ்வரி சோதிலிங்கம் எமது பாடசாலையில் கால் பதிக்கின்றார் இவர் எமது பாடசாலைக்கு வருகை தந்த காலம் வனனித்தமிழ் மக்களின் வாழ்வின் சோதனைக்காலம் என்றே கூறலாம்.

எந்தநேரத்தில் என்ன நடக்கும் என்று மக்கள் அச்சத்துடன் வாழ்ந்த காலம். இம் முதல்வர் கடமையேற்று ஒருமாத காலத்திலேயே விமான குண்டு வீச்சுக்கள் எமது பாடசாலைக்கு மிகவும் அருகாமையில் நடந்தேறியது. இவ்விடயம் மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பெரிதும் பாதித்து நின்றது. இவ்வாறு நாட்டுச் சூழல் இறுக்கமடைய கீற்றுக் கொட்டில் ஒன்று புதிதாக அமைக்கப்பெற்று வேலைகள் முடிவடைந்த நிலையில் அக்கட்டிடத்தை வகுப்பறையாக நாம் பாவிக்காத நிலையில் 04.08.2008 எமது கிராமமே கால்கள் போன திசையில் எமது கிராமத்தை விட்டு வெளியேறுகின்றது. இக்காலக்கட்டத்தில் எமது அதிபர் வன்னேரிக்குளத்தைச் சேர்ந்தவர் ஒவ்வொரு நாளும் உந்துருளியில் பயணம் செய்து வந்து போபவர். கிளைமோர்த் தாக்குதல் உச்சமடைந்த காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சத்தில் மக்கள் உறைந்து வாழ்ந்த தருணம் இந்நிலையிலே எமது மாணவர் களின் கல்விநிலை கேள்விக் குறியாகி நின்ற காலம் எனலாம்.

மக்கள் மட்டுமன்றி எமது பாடசாலையும் இடம்பெயர்ந்து கிளி / வன்னேரிக்குளம் அதன் பின்னர் கிளி / பிரமந்தனாறு ம. வி யிலும் இணைப்புப் பாடசாலையாக இயங்கி வந்தது. மாணவர்கள் தாங்கள் சென்ற இடங்களில் தமக்கான பாடசாலையை தெரிவுசெய்து கொள்ள குறிப்பிட்ட சில ஆசிரியர்கள் மட்டும் கிளி / பிரமந்தனாறு ம. விக்கு சென்று தங்கள் வரவை உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். இவ்வாறு 2008.12.ம் மாதத்துடன் வன்னிப் பெரு நிலப்பரப்பில் உள்ள சகல பாடசாலைகளும் அப்போது ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக மூடப்பட்டு மக்கள் தங்கள் உயிர்காக்கும் பணியில் ஈடுபடத் தொடங்குகின்றனர். இவ்வாறு 2009 ம் ஆண்டு தைமாதக் கொடுப்பனவுடன் கொடுப்பனவுகள் யாவும் நிறுத்தப்பட அரச கட்டுப்பாட்டு பகுதிக்குள் மக்கள் நகரத் தொடங்கினர். இவ்வாறு 2009 ம் ஆண்டு வைகாசி மாதத்தின் பின்னர் சகல பாடசாலைகளும் இடம்பெயர்ந்த மக்களின் இடைத்தங்கல் முகாமான செட்டிக்குளப்பகு தியிலே இயங்கத் தொடங்கியது எனலாம் . இவ்வாறு 2009ம் ஆண்டின் முழுமைக் காலமும் எமது மாணவர்களின் கல்வி வசதி அற்ற சூழ்நிலையிலும் பெரும் சீரழிவுகளுடன் ஒருவருடத்தைப் பூர்த்தி ஆக்கின்றது.

2009ம் ஆண்டு மார்கழி மாதம் 4ம் திகதி எமது கிராம மக்கள் எமது கிராமத்திற்கு மீண்டும் மீள்குடியமர்விற்கு செட்டிக்குளப்பகு தியில் இருந்து அனுப்பிவைக்கப்படு கின்றனர். இவ்வாறு சொந்தக்கிராமத்தில் எமது கிளி / வேரவில் இ.ம.வி மீண்டும் புதுப்பொலிவுடன் 2010-01-02 ம் திகதி தொடக்கம் எமது பழைய பாடசாலை வளாகத்திலே இயங்கத் தொடங்குகின்றது. எமது பாடசாலை வளவோ பற்றைக்காடு களால் மூடப்பட்டு கால்வைக்க முடியாத நிலையில் காணப்பட்டது.

எமது அதிபர் திருமதி ப.சோதிலிங்கம் அவருடன் இணைந்த ஆசிரியர்களும் காடுகளை வெட்டி துப்பரவு செய்து எந்தவித வசதிகளும் அற்ற நிலையில் கட்டிடங்களோ தளபாடங்களோ எந்தக் கற்றல் உபகரணங்களும் இன்றி அதிபர் தனது முயற்சியினால் புதிய பாடசாலை வளவினுள் காணப்படும் ஆலமரத்தினை வகுப்பறைக ளாக்கி எமது மாணவர்களின் கல்வி நடவடிக் கையை மேற்கொள்ளத் தொடங்கினார் என்றே கூறலாம்.

இவ்வாறு எமது பாடசாலையை வளர்க்க வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையுடன் பல்வேறு நிறுவனங்களையும், கல்வித் திணைக்களத்தையும் எமது முதல்வர் அணுகி ஒரு சில மாதங்களின் பின்னர் இரண்டு கீற்றுக் கொட்டில்கள் அமைக்கப்பட்டு வகுப்பறைகள் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப் பட்டு வந்தது. பெண் அதிபராக இருந்தாலும் "நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வை யும்"கொண்டவர் எமது அதிபர். தனது விடாமுயற்சியினால் யுனிசெவ் நிறுவனத் தின் உதவியுடன் இன்னுமோர் அரை நிரந்தரக் கட்டிடமும் எமது வளாகத்தினுள் அமைக்கப்பட்டது. வகுப்பறை முழுமையாக காணாத நிலையிலும் ஆசிரியர்வளம் முழுமையற்ற நிலையிலும் எமது பாடசாலை யின் கல்விச் செயற்பாடு மிகவும் சிறப்பான முறையில் நடைபெறத் தொடங்கியது என்றே கூறலாம்.

2010ம் ஆண்டு எமது பாடசாலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்ல விளையாட்டுப் போட்டியினை பெரும் கஷ்டங்களின் மத்தியிலும் பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் போன்றவர்களின் உதவியுடன் விளையாட்டு மைதானம் துப்பரவு செய்யப்பட்டு விளையாட்டுப் போட்டி நடத்திய பெருமையும் எமது அதிபருக்கே உரியது. இது மட்டுமன்றி பெருவிளையாட்டு, மெய்வல்லுனர் விளையாட்டு போன்றவற்றில் மாணவர்களை பங்குபற்றச்செய்து கோட்டம், மாவட்டம், மாகாணம், தேசியம் என மாணவர்களை அழைத்துச் சென்ற பெருமையும் எமது அதிபரும், உடற்கல்வி பொறுப்பாசிரியருமான திரு.சாள்ஸ் அவர்களுடன் அவர்களும் இணைந்திருந்த ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையுமே என்றே கூறலாம்.

இதுமட்டுமன்றி எமது பாடசாலை 2010ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வன் கருணதாஸ் கலையரசன் என்னும் மாணவன் சிறந்த பெறுபேற்றை பெற்றதுடன் ஏனைய மாணவர்கள் சித்திக்குரிய புள்ளிகளைப்பெற்றமை எமது பாடசாலை மீள்குடியமர்வின் பின்னும் எமது முதல்வர் , ஆசிரியர்களின் சேவையின் உயர்வினை எடுத்துக்காட்டுகின்றது. இத்துடன் க.பொ.த (சா/ தரம்) க.பொ.த (உ/த) போன்ற பரீட்சையிலும் குறிப்பிட்ட பாடங்களில் 100% சித்தியை மாணவர்கள் காட்டி நின்றமை எமது பாடசாலை அதிபரின் முயற்சியும் கற்பித்த ஆசிரியர்களின் பெரு முயற்சியும் ஆகும். இவ்வாறு எமது பாடசாலையானது கல்வி, விளையாட்டு போன்ற சகல துறைகளிலும் மீண்டும் சாதிக்கத் தொடங்கியது என்றே கூறலாம்.

இந்தவகையில் 2011ம் ஆண்டு க.பொ.த ( உ / தரத்தில் ) சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல மாணவர்கள் பல்கலைக் கழகத்திலும், கல்வியிற்கல்லூரிகளிலும் இன்றும் கற்றுக்கொண்டே இருக்கின்றனர். இவ்வாறு தொடர்ந்து கல்வியில் சாதனை படைக்க கற்பிக்கும் ஆசிரியர்களும் அவர்களுக்கு உறுதுணையாக நிற்கும் எமது அதிபர் அவர்களின் அயராதசேவையுமே என்று கூறலாம்.

எமது பாடசாலை வளங்கள் அற்ற நிலையில் இருக்கின்ற வளத்தில் உச்ச பயனைப் பெற்று 2012ம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் கலைப்பிரிவு இரண்டாவது இடத்தை எமது பாடசாலை மாணவி செல்வி. சிவஞானம் டயானா பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும் . தற்போது இவர் பல்கலைக்கழகத்திலே உயர்கல்வி கற்றுக்கொண்டு இருக்கின்றார் என்பது இங்கு குறிப்பிட வேண்டிய விடயம் , தமிழ், புவியியல், தவிர ஏனைய பாடங்களுக்கு ஆசிரியர் அற்ற நிலையில் இப்படியான உயர்பெறுபேற்றை பெற்றமை அதிபர், ஆசிரியர்களின் விடாமுயற்சியும் ஆக்கமும் ஊக்கமும் என்றே கூறலாம். இவ்வருடத்திலே இன்னும் பல மாணவர்கள் உயர்கல்வியினை பல்வேறு துறைகளில் தொடர்ந்து கொண்டே உள்ளனர்.

மேலும் எமது பாடசாலையில் பல சாதனைகளைப் படைத்த ஆசிரியர்களுக்கு வழங்கும் அதிஉயர் விருதான " பிரதீபா , பிரபா" விருது எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திரு.ம.மரியராசா 2011ம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2012ம் ஆண்டில் தமிழ்ப்பாட ஆசிரியரான திரு.சபாரத்தினம் லதீஸ்குமார் அவர்களுக்கு வழங்கப்பட்டமை எமது பாடசாலை வரலாற்றில் சிறப்பான வியடமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மட்டுமன்றி எமது பாடசாலையில் பலவிழாக்கள் முன்னைய காலங்களில் நடத்தப்பட்டாலும் 2012ம் ஆண்டு எமது அதிபர் இதுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தாத " பரிசளிப்பு" விழாவினையும் மலர் வெளியீட்டினையும் சிறந்த முறையில் நடாத்தி மாணவர்களை கௌரவித்தமை எமது பாடசாலை வரலாற்றில் திருமதி.ப.சோதிலிங்கம் அதிபர் அவர்களின் காலத்தில் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலையில் மீள்குடியமர்வின் பின் வகுப்பறைகள் போதாத நிலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வினைத்திறனுடன் ஆக்குவதற்கு பெரும் பிரச்சினையாக இருந்தது. கட்டடம் இன்மை எமது முதல்வர் அவர்களின் அயராத முயற்சியும் அவர் கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் முன்வைத்த கோரிக்கை களும் வீண் போகாது பெரும் இடர்களை எல்லாம் தீர்க்கும் வகையில் எமது முன்னைநாள் கல்விப்பணிப்பாளரும், தற்போதைய வடமாகாணத்தின் கல்வி அமைச்சருமாகிய திரு.த.குருகுலராஜா அவர்களின் எண்ணமும் சேர்ந்து எமது பாடசாலையை 2011ம் ஆண்டு தென்கொரிய நிறுவனமான கொய்கா புனரமைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. அதன்படி 100x25' அடி இரண்டு கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கட்டடத்தில் எட்டு வகுப்பறைகளும் ஒரு விஞ்ஞான கூடமும், கணினி அறையும் அமைக்கப்பட்டுள்ளது. இது எமது பாடசாலைக்கு கிடைக்கப் பெற்றமை அரியவாய்ப்பு என்றே கூறலாம்.

இதுவரை ஆரம்பக்கல்விப் பிரிவுமுதல் உயர்தரவகுப்புகள் வரை பெரும் சிரமங்க ளில் இருந்து விலகி ஓரளவு கற்பித்தலை சிறப்பாக கற்பிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளது. அத்துடன் ஆசிரிய விடுதிகள் மிகவும் சிறப்பான முறையில் சகல வளங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. இத்தோடு எமது பாடசாலையில் நீண்ட நாளாக இருந்த நன்னீர் பிரச்சினையும் தீர்க்கப்பட்டு நன்னீர் கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் கொரிய நாட்டின் உதவியில் எமது கல்லூரிக்கு கிடைத்த அரியபேறு என்றே கூறலாம். இவ்வுதவியை வழங்கிய கொரிய நாட்டினருக்கும் இதை ஒழுங்கு படுத்திய கல்விப்பணிமனையினருக்கும் இத்திட்டத்தை எமது பாடசாலைக்கு செயற்படுத்த அயராது உழைத்த எமது பாடசாலை முதல்வருக்கும் மற்றும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்வடை கின்றோம்.

எமது பாடசாலையானது திருமதி.ப. சோதிலிங்கம் முதல்வர் பெண் முதல்வராக இருந்தும் 2008.01.02 கடமையேற்றதன் பிற்பாடு நாட்டுச் சூழலினால் சாதனைகள் நடாத்த முடியாமல் போனாலும் 2010-01-02 மீள்குடியேற்றத்தின் பின்பு இப்பாடசாலையை பொறுப்பேற்று சகல வழிகளிலும் அதாவது கல்வி, விளையாட்டு ஏனைய சகல விடயங்களிலும் சாதனையை நடாத்தியுள் ளார் என்பது குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

கிளிநொச்சி மாவட்டத்திலே உள்ள அனைத்துப் பாடசாலைகளோடு ஒப்பிடுகை யில் க.பொ.த (உ / தரம்) , க. பொ (சா/ த) எந்தப் பரீட்சையிலும் தோற்றுகின்ற மாணவர்களின் சித்தி வீதம் எமது பாடசாலையானது முன்னணியில் உள்ளது. க.பொ.த (உ /த) வகுப்பில் 2010 இன்றுவரை பல மாணவர்கள் பல்கலைக்கழகம், கல்வியிற் கல்லூரி அனுமதிகளையும் பெற்று உயர் கல்வி கற்று வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலை 60 km தொலைவில் இருந்தும் பெண்ணாக இருந்தும் தனது உடல் உபாதைகளையும் பொருட்படுத்தாது தமது குடும்ப சுமையையும் பாராது எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராத சேவைசெய்யும் எமது அதிபர் போற்றப்பட வேண்டியவரே.

எமது பாடசாலையானது ஆரம்பிக்கப் பட்ட காலம் முதல் இன்றுவரை அயல் கிராமங்களான பாலாவி , பொன்னாவெளி, கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராம மாணவர்களை உள்வாங்கி தாய்ப் பாடசாலையாக அமைந்து சிறப்புப் பெறுகிறது. ஆரம்பக்காலத்தில் தரம் - 5 இற்கு பிற்பாடு தமது கல்வியை எமது பாடசாலையிலும் மிக அண்மைக்காலமாக தரம்- 9 இன் பின் மிகுதிக்கல்வியை எமது பாடசாலையிலும் கற்று முடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எமது அயற்பாடசாலைகளுக்கு ஊட்டப்பாடசா லையாகவும் கிளி/வேரவில் இந்து மகாவித்தி யாலயம் அமைந்து சிறப்புப் பெற்றுள்ள மையை எவரும் மறைக்க முடியாத விடயமாக அமைந்துள்ளது.

இதுமட்டுமன்றி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அரிய பல வரலாற்றுப்பதிவுகளை நாம் இழந்து நிற்கின்றோம். இவை அனைத்தும் யாராலும் ஈடுசெய்ய முடியாதவையாகவே வெறும் வெற்றிடமாகத் தான் இருக்கப்போகிறது. பாடசாலையின் முக்கிய ஆவணமாகக் கொள்ளப்படும் "சம்பவத்திரட்டுப் புத்தகம்" மாணவர் சேர்வு இடாப்பு என்பன அனைத்தும் அழிக்கப்பட்டு எதுவுமற்ற ஏதிலிகளாய் எமது பாடசாலையின் வரலாற்றை பதிவுசெய்து கொண்டு இருக்கின் றோம் என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

எது எப்படி இருந்தாலும் எமது பாடசாலை நூறு வருடங்களைத் தாண்டி வெற்றிப்பாதை யில் பயணித்து கொள்வதையிட்டு பெருமிதம் அடைவதோடு நூறு ஆண்டு பதிவுகளை ஆவணமாக்க வேண்டும் எனவும் இவ்விழாவினை சிறப்பாக நடாத்த வேண்டும் எனவும் பல்வேறு இடர்களின் மத்தியிலும் இதுவரை எவராலும் எடுக்கப்படாத முயற்சியை எடுத்திருக்கும் எம் பாடசாலை முதல்வர் திருமதி. ப. சோதிலிங்கம் அவர்கள் எமது பாடசாலை வரலாற்றில் சிறப்பான ஓர் இடத்தினைப் பெற்றுக்கொள்வார் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு பல சாதனைகளையும் வேதனைகளையும் எதிர்கொண்டு தனது நூறாவது அகவையிலே எமது பாடசாலை கால் பதித்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் நூற்றாண்டு விழாக்காணும் சிறப்பிற் குரிய பாடசாலை என்பதில் நாம் பெருமிதம் அடைகின்றோம். இனிவரும் காலங்களில் இப்பாடசாலை சாதிப்பதற்கு பலநூறு விடயங்கள் காத்துக்கிடக்கின்றன. எமது பாடசாலை எதிர்காலத்தில் ஓர் "இந்துக்கல்லூ ரியாக மிளிர வேண்டு என்பதே அனைவரினதும் பெரும் விருப்பும் ஆகும். காலம் கனியும் போது "நாம் நினைத்ததை இறைவன் நடாத்தி முடிப்பான்"இவை எல்லாவற்றிற்கும் மேலாக வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகன் துணைபுரிவாராக.

***குறிப்பு:-*** **கிடைத்த தகவல்களின் அடிப்படையில் குறுகிய காலத்தில் விடயங்கள் தொகுக்கப்பட்டது. தவறுகள், திருத்தங்கள் இருப்பின் எழுத்துமூலம் சமர்ப்பித்தால் இனிவரும் நூலாக்கத்தில் இது சம்மந்தமாக கவனத்தில் கொள்ளப்படும்.**

***தொகுப்பு: திருமதி***
***அ. அரிச்சந்திரன் ஆசிரியர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாலயத்தின் அதிபர்கள்

| | | |
|---|---|---|
| ♦ | திரு. ச. ஜெகநாதன் | 1914 |
| ♦ | திரு. மு. தில்லைநாதன் | |
| ♦ | திரு. நாகநாதர் | 1935 |
| ♦ | திரு. இராமுப்பிள்ளை | 1940 |
| ♦ | திரு. இராசையா | 1951 |
| ♦ | திரு. மாணிக்கவாசகர் | 1953 |
| ♦ | திரு. கனகசபாபதி | 1962 |
| ♦ | திரு. சாம்பசிவமூர்த்தி | 1967 |
| ♦ | திரு.சுப்பிரமணியம் | 1970 - 1975 |
| ♦ | திரு. மு.இளையதம்பி | 1975-1979 |
| ♦ | திரு. க.சிவசாமி | 1979- 1983 |
| ♦ | திரு. வே. மூத்ததம்பி | 1983 - 1985 |
| ♦ | திரு. த. கணபதிப்பிள்ளை | 1985-1991 |
| ♦ | திரு. க. சிவசாமி | 1991 -1995 |
| ♦ | திரு. க. சிவபாதசுந்தரம் | 1995-2003 |
| ♦ | திரு. அ.ஜெயக்குமார் | 2003-2004 |
| ♦ | திரு. சே.கோடீஸ்வரன் | 2004-2005 |
| ♦ | திரு. து. இளங்குமரன் | 2005-2007 |
| ♦ | திரு. திருமதி. பரமேஸ்வரி சோதிலிங்கம் | 2008 இன்றுவரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் ஆளணியினர்



இடம் இருந்து வலம் இருப்பவர்கள் :- ஜெ. ஸ்ரீரங்கன் , த. தயாளகுமார், ச. லதீஸ்குமார் , ச.ஈஸ்வரநாதன், ப. சோதிலிங்கம் , கி. மதுரநாயகம் , அ.அரிச்சந்திரன், தீ . யஸ்ரின் , சி. குணசீலன் , சி. ஆறுமுகதாசன்

இடம் இருந்து வலம் நிற்பவர்கள் :- த. வசீகரன் , அ. அமலராஜன், தெ. றஜிதா , செ.சுகிர்தா , செ. ருஷியந்தி, இ. ஜீன்பிரவீனா, ஆ. நிரோஜா , ந. செந்தூரன் , ப. மங்களா, பி. பிரதீபா , அ. அருளினி , ஸ். குயின்ரீனா , பு. ஸ்ரீலிங்கம், சி. குணேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாலயத்தின் ஆளணியினரின் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி ப. சோதிலிங்கம் | SLPS 2 II |
| 2. | திருமதி கி. மதுரநாயகம் | SLTS 2 II |
| 3. | திருமதி அ. அரிச்சந்திரன் | SLTS 2 II |
| 4. | திருமதி ச.ஈஸ்வரநாதன் | SLTS 2 II |
| 5. | திரு தீ. யஸ்ரின் | SLTS 2 II |
| 6. | திரு சி. குணசீலன் | SLTS 2 II |
| 7. | திரு ச. லதீஸ்குமார் | SLTS 3 I |
| 8. | திரு ஜெ.ஸ்ரீரங்கன் | SLTS 3 I |
| 9. | செல்வி. இ. ஜீன்பிரவீனா | SLTS 3 I |
| 10. | திரு சி.ஆறுமுகதாசன் | SLTS 3 I |
| 11. | செல்வி செ. ருஷியந்தி | SLTS 3 I |
| 12. | திரு த. தயாளகுமார் | SLTS 3 I |
| 13. | திரு ந. செந்தூரன் | SLTS 3 I |
| 14. | செல்வி செ.சுகிர்தா | SLTS 2 II |
| 15. | திருமதி பி.பிரதீபன் | SLTS 3 II |
| 16. | செல்வி தெ. றஜிதா | SLTS 2 II |
| 17. | செல்வி அ. அருளினி | SLTS 3 I |
| 18. | செல்வி ஸ். குயின்ரினா | SLTS 3 I |
| 19. | செல்வி ஆ. நிரோஜா | SLTS 3 I |
| 20. | செல்வி ப. மங்களா | SLTS 3 I |
| 21. | திருமதி பு. ஸ்ரீலிங்கம் | Training College |
| 22. | திருமதி ற. அமலராஜன் | SLTS 2 II |
| 23. | திரு சி. குணேஸ் | O.E.S |
| 24. | திரு த. வசீகரன் | O.E.S |
| 25. | செல்வி.வ.கல்பனா | தொண்டராசிரியர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.மு. எமிலியாம்பிள்ளை
பிரதிக்கல்விப்பணிப்பாளர்- நிர்வாகம்
மடு வலயக்கல்வி அலுவலகம்,
ஆண்டான்குளம்.

# காலப்பதிவுகள்

கிளி / வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மலருக்கு "காலப்பதிவுகள்" எனும் தலைப்பில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு நிறுவனம் நூற்றாண்டு வரை நிலைத்து தனது நோக்கத்தை அடைவதற்கு அப்பகுதியில் காணப்படும் சமய, சமூக, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களும் முக்கியமானவை. 1914 இல் இந்து மகா சபையினரால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1949 இல் அரசினால் பொறுப்பேற்கப்பட்டு 1999 இல் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது.

1977 மே 16ம் நாள் யாழ்ப்பாண பிரதேச கல்விக்காரியாலத்தில் மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் உதவி ஆசிரியர்களை நியமித்தலுக்கான நியமனம் கிடைக்கப்பெற்று மே 18ம் நாள் எனது முதல் நியமனத்தை இப்பாடசாலையில் ஏற்றுக்கொண்டேன்.


கல்லூரியில் கல்வி பயின்று மிகவும் கஸ்ரப்பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்ற நியமனம் கிடைத்தது. எனது பிறந்த ஊரிலிருந்து 2km தூரத்திலுள்ள கிராமம் வேரவில். இக்கிராமத்திலேயே எமது பகுதிக்குரிய கிராமசபை, கிராம வைத்தியசாலை, உப தபாற்கந்தோர் என்பன காணப்பட்டமை பாடசாலையும் மத்தியில் அமைந்து கிராமத்திற்கு கல்வி ஒளி ஊட்டியது.

எனது முதல் அதிபர் திரு.வே.சுப்பிரமணியம் அவர்களின் நிர்வாகத்தில் 27.02.1978 வரை உதவி ஆசிரியராக கடமையாற்றிய பசுமையான காலப்பகுதியை நினைவு கூருகின்றேன். இடப்பற்றாக்குறை காணப்பட்ட பாடசாலையாக இருந்த போதும் முன்னாள் அதிபர்களான அமரர்.க.சிவசாமி, திரு.தி.கணபதிப்பிள்ளை,
திரு.கு. கனகலிங்கம் ஆகியோர் காலத்தில் கல்வி, பாட இணை செயற்பாடுகளில் பூநகரிப்பிரதேசத்தில் முன்னிலைப்பாடசாலையாகத் திகழ்கிறது. 1990 இற்கு பிற்பட்ட காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் போது இடம்பெயர்ந்த மக்களுக்கு அடைக்கலம் வழங்கிய நிலையம் மேலும் இடப்பெயர்வுக்குள்ளான மாணவர்களுக்கு கல்வி ஒளி காட்டிய நிலையம்.

தற்பொழுது கொரிய அரசின் திட்டத்தின் கீழ் தொடர்ந்து இப்பாடசாலை உள்வாங்கப்பட்டு துரித அபிவிருத்தி அடைந்து வருகின்றது. தொடர்ந்து இப்பாடசாலை பல நூற்றாண்டு விழாக்களைக்கண்டு சமூகத்திற்கு தேவையான நற் பிரஜைகளை உருவாக்க இவ்விழா வழிசமைக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரு.தி.கணபதிப்பிள்ளை
முன்னாள்
கோட்டக்கல்விப்பணிப்பாளர்
பூநகரி.


**கிளி / வேரவில் இ.மகாவித்தியாலயம் இவ்வருடம் தனது நூற்றாண்டு விழாவை புதிய இடத்தில் அமைந்துள்ள பாடசாலைக் கட்டிடத்தில் மிக விமர்சையாக நிகழ்த்துவதையிட்டு இப்பாடசாலையின் முன்நாள் அதிபர் என்ற வகையில் மகிழ்ச்சி அடைகின்றேன். கல்வித்தாய்க்கு எடுக்கப்படும் இவ்விழா ஓர் சிறப்பு வாய்ந்த நிகழ்வாக அமைந்துள்ளது. இவ்விழாவினையொட்டி மலர இருக்கும் இந்நூற்றாண்டு விழா மலருக்கு எனது பழைய ஞாபகங்களை வரைந்துள்ளேன். இந்நூற்றாண்டுவிழா சிறப்பாகவும் செழிப்பாகவும் நடைபெற எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.**

30.10.1984ம் திகதி தொடக்கம் நான் வேரவில் இ.ம.விக்கு இடமாற்றம் செய்யப்பட்டேன் . அப்போது இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றியவர் திரு.வே.மூத்ததம்பி அவர்கள். அவர் 01.02.1985 ம் திகதி தொடக்கம் கிளி / வினாசியோடை அ.த.க பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றார். அதன்பின் நான் இவ்வித்தியாலயத்தின் அதிபராக 30.04.1991ம் திகதி வரை கடமையாற்றினேன். நான் கடமையாற்றிய காலப்பகுதி மாணவர் பெற்றோர் மத்தியில் எழுச்சிமிக்க காலமாக இருந்தது.

அப்போது இப்பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்களே அதற்குக் காரணமாகும். திரு.க.ஸ்ரீகணேசன், திரு.செ.விநாயகமூர்த்திதிரு.சு.சிவானந்தன், செல்வி.க.ஜெயலட்சுமி செல்வி. க.கனகராணி, செல்வி.S.கமலாதேவி, திரு.S. சிதம்பரநாதன் போன்ற நிரந்தர ஆசிரியர்களும் திரு.ஐ.கேசவன், திரு.சு.செல்வரத்தினம், திரு.தீ.யஸ்ரின், திரு.சி. விநாயகமூர்த்தி, திருமதி.சங்கரப்பிள்ளை, திரு.S. சதாசிவம் போன்ற தொண்டராசிரியர்களும் இந்த வரிசையில் இப்பாடசாலையின் கல்விக்கு விழிப்பூட்டியவர்கள் என்றால் அதில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறேதும் இல்லை. ஆங்கிலம், விவசாயம், கணிதம், விஞ்ஞானம், மனையியல், சமூகக்கல்வி, தமிழ், சமயம் போன்ற பாடங்களை ஆரம்ப வகுப்புக்கள் தொடக்கம் தரம் 11 வரை மாணவர்களுக்குச் சிறப்பாக கற்பித்து வந்தனர். அனைத்துப் பாடங்களும் பாடசாலையில் மாணவர்களுக்கு கற்பித்து வந்தமையால் பெற்றோர் மாணவர் மத்தியில் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. இவர்கள் விடுதியில் தங்கியிருந்து கற்பித்து வந்தமையால் பாடசாலை தவிர்ந்த நேரங்களிலும் பாடசாலை நடைபெறாத சனி, ஞாயிறு தினங்களிலும் ஒழுங்காகக் கற்பித்து வந்தனர். அதுமட்டுமன்றி பாடசாலைக்கு ஒழுங்காக வராத மாணவர்களின் வீடு களுக்குச் சென்று பெற்றோரைச் சந்தித்து மாணவர்களைப் பாடசாலைக்கு ஒழுங்காக வர ஊக்குவித்தமையும் இவ்வெழிச்சிக்குக் காரணமாகும். தரம் 11 இல் கற்கின்ற ஆண் மாணவர்கள் கிராஞ்சி , வேரவில் , வலைப் பாடு, பொன்னாவெளி போன்ற கிராமங்களில் இருந்து கற்கவரும் மாணவர்கள் இரவுண வுடன் பாடசாலைக்கு சமூகமளித்து இரவு நேரங்களில் பாடங்களை ஆசிரியர்கள் கற்பித்துபின் பாடசாலையிலே தங்கி காலையில் வீடு சென்று பின் பாடசாலைக்கு வருவர். இரவு நேரப்பாடங்களுக்கு வைத்தியசாலையின் மின் பிறப்பாக்கி மூலம் வெளிச்சம் கிடைக்கும்.

இவ்வாறு பாடசாலைப் பாடங்களில் கவனம் செலுத்துவதோடு மட்டுமல்லாது பாடசாலையின் கற்பித்தலுக்குப் புறம்பான நிகழ்வுகளான விளையாட்டுப் போட்டிகள் , கலைநிகழ்வுகள், தமிழ்த்தினப்போட்டிகள், ஆங்கில தினப்போட்டிகள் போன்றவற்றிலும் மாணவர்களை உற்சாகப்படுத்தி பாடசாலை மட்டத்திலும் கோட்ட மாவட்ட மட்டங்களிலும் பங்குபற்றச் செய்து மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற ஆசிரியர்கள் ஊக்கப்படுத்தினர். அதன் காரணமாக பாடசாலையின் உயர்வுக்குக் காரணமான பெற்றோர் ஆசிரியர் மாணவர் ஒற்றுமை சிறந்து விளங்கியது. பெற்றோர் பாடசாலை க்குத் தேவையான உதவியை பா.அ சங்கம் மூலம் பொருளாகவும் பணமாகவும் சரீர உதவியா கவும் செய்து மாணவர்களின் கல்வி உயர்வுக்குவித்திட்டனர். இவர்களில் பல பெற்றோர் இன்றும் என் கண்முன் ஞாபகத்தில் நிற்கின்றனர். கலைநிகழ்வுகள் , விளையாட்டுப்போட்டிகள் வருடாவருடம் பாடசாலையில் வடக்கில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

திரு.குழந்தைவேலு, திரு.குமாரசுவாமி, திரு. திருநீலகண்டர் போன்ற பெற்றோர் இந்நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்து சிறப்பாக நடைபெற உதவினர் . கலை விழா நிகழ்வுகளில் திரு.க.ஸ்ரீகணேசன் ஆசிரியர் பங்கு மிகச்சிறப்பானது. மாணவர்களை நிகழ்வுகளுக்கு ஒழுங்குபடுத்தல், பயிற்சி கொடுத்தல் போன்றவை அவரது தனிப்பட்ட பெருமுயற்சியாக இருக்கும். நாடக நிகழ்வுகளுக்குரிய ஒப்பனைப் பொருட்களை அவர் யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்மூலம் எடுத்துவந்து பல்லவராயன்கட்டு சந்தியில் இருந்து மிக்க சிரமத்துடன் பாடசாலை மாணவர்களுக்காக எடுத்து வரும் செயற்பாடுகள் இன்று எனது ஞாபகத்திற்கு வருகின்றது. இவ்வாறாக அரும்பாடுபட்டு கஷ்டங்களையும் பாராது மாணவர்கள் கல்விக்கு உயர்வு கொடுத்த ஆசிரியர்களை மாணவர்கள் மறந்ததே இல்லை. தங்களுடைய ஆசிரியர்கள் பல்லவராயன் கட்டு சந்திக்கு பஸ் மூலம் வந்ததை அறிந்த உயர்வகுப்பு மாணவர்கள் தங்களது துவிச்சக்கர வண்டிமூலம் பல நாட்கள் பாடசாலைக்கு ஏற்றிவந்தமை தங்கள் ஆசிரியர்களின் பற்றுறுதிக்குச் சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக அனைத்து மாணவர்க ளையும் தமது பிள்ளைகளைப் போன்று ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் அவர்களுக்கு கல்வி போதித்தனர். அதன் காரணமாகப் பலமாணவர்கள் க.பொ.த. (சா.தர) பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர்.

இவ்வாறு கற்றபல மாணவர்கள் பின்னாளில் அதிபர்கள், ஆசிரியர்கள் , கிராம சேவை உத்தியோகத்தர்கள் , அஞ்சல் அதிபர்கள், தபால் ஊழியர்கள், நிருவாக உத்தியோகத்தர் போன்ற பல பதவிகளில் அமர்த்தப்பட்டு பாடசாலைக்கும் தங்கள் பிரதேசத்திற்கும் சிறப்பைத்தேடித்தந் துள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற் றிய ஆசிரியர்கள் இன்று சிறந்த அதிபர்களாகவும் சிறந்த ஆசிரியர்களாகவும் திகழ்கின்றனர். இவ்வாறாக இவர்கள் சேவையாற்றிய காலப்பகுதியையும் கற்றமாணவர்களையும் இவர்க ளையும் மறக்க முடியாது.

வேரவில் இ.மகா வித்தியாலயத்திற்கு அப்போது பாடசாலைக்கீதம், பாடசாலை இலச்சினை, கொடி என்பன இல்லாதிருந்தது. இதனையுணர்ந்த பாடசாலைச் சமூகம் ஆசிரியர் திரு.க.ஸ்ரீகணேசன் அனுசரணை யுடன் மறைந்த பேராசிரியர் வீரமணி அவர்கள் மூலம் ஓர் பாடசாலைக் கீதத்தை இயற்றியதுடன் அதனை மாணவர்களுக்கு ஆசிரியர் க.ஸ்ரீகணேசன் இசைக்க கற்பித்தார். அன்றுதொடக்கம் பாடசாலைக்கீதம் நாள்தோறும் மாணவர்களால் இசைக்கப்பட்டு வந்தது. பாடசாலைக்கொடியும் இலச்சினை யுடன் வடிவமைக்கப்பட்டு காலையில் ஏற்றப்பட்டு வந்தது. அப்போது பங்குத்தந் தையாக கிறிஸ்தவ மதபோதகராக இருந்தவர் (வலைப்பாடு) வணபிதா கொன்சலஸ் அவர்கள். அவர் ஓர் வெள்ளைக் காரப்போதகர் உதவிபுரியும் சிறந்த விசாலமனம் படைத்தவர் பாடசாலைக்குத் தேவையான சமய சம்பந்தமான ஏனைய உதவிகளை நிறையச் செய்து வந்தார். பாடசாலை நிகழ்வுகளிலும் ஒளி விழா நிகழ்வுகளிலும் அவர் சமூகமளிக்கத்தவறு வதில்லை. அவர் அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்தி தன்னாலியன்ற உதவிகளை மாணவர்க ளுக்கு வழங்கினார். அவர் அனைவருடனும் அன்பாகப் பழகி அனைவர் மனத்தையும் கவர்ந்த மதபோதகராகத் திகழ்ந்தார். சைவசமய நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள் சிவபுராணம் படிக்க வெள்ளிப் பள்ளத்துப் பிள்ளையார் கோவிலுக்கு வெள்ளிக்கிழமை தோறும் சென்று வருவார்கள். அக்கோவிலின் பிரதமகுருவாக திரு.க.குமாரசுவாமி அவர்கள் சைவசமய நிகழ்வுகளுக்கான அனைத்து உதவிகளை யும் பாடசாலை மாணவர்களுக்கு செய்து வந்தார். இவ்வாறு இது எங்கள் பாடசாலை இது எங்கள் பிள்ளைகளின் அறிவுக் கண்ணைத் திறக்கும் ஆலயம் என்ற உணர்வுடன் பாடசாலையுடன் மிக இறுக்க மாக இணைந்து மாணவர் கல்விக்கு பெற்றோர்,ஆசிரியர் உயர்வைத் தேடித்தந் துள்ளார்.

இம்மாணவர்களுக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களும் பின்நாளில் அதிபர்களாக வும் பல்கலைக்கழக விரிவுரை யாளராகவும் சிறந்து விளங்குகின்றனர். இவர்கள் மாணவர்களுக்கு கற்பித்து அவர்களை உயர்த்தியதுடன் மட்டுமல்லாது தாமும் கற்று உயர் நிலை அடைந்து விளங்குகின்றனர்.

இவர்களில் திரு.செ.விநாயகமூர்த்தி , திரு.சி.சிதம்பரநாதன் , திரு.ஐ.கேசவன் , திரு.சு. செல்வரத்தினம் ஆகியோர் அதிபர் களாகவும் திரு.சு.ஸ்ரீகணேசன் ஆங்கில விரிவுரையாளராகவும் (யாழ் பல்லைக் கழகம்) சிறந்து விளங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்,
(முன்னாள் ஆங்கில ஆசிரியர்)
சிரேஷ்ட ஆங்கில மொழி கற்பித்தல் விரிவுரையாளரும்,
மொழிபெயர்ப்புகற்கைகள் இணைப்பாளரும்.

# எண்பதுகளின் நடுப்பகுதியில் ஒரு வளர்ச்சிப் போக்கு வேரவில் இந்து மகாவித்தியாலயம்

## 1. கல்வி ஊட்டம் வழங்கல்

இற்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன்பு – அதாவது 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பலாலி ஆசிரியஉ கலாசாலையில் இருவருட ஆங்கில விசேட ஆசிரிய பயிற்சியை முடித்து வெளியேறி ஆசிரியப் பணியை பாடசாலையில் தொடங்கிய காலம் – வேரவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியப்பணியை முன்னெடுக்க அவ்வூருக்கு பயணமானேன்.

ஏற்கனவே 1982 ஆம் ஆண்டு பூநகரி பிரதேசத்தில் அமைந்துள்ள கௌதாரி முனை ஆசிரியர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றிய அனுபவம் வேரவில் கிராமத்தை நோக்கிச் செல்வதில் எமக்கு எதுவித மனத்தடையையும் ஏற்படுத்தவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் செல்லும் பஸ்சில் ஏறி கேரதீவு – சங்குப்பிட்டி பாதையில் கடலைக் கடந்து பூநகரி ஊடாக வேரவில் ஊருக்கு பயணமானேன். (இன்றுபோல் அன்று பாலம் இருக்கவில்லை)

பூநகரியில் பஸ் தங்கிநின்று பலரை ஏற்றிக்கொண்டு சில மைல் தூரம் சென்றது. அடர்ந்த காடு இருபுறமும். நடுக்காட்டில் 12 ஆம் கட்டைச் சந்தி என்று சொல்லப்பட்ட இடத்தைக் காட்டி இப்பாதை ஊடாகவும் வேரவில் வலைப்பாடு, பொன்னாவெளி, கிராஞ்சி ஆகிய கிராமங்களுக்கு செல்ல முடியும் இரவில் யானை, ஓநாய் முதலிய மிருகங்களை எதிர்கொள்ளவேண்டி வரும் என பஸ்சில் சக பயணிகள் கூறினர். (பின்னாளில் சயிக்கிளில் போர்க்காலத்தில் காட்டுப்பாதையில் பயணித்தபோது மிருகங்களை சந்தித்துள்ளேன்.)

காட்டினூடாக சென்ற பஸ் ஒரு பரவெளியை அடைந்தது. அது பல்லவராயன்கட்டு என்க்கூறி அதில் இறங்கி மேற்கே முன்னே 10 மைல் தூரம் சென்றால் வேரவில் பாடசாலையை அடையலாம் என சக பயணிகள் கூறினர். நானும் இறங்கி நடக்கத்தொடங்கினேன். காலை எட்டுமணியளவில் வெய்யில் வேறு. எங்கும் ஒரே வெளி. மழைகாலம் முடிந்து நிலமெல்லாம் குளிர்ந்து பள்ளங்களில் நீர் நிறைந்து கடல்போல் காணப்பட்டது. சூரிய வெளிச்சத்தில் அந்த நீர்நிலைகள் ஜொலித்துக் காணப்பட்டன. வெளிநாட்டு கொக்கு இனங்கள், வெண்ணிற வர்ணத்தில் சிறகடித்துப் பறந்தன. தண்ணீர் தாகம் எடுத்தது. பசி வாட்டியது. அம்மா காலை 4.00 மணிக்கே அவித்துத் தந்த புட்டுப் பார்சலை அவிழ்த்து சாப்பிட்டேன். கொண்டு வந்த தண்ணீரை பருகினேன். களை ஆறியபோது எழுந்து நடக்க ஆரம்பித்தேன். அப்போது ஒரு தபால்காரன் பார்சல் ஒன்றுடன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். அவரை மறித்து நான் புதிதாக வந்த ஆசிரியர் என அறிமுகப்படுத்தியவுடன் தனது சைக்கிளில் என்னை ஏற்றினார். மாறி மாறி சைக்கிளில் ஓடியபடி பாடசாலையை வந்தடைந்தோம் 9.00 மணியளவில்.

## 2. புதிய தொடக்கத்துக்கான அத்திபாரம்

புதிய பாடசாலை க.பொ.த சாதாரண தரம் வரை கற்பிக்கப்படும் பாடசாலை. கிறிஸ்தவர்கள் வாழும் கடற்கரைக் கிராமமாகிய வலைப்பாடு, வயற்கிராமம் ஆகிய சைவர்கள் வாழும் பொன்னாவெளி, குடியேற்ற கிராமம் ஆகிய தென்னஞ்சோலைகள் நிறைந்த கிராஞ்சி மற்றும் காட்டுக்குள் கிராமம் ஆகிய வேரவில் ஆகிய ஊர்களிலிருந்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள்தான் இப்பாடசாலையின் உள்ளீடுகள். வசதிகள் குறைந்த பிரதேசம். மக்கள் வாழ்வும் கஷ்டமான சூழலில் தான். நாம் படிப்பிக்கப் புறப்பட்ட காலம், போராட்ட தொடக்கக் காலம். இரவில் போக்குவரத்துகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. தொழில் முயற்சிகள் செய்வதற்கு ஊக்கம் அற்ற நிலைமை. மின்சாரம் இல்லை. வான் பார்த்த விவசாயம், குளங்கள் புனரமைக்கப்படுவதில்லை. இதனால் கோடை காலத்தில் தண்ணீர் பஞ்சம். காடுகளை அழித்து சேனைப்பயிர் செய்வோரும் பாரம்பரியமாக வயல் விதைப்போரும், தோட்டம் செய்வோரும் காட்டுக்குள் சென்று தேன் எடுத்து, விறகு வெட்டி வருவோரும் என மக்கள் பலதரப்பட்டவகையினர். ஒருவர் இருவர்தான் விவசாயம், ஆசிரியத் தொழில், தபால் உத்தியோகத்தர்கள், சங்கக்கடை முகாமையாளர், உதவியாளர் என மக்கள் வாழ்வாதார நிலைமைகள் காணப்பட்டன. இதனால் பாடசாலை நடவடிக்கைகளும் அதிவேகம் கொள்ளவில்லை. அன்றைய அதிபர் திரு. முத்துத்தம்பி அவர்கள் என்னை வரவேற்று உணவு தந்து ஆதரித்தார். வெள்ளை நஷனல், வெள்ளை வேட்டி. காலையில் சமைத்து வைத்து விட்டு பாடசாலை நடத்துவார். ஆறு ஆசிரியர்கள் என்னோடு. செல்வி. ஜெயலக்சுமி (விஞ்ஞானம்), செல்வி கனகராணி (மனையியல்), திரு. சிவானந்தன் (கணிதம்), திரு. விநாயமூர்த்தி (சமூகக் கல்வி), திரு. கணபதிப்பிள்ளை (தமிழ்), செல்வி லலிதா (ஆரம்பப் பிரிவு) ஆகியோர் கற்பித்து வந்தனர்.

மாலையில் ஊர் உலாத்தி வரும்போது கொண்டுவரும் கீரையில் இலைப்புட்டு அவித்து தருவார் அதிபர் அவர்கள். அவர்கள் கைவண்ணம் பூநகரி அரிசிச் சோத்திலும் வலைப்பாட்டு மீன் கறியிலும், கீரைப்புட்டிலும் பளிச்சிடும். ஆனால் அடுத்த ஒரு மாதத்தில் அவர் இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் சென்றுவிட பூநகரி கறுக்காய்த் தீவைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை அதிபர் ஆகினார். (பின்னாளில் அவர்தான் பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்)

### 3. ஆடல், பாடல், நாடகம், விளையாட்டுடன் கல்வி

ஒழுங்கமைப்பான திட்டமிடலுடன் நேர அட்டவணைப்படி பாடங்கள் நடாத்த முயன்றார் கணபதிப்பிள்ளை. அன்பான கட்டளைகளுடன் நிர்வாகம் சிறப்படைந்தது. கணித பாடத்தை கருத்துடன் வழங்கினார் சிவானந்தன் (மட்டுவில்). அதுவே வேரவில் பாடசாலை மாணவர் ஒளிபெறவும் வழிகோலியது. அதிபரின் தமிழ்ப்பாடம், விநாயகமூர்த்தி (நீர்வேலி) அவர்களின் சமூகக்கல்வி ஜெயலக்ஷ்மி ரீச்சரின் விஞ்ஞானம், கனகராணி ரீச்சரின் வீட்டு விஞ்ஞானம், எனது ஆங்கிலக் கல்வி, நாடகம், விளையாட்டு என்பன பாடசாலை புதிய தடத்தில் செல்ல வைத்தது. ஆனால் மாணவர் உற்சாகம் குறைந்திருந்தனர். படிப்பில் நாட்டமில்லை. உலகங்கள் பற்றிய அறிவு காணாது. வீட்டில் உதவி இல்லை. எனவே இதற்கான பரிகாரம் மாணவர்களுக்கு ஆடல், பாடல், நாடகம், விளையாட்டின் ஊடாக உற்சாகம் வழங்குதல்தான். அதிபர் ஆசிரியர்களுடன் கூடிக் கதைத்து புதிய திட்டங்கள் போட்டோம். உதவிப் பணத்தில் தொண்டராசிரியராக எம்முடன் இணைந்து கொண்ட திரு. சதாசிவம் அவர்கள் (பின்னாளில் வேரவில் தபால் நிலைய அதிபர்) சமயப் பாடங்களையும், ஆரம்பப் பிரிவு ஆங்கில பாடத்தையும் கற்பிக்க முன் வந்தார். அவர் துணையோடு நாயன்மார் குருபூசைகள் நாடகங்கள், பேச்சு, வில்லுப்பாட்டு என அரங்கேறின.

பாடசாலை முன்றலில் காணப்பட்ட ஆலமர நிழலில் நான் எனது ஆங்கில பாடத்தை ஆடல் பாடல்களுடன் நடாத்த முயன்றேன். ஓய்வு நேரங்களில் சிறுவர் வகுப்புக்களுக்கு சென்று "இறாலு.. இறாலு.. இறாலு.. இப்போ பொரித்த இறாலு தின்னத்தின்ன ஆசை வருமே" தின்னத்தின்ன ஆசை திண்டாலொழிய ஓசை திண்டாலொழிய ஓசை வருமே" போன்ற பாடல்களையும் பாடி உற்சாகமூட்டினேன்.

மாணவர் ஆர்வம் கூடியது, வரவு கூடியது ஆசிரியர் குழாம் அதிபருடன் இணைந்து விளையாட்டு மைதானம் ஆக்கினோம். குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலு, அருள், குணம் என்போர் உதவினர். காட்டுக்குள் மரம் வெட்டி உதைபந்தாட்ட தடுப்பு தடுப்பு நம்மேல் யாழ்ப்பாணத்தில் கல்வியங்காட்டிலிருந்து பெண்கள் விளையாடும் வலைப்பந்தாட்ட வளையம் செய்து வந்தேன். பந்துகளும் வாங்கி வந்தேன். விளையாட்டு துவங்கியது. வேரவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வரலாற்றிலே முதன் முதலாக இல்லம் பிரிந்து கொடிகள் வழங்கி பாடசாலைக்கான சின்னம் வரைந்து கொடிச்சீலை தயாரித்து பாடசாலைக் கீதம் (வீரமணி ஐயர் எழுதியது) எழுதப்பட்டு முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டி 1985 ஆம் ஆண்டு இரண்டாம் தவணையில் நடாத்தப்பட்டது. முதன் முதல் விளையாட்டுப்போட்டி நடாத்துவதற்கு T.V படம் காட்டி ரூபா 5,000 சேர்த்து நிதி வசூலிக்கப்பட்டது நினைவில் உண்டு.

முதன் முதல் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.எம்.மன்சூர் அவர்களும வலைப்பாடு தேவாலய பங்குத்தந்தை கொன்சலாஸ் உதவி கல்விப் பணிப்பாளர் திரு.தணிகாசலம்பிள்ளை மற்றும் ஜனாப் இனாது அவடீகளும் கலந்து சிறப்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

டிசெம்பர் மாதம் ஒளிவிழா நிகழ்வுகளும் சிறப்புற நடந்தேறின. எம்முடன் இணைந்து கொண்ட யஸ்ரின் எனும் ஓவிய தொண்டராசிரியர் நாடகங்களில் ஒத்துழைத்தார்.

### 4. கல்விப் பயணம் தொடர்ந்தது.

மாணவர் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. படிப்பில் கவனம் செலுத்தினர். கணபதிப்பிள்ளை சிவானந்தன், ஸ்ரீகணேசன், விநாயகமூர்த்தி, ஜெயலக்ஷ்மி ரீச்சர் எல்லோரும் மாலை வகுப்புக்கள் நடாத்தினர். விசேட வினாவிடை வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. ஆசிரியர்கள் வார இறுதிக்குள் யாழ்ப்பாணம் செல்லாமல் மாணவர்க்கு கற்பித்தனர். இதனால் முதன் முறையாக க.பொ.த சாதாரண வகுப்பில் சித்தியெய்தும் வழக்கம் வேரவில் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் 1985 இல் துவங்கியது.

அடுத்த ஆண்டும் மிகச்சிறப்பான முறையில் (1986) இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. வேரவில் வெள்ளிப்பள்ளத்து பிள்ளையார் கோயில் ஐயா திரு. குமாரசுவாமி அவர்களும் வலைப்பாடு தேவாலய பங்குத்தந்தை கொன்சலாஸ் மற்றும் வண. சகோ. பஸ்ரியன் ஆகியோரும் சிறப்புடன் கலந்து வளம் கூட்டினர்.

1987 இல் மாபெரும் கலைவிழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது,சிறுவர் பாடல்கள், வில்லுப்பாட்டு, குழுப்பாடல்கள், சேக்ஸ்பியர் நாடகங்கள் என நிகழ்வுகள் அரங்கேறின. இணுவிலில் இருந்து ஆர்மோனியக் கலைஞர், தபேலாக் கலைஞர் அழைத்து வரப்பட்டார்கள். அலங்கரிப்பு பொருட்களும் இணுவிலில் இருந்து எடுத்து செல்லப்பட்டன. அன்றைய வட்டாரக் கல்வி அதிகாரி ஜனாப் இனாது அவர்கள் பிரதமரிவிருந்தினராக கலந்து சிறப்பித்ததுடன் இரவு 2.00 மணி வரை விழித்திருந்து நிகழ்வுகளைப் பார்த்து இரசித்து மாணவர்களையும், ஆசிரியர்களையும், அதிபரையும் வாழ்த்தி சென்றனர்.

இவ்வாறாக விளையாட்டு கலை ஊடகங்கள் ஊடாக மாணவரை உற்சாகப்படுத்தி கிராமத்து மட்டத்தில் கணிதம், தமிழ் என்பவற்றை ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, சமயம் என்பவற்றுடன் ஊட்டி வளர்த்தமையில் இன்று அக்கால மாணவர்களே ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும், முகாமையாளராகவும், அலுவலக எழுதுவினைஞர் மற்றும் பட்டதாரிகளாகவும் சிறப்புடன் பணியாற்றுகிறார்கள்.

இன்று ஒரு மகாவித்தியாலயமாக சிறப்புற புதிய இடத்தில் பெரிய கட்டடங்களும் பெரிய ஆலமர நிழல் உடனும் விடுதி வசதிகள் மின்சாரம், போக்குவரத்து, தொலைபேசி வசதிகளுடனும் சிறப்புற செயல்ப்படும் காலம் ஆக மாறி உள்ளது. 'முயற்சி திருவினையாக்கும்' என்பதற்கேற்ப மாணவர் தொடர்ந்து முயல வேண்டும் என்று நூற்றாண்டு விழாக்காணும் எனது பாடசாலை மேலும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தி.யஸ்ரின்
ஆசிரியர்
கிளி / வேரவில் இ.ம.வி


**கடற்கரைச் சூழலில் அமைந்த எங்கள் கிராமத்துப் பாடசாலை ஐந்து வகுப்புக்களை மாத்திரமே கொண்டிருந்தது. இதற்குமேல் கல்வி கற்றதெனில் 1மைல் தொலைவில் உள்ள வேரவில் கிராமப் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். ஆனால் அதற்கு யாரும் முயற்சித்ததும் இல்லை அதைப்பற்றி யாரும் கவலைப்பட்டதும் இல்லை. ஆனால் நல்லாசிரியர் இதனைப்பற்றி கவலைப்படாதிருப்பாரா**

வேரவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்பித்த சிவசாமி வாத்தியார் இது குறித்து பெருங்கவலை கொண்டிருந் தார். எனவே அயல் கிராமங்களுக்குச் சென்று குடும்ப தரிசனங்களைத் தனியனாக மேற்கொண்டு பிள்ளைகள் தொடர்ந்து கற்க வேண்டியதன் அவசியத்தை அடிக்கடி வலியுறுத்தி வந்தார். இதன் பயனாக 1975 ம் ஆண்டில் நான் வேரவில் பாடசாலைக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கிட்டியது.

எங்கள் கிராமத்திலிருந்து முதன்முதலாக வேரவில் பாடசாலைக்கு செல்லும் மாணவன் நானே. என் தகப்பனாரின் கையைப் பிடித்தவாறு புதிய பாடசாலையை அண்மித்தேன். பயத்தினால் இதயம் வேகமாகக் அடித்துக் கொண்டது. திரும்பிச் சென்று விடலாம் போல் இருந்தது அது எனக்கு ஒரு புதிய சூழல் .

அங்குள்ளவர்கள் அனைவரும் நெற்றியில் பட்டையாய் விபூதி அணிந்திருந்தார்கள். இது எனக்கு விசித்திரமாக இருந்தது ஏனென்றால் நான் கத்தோலிக்கன். அங்கிருந்தவர்கள் யாவரும் இந்துக்கள் நெற்றியில் விபூதி அணியாத என்னை அவர்கள் ஏதோமாதிரியாகப் பார்த்தார்கள்.





# மாணவனாயிருந்த போது என்னைத் தாங்கிய சிவசாமி வாத்தியார்



தகப்பனார் என்னை அணைத்தப்படி அலுவலகம் ( அதுவும் ஒருவகுப்பறை தான்) அழைத்துச் சென்றார். எனக்கு உடல் முழுவதும் வியர்த்துக்கொட்டியது. அடுத்த வினாடியே அழுகை வெடிக்கும் போல் இருந்தது. அதற்கு முன்பாகவே சிவசாமி வாத்தியார் என்னை அணைத்து தன்மடியில் இருத்திக்கொண்டார். என் தலையைத் தடவி அன்பொழுகக் கதை கேட்டார். அக்கணமே பரிதி கண்ட பனிபோல் என்பயம் போனது.

தேவாரம் முடியும் வரையிலும் அவருடனே இருந்தேன். தேவாரம் முடிந்ததும் மாணவர்களிடையே என்னை அழைத்துச் சென்ற வாத்தியார் என்னை மாணவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்தியதுடன் என்னோடு அன்பாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். அதுமட்டுமல்ல வகுப்பறையில் தன்மகன் சோதி நாதனுக்கு அருகிலேயே என்னை அமரவைத்தார். அங்கு எனக்கு வாத்தியார் தந்தையானார். அவர்மகன் நண்பனானான் பாடசாலை என் வீடாயிற்று.

வாத்தியாரின் அன்பான அரவணைப்பும் விசேட கவனிப்பும் வகுப்பில் என்னை முதலாம் பிள்ளையாக்கியது. கல்வியில் மட்டுமல்ல விளையாட்டிலும் நான் சிறந்து விளங்க சிவசாமி வாத்தியாரின் அன்பும் அரவணைப்பும் காரணமாயிருந்தது. வகுப்பில் முதலாம் பிள்ளையாய் வருவதற்கு சபாகுலநாதனுடனும் ஓட்டப்போட்டியில் முதலிடம் பெறுவதற்கு வைகுந்தவாசனுடனும் போட்டி போட்டதும் சின்ன வயதுச் சண்டியனாக ஞானத்துடன் கட்டிப் புரண்டதும் இன்னும் என் நினைவில் பசுமரத்தாணி போல் பதிந்து சுகம் தருகிறது.

மாணவனாயிருந்த போது என்னைத் தாங்கிய சிவசாமி வாத்தியார் நான் அதே பாடசாலையில் ஆசிரியனானபோதும் என்னைத் தாங்க மறக்கவில்லை. நான் கற்பிக்கும் போது எனக்கு ஆலோசகராக இருக்கும் என் வாத்தியார் போட்டிகளுக்கு நான் பொறுப்பாசிரியராக இருக்கும் சமயத்தில் என்னை வழிப்படுத்த தவறவில்லை.

தேசியமட்ட சாதனை படைத்த சண்முகநாதன் சேர் நெறிப்படுத்திய "பாஞ்சாலி சபதம்"நாட்டுக்குக்கூத்து மற்றும் விஜயநாதன் சேர் நெறிப்படுத்திய"புலியாசனம்"சிறுவர் நாடகம் என்பவற்றிற்கு ஒப்பனைக்கு நான் பொறுப்பாயிருந்தேன். அந்நாடகங்களின் வெற்றிக்கு ஒப்பனைச் சிறப்பு முக்கியமாயிருந்தது. ஒப்பனையும், ஆடையலங்காரமும் எவ்வாறு அமையவேண்டும் என படம் போட்டுத் திட்டமிட்டு எனக்கு ஆலோசனை வழங்குவதில் சிவசாமி வாத்தியார் பின்னிக்கவில்லை. மானுக்கான கொம்பு மயிலுக்கான தோகை என்பவற்றை இயற்கையாகவே ஆக்கித்தந்த சிறப்பான ஆக்கக் கலைஞன் அவர்.

வலயமட்டத்தில் நடைபெற்ற ஆரம்பக் கல்விக் கண்காட்சியில் எமது பாடசாலையின் வெற்றிக்கு வாத்தியாரின் ஆக்கங்கள் பல பேருதவியாய் அமைந்தன.

வலயமட்டத்தில் கோட்டங்களுக்கிடையிலான அலங்கார ஊர்தி வடிவமைக்கும் போட்டி ஒன்று நடைபெற்றது. பூநகரிக்கோட்டத்திற்கான ஊர்தி நிர்மாணிக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. இதை என்னிடம் ஒப்படைத்தவர் சிவசாமி வாத்தியார் ஒப்படைத்தது மட்டுமல்ல அவ்வூர்தி வலய மட்டத்தில் முதலிடம் பெறும் என்று பூநகரிக்கோட்ட அதிபர்களுக்கு உறுதியளித்திருந்தார். அதன்படி அவ்வூர்தியை நான் அமைக்கும் போது அது எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் திட்டமிட்டு என்னோடு இரவு பகல் பாராது உழைத்து பூநகரி கோட்ட அதிபர்களுக்கு அளித்த உறுதியின்படி அவ்வூர்தி முதலிடம் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தது மட்டுமல்ல, பூநகரிக்கோட்ட அதிபர்களால் எனக்கு பாராட்டுவிழா ஒழுங்கு செய்து என்னை ஊக்குவித்தார்.

ஆசிரியர்களை மட்டுமல்ல ஒவ்வொரு மாணவர்கள் மட்டிலும் கவனமெடுத்து அவர்களின் வெற்றிக்கு ஊன்று கோலாக இருப்பார். பொறுப்பாசிரியர்களிடம் பொறுப்புக்களைக் கொடுத்துவிட்டு வாழாதிருக்க மாட்டார். பொறுப்பாசிரியர்களை விட அதிக சிரத்தையுடன் மாணவர்களை வழிப்படுத்து வார். இதன் காரணமாக எமது பாடசாலை பல வெற்றிகளையும் முன்னேற்றங்களையும் கண்டமை வெள்ளிடை மலை.

இவை மட்டுமல்ல மேலான சமூக சேவையாளனாக தன் வாழ்நாள் முழுவதும் திகழ்ந்த சிவசாமி வாத்தியார் தான்வாழ்ந்த சமூகத்தில் மட்டுமல்ல சுற்றியுள்ள அனைத்து கிராமங்களினதும் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டார். தன்னலமற்ற அவரது சேவை காரணமாகவே அவர் தன் வாழ்வில் ஆசிரியராக , அதிபராக , கோட்டக்கல்வி அதிபராக, உதவிக்கல்விப் பணிப்பாளராக பல பதவிகளில் பரிணமித்தார்.

சமூகத்தின் சிறந்த சிற்பியாக , ஓவியனாக, நாடகசிரியராக , நடிகனாக விளையாட்டு வீரனாக, ஆக்கக் கலைஞராக .... பல்துறை விற்பன்னனாக திகழ்ந்த என்குரு நாதன் என்னையும் தன்போலச் செய்யப் படைத்தான்.

சிவசாமி வாத்தியாரின் 1975ம் ஆண்டில் மூன்றாம் வகுப்பு மாணவனாக வேரவில் இந்துவில் காலடிபதித்த நான் அதன் நூற்றாண்டில் கால் நூற்றாண்டுகளை ஆசிரியனாகக் கடந்த பெருமிதத்தில் வாழ்த்தி விடைபெறுகிறேன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குழந்தை கனகலிங்கம்
முன்னைநாள் இப்பாடசாலை அதிபர்,
காலம் : 25.09.1995- 31.08.1999 வரை

# நிழல்கள்

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சிறிய கிராமமாகிய வேரவில் என்னுமிடத்தில் இருக்கும் கிளி/ வேரவில் இந்து மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

25.09.1995ம் ஆண்டு இடமாற்றம் பெற்று இப்பாடசாலையின் அதிபராகக் கடமை ஏற்று 31.08.1999 வரை இங்கு கடமையாற்றினேன். அப்பொழுது இப்பாடசாலை கிளி / வேரவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை என அழைக்கப்பட்டது. 1996ம் ஆண்டிலிருந்து க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை நிலையமாக இப்பாடசாலையும் அங்கீகரிக்கப்பட்டு அன்றுதொட்டு இன்று வரையும் இப்பாடசாலையில் படிக்கும் க.பொ.த. சாதாரணதர மாணவர்கள் இப்பாடசாலையிலேயே பரீட்சை எழுதுகின்றனர்.

1999ம் ஆண்டு முற்பகுதியிலிருந்து க.பொ.த. உயர்தர வகுப்பு நடாத்துவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்று இந்து மகாவித்தியாலயம் எனப் பெயரும் மாற்றப்பட்டது. மேலும் இப்பாடசாலையில் ஆசிரியர்களாக கடமையாற்றிய பலர் இன்று அதிபர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.


மிகவும் கஷ்டப் பிரதேசமாக இருந்தும் இங்கு கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களின் மனம் நிறைந்த அர்ப்பணிப்பால், இப்பாடசாலை சகல துறைகளிலும் வெற்றிபெற்று மாணவர்களின் வளர்ச்சி மேன்மேலும் வளர்ந்து வருகின்றது. முன்னைய வரலாற்றுச் சான்றுகள் பல அண்மையில் ஏற்பட்ட இடப்பெயர்வால் அழிந்துபோய்விட்டன. நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண்டும் எனவும், மலர்வெளியீடு செய்ய வேண்டும் எனவும் ஏற்பாடுகளைச் செய்த தற்போதைய அதிபர், ஆசிரியர்கள் , பெற்றோர், நலன்விரும்பிகள் எல்லோரையும் வாழ்த்துவதோடு, இப்பாடசாலையின் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் மேன்மேலும் வளர்ந்து இக்கிராமத்தில் வாழும் மக்கள் நற்பிரஜைகளாக வரவேண்டும் எனவும் எல்லாம்வல்ல வெள்ளிப்பள்ளத்து விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

"நன்றி "

தொலைபேசி எண்
077 0204790



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சு.செல்வரத்தினம்
அதிபர் யா / குளமங்கள் றோ.க.
வித்தியாலயம்,
மல்லாகம்.
(பழைய மாணவர் , ஆசிரியர்
கிளி / வேரவில் இ.ம.வி)

# "அரசோடு என்னை சரியாசனம் வைத்த தாய்"

ஈழவள நாட்டின் வடபகுதியில் பல்லவமன்னனின் ஆட்சிக்குட்பட்ட பல்லவராயன் கட்டுப்பெரும்பிரிவின் மேற்குகரையோரத்தை அண்டிய வேரவில் என்னும் பழமை வாய்ந்த கிராமத்தின் அடையாளமாக ஆரம்ப வகுப்புக்களை மட்டும் கொண்ட சிறிய காணிப்பரப்பில் ஓலைக் கொட்டகையில் 1914ம் ஆண்டு யா/ வேரவில் இந்து அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை உதயமானது.

ஆரம்பத்தில் தலைமை ஆசிரியரை மட்டும் கொண்ட பாடசாலையாக இயங்கி காலப்போக்கில் அயல் கிராமங்களான கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி மக்களின் பிள்ளைகள் கல்வி கற்கின்ற தரம் ஒன்பது வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக வளர்ச்சிபெற்றது.

பின்பு படிப்படியாக வளர்ச்சி கண்டு 40X25'அளவு கொண்ட அரை நிரந்தர கட்டடமும் தலைமை ஆசிரியர் தங்குவதற் கான 20X20' அளவு கொண்ட விடுதியுடனும் காணப்பட்டு 1970 களில் ஆசிரியர்கள் தங்குவதற்கான வசதிகளுடன் கூடிய விடுதியும் அமைக்கப்பட்டது.

சிறிய காணிப்பரப்பாயினும் நிறைய பயன்தரும் ஒரு பலாமரமும் வருடம் முழுவதும் காய்த்துக் குலுங்கும் 2 தேசிமரங்களும், நிறைய இளநீரும் தேங்காய்களும் தரும் 3 தென்னம் பிள்ளைகளும் நாம் ஓடி விளையாடுவதற்கு நிழல் தரும் ஒரு பெரிய வேப்ப மரமும் பாடசாலைக்கு அழகூட்டின.

1967ம் ஆண்டு அப்போது அதிபராக இருந்த பெரிய வாத்தியார் என்று நாம் பெருமையுடன் அழைக்கும் கனகசபாரத் தினம் அவர்களால் ஏடு தொடக்கப்பட்டு இப்பாடசாலையில் கல்விக்கான அத்திவாரம் எனக்கு இடப்பட்டது என்பதை நினைப்பதில் மிகவும் மனநிறைவு கொள்கின்றேன்.

1976இல் தரம் ஒன்பது வரைபடித்து தொடர்ந்து இப்பாடசாலையில் படிப்பதற்கு வகுப்புக்கள் இல்லாத காரணத்தினால் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடம் படிக்காமல் நின்றபோது 1977ம் ஆண்டு கிளிநொச்சி தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி அவர்களால் அக்காலப்பகுதியில் அதிபராகக் கடமையாற்றிய காலம்சென்ற அமரர்.க.சிவசாமி அவர்களின் முயற்சியினால் பாடசாலை க.பொ.த. சாதாரண தரம் வரை உயர்த்தப்பட்டு நான் தொடர்ந்து இப்பாடசாலையில் க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்பதற்கு வாய்ப்புக்கிடைத்தது.

தொடர்ந்தும் 1977ம் ஆண்டு மீண்டும் கிளிநொச்சித் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி அவர்களால் அதிபர் காலஞ்சென்ற அமரர் க. சிவசாமி அவர்களின் காலத்தில் 40X20' அளவு கொண்ட நிரந்தர கட்டடமும், அமைக்கப்பட்டு போதுமான ஆசிரியர்கள் வளத்துடனும் வளர்ச்சி கண்டது.

பின்பு படிப்படியாக பௌதீக வளங்கள் அதிகரிக்கப்பட்டு 70X20' கொண்ட நிரந்தர கட்டடமும் அதிபர் அமரர். க.சிவசாமி அவர்களின் காலத்தில் அமைக்கப்பட்டது.

1979ம் ஆண்டு க.பொ.த. சா/தரப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்து உயர்கல்வியைப் பெறும் சந்தர்ப்பத்தை எனக்கு இப்பாடசாலை பெற்றுத்தந்ததையிட்டு நான் பெரும் மகிழ்வுகொள்கின்றேன்.

தொடர்ந்து எனது உயர்கல்வியை வர்த்தகத்துறையில் யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பயின்று பின்பு 1989 இல் அப்போது இப்பாடசாலைக்கு அதிபராக இருந்த உயர்திரு.தி.கணபதிப்பிள்ளை அவர்களின் காலத்தில் தொண்டராசிரியராக இப்பாடசாலையில் கல்வி கற்பிப்பதற்கான வாய்ப்புக்கிடைத்தது.

பின்பு 16.03.1990ம் ஆண்டு நிரந்தர ஆசிரியர் நியமனம் பெற்று சமூகக்கல்வியும், வரலாறும், தமிழ், விவசாயம், உடற்கல்வி போன்ற பாடங்களை கற்பிக்கும் சந்தர்ப்பத்தை இப்பாடசாலை வழங்கியதையிட்டு பெருமையடைகின்றேன்.

அதனைத் தொடர்ந்து 1990ம் ஆண்டு அதிபர் உயர்திரு. தி.கணபதிப்பிள்ளை காலத்தில் கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப் பாளராக இருந்த உயர்திரு க.கந்தசாமி அவர்களால் 20X80' கொண்ட மாடிக்கட்டடத் திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அக்கட்டடம் அமைப்பதற்காக பாடசாலைக்கு அழகூட்டிய இயற்கை வளங்கள் அகற்றப்பட்டன.

பிற்பட்ட காலத்தில் அதாவது 1995ம் ஆண்டு திரு.கு.கனகலிங்கம் அதிபர் அவர்கள் கடமையாற்றிய வேளையில் நான் உபஅதிபராக பணியாற்றியபோது இடப்பெயர்ச்சி காரணமாக இடம்பெயர்ந்த மாணவர்கள் க.பொ.த.சா/ தர வகுப்பில் 45 இற்கு மேல் காணப்பட்டனர். எமது முயற்சியினால் அந்த வருடம் க.பொ.த. சாதாரணதர பரீட்சை நிலையமாக இப்பாடசாலைக்கு அனுமதி கிடைத்தது.

அதன்பின்புஅதிபர் கு.கனகலிங்கம் அவர்களின் விடாமுயற்சியினால் நாம் வலயத்துடன் தொடர்புகொண்டு உயர்தரத்திற்கு அனுமதி கோரி விண்ணப்பம் அனுப்பினோம். இதன் பயனாக 1999ம் ஆண்டில் உயர்தரம் வைப்பதற்கான அனுமதியும் கிடைத்து அத்தோடு பாடசாலைக்கான பெயரும் கிளி / வேரவில் இந்து மகாவித்தியாலயம் என பெயர்மாற்றப்பட்டு இன்று 100 ஆண்டு வயதில் உயர்ந்து நிற்பதையிட்டு மிகவும் நிறைவடைகின்றேன்.

[redacted]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.டிலக்ஷனா
பல்கலைக்கழக புகுமுக மாணவி
கிளி / வேரவில் இந்து மகாவித்தியாலயம்

# எனை ஏற்றிவைத்த ஏணி அவர்....

**கிளிநொச்சி மாவட்டத்தின் பழம்பெரும் கிராமமான வேரவில் கிராமத்தில் பெருமையுடன் நிமிர்ந்து நிற்கின்றது எமை எல்லாம் நல்வழிகாட்டி உயர்த்திவிட்ட அன்னையான கிளி / வேரவில் இந்து மகா வித்தியாலயம் அயற்பாடசாலைகளான கிளி / கிராஞ்சி அ.த.க. பாடசாலை, கிளி / வலைப்பாடு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் என்பவற்றிற்கு தாய்ப்பாடசாலையாக திகழ்கின்ற இவ் வித்தியாலயத்துக்கு தலைமை வகித்த அதிபர்கள் பலர். இன்று நூற்றாண்டைக் கொண்டாடும் இவ்வித்தியாலயமானது பல அதிபர் பெருமக்களின் சேவையினால் கட்டியெழுப்பப்பட்டதாகும்.**

இங்கு அதிபராக கடமையாற்றுவது என்பது அத்தனை சுலபமான காரியம் அல்ல என்பது அனைவரும் அறிந்த விடயமே. வீதிகள் சீர் இன்மை, போக்குவரத்துப் பிரச்சினை நெடுந்தொலைவு, அச்சுறுத்தல்கள் நவீன வசதிகள் ஏதுமற்ற சூழல் போன்ற பல பிரச்சினைகளையும் வெற்றிகொண்டு பல அதிபர்கள் சிறப்பான சேவையினை எமது பள்ளிக்கு வழங்கி இருக்கின்றார்கள். அந்த நிலையில் உரிய நேரத்திற்கு பாடசாலையை அடைய வேண்டும் என்பதற்காக தனது வீட்டில் இருந்து 60 km தொலைவில் உள்ள பாடசாலைக்கு தனது மோட்டார் சைக்கிளில் பயணம் செய்து இவ் வித்தியாலயத்தை கண்ணுக்குள் வைத்து காத்து வருபவர் தான் எமது தற்போதைய அதிபர் திருமதி. பரமேஸ்வரி சோதிலிங்கம் என்றால் மிகையாகாது.

2008ம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் கிட்டத்தட்ட ஏழு வருடங்களாக தனது சேவையினையும் அயராத உழைப்பினையும் அவர் ஆர்வத்துடன் வழங்கிக் கொண்டிருக்கின்றார் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம் ஆகும். போர்க்கால இடப்பெயர்வுகள் அதனால் பட்ட துன்பங்கள், துயரங்கள் எல்லாமே ஊரறிந்த உண்மைகள் அந்த வலியினால் எமது பாடசாலையும் முழுவதுமே சேதமாக்கப் பட்டது.

மீளக்குடியமர்வு 2010 இல் ஏற்பட்ட போது மீண்டும் எமது பாடசாலை இயங்க ஆரம்பிக்கின்றது. பாடசாலை இருந்த இடமே தெரியாமல் பற்றைக்காடுகள் மூடிக்கிடக் கின்றன. முதல் நாளிலே பாடசாலையை வந்து பார்த்த அதிபரின் முகம் குழப்பத்தில் இருந்தது. அவரின் சிந்தனை எல்லாம் இந்தப் பாடசாலையை எவ்வாறு சீர்ப்படுத்தி மாணவர்களுக்கு கற்பிப்பது என்பது தான். எந்த ஒரு கட்டிடமுமே இருக்காத நிலையில் பெற்றோரை அழைத்து தொடர்ந்த பல சிரமதானங்களை செய்தல் மூலமாக வளவு துப்புரவு செய்யப்பட்டது.


அகலக் கிளை பரப்பி நிற்கின்ற அந்த ஆலமரத்தின் கீழே ஒரே நேரத்தில் 16 வகுப்புக்கள் நடைபெற்றது என்றால் நீங்கள் நம்புவீர்களா! இல்லை ஆனால் நடைபெற்றது. அலுவலகமும் அந்த ஆலமரத்தின் கீழ்த்தான். அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அலுவலக வேலைகளை சீராக ஆற்றுவதுடன் கற்றல் கற்பித்தல் சார் நடவடிக்கைளையும் அவதானித்து வருவார்.

அது ஒரு மறக்க முடியாத காலம் எமது பாடசாலை வரலாற்றிலே.



அதிபரின் பல முயற்சியால் எமக்கு இரண்டு தற்காலிக கொட்டகைகள் கிடைக்கப்பெற்றன. 100'x16' அடி கொண்டவை நலன்புரி நிலையத்தில் இருந்த கொட்டகைகள் அவை. அதனை ZOA நிறுவனம் எமக்கு தந்திருந்தார்கள் 10 வகுப்புக்கள் அவற்றினுள் கற்றலை மேற்கொண்டன. மிகுதி ஆறு வகுப்புகளும் ஆலமர நிழலில் தான். அதன் பிற்பாடு 90x20' அடிகொண்ட அரை நிரந்தர கட்டடம் கட்டப்பபட்டது. அதனுள் மூன்று வகுப்புக்கள் தஞ்சமடைய நாங்கள் மீண்டும் ஆலமரத்தின் கீழேயே அமைதியானோம். இன்று தென்கொரிய அரசின் "கொய்கா" திட்டத்தின் மூலமாக மிகவும் கற்றல் வசதியுடன் கட்டடம் கட்டப்பட்டு அதனுள் மாணவர்கள் சந்தோசமாக கல்வியைத் தொடர்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணமாகத் திகழ்பவர் எமது அதிபர் அவர்களே ஆவார்.

கிளி / கிராஞ்சி அ.த.க பாடசாலையில் தரம் - 9 முடித்துக்கொண்டு தரம் 10 வகுப்பில் சேருவதற்காக நானும் எனது சக மாணவர்களும் இவ்வித்தியாலயத்திற்கு வந்த அந்த நாளில் எமை வரவேற்ற அதிபரின் வதனத்தை நான் என்றும் மறவேன். புதிய பாடசாலை, புதிய ஆசிரியர்கள், புதிய மாணவர்கள் எனப் பலதையும் எண்ணிப் பயத்துடன் பாடசாலை வளாகத்தில் புகுந்த எமையெல்லாம் புன்னகை பூத்த முகத்துடன் தாய் தன் பிள்ளைகளை அன்போடு அள்ளிக் கொள்ளவதைப் போல் எமையெல்லாம் ஆதரவுடன் அரவணைத்து அவர் கூறியது புதிய பாடசாலை உங்களை அன்புடன் வரவேற்கின்றது. நீங்கள் பலவற்றை சாதிப்பதற்கு எனது ஆசிரியர்கள் உதவுவார்கள். நீங்கள் சாதிக்கப் பிறந்த மாணவர்கள் உங்களால் எதுவும் முடியுமென்று முதல் நாளிலே எமக்கு ஒரு நம்பிக்கை ஊட்டியது. அவரது கணீர் என்ற குரல் பாடசாலை வளவில் எங்கே நின்றாலும் எம் காதுவரையும் எட்டும்.

தனது பாடசாலை மாணவர்களிடம் எவ்வாறு எமது அதிபர் உரிமை எடுத்துக் கொள்வாரோ அவ்வாறு பெற்றோர்க ளையும் அவர்களின் நிலை அறிந்து கவர்ந்து இழுத்து பாடசாலையை முன்னேற்ற அவர் பல முயற்சிகள் செய்திருக்கின்றார். பாடசாலை வளவிலே தினமும் கால்நடைகளால் துன்பப்பட்டோம். எமது கொப்பி புத்தகங் களையே அது சாப்பிட்ட சந்தர்ப்பமும் உண்டு. தினமும் மாடு அசுத்தப் படுத்திய இடத்தை துப்புரவு செய்தே கற்றலை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதினை அவதானித்த அதிபர் பெற்றோர் மூலம் இதற்கு தீர்வினை கண்டுகொண்டார். ஒரு பெற்றார் இரண்டு கட்டையும் 10 கிழுவம் கதியாலும் தரவேண்டும் இதன் மூலமாக இன்று பாடசாலை வேலி பாதுகாப்பாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடுகளின் தொல்லையும் குறைவடைந்துள்ளது. இவரது அயராத உழைப்பும் சோர்வடையாத மனமும் இவற்றைப் போன்ற பலமாற்றங்கள் இவ்வித்தியாலயத்தில் நிகழ்வதற்கு காரணமாக அமைந்தது எனில் அது மிகையாகாது.

அனைத்து ஆசிரியர்களையும் அர்ப்பணிப்புடன் செயற்பட வைப்பது இவரது முகாமைத்துவத்தின் திறனே. காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும் வகுப்புக்கள் மாலை 6.00 மணிக்குத் தான் நிறைவடையும். இரவு வேளைகளில் கூட வகுப்புக்கள் நடைபெறும் இவரின் அன்பான கண்டிப்பான வழிநடத்தல் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே ஒரு இறுக்கமான பிணைப்பினை ஏற்படுத்தி பாடசாலையில் ஒரு சுமூகமான சூழலை இவர் பேணிவருவது அனைவரும் அறிந்த விடயமே ஆகும்.

இவர் எமது பள்ளிக்கு வழங்கிய கடின உழைப்பின் பயனாகத்தான் இவரின் காலத்தில் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை எடுத்தியம்பி நிற்கின்றது. இவரின் காலத்திலேயே கல்வியற் கல்லூரிக்கும் பல மாணவர்கள் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இணைபாட விதான செயற்பாடுகளில் பல மாணவர்கள் சாதனைகளைப் படைத்துள்ளமை படைத்துக்கொண்டிருக்கின்றமை தேசிய போட்டியிலும் பங்கு பெற்றுள்ளமை இனிமேலும் இச் சாதனைகள் தொடரும். கிளிநொச்சி மாவட்டத்தில் வேரவில் பாடசாலைக்கு தனி இடத்தை ஏற்படுத்திய பெருமை எமது அதிபரையே சாரும். இவற்றிற்கு காரணம் காலநேரம் பாராது இவரது சேவையே ஆகும்.

ஒவ்வொரு மாணவர்களையும் தனித் தனியாக நோக்கி அவர்களின் சுக துக்கங்களில் பங்குகொண்டு வீட்டில் ஏற்படும் பல பிரச்சினைகளையே தீர்த்து வைக்கும் மனப் பக்குவம் வேறு யாருக்குமே எளிதில் அமைந்துவிடாது. இங்கே வருவதற்கு பல்வேறு காரணங்களைச் சொல்லி தட்டிக்கழிக்காது தனியொரு பெண்ணாக பயணம் செய்து இவ்வித்தியாலயத்திற்கு இவர் ஆற்றும் சேவை அளவிடமுடியாதது.

எனது தனிப்பட்ட ரீதியிலே இவரை நான் எனது அன்னையாகவே காண் கின்றேன். அவரிடம் நான் பெற்ற அறிவுகளுக்கும் வழிகாட்டல்களும் தான் என்னை இன்று இவ்வளவிற்கு வளர்த்து நிற்கின்றது. பள்ளி சென்று பல பிரச்சினை களைக் கூறினாலும் எல்லாவற்றையும் செவிமடுத்து தக்க தீர்வை பக்கச்சார்பின்றி வழங்கி ஒரு நடுநிலையாளராக எனது அதிபராக நான் காண் கின்றேன். என்னைப் பல்கலைக் கழகம் வரை செல்வதற்கு ஏற்றிவைத்த ஒரு அன்புத் தாயாக எனது அதிபராக காண்கின்றேன். இவ்வித்தியாலயத்தின் வரலாற்றிலேயே முதல்வர் சோதிலிங்கம் அவர்களின் சேவைக்காலம் ஒருபொற்காலம். பாடசாலையின் வெற்றியில் பெரும் பங்காற்றிய ஒரு நல் அதிபராக அனைவரது உள்ளங்களிலும் இடம் பிடித்தவர்.


தனது வசீகரமான முகத்தினாலும் கணீர் என்ற குரலினாலும் சோர்வற்ற எதற்கும் துணிந்த ஒரு தன்நலமற்ற சேவையாளர் இன்று நூற்றாண்டு விழாக்காணும் வாய்ப்பையும் இறைவன் அவருக்கு வழங்கியிருக்கின்றார். இவரது கணீர் என்ற குரல் இவ் வளாகத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும் வரை இங்கு கற்கின்ற மாணவர்கள் பற்றி நாம் கவலை கொள்ளத் தேவையில்லை என்பது மதிக்கண் மாதுவாக புலப்படுகின்றது. நூற்றாண்டு விழா நாளிலே எனது பாடசாலையிலும் அதிபர் ஆசிரியர்களையும் மேலும் சாதனை படைத்து வாழ வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் மனிதனா?

"வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



வையகத்திலே ஆறறிவு படைத்த உயர்ந்த பிறவியாகப் படைக்கப்பட்டவன் மனிதன் மனிதன் என்பவன் மானிட நேயப்பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் இன்றைய உலகில் மனிதன் மனிதனாக வாழ்கின்றானா? என்பது ஐயத்துக்கிடமாகவே உள்ளது. மனிதன் இவ்வுலகில் பிறப்பெடுத்தது முதல் இறக்கும் வரை அவன் எவ்வாறு வாழ வேண்டும். எவ்வாறு ஒழுக வேண்டும் என்பது பற்றி பல்வேறு இலக்கியங்களில் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக திருக்குறள், ஆசாரக் கோவை ,கம்பராமாயணம், வில்லிபாரதம், நான்மணிக்கடிகை, ஆத்திசூடி,கொன்றைவேந்தன்போன்ற வற்றைக் குறிப்பிடலாம். இதுமட்டுமல் லாது அரிச்சந்திரன், மகாத்மாகாந்தி, விவேகானந்தர் இராமகிருஷ்ணர் போன்றவர்கள் சிறந்த ஒழுக்கசீலர்களாக, முன்னுதாரணங்களாக வாழ்ந்து வழிகாட்டியுள்ளனர்.



அன்பு, சகோதரத்துவம், நம்பிக்கை, இரக்கம், பொறுமை, வாய்மை,நேர்மை, விட்டுக்கொடுத்தல் போன்றவை மனிதநேயப் பண்புகளாக இலக்கியங் களில் சுட்டப்பட்டுள்ளன. இப்பண்பு களைக் கைக் கொண்டு மனிதன் வாழ்கின்றானா? என்பது சந்தேகம். இவ்வாறு மனிதனுக்கும், நற்பண்புகளுக்கு மிடையே இடைவெளி உருவாவதற்கு அவன் வாழுகின்ற சூழலும், ஒருவகையில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்று கூறுவதில் தவறேதுமில்லை. அதாவது தமுபாவனை, போதைவஸ்துக்களின் பிரயோகம் என்பவற்றின் காரணமாக அவற்றுக்கெல்லாம் அடிமையாகி தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்த சிந்தனைகளில் செயற்படமுனை கின்றான் மனிதன். விலங்கினங்களுக்குரிய கொலை, பழிக்குபழி வாங்குதல், பொறாமை போன்ற தவறான முயற்சி களில் ஈடுபட்டுத் தனது கிடைத்தற்கரிய பேறாகிய மனிதப் பிறவியை வைத்துக் மாய்த்துக் கொள்கின்றான். விலங்கு களுக்கே உரிய நடத்தைகளைப் பேத மின்றிப் பின்பற்றிச் செல்பவனை மனிதன் என்று கூறலாமா என்பது போன்ற விடயங்களை ஆராய்வதே இக்கட்டுரை யின் நோக்கமாகும்.

அன்பை அடிப்படையாகக் கொண்ட குடும்ப அமைப்பை உடையதே எமது சமுதாயம். குடும்பத்தில் முக்கிய உறுப்பி னர்களிடையே நிரந்தரமானதும் எதிர் பார்ப்பு இல்லாததுமான தூய அன்பு காணப்படுகின்றதா? பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் நெருங்கிய உறவு காணப்படுகின்றதா? பாடசாலை களில் மாணவர்களுக்கிடையே நிலையான நட்புறவு பேணப்படுகின்றதா? ஆசிரியர் சமூகத்திற்கும் நிர்வாகத்திற்கு மிடையில் சுமுகமான உறவுள்ளதா? வேலைத்தளங்களில் அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் இடையில் ஒற்றுமை நிலவுகின்றதா? என்றவாறு பலவினாக் களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

கடந்த காலங்களை எடுத்துக் கொண்டால் பல குடும்பங்கள் கூட்டாகச் சேர்ந்து வாழுகின்ற கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை காணப்பட்டிருந்தது. இக்குடும்ப உறவுகளுக்கிடையே சகோதரத்துவம், ஒற்றுமை,விட்டுக் கொடுத்தல் போன்ற நற்பண்புகள் பேணப்பட்டிருந்தன. இந்நிலையில் உலகின் பல்வேறு துறைகளிலும் மாற்றங்களும், புதுமைகளும் நுழைந் தமை தவிர்க்க முடியாதாயிற்று. பண்புக்குக் கொடுக்கும் முக்கியத்து வத்தை விட பணத்துக்குக் கொடுக்கும் மதிப்பு அதிகரித்தது. பணத்தினால் எதனையும் சாதித்து விடலாம் என்ற எண்ணம் ஆதிக்கம் பெற்றது. நவீன மாற்றங்கள், வசதிவாய்ப்புக்கள், சௌகரி யங்கள் என்பவற்றை சுதந்திரமாக அனுபவிக்க வேண்டும் என்ற சிந்தனை கள் வலுப்பெறவே மெதுமெதுவாக கூட்டுக் குடும்ப வாழ்வியல் முறைமை சிதவடைந்து தனிக்குடும்ப வாழ்க்கை முறைமை உருவாகத் தொடங்கியது. எங்கும் போட்டி என்ற மாயத்திரை பரந்து நிஜங்களைப் புறந்தள்ளின. குடும்பங்களி டையே அன்புப் பிணைப்பில் தளர்ச்சி ஏற்பட ஆரம்பித்தது. வளரும் பிள்ளை களுக்குத் தமது உறவுகளைத் தெரியாத துர்ப்பாக்கிய நிலைமை தோன்றியது. மனிதநேயப் பண்புகளைப் பின்பற்றி வாழ வேண்டும் என்ற எண்ணம் செயலிழக்கத் தொடங்கியது. இதன்காரணமாக சமுதாயத்தில் அநாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள்,வேரூன்றத் தொடங்கி வளர்ச்சி பெறத் தொடங்கின.

தொழில்நுட்பத்துறையின் அதீத வளர்ச்சி காரணமாக இல்லங்களில் தொடர்பாடல் மற்றும் பொழுதுபோக்குச் சாதனங்களைப் பயன்படுத்தும் வீதமும் உயர்ந்து கொண்டு செல்கின்றன. தொலைபேசி, கணினி தொலைக்காட்சி, இணையம், வானொலி போன்றன மக்களின் செல்வங்களையும் பொன்னான நேரங்களையும் இரையாக்கிக் கொண்டிருப்பதை அறியாது காலங்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. தொலை பேசிகளின் தொல்லைகளும் தொலைக் காட்சியின் சினிமா மோகமும் இணையங் களில் ஆழ்ந்த ஈடுபாடும் மனிதநேயப் பண்புகளை மிக வேகமாக விழுங்கிக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக இல்லம் நாடி வரும் இனிய உறவுகளை வரவேற்று உபசரித்து விருந்தளிக்கும் பாரம்பரிய பண்புகள் வழக்கொழிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதற்கு தொலைக்காட்சிகளின் ஆதிக்கத்தைக் காரணமாகக் கூறலாம்.

திருமண நிகழ்வுகள்,மரணநிகழ்வுகள் என்பனகூட அவ்வவற்றிக்குரிய முறைகளைப் பின்பற்றி நடைபெறுவதில்லை. திறந்த உள்ளங்களுடன் வாழ்த்துவதோ அல்லது துன்பங்களைப் பகிர்ந்து கொள்வதோ இல்லாமல் கடமைக்காக என்ற அசமந்தப் போக்கில் இடம்பெறுகின்றன. திருமண நிகழ்வு நடைபெறுகின்றதோ இல்லையோ பந்திக்கு முந்திச் செல்லுகின்ற மனப்பாங்கு காணப்படுகின்றது. மரணநிகழ்வுகளில் வேடிக்கைகளும், கேளிக்கைகளும் முக்கிய இடத்தைப் பெற்றுவருகின்றன. மரணஊர்வலங்களில் சந்திக்குச் சந்தி மேளதாளங்களும் வெடி ஆரவாரங்களும் ஆக்கிரமிக்கின்றன. மனஅமைதியை நாடிச் செல்லும் ஆலயங்களுக்கிடையில் ஒலிபெருக்கி பாவனையின் போட்டித்தன்மை உச்ச இடத்தைப் பெற்று வருகின்றது. பண்பாடு கலாசாரங்களைப் பேணும் நிலைக்களன்களாக விளங்கிய ஆலயங்கள் இன்றைய நிலையில் அவற்றைப் பேணுவதற்கு பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டிய அவலநிலைக்கு முகம் கொடுத்து வருகின்றன. ஆலயங்களுக்குள்ளே காணப்படும் அடியவர்களை விட வெளியே வேடிக்கைகளில் மக்கள் கூட்டம் பொங்கி வழிகின்றது. இவர்களை அடியவர்கள் எனலாமா?


கொலை, களவு, கற்பழிப்பு, ஏமாற்றுங்கள் சமுதாயத்தில் மலிந்து வருகின்ற தன்மையை காணமுடிகின்றது. மது அரக்கனின் பிடியில் சிக்குண்டவன் தன் பெற்றோரை வாளால் கொன்று குவிக்கின்றான். பச்சிளங் குழந்தைகள் உயிருடன் புதைக்கப்படும் ஈரமில்லா இதயங்கள் எத்தனை? ஆலய வேள்விகளில் வாய் பேசாதா ஜீவன்களின் கொலைகள் எத்தனை? பல இலட்சங்கள் செலவழித்து கட்டப்பட்ட மாங்கல்யத்தை பறிகொடுத்துத் தவிக்கும் நெஞ்சங்கள் எத்தனை? வயது முதிர்ந்த மூதாட்டிகளின் அப்பாவித்தனமான கொடூரக் கொலைகள் எத்தனை? ஆம் இதிலிருந்து ஒன்றை புரிந்து கொள்ள முடிகின்றது. நாட்டில் மனித உருவில் உலாவும் கொடூர விலங்குகளை விட காட்டில் வாழும் விலங்குகள் எவ்வளவோ மேலானவை.

அந்தோ! வானுறையும் தெய்வம் செய்வதறியாது திகைத்து நிற்கின்றது. மனிதனின் மாயா ஜாலங்களைப் பார்த்து மனவேதனை அடைகின்றது. எங்கே நான் படைத்த மனிதன் எனத் தேடித்தேடி அலைகின்றது. இறைவன் மனிதனை அழைக்கும் குரல் அவன் செவிகளில் விழவில்லை. கோடிக்கணக்கில் ஒருவனுக்காவது தனது குரல் கேட்கும் என நம்பிக் கொண்டு தெய்வம் பொறுமை காக்கின்றது. நிச்சயமாக ஒருவன் முன்னேற காலடி வைத்தால் போதும் நிச்சயமாக உலகம் முழுவதும் திசை மாறும் எங்கும் மகிழ்ச்சியான, ஒளிமயமான சுவர்க்கம் உருவாக நாம் ஒன்றிணைவோம். ஒற்றுமையாக உழைப்போம்.

ஆக்கம்: செல்வி. செ. சுகிர்தா
ஆசிரியர்
கிளி / வேரவில்
இந்து மகாவித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஞ்ஞானம் கற்பதால் ஏற்படும் மனப்பாங்கு பெறுமான விருத்தி

மனப்பாங்கு என்பது அறிதல்சார், எழுச்சிசார், உளவியல்சார் துறைகளில் பரவியுள்ள ஒரு சிக்கலான எண்ணக்கருவென குறிப்பிடலாம். மனப்பாங்கு ஒரு எண்ணக்கரு என்ற வகையில் உளவியல் ரீதியான பின்னணி உண்டென்பது தெளிவாகின்றது. தனியாளொருவரின் பிறப்பானது மனப்பாங்கினைத் தன்னகத்தே கொண்டதல்ல. அவ்வாறாயின் மனப்பாங்கு என்பது கருவில் உருவாகும் ஒன்றல்ல. பிறப்பின் பின்னர் அறிவுடன் சேருகின்ற சூழல்சார் நிலமைகளின் அடிப்படையில் தனியாள் ஒருவரின் அடையாளங் காணக் கூடிய துலங்கல் ஒன்று உருவாகும்.

தனியாள் ஒருவர் தன்னுடைய வாழ்நாளில் பெற்றுக் கொள்ளும் முறைசார், முறைசாரா அனுபவங்களினூடாக இத்தகைய மனப்பாங்குகளை பெற்றுக் கொள்கின்றனர். மனப்பாங்கானது சில விடயங்களில் உடன்பாடற்ற தன்மையையும் கொண்டது. அதாவது விருப்பத்தையோ, விருப்பமின்மையையோ காட்டும்.

அடுத்து பெறுமானங்கள் என்றால் என்னவென்பதை நோக்குவோம் பெறுமானங்கள் என்பது சமூகநெறிகளுடன் தொடர்புபட்டது. மனப்பாங்கு போல் பெறுமானங்களும் மாற்றமடையும் வாய்ப்புக்கள் உண்டு. பெறுமானங்களினை மாற்றுதல் மனப்பாங்குகளை மாற்றுதலை விட கடினமானதாகும். பெறுமானங்களுக்காக ஒருவர் உயிரைக் கொடுக்கவும்,தயாராக இருக்கலாம். இதன்படி பெறுமானம் என்பது மிகவும் உணர்ச்சிபூர்வமான தன்மை கொண்டதாகும்.

அறிவதற்காக மட்டும் கற்பதினூடாக அறிவுத் தொகுதியை மேம்படுத்தி புதிய சவால்களுக்கு சிறந்த வகையில் முகம் கொடுப்பது கடினமானதாகும். கற்ற அறிவுத் தொகுதியை நடைமுறை வாழ்க்கையில் பிரயோகிப்பதாகவும் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துலங்க வேண்டும். விஞ்ஞானம் கற்பதால் ஏற்படும் மனப்பாங்குகளும், பெறுமான விருத்திகளும் வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களில் துணை செய்கின்றன. விஞ்ஞானத்தினூடாக கட்டியெழுப்பப்படும் மனப்பாங்குகள் பற்றி ஆராய்வோம்.

காரண காரிய தொடர்பினை ஏற்கும் மனப்பாங்குகள் நியூட்டனின் விதி பற்றி கற்பதால் விருத்தியடையும். அதாவது யாதாயினுமொரு விளைவிற்கு காரண மொன்று இருக்கின்றதென்றும், அக்கார ணத்திற்கும் காரியத்திற்கும் அதாவது விளைவிற்குமிடையிலான தொடர்பை ஆராய இம்மனப்பாங்கு உதவுகின்றது. மேலும் ஏற்றுக்கொள்ளப்படும் விழுமியங் களை மதிக்கின்ற மனப்பாங்கு வளர்ச்சியடையும் .பரிசோதனை ஒன்றினை வாய்ப்புப் பார்க்கும் போது நிச்சயமான முடிவொன்று வருவதால் அன்றாட வாழ் வில் நிகழும் ஏதேனும் சம்பவம் பற்றி மேலோட்டமாக தெரிகின்ற விபரங்களின் படி அபிப்பிராயத்தை முன்வைக்காது அது பற்றியும் அதனுடன் தொடர்புடைய சகல விடயங்கள் பற்றியும் ஆராய்ந்து தீர்மானம் அல்லது முடிவெடுக்கும் மனப்பாங்கு வளரும்.

மனிதனைக் கவரும் சக்தி சிறுவிடய மாயினும் கவர்ச்சியானதாயினும் மிகவும் மேல் நிலையிலுள்ள ஒருவரினால் முன்வைக்கப்பட்டதாயினும் விளக்கமளிப் பதனை விட நிரூபிக்க கூடிய வகையில் தகுந்த காரணங்களுடனும், ஆதாரங்க ளுடனும் விளங்குவதனை விரும்புகின்ற மனப்பாங்கு விருத்தியடையும்.

மனிதனின் சேமநலனுக்காக விஞ்ஞான அறிவியலை பயன்படுத்தல் சம்பந்தமான நல்ல துலங்கலைக் காட்டுகின்ற மனப்பாங்கும், புதிய விடயங்களில் ஆர்வம் காட்டுகின்ற பிரதிபலிப்பு சிந்தனையுடைய மனப்பாங்கும் கோட்பாடு கட்டமைவினை மதிக்கும் மனப்பாங்கும் வளரும். உதாரணமாக DNA, பென்சீன் ஆகியவற்றினை கற்பதால் அவற்றின் கட்டமைப்பு, எழுதும் முறை ஆகிய வற்றை கற்பதால் கட்டமைவினை மதிக்கும் மனப்பாங்கு வளரும். யாதேனும் ஒரு நிகழ்தலை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு பெறுமானம் மேலோங்கும் அத்துடன் பொதுமைப்படுத்தல்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு வளரும்.

சமூகத்தில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் விழுமியங்களை மதிக்கின்ற மனப்பாங்கும், பரிசோதனை களை திட்டமிட்டு மேற்கொள்ளும் போது தன்னம்பிக்கை, முயற்சி, மனத்திருப்தி, பொறுமை, புதிய மாற்றங்களுக்கு தயாராகுதல் ஆகிய பண்புகளும், உபகரணங்களை கையாளும் திறனும் அதிகரிக்கும்.

இத்தகைய நல்ல மனப்பாங்குகளை யும், பெறுமானங்களையும் விஞ்ஞானம் கற்பதால் எய்தலாம்.

**ஆக்கம்: செல்வி. மங்களா பத்மநாதன்**
**ஆசிரியர் கிளி/வேரவில் இ.ம.வி**

உசாத்துணை நூல்கள்.

1. மனப்பாங்குகள்.

2. விஞ்ஞானம் கற்பிக்கும் முறைகள்.

3. கல்வியாளன்.

4. அகவிழி ஐப்பசி 2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வலைத்தளங்களின் பாவனையும் சமூகம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளும்

**குழந்தைவேலு அன்பழகி**
**ஊடகக் கற்கைகள்**
**மூன்றாம் வருடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**பழைய மாணவி**

இன்றைய உலகின் நவீன கண்டுபிடிப்புக்களில் மனிதனுக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாக மாறியிருப்பது தொடர்பாடல் துறையாகும். தொழில் நுட்ப வாழ்க்கையும் ஊடக வாழ்க்கையும் தன்னைத் தானே விளம்பரப் படுத்திக் கொண்டிருக்கின்றன. முழு உலகையும் ஒரு உள்ளங்கைக்குள் அடக்கி விடும் அளவிற்கு இன்று தொடர்பாடல் சாதனங்களின் வளர்ச்சி மேம்பட்டுள்ளதை யாராலும் மறுக்க முடியாது.



அதே போன்று தொடர்பாடல் துறையின் உச்சகட்டமான Internet (சர்வதேச வலையமைப்பு) பாவனையும் மக்கள் மத்தியில் சிறுவர்கள் முதற்கொண்டு முதியவர்கள் வரையில் மிகவும் மலிந்து காணப்படுகின்றது. இதன் வளர்ச்சியினால் சமூகவலைத் தளங்களின் பாவனையும் எல்லா வகையிலும் விரிவடைந்து செல்வதைக் காணலாம்.

உலக மயமாக்கலினால் தனித்தனி மனிதர்களாக சுருங்கி போய்விட்ட சமூகத்தைச் சமூக' வலைத்தளங்கள் ஒன்றிணைப்பனவாகக் காணப்படுகின்றது. செல்போன் கண்டுபிடிக்கப்பட்டது. தான் உண்மையிலேயே தகவல் புரட்சி எனலாம். இன்று செல்போன் என்பது பேசும் கருவியாக மட்டுமில்லை பலவிதமான பயன்பாடுகளுடன் இருக்கின்றது. அதில் இருக்கும் மிக முக்கியமான பயன்பாடு இன்றைக்கு விரைவாக வளர்ச்சி அடைந்து வரும் சமூக வலைத்தளங்களாகக் காணப்படுகின்றது.

உலக அளவில் 150 கோடிக்கும் அதிகமானோர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகின்றார்கள் பேஸ்புக், ட்விட்டர், மைஸ்பேஸ் உள்ளிட்ட 24 சமூக வலைத் தளங்கள் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் 10 சமூக வலைத்தளங்களே உலகில் அதிகமாகப் பயன்படுத்தப் படுபவை என பட்டியலிடப்பட்டுள்ளன. இவ்வளவு அதிகமானோர் பயன்படுத்துவதற்கு முக்கியமான காரணம் அது மிகக் சுதந்திரமான களமாக இருப்பது தான் அதில் நீங்கள் எதை வேண்டுமானாலும் பகிர்ந்து கொள்ளலாம்.

2009 இல் பெரும் நிறுவனங்கள் மேற்கொண்ட ஓர் ஆய்வில் 60 சதவீதம் பணியாளர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன் படுத்துவதாகக் கூறப்படுகின்றது. கால அவகாசம் என்பது வாழ்க்கைக்கு அத்தியவசியமானது. ஒரு பத்து வருடத்திற்கு முன்பு கூட இம்மாதிரியான கால அவகாசம் அனுபவிக்கக் கூடிய ஒன்றாக இருந்திருக்கின்றது. இன்று உள்ள பரப்பரப்பான வாழ்க்கை அவகாசம் என்பதற்கு இடமளிப்பதே இல்லை. ஒரு செய்தியைப் பரிமாறிக் கொள்ள நண்பர்களின் உறவினர்களின் வீடு தேடிச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகாசமாகப் பேசிக் கொண்டிருப்பது என்பதெல்லாம் மனதிற்கு ஆரோக்கியம் அளிக்கும் விடயமாக காணப்படுகின்றது. ஆனால் இன்று நமக்கு கிடைக்கும் நேரங்களில் எல்லாம் நாம் இந்தச் சமூக வலைத்தளங்களிலேயே செலவிடுகின்றோம். இன்றைக்குச் சமூக வலைத்தளப் பழக்கம் ஒரு போதைப் பழக்கத்தைப் போல பரவியிருக்கின்றது. வீட்டில், அலுவலகத்தில் எங்கும் சமூக வலைத்தளங்கள் பார்ப்பதிலே பலர் செலவிடுகின்றனர்.

இவ்வாறு பலர் அதிலே தமது நேரத்தை செலவிடுகின்ற போதும் அதில் நன்மை தரக்கூடிய சில விடயங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

நண்பர்கள் தமது நண்பர்களுடன் தொடர்பை வைத்திருக்கவும் மேலும் புதிய நட்புக்களை உண்டு பண்ணவும் காணாமல் போன உறவுகளை ஒன்றிணைப்பதற்கும் சுய அபிப்பிராயங்களைத் தெரிவிக்க உறுதுணை வகிக்கின்றது. உதாரணமாக தமக்கென இணைய பக்கம் அமைக்கவும் அதில் தமது கருத்துக்களை நண்பர்களுடனும் உலகத்தாருடனும் பகிர்ந்து கொள்ளவும் உதவுகின்றது.

அத்துடன் தகவல்களை ஆராயவும் திரட்டி பாவிக்கவும் இக்கால அத்தியாவசியத்திறன் களைப் பெற வாய்ப்பளிக்கின்றது. இதன் காரணமாக பிள்ளைகள் சுயமாக எழுத, படம் எடுத்துப் பரிமாற , காணொளி எடுத்துக் கதை சொல்ல மின்வலையில் தகவல் தேடும் திறன்களைப் பயில வழிவகுக்கின்றது.

சமூக வலைத்தளங்கள் சிறந்த அறிவுக் களஞ்சியமாகக் காணப்படுகின்றது. புதிய அறிவுக் களஞ்சியமாகக் காணப்படுகின்றது. புதிய அறிவைப் பெற, கல்வி சம்பந்தமான அறிவைப் பெற, கேள்வி பதில்களை உடனுக்குடன் பரிமாறிக் கொள்ள உதவுகின்றது. செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் வேலை வாய்ப்புகளை அறிந்து கொள்ளவும் சமூக வலைத்தளங்கள் பல்வகையில் நமக்குப் பயன்படுகின்றன. அதை அளவுடன் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு நன்மைகள் பல காணப்படுகின்ற போதிலும் தீமைகளும் இருக்கத்தான் செய்கின்றன. வரையறையின்றி யாரிடமும் தொடர்பு கொள்ளலாம். ஒருத்தருக்கு ஒருவர் அல்லது ஒரு குழுவாகப் பிள்ளைகளை உளவியல் ரீதியில் தாக்கவும் வழியுண்டு. இவ் வலைத்தளங்களால் சிலர் தமது கொடுமைத் தனத்தை நேரடியாகக் காட்டவும் அத்துடன் சிறிது சிறிதாக சிறார்களைக் கட்டற்ற வலைக்குள் இட்டுச் செல்கின்றது.

உண்மையான கருத்துக்களை தெரிவிக் காமல் திசை திருப்பும் தகவல்களை ரசிக்கும் வகையில் தகவல்களை பதிவேற்றம் செய்வதும், ஒருவருடைய இரகசிய இலக்கத்தை அறிந்து அதனூடாகச் சென்று அவர்களின் இணையப் பக்கத்தை களவாடி அவர்களுக்கு எதிரான கருத்துக்களைப் படங்களை பதிவேற்றம் செய்யும் செயற்பாடுகளும் நடைபெறுகின்றது.

பாலியல், அரசியல் சம்பந்தமான படங்களையும், செய்திகளையும் பதிவேற்றம் செய்வதும் சமூகவிரோத சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதும் சமூகத்தை தீய வழியில் இட்டுச் செல்லவும் வாய்ப் பளிக்கின்றது.

பிள்ளைகளுக்கும் தெரியாதவர்களை நண்பர்களாக இவ் வலைத்தளங்கள் இணைத்து விடுகின்றன. அவர்கள் தமது வர்த்தக ஆதாயங்களிற்காகச் செய்யும் வேலை ஆயினும் பிள்ளைகள் அறியாமல் வயதுக்கு ஏற்காத விடயங்களை எதிர்கொள்ளவும் வழிவகுக்கின்றது.

இன்றைய வாழ்க்கை முறையில் சமூகத்திடமிருந்தும் , உறவினர்களிட மிருந்தும் விலகி தனிமை என்பது இம் மாதிரியான சமூக வலைத்தளங்களின் பாவனையே காரணமாக இருக்கின்றன.

இவ்வாறாக சமூக வலைத்தளங்களின் பாவனை என்பது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இதனால் சமூகம் என்பது சமூக வலைத்தளங்களினால் கட்டுப்படுகின்றது. நாம் இன்று சமூக வலைத்தளங்களுக் காகவே வாழ்வை ஒப்பனையாக்குகின் றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சி வெயில் பொழுதினிலே
ஊர்க்கோயில் வீதியிலே
கச்சான் வறுத்து விற்குமந்தக்
தாரகையே கேள்வி ஒன்று
இளமைக் கூத்தாடுகின்ற
எழில் ரோசா மேனியாளே
பழக்கப் பட்ட தொழிலா இது
பசி போக்கப் போதியதா?

ஆக்கம்:- சி. அயந்தா
மாணவி
தரம்-11
கிளி / வேரவில் இ.ம.வி

பாதிக் குடல் நிரப்புதற்கும்
போதாது என் பிழைப்பு
மீதியினைக் குடத்து நீரால்
நிரப்புகின்ற வாழ்க்கை ஐயா

ஊர் எங்கும் வீடு கட்ட
ஓடிஓடி என் நிலையை
நேரினிலே நான் உரைத்தும்
ஆனதொன்றும் இல்லை ஐயா



# சொல்லும் ஐயா...

தந்தை குந்தி இருந்தபடி
தாயாரும் பாய்ப்படுக்கை
வந்தவரை இழுத்துப்போய்
வருடங்கள் பல ஆச்சு

பெண்பிள்ளை ஒன்றெமக்கு
பிறப்பினிலே அது ஊமை
பின் வந்த தன் பிள்ளை
பள்ளி சென்று வருகின்றான்

பலமான காற்றடித்தால்
பாம்பாட்டம் ஆடி இந்த
நிலமாதை முத்தம் இடும்
நிலையில் ஐயா எமது குடில்


பொறுத்துப் பொறுத்திருந்து
புகாரும் எழுதிக்கொடுத்து
வெறுத்துக் கடலை
வாங்கி வந்து வறுத்து விற்கத்

தொடங்கி விட்டேன்
நீதியினை கொன்று எரித்து
நீள் கடலில் கரைத்த பின்னர்
வாதித்துப் பயன்என்ன

பட்டம் படிப்பின் அதிகாரம்
போதிக்க மனமின்றி போராட்டம்
துயருற்று பயன் என்ன
வாய்திறந்து சொல்லும் ஐயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியைக் காத்திடுவோம்

## "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன் தோன்றி மூத்த குடி"

எம் தமிழ்க்குடி என்பது ஆன்றோர் கருத்து ஆகும். இன்றைக்கு ஏறத்தாழ எந்த ஒரு இனமும் பெற்றிராத பெருமையும், சிறப்பையும் கொண்டது தான் எமது தமிழினம். தமிழினத்தின் காப்பரணாக விளங்குவது செம்மொழி யான எம்தாய்மொழியாகிய தமிழ்மொழி யாகும். தமிழ்மொழியும், தமிழ் இனமும் தான் உலகிலே தோன்றிய முதல் மனித இனமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழினம் மூத்த இனமாக நிரூபிக்கப் பட்டுள்ளது. இவ்வாறு தமிழினம் மூத்த இனமாக வாழ்ந்தமைக்கான சான்றுகளாக தென்னிந்தியாவிலே அதாவது தாய் தமிழகத்திலே "ஆதிச்ச நல்லூர்"என்கின்ற பகுதியிலே கிடைக்கப் பெற்ற எச்சக் கூறுகள் அதனை நிரூபித்து நிற்கின்றது.

இதுமட்டுமல்லாது தமிழ்மொழியின் பெருமை காத்த ஔவையார் அவர்களின் வரலாறு எம்மொழியின் சிறப்பை எடுத்து உரைக்கின்றது. ஔவையார் சிறந்த தமிழ்ப்புலவர். இவரின் தமிழ் புலமையைக் கண்டு வியப்புற்ற தமிழ் மன்னனான "அதியமான் நெடுமான் அஞ்சி" என்பவர் ஔவையார் நெடுநாள் வாழவேண்டும் "ஔவை வாழ்ந்தால் எம் தமிழ் நீண்ட நாள் வாழும்" என்பதற்காக அதிசக்தி வாய்ந்த அரிய நெல்லிக்கனியை பரிசாகக்கொடுக்கின்றார். அதை உண்ட ஔவை அதிக ஆயுள் பெற்று தான் வாழும் காலம் வரையும் தமிழையும் வளர்த்தார் என்பது வரலாறு இதிலிருந்து தமிழ் மொழியின் பெருமையையும் சிறப்பையும் எம்மால் விளங்கிக்கொள்ள முடிகின்றது. தமிழை வாழவைக்க வேண்டும் தமிழ் மொழி வாழ்ந்தால் தமிழினத்தின் கலை கலாசாரம் பண்பாடு என்பன பேணப்படும். அன்றைய கால மன்னர்களும் புலவர்களும் தமிழ் மொழியை வளர்க்க அரும்பாடுபட்டிருக்கின்றார்கள் என்பதினை வரலாறுகள் பலவும் எடுத்தியம்பியுள்ளன.

இதுமட்டுமின்றி ஒவ்வொரு மனித இனமும் தனது நாட்டை தாய்மொழியை நேசிக்க வேண்டும் அவ்வாறு நேசிக்கும் சமூகத்தினால் தான் தனது சமூகவிழுமியங்கள் கலை கலாசாரப் பண்பாடுகளை காப்பாற்றிக்கொள்ள முடியும்.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவையிலும் நனி சிறந்தனவே"

மேலே கூறப்பட்ட மூத்தோர் வார்த்தைக்கு இணங்க பெற்ற தாயை முதலில் ஒவ்வொருவரும் நேசிக்க வேண்டும் இவ்வாறான ஒருவனினால் தான் தாய் நாட்டை நேசிக்க வேண்டும் இவ்வாறான ஒருவனினால் தான் தாய்நாட்டை நேசிக்கமுடியும். தாய்நாட்டை நேசிப்பவன் தான் தனது தாய்மொழியை நேசிப்பான். "பாடை ஏறினும் ஏடது கை விடேல்" நான் சாம்பலாய் போயினும் என் சாம்பலிலும் தமிழ் மணக்க வேண்டும்" என்பதெல்லாம் தமிழ்மொழிப்பற்றாளர்களின் தமிழ்ப்பற்றின் உச்சநிலையை எடுத்து இயம்புகின்றது. இந்தவகையில் தாய்மொழியாம் தமிழ்மொழியை நேசிப்பதும் வாழவைப் பதும் தமிழின் பெருமை காப்பதும் தமிழர் தம் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாம் அறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல
இனிதாவது எங்கும் காணோம்"

என்றார் புரட்சிக்கவிஞர் பாரதியார். உலகிலே பேசப்படுகின்ற அனைத்து மொழிகளிலும் இனிமையான மொழி அழகான மொழி பண்பான மொழி அன்பான மொழி செம்மையான மொழி யாக தமிழ்மொழி காணப்படுகின்றது. இம்மொழியின் சிறப்பை

"அழகேஅழகே தமிழழகே
பழகிட முகரம் எளிதழகே"

எனக்கவிஞர் சிறப்பித்து நிற்கின்றார்.

எனவே, செந்தமிழின் சிறப்பை சொல்லவும் முடியாது சொல்லிலும் அடங்காது. இதைத்தான் பாரதியார் மிக அழகாக

"செந்தமிழ் நாடென்றும் போதினிலே
இன்பத்தேன்வந்து பாயுது
காதினிலே"

என்கின்றார். தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி ஒன்று தொடக்கம் மூன்று வரையாக கொள்ளப்படுகின்ற சங்க காலத்தை எடுத்து நோக்கினால் சங்கம் இருந்து தமிழை வளர்த்ததாகவும் அரசசபையிலே புலவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டதாகவும் அங்கே இயலிசை நாடகம் என்கின்ற முத்தமிழ் வளர்க்கப்பட்டதாகவும் தமிழின் பெருமையை வரலாறு கூறிநிற்கின்றது. சங்ககாலத்திலேயே தமிழ் சிறப்பாக பேணப்பட்டுள்ளது இதன் மூலம் தமிழின் பெருமைச்சிறப்பை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளமுடியும்.

இலக்கிய வரலாற்றின் கி.பி 9-10 வரையாகக்கொள்ளப்படுகின்ற சோழர் காலத்தை நோக்குகின்ற போது

"கங்கைமுதல் கடாரம் வரை
சோழனின்
கொடி பட்டொளி வீசிப்பறந்த
காலம்"

இங்கு தமிழரின் ஆட்சிச் சிறப்பும் தமிழின் எவ்வாறான பெரும்பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்து தமிழின் பெருமையை நிலை நிறுத்தி உள்ளான்.

"மாடுகட்டிப் போரடித்தால் மாளாது
செந்நெல்லென்று
யானை கட்டிப்போரடித்த
சோழநாடு"

இங்கு குறிப்பிடப்படும் விடயம் என்னவென்றால் தமிழராட்சியின் சிறப்பு பொருளாதார வளர்ச்சியின் உச்சமான நிலை மக்களின் சந்தோசமான வாழ்க்கை முறை என்பனவெல்லாம் சிறந்த முறையில் இடம்பெற்றுள்ளது. "கஜானாக்கள் நிரம்பி வழிந்தன" என்று கூறப்படுவதிலிருந்து தமிழ் மன்னரின் ஆட்சிச் சிறப்பை ஊகித்துக் கொள்ள முடிகின்றது. "ஒரு காலத்தின் கண்ணாடி யாகக் கொள்ளப்படுவது இலக்கியங் கள்"சோழர் காலத்திலே சிறப்புக்குரிய பிள்ளைத்தமிழ், உலா போன்ற நூல்கள் எழுந்துள்ளன. அவை அனைத்தும் மன்ன னையும், மொழியையும் மக்களையும் சிறப்பித்துக் கூறுவதால் இராஜராஜ சோழன் காலத்தில் தமிழ்மொழி மிகவும் உச்ச நிலையில் இருந்துள்ளது. இதனாலேயே சோழர் காலத்தை தமிழ் இலக்கிய வரலாற்றின் பொற்காலமாக போற்றியும் உள்ளனர்.

இதுமட்டுமன்றி இலங்கையின் ஆதிக் குடிகளான இயக்கர், நாகர் எனப்படுவர்கள் சிறந்த நாகரிகம் உடைய தமிழ்குடிகளாக வாழ்ந்து இருக்கின்றார் கள். இவர் காலத்திலேயே இங்கு நாகவழி பாடுகள் இடம்பெற்று இருக்கின்றது. அதற்கு ஆதாரமாக இன்று காணப் படுகின்ற நயினை நாகபூசணி, புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், புதூர் நாகதம்பிரான் என்பவை இவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி வந்த ஆலயங்களாக இன்றும் சிறப்புடன் விளங்குகின்றன. இத்துடன் இலங்கையை ஆண்ட தமிழ் மன்னனாக இராவணன் கூறப்படுகின்றான். இராவணன் சிவனை வழிபட்டதாகவும் அதற்குரிய ஆதாரங்களாக கன்னியாய் வெந்நீர்ஊற்று கோணேஸ்வரர் ஆலயத்தில் காணப்படும் இராவணன் வெட்டு என்பன காணப்படுகின்றன. மேற்கூறப்பட்ட காரணங்களில் இருந்து வரலாற்றுக் காலம் முதல் தமிழ் மொழியும், தமிழ் இனமும் சிறப்பாக வாழ்ந்தமையை வரலாறுகள் ஆழமாகச் சொல்லி நிற்கின்றன.

"பொங்குதமிழுக்கு இன்னல் விளைந்திட்டால்
சங்கே நீசமென்று சங்கே முழங்கு"

என்றார் பாரதிதாசன். "பாடையில் படுத்துறங்கும் போதும் பைந்தமிழில் அழும் ஓசை கேட்கின்றது" என்ற வரிகள் பைந்தமிழின் பற்றை மேலே குறிப்பிட்டுள்ளது. இத்தனை பெருமையும் பெறுமதியும் கொண்ட மொழிதான் எமது தமிழ்மொழி ஆகும்.

ஆனால் இன்று இம்மொழியின் அவலநிலையை நோக்கும் போது உலகிலே அழிந்து கொண்டிருக்கின்ற நாற்பது மொழிகளில் எமது செம்மொழியாம் தமிழ்மொழியும் ஒன்றாகும். கேட்கவே நெஞ்சம் பதைபதைக்கின்றது. எம்மொழி அழிந்து விட்டால் எமக்கென்ற அடையாளம் அழிக்கப்பட்டுவிடும். தமிழினம் என்பது இல்லாமலே போய்விடும். மொழிதான் ஒரு இனத்தின் அடிநாதம், பாதுகாப்பு கவசம்.

எனவே, அனைவரும் சிறப்புக்குரிய தமிழ்மொழியின் பெருமையினை உயர்ந்து இனிவரும் காலங்களிலும் தமிழ் மொழியின் பண்புகளையும் உயர்வுகளையும் பாதுகாக்கும் பண்புமிக்க தமிழர்களாக வாழ்வோம்.

வாழ்க தமிழ்
வளர்க தமிழ்

**ஆக்கம்:** திருமதி. அற்புதராணி அரிச்சந்திரன் ஆசிரியர்
கிளி / வேரவில் இந்து மகாவித்தியாலயம்

# The New year

The sinhalese and the hindus celebrate the New year. The new year is generally on the 13 th or 14 th of April. The New year is a national Festival. The sinhalese and the hindus celebrate it in different ways.

The new year Festival has very special customs. on this day sinhalese light the hearth at an auspicious time .They also take their new year meal at an auspicious time. This is a very special day to sinhalese and hindus . The sinhala and hindu new year has a special Food. It is milk rice. people make a tradition sweets for the new year some of them are kewum, kokis, athiraha. and asmee. Bananas are must on the new year table.

**R.Robertsana**
**Grade - 06**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் பண்பாட்டுக் கல்வியின் அவசியம்

"புலனுணர்வின் இன்பமே எல்லை என்றவாறு நியமங்கள், விழுமியங்களைத் தொலைக்கும் சமூகங்கள் நெருக்கடிக்குள் துயரப்படுகின்றன"

-பிற்றிறிம் சொரக்கின் -

பண்பாடு என்ற பதமானது 1937 இல் D.K சிதம்பரநாத முதலியாரால் அறிமுகம் செய்யப்பட்ட போதிலும் தொன்மைமிக்க நூலாகக் கருதப்படும் திருக்குறளில் பண்பாடு என்ற சொல்லுக் குப் பதிலாக சால்பு, சான்றாண்மை போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். Cult என்ற கிரேக்க வினையடியிலிருந்து Culture என்ற சொல்லானது தோற்றம் பெற்றிருந்தது. எவ்வாறு விவசாயத்திற்காக மண்ணைப் பதப்படுத்துவது ஆங்கிலத்தில் Agriculture என அழைக்கப்பட்டதோ அதேபோன்று வாழ்வியலுக்காக மனத்தினைப் பண்படுத்தல் பண்பாடு என்ற விளக்கத்தை D.K சிதம்பரநாத முதலியார் வழங்கி யிருந்தார்.

பொதுவாகப் பண்பாடு, நாகரிகம் என்ற இரு பதங்களும் ஒரே கருத்தைத் தருவது போல காணப்பட்டாலும், அவை கருத்தின் அடிப்படையில் வேறுபட்ட சொல்லாகவே அமைகின்றது. நாகரிகம் புறவாழ்க்கையை வெளிக்காட்ட பண்பாடு அக வாழ்க் கையை வெளிப்படுத்துகின்றது. இந்நிலையில் இன்றைய தமிழ் மாணவர் சமூகமானது பண்பாடு எது? நாகரிகம் எது என்பதை விளங்கிக் கொள்ளாது கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலையில் காணப்படுவது கவலைய ளிக்கும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

*இனத்தின் கூறுகளாகக் காணப்படும் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலான வையும், மனிதர்கள் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதிகள் அனைத்தும் பண்பாடுகளாக அமையும் என T.B டைலர் குறிப்பிடுகின்றார்.*

*இந்தவகையில் இலங்கையில் தேசிய இனமாக விளங்கும் தமிழ் மாணவர்கள் தமது இனத்தின் மொழி, பண்பாடு, பழக்க வழக்கம், விழுமியங்கள், மரபுகள், கலைகள், உணவுப் பழக்க வழக்கங்கள் மற்றும் ஏனைய பண்பாட்டு அம்சங்களை தெரிந்து கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. எனினும் இன்றைய கல்வி முறையானது பண்பாடு தொடர் பான அம்சங்களுக்கு முக்கியம் வழங்க வில்லை என்றே கூறலாம்.*

*ஆசிரியர்களும் பாடத்திட்டத்தினை பூர்த்தியாக்கும் நோக்கில் பாடநூலில் குறிப்பிடப்பட்ட பகுதிகளையே கற்பிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதன் காரணமாக எமது இனத்தின் பண்பாட்டம்சங்களை மாணவர்கள் அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அரிதாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக தமிழர்களின் பண்பாட்டு அம்சங்கள் பற்றியதான விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஊட்ட வேண்டிய கடமை ஆசிரியர்களையே சார்ந்ததாகும்.*

*தமிழர்களின் பண்பாட்டு அம்சங்களும், வரலாறும் இன்று மறைக்கப்பட்டும், மறக்கப்பட்டும் வரும் நிலையில் அவற்றை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணப்படுத்த வேண்டியவர்களான இளைய தலைமுறையினரான மாணவர் கள் விளங்குகின்றனர். சொரக்கின் அவர்கள் ஒரு சமூகப் பண்பாட்டுத் தொகுதியில் நிகழும் மாற்றமானது அதன் உள்ளார்ந்த காரணிகளாலேயே நிகழ்கின்றன. புறக்காரணிகள் அதனை துரிதப்படுத்துகின்றன அல்லது பின்னோக்குகின்றது என்ற கருத்தின் அடிப்படையில் தமிழரின் பண்பாட்டு அம்சங்கள் பல்வேறு புறக்காரணிகளால் பின்னோக்கிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. இவற்றைக் காப்பதற்கு ஏதுவான கல்வியை மாணவர்களுக்கு ஊட்டுவதன் மூலம் சமூகம் நெருக் கடிக்குள் துயரப்படுவதைத் தவிர்க்க முடியும் .

இன்று கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினால்(?) ஆசிரியர்களின் உத்தரவுகளை செவிசாய்க்காத அல்லது கட்டுப்படாத மனப்போக்கு பாடசாலை மாணவர்களிடம் காணப்படுகின்றது. எம்மை யார் கட்டுப்படுத்த முடியும் அல்லது தண்டிக்க முடியும் என்ற நிலையில் தமிழ் மாணவர் சமூகமானது பண்பாடற்ற சமூகமாக செல்வதற்கு புறக்காரணிகள் துணைசெய்கின்றன. அதிகரித்த தொலைத் தொடர்பு சாதனப் பாவனை, மதுபாவனை, புகைத்தல் பொருட்கள் மாணவர்களுக்கு கவர்ச்சியூட்டும் வகையில் விற்பனை செய்யப்பட்டு வருவதும், பொது இடங்களில் நிகழ்த்தப்படும் பொது நிகழ்வுகளில் மாணவர்களைக் கவரும் வகையில் மதுபாவனை, போதைப் பொருட்கள் சில தரப்பினரால் ஊக்கு விக்கப்படுவது மாணவர்களினதும், தமிழர்களினதும் எமது பண்பாட்டுக் கோலங்கள் சிதைவடைய காரணமா கின்றது.

ஒரு இனத்தின் மொழி, பண்பாட்டு அம்சங்கள் அழிக்கப்படும் போது அச் சமூகத்தின் இருப்பு கேள்விக்குறியாகும். இந்நிலையில் தமிழர் சமூகத்தில் காணப்படும் பண்பாட்டு அம்சங்களை ஆசிரியர்கள் உரிய நேரத்தில் மாணவர்களுக்கு கற்றுத் தர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

எனவே, பாடசாலைகளில் பண்பாட்டுக் கல்வி தொடர்பான சிந்தனைகளை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுவதற்கு கீழ்வரும் வழிவகைகளைக் கையாள முடியும்.

1. காலைப் பிரார்த்தனை
2. பாட விடயங்களோடு தொடர்பு படும் வகையில் கூறுதல்.
3. கலை வடிவங்களுடாகக் கூறுதல்.
4. பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
5. பண்பாட்டு அம்சங்களைப் பேணு வதற்கு வழி வகை செய்தல் போன்ற வற்றைக் குறிப்பிடலாம்.

அழிந்து வரும் தமிழர் பண்பாட்டு அம்சங்களில் பொருள் சார் பண்பாட்டம்சங்கள் சார்ந்த சில விடயங்கள் வருமாறு இவை பற்றி இன்றைய தலைமுறை மாணவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

- சுமைதாங்கி
- ஆவுரஞ்சிக்கல்
- தெருமூடிமண்டபம்
- கல்வெட்டுக்கள்
- நாணயங்கள்
- பழைய பொருட்கள் போன்றவை

சிறிய உதாரணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமைதாங்கி

தமிழர்களின் பண்பாட்டம்சங்களில் ஒன்றாக சுமை தாங்கி விளங்குகின்றது. இது மக்கள் பயன்படுத்தும் தெருவோரங்களில் அமைக்கப்பட்டு இருந்தது. தூர தேசத்திலிருந்து சுமைகளைச் சுமந்து கால்நடையாக வருபவர்கள் இளைப்பாறி,



தாகம் தீர்த்துச் செல்ல இவை உதவுகின்றது. இச் சுமை தாங்கிகள் அமைக்கப்படும் இடத்திற்கு அருகில் மண்டபங்களோ அல்லது பொதுக் கிணறோ காணப்படும். இவற்றில் சுமைகளை வேறு ஒருவரின் உதவியின்றி இறக்கி வைத்து விட்டு அவற்றை உதவியின்றி மீண்டும் எடுத்துச் செல்ல உதவுகின்றது. சுமைதாங்கி ஏறத்தாழ நாலரை அடி உயரமும் ஒன்றரை - இரண்டு அடி தடிப்புக் கொண்ட சுவர்க் கட்டுமானம் போன்று காணப்படும். இது மூன்று வெவ்வேறு மட்டங்களைக் கொண்டதாகக் காணப்படும்.

யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட ஒருசில சுமைதாங்கிகள் வீதி அகலிப்பு பணிகளால் அழிக்கப்பட்டுள்ளது. சில கவனிப்பாரற்று இருப்பதையும் காணமுடிகின்றது. இவ்வாறு பண்பாட்டு அம்சங்கள் பற்றியதான அறிவை மாணவர்களுக்கு வழங்குதல் ஆசிரியர்களின் கடமையாகின்றது.

எனவே,இலங்கை வாழ் தமிழர்களினால் பேணப்பட்டு வந்த கலை, பண்பாட்டு அம்சங்களை இயன்றவரையில் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் ஊட்டுவதன் மூலம் மூத்த தமிழினத்தின் தொன்மையும், அறிவாற்றலையும், பண்பாட்டையும் எமது எதிர்கால சந்ததியினர் அறிந்து சிறந்த தமிழ்பண்பாட்டையும், தமிழ் மரபுகளையும் பேணும் ஒரு சமூகமாக மாற்றி எமது இனத்தின் துயரத்தினை தவிர்த்துக் கொள்ள முடியும்.


**ஆக்கம்:**
**திரு. சி. ஆறுமுகதாசன்**
**ஆசிரியர்**
**கிளி / வேரவில் இந்து**
**மகாவித்தியாலயம்.**



உசாத்துணை

1. சமூகவியல் கோட்பாடுகள் - கலாநிதி. நா. சண்முகலிங்கன்.
2. *யாழ் இணையம்*
3. *யாழ்ப்பாணம் - இணையம்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம்:- ய.பௌஸ்ரீனா
உயர்தர மாணவி
கிளி / வேரவில் இ.ம.வி



# பள்ளியே அவள் குடும்பக் கோவிலாக.....

"கலா ...... கலா..... பள்ளிக்கூடம் சென்ற கணவன் மீண்டும் வந்து தன் மனைவியைக் கூப்பிடுகிறார். மனைவியும் என்னமோ ஏதோ என எண்ணித் திகைத்து ஓடி வந்தாள் "என்னாங்க......? கவிதாக்குட்டி எங்கயம்மா இண்டைக்கு முதலாம் வகுப்பு பிள்ளைகளை சேர்க்கிறதாம். அவளை சீக்கிரமாக வெளிக்கிடுத்து முதல்ல பதிய வேணும். ம் வேகமா....." "சரிங்க"என்று வீட்டின் பின்புறம் தன் நண்பிகளுடன் கடைக்கட்டி விளையாடிக் கொண்டிருந்த கவிதாவை அழைத்துக்குளிப்பாட்டிப் புதுக் கலர்ச்சட்டை அணிவித்து தன் கணவரின் சைக்கிளில் ஏற்றி முத்தமிட்டு அனுப்பி வைத்தாள். தன் மூத்த மகளின் பள்ளி வாழ்க்கைக்கு அத்திவார நாள் அன்று "கடவுளே இவள் நல்லாப் படிச்சுப் பெரிய ஆளாய் வரவேணும்"என்று மனதுள் வேண்டி மீண்டும் தன் கடமைகளைத் தொடர வீட்டினுள் நுழைகின்றாள் கலா.....

முதல் நாள் வெள்ளைச் சட்டை தைக்கவில்லை என்பதால் புதிதான கலர்ச்சட்டை, காலுக்கு சிவப்பும் கறுப்பும் சேர்ந்த சன்றில் சிறுவயதிலே வெட்டாமல் வளர்த்த இரட்டைப்பின்னல் முடி, ஒரேயொரு கொப்பி , பென்சில், அழிறப்பர், நெத்தியில் பெரிய கறுப்புப் பொட்டு , நேசறிப்பள்ளிக் கூடத்திலே அப்பா வாங்கிக் கொடுத்த நீல நிறத் தண்ணீர்ப் போத்தல் இவைகள் தான் பள்ளி தொடங்க முதல் நாள் தோரணைகள்.

சைக்கிளின் முன் அமர்ந்தவாறு தன் தந்தையிடம் கதை கேட்டுப் பள்ளிக்கூட வாசலை அடைகிறாள்.

பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் கதிரையில் அமரவிடப் பட்டிருந்தார்கள். சில தன்னைப் போன்ற பிள்ளைகள் கதிரைகளை இழுப்பதுவும் விழுத்துவதுமாக விளையாடிக் கொண்டிருந்த னர். கவிதாவுக்கு அளவில்லா ஆனந்தம் துள்ளிக்குதித்து ஓடி அவர்களுடன் சேர்ந்து கொண்டாள். அவளது துடிதுடிப்பும் உற்சாகமும் முதல் நாளே அங்கு வந்திருந்த வர்களை ஈர்த்தது. பெற்றோர்களை அதிபர் அலுவலகம் அழைத்தார். பதிவுகள் நடந்தேறி முதலாம் வகுப்புப் பிள்ளைகள் தமக்குரிய வகுப்பிற்கு அனுப்பப்பட்டனர் . சில பிள்ளைகள் தம் பெற்றோரை விட்டு விலகமுடியாது கதறி அழுதனர். நாட்கள் பல கடந்தன.

சீருடைகள் வழங்கப்பட்டு அனைவருக்கும் வெள்ளைச் சட்டை சேட், நீலக்காட்சட்டை , பள்ளிக்கே உரிய காலணிகள் புத்தகப்பை என அவர்களது நிலைமாற்றப்பட்டது. அப்பள்ளி யின் முதல் வகுப்பிலிருந்து உயர்தரம் வரையும் கவிதாவுக்கு நண்பர் கூட்டம் பெருகியது. துடிதுடிப்பான நடை புன்னகை கலந்த பேச்சு, அப்பள்ளி வளாகத்தையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவள் பக்கம் ஈர்த்திருந்தது.

ஆண்டுகள் பல கடந்தன .இவளது திறமைகள் அனுபவங்கள், சாதனைகள் , கடமைகள் என்பன இவளை ஏனையோரிடமிருந்து மதிப்பைப் பெற்றுக்கொடுத்தன. ஆண்டுகளின் கடப்பில் யுத்தமேகம் சூழ்ந்து கொண்டது. இடப்பெயர்வுகள் தொடர்ந்தன. யுத்தமோ , இடப்பெயர்வுகளோ இவளது வாழ்க்கையையோ வாழ்வின் அம்சங்களையோ பாதித்து விடவில்லை. இவள் எதிலும் ஓய்ந்து விடவில்லை. எங்கு சென்றாலும் இவளது உற்சாகம், புன்னகை கலந்த பேச்சுத்திறன் இவளை ஈர்க்க வைத்தது. இடம்பெயர்ந்து செல்லும் ஒவ்வோர் பள்ளிகளிலும் இவள் தன் பள்ளியைப் பெருமைப்படுத்தக் கூடியவாறு நடந்து கொள்வாள். இவ்வாறே அகதிமுகாமொன்றில் தன்குடும்பத்துடன் சேர்க்கப்பட்டாள். தன் மகளின் கல்வி வாழ்வு பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக வெளிப்பாடசாலை ஒன்றில் படிக்க அனுமதிக்கப்பட்டாள். அக் காலகட்டம் மீள்குடியேற்றம் இடம்பெற்றது.

O/L பரீட்சை எழுதுவதற்காக மீண்டும் அவள்தன் பள்ளிக்கு அனுப்பப்பட்டாள் பரீட்சை இடம்பெற்றது. O/L பெறுபேறுகள் வெளியாகின.

எல்லாப் பாடங்களிலும் சித்தி, சித்தி அடைந்து விட்டாள் என்பதை விட பெருமகிழ்ச்சி பேரானந்தம். தான் முதலாம் வகுப்பில் துள்ளிக்குதித்து ஓடிய அதேபள்ளியில் மீண்டும் தன் உயர்தரத்தை கற்கப்போவது தான் படிப்பைத் தொடர்ந்தாள். பரீட்சைக்காலம் நெருங்கியது. வேதனை சோர்வு இவை பரீட்சை பற்றியது அல்ல தன் உயிராக நேசித்த பள்ளித்தாயைப் பிரிந்து செல்வது பற்றியது. ஒரு நேரமும் அதனை அவள் பள்ளியாக எண்ணியதில்லை . அவளது குடும்பம் தான் அந்தப் பள்ளி இல்லம் அதிபர் அவளுக்கு அம்மா, ஆசிரியர்கள் மாமா, மாமி, அண்ணா, அக்கா என்பதே அவளது வட்டம், மாணவர்கள் எல்லோருமே அவளது சகோதரர்கள். வேறுபாடு எதுவும் அறியாதது அவள் மனது. பிறரைப் புரிந்து பகிர்ந்து பிறருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் அழகான பட்டாம் பூச்சியாய் அப்பள்ளிச் சூழலில் சிறகடித்துப் பறந்தாள்.

தன் வேலைகளை வீட்டுவேலைகள் போன்று தன்னுடையவை எனக்கருதி செம்மையாய் ஆற்றினாள். எத்தனையோ இடையூறுகள் தாக்கினாலும் அவள் பொருட்படுத்தவில்லை. துவண்டு விழவும் இல்லை.

குடும்பம் ஒரு குட்டிக்கோயில். கோயிலினையே அவள் குடும்பமாய் எண்ணினாள். தன் உயிர்ப்பள்ளி, தாய் உறவினர், சகோதரர்கள் என எண்ணி மகிழ்ந்த காலம் கழியப்போகிறதே என வருந்தியழுதாள் பரீட்சைகள் ஆரம்பமாகி முடிவுற்றன. பெறுபேறுகள் வெளிவந்தன . கவிதாவுக்கு கல்லூரி கிடைத்தது. நான்கு வருட கல்லூரி வாழ்க்கை நிறைவுற்றன. மீண்டும் தன் குடும்பப்பள்ளியில் ஆசிரியராக ..... இவளுக்கு மட்டும் கடவுள் அள்ளிக்கொடுக்கிறார். என்ர பிள்ளைக்கு ச்சீ.... என்று ஊரவரின் பொறாமை நிறைந்த பேச்சு ... எதனையும் இவள் பொருட்படுத்தவில்லை. முதல் நாள் தன் கடந்த கால பள்ளி வாழ்க்கை பட்டாம் பூச்சியாய் துள்ளித்திரிந்த பள்ளித் தரை வகுப்பறைகள் , தாய், உறவினர் வரிசை, சகோதரர்கள் இவற்றை எண்ணி மகிழ்ந்தவாறு பள்ளி வாசலில் காலெடுத்து வைக்கிறாள் ஆசிரியராக , ஆனால்... அன்று இருந்த அம்மா (அதிபர்) உறவினர், ஆசிரியர் சகோதரர் சிலர் (மாணவர்கள்) இன்றில்லை மனதில் சங்கடம், ம் ம்..... மனதின் ஓரத்தில் இருத்தி பூஜித்துக் கொண்டே அலுவலகம் சென்று ஆசிரியர் கையொப்பக் கொப்பியை எடுத்துக் கையொப்பமிடுகிறாள். கண்ணிலிருந்து வழிந்து வந்த கண்ணீர்த்துளி கொப்பித்தாளை நனைத்தது. சேலைத்தலைப்பால் துடைத்துக் கொண்டு தன் வகுப்பறை நோக்கி துள்ளி ஓடித்திரிந்து மகிழ்ந்து விளையாடிய நினைவுகளுடன் நடக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. ஆன்குயின்ரீனா
ஆசிரியர்
கிளி / வேரவில் இந்து மகாவித்தியாலயம்.

# Advantages of learning English

English is an international language which is one of the most widely spoken language. most of the people in every part of the world use it It is a very useful language and it is very difficult to live without English knowledge in the current world . wher ever we go what ever we do in everything in every actions English acting as a main role.

If we can speak English and understand this language you will get many advantages.

- You can go to around the world without being afraid.
- You can get a lot of information from the internet easily
- Directions board in every country are written in English. so if we understand English we will get easy to read the directions board and can find the places easily.
- Now most of the courses are conduct in English language. so if we know the english we can follow the courses and we can improve our knowledge well.
- also we can get a jobs easily and quickly with the knowledge of English.
- It gives confidence and smart to us
- We can be a best people in the world
- Easy to enter university or college of education.
- We can get friends all over the world
- We can watch the movies not only in our Language but also in english language too
- You Can listen to the English songs happily
- Easy to Fill the application forms, Bank Forms
- easy to read the english magazines , poems, and newspaper etc.
- easy to handle the computer machine
- Easy to read multi country library books.
- We can Face the examination for the student's visa essily and quickly.
- We can create or publish books or magazine in the English language.
- We can teach English For our Future generation

So as a teacher I request all the students to learn english eagarly and happily Without any hesitation.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகமுத்து பன்னீர்ச்செல்வம்,
வைத்திய அதிகாரி,
வேரவில்.

# ஆசிரியர்கள்..!

முதன் முதல் ஒரு மாணவனை ஆசிகூறி வழி அனுப்புபவர் ஆசிரியர் தான். அறிவின் அடிப்படை அத்தி வாரமே ஆசிரியர்கள் தான். புதிய உலகை உருவாக்கும் புதிய பயணத்தின் வழிகாட்டிகள் புத்துயிர் கொடுத்து பூமித்தாயின் புத்திரர் களாம் மாணவ மாணிக்கங்களை செதுக்கும் சிற்பிகள் ஜீவநதிகள் பல உயர்ந்த கட்டிடங்களை உயரவைத்த பெருமைக்குரிய வர்கள். சிரிக்க வைத்து சிந்திக்க வைத்து பேரறிவைக் கொடுத்து பெருமைக்குரிய சிறப்புக்களை தந்தவர்கள் தங்கள் வாழ்க்கை யையும் வரலாற்றையும் முகாரிகளாக்கி வந்தோரை கரை சேர்க்கும் ஓடம்போல் தான் மட்டும் கரையோரம் கிடக்கும் ஓடம். எல்லோரையும் மேல் ஏற்றும் ஏணிதான் மட்டும் தரையினில் கிடக்கும் ஏணிபோல மெழுகுவர்த்தியாய் வெளிச்சம் கொடுத்து விட்டு உருகிப்போகும் தியாகிகளாகவும் எங்கள் வாழ்க்கைப் பயணத்தில் பல ஆசிரியர்களைச் சந்தித்து இருக்கின்றோம்.

கண்ணியமாக கௌரவமாக நடத்த வேண்டிய இறைவன் பூமிக்குத்தந்த சிறப்பும் படைப்பு ஆசிரியர்கள் என்றால் இது மிகைப்படுத்தப்பட்ட சொல் அல்ல. இளமையின் இன்பம் கமழ பக்கங்கள் திறந்து மூடித்தான் ஆகவேண்டும். அதற்குள் இந்த அரிய சந்தர்ப்பத்தை எவனொருவன் சரியாக பயன்படுத்துகின்றானோ அவனே வாழ்வின் நற்பெயர் பெற்றவன். ஓர் ஆசிரியனின் கூற்று அன்பு மாணவனே! நீ அறிவோடு பிழைத்துக்கொள் "காலைப் பொழுது ஒளிர்ந்து கொண்டிருக்கும் போதே சிந்திக் கிடக்கும் மலர்களை பொறுக்கிக் கொள்" "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் பருவத்தில் பயிர்செய்து கொள்" இளமையில் கற்றுக்கொள் சென்ற ஒவ்வொரு வினாடியும் திரும்பி வராது. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"

தெரிந்து கொள் உண்மையில் அடுத்த சந்ததியின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு மடமை இருளை நீக்கி கல்வி என்னும் புத்துயிரை கொடுத்து புதுமை மிகு வரலாற்றுக் கனவுகளை கொடுக்கின்ற அத்திவாரக் கற்கள், ஆணிவேர்கள் ஆசிரியப் பெருந்தகைகள்....

ஓர் ஆசிரியர் ஒருவரின் சிறப்பான கடமையை பொறுத்தவரையில் ஒழுக்கத்தை யும் பண்பாட்டையும் உயர்ந்த குணங்களை யும் போதித்து மாணவ மாணவிகளை நாட்டின் நற்பிரஜைகளாக உருவாக்கும் கடப்பாடுகளை கொண்டவர்கள். எனவேதான் குருவை மதித்தல், கௌரவித்தல் குரு தட்சணை வழங்குதல் போன்றவை எமது பண்பாட்டின் உயர்ந்த குணாம்சங்களாக மதித்துப் போற்றப்படுகின்றன.

இளைஞர்களுக்கு கல்வி அளிக்கப்படாது விடின் பேரரசுகள் கூட நீடித்து நிலைத்து நிற்காது இது அரிஸ்ரோட்டில் கூறும் பெரும் தத்துவம் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஜேமன் கார்பில்ட் தன்னுடைய நாட்டு மக்களுக்கு எழுதிய மடலில் சுதந்திரத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிக்கும் அடுத்தபடியான முக்கியத்துவம் பொது மக்களுக்கு கல்வியறிவூட்டுவதற்கு அளிக்கப்பட வேண்டும். இன்றேல் சுதந்திரமோ நீதியோ நிலைத்திருக்க முடியாது இது ஆணித்தரமான உண்மை. மனிதர்களுக்கு சிறைக்கூடங்கள் கட்டுவதை விட மாணவர்களுக்கு கல்விக்கூடங்கள் கட்டுவது எவ்வளவு சிறந்தது. கோடிக்கணக் கான இளைஞர்களை கொல்வதற்கு பாதுகாப்பு என்ற பெயரிலே அணுகுண்டுகளையும் ஆயுதங்களையும் உற்பத்தி செய்வதற்கு கோடிக்கணக்கான டொலர்களை உலக நாடுகள் விரயமாக்குகின்றன.

பசியை நீக்கி பஞ்சத்தைப் போக்கி நோயில் இருந்து விடுதலையாக்கி கல்விக்கு செலவு செய்யும் காலம் வருமோ? இல்லை அது தூரத்து கனவுகளாக மாறுமா? உலகில் எத்தனையோ புதிய விடயங்கள் கண்டு பிடிக்கப்பட்டாலும் மனிதனுடைய கண்டு பிடிப்புகளுள் எல்லாம் சிறந்தது எது என்றால் எல்லோரும் கல்வி பெறக்கூடிய பாடசாலைகளை உருவாக்கியது தான் நிச்சயமாக பாடசாலைகளை அரசாங்கம் ஏற்படுத்தி போதிக்க முன் வரவில்லை. எனில் உலகம் இன்று அதிநவீன உலகமாக வளர்ச்சியடைதிருக்க மாட்டாது. இவைகள் காலத்தால் அழியாத கருத்துக்கள், இதன் சொந்தக்காரர் தோமஸ் பேன் என்பவராவர்.

சில மாணவர்கள் சில நேரங்களில் கேட்கின்ற வித்தியாசமான கேள்வி பாடசாலைக்குச் செல்லாமல் ஆசிரியர் இல்லாமல் சாதனை படைத்து சரித்திரம் படைத்த பல மேதைகள் இருக்கும் போது நாங்கள் மட்டும் ஏன் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். குறைந்த சதவீதத்தினரே விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே சாதனை படைத்து சரித்திரம் படைத்த மேதைகள். 20வருட அனுபவங்களில் கற்கின்ற கல்வியை விட இரண்டு வருடங்களில் பாடசாலையில் கல்வியை கற்றுக்கொள்ள முடியும்.

பாடசாலைக் கல்வியானது நன்கு திட்டமிடப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு இருக்கின்றன. எல்லா மேதைகளின் அறிவும் ஆற்றலும் அனுபவங்களும் ஒன்று படுத்தப்பட்டு இருக்கின்றன. பாடசாலைக் கல்வியானது மாணவர்களுக்கு பசுமை நிறைந்த நினைவுகளாக பரிணமிக்கின்றன. சமத்துவமும் சகோதரத்துவமும் ஏற்பட நிறைய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

அத்தோடு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இலகுவில் தெரிந்துகொள்ள வேண்டிய புரிந்துகொள்ள வேண்டிய உபகரணங்கள், ஆய்வுகூடங்கள் காணப்படுகின்றன. மாற்றமடையும் உலகிற்கு ஏற்றவாறு பெருக்கமடையும் சனத்தொகைக்கு ஏற்ற வாறு அதிகமான மேதைகளும் விஞ்ஞானிகளும் ஆசிரியர்களும் தொழில் நுட்பவியலாளர்களும், கணக்காளர்களும் மனித இனத்திற்கு தேவைப்படுகின்றனர். இவை எல்லாவற்றையும் பூர்த்தி செய்ய கல்வியே சிறந்தது. அவை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

"எப்பொருள் எத்தன்மையாகிலும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" இத்தகையதொரு நிலை பாமர மக்களிடம் காணப்படுவதில்லை . உணர்ச்சிகளுக்கு இடங்கொடுக்கும் சந்தர்ப்பங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. அறிவுக்கு வேலை கொடுப்பவர்கள் அல்ல அதனால் தான் அரசியல் வாதிகளும் மொழிவாதிகளும் மதவாதிகளும் இனவாதிகளும் பாமரமக் களை தங்களின் வழிக்கு இலகுவாக திருப்பிக் கொள்கின்றனர். இதனால் தான் இரண்டாம் உலகப்போரில் கோடிக்கணக் கான மக்களை மரணக்குழியில் தள்ளினர். கிட்லர் பாமரமக்களை தலைகள் இல்லாத செம்மறி ஆடுகளாக கருதினான். பெரிய பொய்யை சிறிய பொய்யாக சொல்லி நம்பவைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏந்தப் பொய்யையும் மிக அழுத்தமாக நூறுதரம் கூற அது உண்மையாகும் எனக் கூறினான். உலகிலே ஒருவன் வெறுக்கத்தக்க ஒன்று இருக்குமாயின் அது அறியாமை என்னும் மடமை இருள் ஒன்று தான் இது வில்லியம் சேக்ஸ்பியரின் அறிவுக்களஞ்சியத்தில் இருந்து வெளியே வந்தவை. அறியாமையைத் தவிர வேறொரு அடிமைத்தனமும் இந்த உலகில் இல்லை என அறிஞர்கள் சான்று பகர்ந்தனர். கல்வியறிவைப் பெறாதிருப்பதை விட பிறக்காமலே இருப்பது சாலச்சிறந்தது. அறியாமையே துன்பத்தின் ஆணிவேராகும். மூட நம்பிக்கைகள், மூடக் கொள்கைகள் ஆகியவற்றின் நஞ்சு வித்தாகவும் உள்ளதாக அறிஞர் பிளேட்டோ கூறுகின்றார். கல்வி விளக்கை ஏந்தியவன் விண்ணை நோக்கி சிறகடித்தல்லவா பறக்கின்றான். அவ்வாறு செய்யாதவன் அறியாமைச் சிறையில் கிடந்து அவதிப்படுகின்றான். இதனால் இவனுக்கோ பிறருக்கோ எந்த வித நன்மையும் கிடைக்காது. எனவே தான் பேகன் என்னும் அறிஞர் அறிவே ஆற்றல் என்று கூறினார். இதைத்தான் கலைமான் என்னும் தீர்க்கதரிசி அறிவுள்ளவன் வலுவுள்ளவன் என்று கூறினார்.

" பிச்சை புகினும் கற்கை நன்று" என்று நமது முன்னோர்கள் கூறினார்கள் இறைவன் நமக்கு அளித்தது. இயற்கை வழியாகும், அவ்வழியில் செல்வதே மானிடரான நமது கடமை. அவ்வழியை நாம் தெரிவு செய்ய உதவுவது தான் கல்வி கடினமான விடயங்களை இலகுவாக செய்யக்கூடியவனே ஆசிரியன். நீங்கள் எவ்வளவு தான் உயர்ந்த செய்திகளை தகவல்களை, விடயங்களை மாணவர் களுக்கு கற்பிப்பதாக இருந்தாலும் அதை இலகுவானதாகும் இனிமையானதாகவும் எடுத்துரைக்கும் போதுதான் மாணவர்கள் வெறுப்பின்றி கற்றுக்கொள்வர். வன்முறை மூலமும், அதட்டலினாலும், கடுமையாகவும், தண்டனையாலும் கல்வியைப் போதிப்பது சாத்தியமற்ற ஒன்றாகவே கருதப்படுகின்றது. மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைவதற்கும் தோல்வியடைவதற்கும் ஆசிரியர்களும் ஓரளவு பொறுப்பாளிகள் தான். ஒழுக்கம், பண்பாட்டு உருவாக்கம் கீழ்மட்டத்தில் காணப்படுவதற்கும் ஓரளவு ஆசிரியர்களும் பொறுப்பாளிகள் தான் மாணவன் ஒருவன் மற்றொரு மாணவனின் கையை முறித்து விட்டான். ஒடித்த மாணவனை ஆசிரியர் தனியாக அழைத்துச் சென்று நீ எத்தனை ஆண்டு காலமாக இந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்றாய் என வினாவினார். மாணவன் ஐந்து வருடங்கள் என்று கூறினான். தலைமை ஆசிரியர் அவனை வேறொன்றும் செய்யவில்லை ஐந்து வருடங்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்றும் ஒழுக்கம் பெறவில்லையென்றால் அதன் பொறுப்பு என்னையே சாரும். சாத்தப்பட்டிருந்த பிரம்பை எடுத்து உன்னால் இயன்றவரை ஓங்கி அடி என்று கூறினார். உடனே ஆசிரியரின் கால்களில் விழுந்து இனிமேல் இவ்வாறான தவறைச் செய்யமாட்டேன் என அம்மாணவன் தேம்பித் தேம்பி அழுதான். அத்தினத்திலிருந்து அவன் வாழ்விலே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.

இது ஒரு ஆசிரியருக்கும் மாணவர்க்கும் சிறந்த முன்னுதாரணம் எனவே என் அன்புக்குரிய மாணவர்களே உங்கள் ஆசிரியர்களை அன்போடு நேசியுங்கள் கௌரவியுங்கள் துரோணரிடம் ஏகலைவன் குருபக்தியுடன் தனது வலக்கை பெருவிரலை காணிக்கையாகக் கொடுத்தான். நீங்கள் உங்கள் உறுப்புக்கள் எதனையும் கொடுக்குமாறு கூறவில்லை. ஆசிரியரை மதிப்பவன் கௌரவப்படுத்துபவன் சிறந்த மாணவனுடைய பண்பாடு என்பதைப் புரிந்து கொண்டு நம்பிக்கையுடனும் நல்லொழுக்கத் துடனும் வாழும் இலட்சியங்களாக உங்கள் இலக்குகளை தெரிவு செய்யுங்கள்.

" கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் – 01 மாணவர்கள்



அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் – 02 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் 03 மாணவர்கள்



அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் 04 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் 05 மாணவர்கள்



அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் 06 மாணவர்கள்



அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் 07 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் 08 மாணவர்கள்


அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் 09 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் 10 மாணவர்கள்


அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் 11 -A மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் 11-B மாணவர்கள்



அதிபர், வகுப்பாசிரியருடன் தரம் 12 கலைப்பிரிவு மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், வகுப்பாசிரியருடன்
தரம் 13 கலைப்பிரிவு மாணவர்கள்



பாடசாலை மாணவத் தலைவர்கள் – 2014



பழைய மாணவர் சங்கம் – 2014



வலைப்பந்தாட்ட அணி – 17 வயது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வில் இசை

இசையால் அசையா உள்ளமேது? என்பது பொதுமொழி "இசை" என்பதன் பொருள் "இசையவைப்பது" என்பதாகும். மனிதனை மட்டுமன்றி ஏனைய உயிரினங்கள் ஏன் இறைவனைக் கூட இவ்விசையானது இசைய வைத்துவிடுகின்றது. ஆங்கிலத்தில் இசையானது Musicஎன அழைக்கப்படுகின்றது. Music என்ற சொல்லானது Mousa என்ற கிரேக்க சொல்லிலிருந்து வந்தது. அதாவது Muses என்ற கிரேக்க தேவதைகள் விரும்பிய கலை பிற்காலத்தில் Music என அழைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.


இசையானது வரையறை செய்யப் பட்ட ஒரு இனிமையான ஒலியாகும். ஆயகலைகள் அறுபத்து நான்கில் சங்கீதமும், நடனமும் மேன்மைமிகுந்த கலைகளாகத் திகழ்கின்றன. இக்கலைகள் நிகழும் போதே இசைப்போர்க்கும் கேட்போருக்கும் இன்பம் பயக்கக் கூடிய பெருமை வாய்ந்தவை.

இசையானது மனிதனது வாழ்வில் பிறப்பு தொட்டு இறப்பு ஈறாக வேரூன்றியிருக்கின்றது. பிறந்த குழந்தை இனிய தால் இசையில் மயங்கித் தன் அழுகை நிறுத்தி ஆனந்தமாய்த் தூங்கிவிடுகின்றது. அதுமட்டுமன்றி இராப்பொழுதினிலே தூக்கமின்றி நடுநிசி வரை அல்லற்படு வோர் ஒலிநாடாக்கள் வாயிலாக இன்னிசை கேட்டு நல்லுறக்கம் கொள்கின்றனர். இதைவிட அன்றாடம் குரலிசைப் பயிற்சி செய்வதனூடாக குறட்டை விடும் பழக்கத்தைக் கூட நீக்கி விட முடியுமென டாக்டர் எலிசபெத் ஸ்கொட் கூறுகின்றார்.

முதுமைக்காலத்தில் நினைவாற்றலை இழப்போர் இசையின் பயனாய் நினைவாற்றல் பெறுவர் என்பது ஆய்வு கூறும் உண்மை. மாணவ மாணவியர்கள் பாட்டின் மூலம் பல அரிய பெரிய கருத்துக்களையும் கற்றுக் கொள்கின்றனர். இசை பயிலும் மாணவர்களிடத்தே அன்பு, அடக்கம், பக்தி, கருணை, நட்பு, புத்திக்கூர்மை,கற்பனாசக்தி,நினைவாற்றல், நல்லொழுக்கம் முதலான பண்புகள் வளர்க்கப்படுகின்றன.பக்திப்பாடல்களை மக்களை இறைவன்பால் ஈர்த்து அமைதிப்படுத்துகின்றது.

இவ்வாறு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை இசை பின்னிப்பிணைந்துள்ளமைக் காணலாம். குழந்தை தூங்கத் "தாலாட்டு" விளையாட்டுக்கொரு "விளையாட்டுப் பாடல்" தொழில்வேளைகளில் களைப்பினை மறக்க ஏகப்பட்ட தொழிற்பாட்டுக்கள் என பாடல்கள் பல வகையின. "ஆடிப்பாடி வேலை செய்தா அலுப்பிருக்காது"அலுப்பின்றிப் பாடிய இவை வாய்மொழிப்பாடல்கள், நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள், பாமரர் பாடல்கள் எனப் பல்வேறு பதங்களில் அழைக்கப்பட்டன.

உடல்நலம் குன்றியோரும் உளநலம் குன்றியோரும் நல்லிசை கேட்டு நலமடைகின்றனர். நாவுக்கரசரின் தாளாத வயிற்றுவலியும், பாண்டிய மன்னனது விஷச் சுரமும் "நவரோஜ்" இராகம் பாட நீக்கமுற்றதாகக் கூறப்படுகின்றது. நோய்வாய்ப்பட்டவர்களின் உடல் நலத்திற்கும் வளர்ச்சிக்கும்இசையானது பெரிதும் உதவுகின்றது. இசையைக்



கேட்பதனூடாக நோயாளர்கள் தம் இன்னல் மறந்து இன்பம் துய்க்கின்றனர். "பிலஹரி" இராகம் உத்வேகத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கின்றது. ஆனந்தபைரவி, காம்போதி இராகங்கள் மனஅழுத்ததையும், இரத்த அழுத்தத்தையும் மனச்சோர்வையும் போக்குகின்றன. மேலும்,தலைவலி, தூக்கமின்மையையும் நீக்குகின்றன. சிலவகை வலிகளும், மனநோய்களும் இத்தகைய இசையின் மூலம் குணமுறுகின்றன. இசை மூலம் ஆஸ்துமா, கபம், மார்புச்சளி போன்ற நோய்களை குணமாக்க முடியும் எனவும் நம்பப்படுகின்றது.

**ஆக்கம்:செல்வி. ஆ.நிரோஷா**
**ஆசிரியர்**
**(கர்நாடக சங்கீதம்)**
**கிளி / வேரவில் இ.ம.வி**

உசாத்துணை நூல்கள்:
1. தென்னக இசையியல்.
2. இசைக்கருவூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தப்புலமாய்
பாடசாலை சுற்றி வந்தேன்
ஒவ்வாத முனைவுகள்
ஒன்றையொன்று கவர்வதாய்
ஓடிவந்து ஒட்டிக் கொண்ட – என்
நண்பர்களே.....

பங்கீட்டு வலுப்பிணைப்பாய்
உள்ளம்
பகிர்ந்து கொண்டீர்கள்
அயன் பிணைப்பாய்
அன்பினை
அள்ளித் தந்தீர்கள்

மின்சாரப் பார்வையால்
காவலி என்னைக்
கடத்தியாக்கினீர்கள்
உங்களுடன் இணைத்து
எளிதில் பிரியாதபடி
சேர்வையாக்கினீர்கள்

கூட்டம் I, II, III மூலகங்கள்
இலத்திரனை இழப்பது போல்
தீயவற்றை வெளியகற்றும்
நண்பர்களாகவும்

கூட்டம் V, VI, VII மூலகங்கள்
இலத்திரனை உள்ளெடுப்பது போல்
நல்லவற்றை உள்ளெடுக்கும்
நண்பர்களாய் எடுத்து
எளிதில் பிரியாத சேர்வை உள்ள
சமூகத்தை உருவாக்குவோம்



# நண்பர்கள்

இலத்திரன் ஓட்டமாய்
என் எதிரான் சிந்தனைகளை
நேராக மாற்றினீர்கள்
ஆடலோட்டமாயிருந்த என்
வாழ்வை
நேரோட்டமாய் மாற்றி எனக்கு
ஒளிமயமான வாழ்வைத் தந்தீர்கள்

கூட்டம் IV மூலகமாய்
சந்தர்ப்பவாதி நண்பனை
தேர்ந்தெடுக்காது

நல்ல நண்பர்களை உருவாக்கி
சக்தி மட்டத்தில் திரியும்
இலத்திரனைப் போல் இருக்காது
கருவில் இருக்கும்
புரோத்திரன், நியூத்திரனாய் மாறி
கட்டுப்பாட்டுக்குள் எந்நாளும்
இருந்து
நல்லவரகளாய் மாறி
ஒளி மயமான எதிர்காலத்தை
அடைவோம் நண்பர்களே..

**ஆக்கம்:**
**செல்வி. மங்களா பத்மநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி. R.பிரவீனா
ஆசிரியர்
கிளி / வேரவில் இந்து மகாவித்தியாலயம்

# How to Improve the reading habbits

"Reading Make a complete man". First we have to think about what is reading Habit? We all know the reading is one of the good habbit. Reading habit has three process

- reading happily
- reading continuously
- reading often

In schools we have to make the arrangements for the students to their reading. sometimes there is no task more challenging than improving reading habits of students. Reading proficiency is incredibly important, not only for a child's schooling, but for the quality of his or her life outside of school.

Unfortunately, not all children enter middle school with the same abilities, background or support structures, and it can be quite frustrating for teachers and parents when middle school students struggle with reading. However, the right combination of reading strategies and effort from both students and their families can make progress in their reading level.

Practice is vital for improved reading ability, and middle school readers who enjoy the process will continue to grow academically. What follows are five helpful strategies for improving reading habits of students

## 1. Vocabulary development

Though for many students it is the least-enjoyable aspect of reading comprehension, learning vocabulary is a necessary skill. A person cannot fully understand a text if he or she does not know the meaning of the words that make it up. This is true for adults as well as children. But for children, there are far more words in need of learning. There are a ton of ways to teach vocabulary to students0 educators can take their pick from flash cards, fill in the blank and other methods.

The Harvard Graduate School of Education created a vocabulary program known as Word Generation that took words common across many areas of a child's schooling, yet not found in common usage. These words became the basis for a special kind of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vocabulary program aimed at producing the most impact from vocab lessons. It is a program worth considering for schools not already using it.

It can also be helpful to have young readers write down the words they do not understand from the book, and then look them up in a dictionary after they finish reading, or while they are reading.

## 2. Ask parents to model reading for pleasure

A 1990s reading study suggests that children model their out-of-school reading habits on those of their parents. If parents read at home, discussed favorite books and recommended books, children were much more likely to engage in similar behavior.

Parents should be aware of this factor in the reading habits of their students, and educators should make it a point to educate families about the importance of reading in the home. Granted, not all parents choose to read for recreation. But if they are aware of what an impact it can have on their children, it may motivate them to at least make an effort to model reading for pleasure.

## 3. Student-selected books

Kids like to read when it is fun, not when it is mandatory. Allowing students to their own books instead of assigning a specific text can do a lot to improve enthusiasm among young readers. When possible, educators should allow students to self-select from age-appropriate books to improve their enjoyment of the process. School Library / classroom library has to considering the book leveling for the students level

## 4. Shared reading

Reading out loud to younger students or siblings can provide a great amount of motivation to middle school readers. Yes, they may experience a bit of anxiety, but the act has also been proven to improve reader confidence. Children are less likely to read, even to themselves, if they are not confident in their reading ability. Reading out loud can assist in confidence building.

## 5. No-pressure reading practice

Allow middle school readers time to practice their reading without any pressure. Let them make mistakes and correct them before they are required to do reading-based assignments or tests.

It can also be helpful to record practice time, and allow the student to review it later to see how he or she did. Keeping the recordings for review later in the year can provide an interesting look at all the progress a student makes, and can provide much needed encouragement.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன் தன் மகன் கல்வி கற்ற பாடசாலை தலைமை ஆசிரியருக்கு எழுதிய கடிதம்

அமெரிக்காவின் 16வது ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன் (1861 - 1865) என்றுமே உலகில் தலைசிறந்து விளங்கும் மேதைகளுள் ஒருவராவார். அவருடைய தனிச்சிறப்பிற்குரிய இலக்கியக்கலைதிறனும், அரசாட்சி என்பது மக்களால் மக்களுக்கான மக்களது என்ற அவரது ஆழ்ந்த ஞானமும், அவரது வாழ்க்கை முறையும், இறப்பின் விதமும் வரலாற்றில் அவருக்கென தனியான ஓரிடத்தினை ஏற்படுத்திக் கொடுத்தன. தனது மகன் படித்துக் கொண்டிருந்த பாடசாலைத் தலைமையாசிரியருக்கு ஆபிரகாம்லிங்கனால் எழுதப்பட்ட கடிதத்தினை இங்கே காணலாம். எவரிடமும் பகைமை பாராட்டாத எல்லோரிடமும் அன்பு கொண்ட மிக எடுத்துக்காட்டான ஒரு மனிதனின் கடிதமே இது.

"எல்லா மனிதர்களும் நேர்மையானவர் அல்லர். எல்லா மனிதர்களும் உண்மையாக நடப்பவர்களுமல்ல என்பதை நானறிவேன் இதனை என்மகன் கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் ஒவ்வொரு அயோக்கியனையும் மிஞ்சும் வீரனொருவன் இருக்கின்றான் என்பதனையும் ஒவ்வொரு சுயநல அரசியல்வாதியின் இடத்தையும் நிரப்ப அர்ப்பணிப்புள்ள தலைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதனை யும் அவனுக்குப் போதியுங்கள்.

ஒவ்வொரு எதிரிக்கும் ஒரு நண்பன் இருக்கின்றான் என்பதனை அவனுக்கு கற்றுக்கொடுங்கள். இதற்கு காலமெடுக்கும் என்பதனை நானறிவேன். உங்களால் முடிந்தால் சுயமாக சம்பாதித்த ஒரு டொலர் தெருவிலிருந்து எடுத்த ஐந்து டொலரைவிட மிக மிகப் பெறுமதியானது என்று அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். இழப்பைப் பழகிக் கொள்ளவும், வெற்றியை அனுசரிக்கவும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

பொறாமையிலிருந்து விலகி நிற்பதற்கு அவனை நெறிப்படுத்துங்கள் முடிந்தால் அமைதியான சிரிப்பின் இரகசியத்தை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அடாவடித்தனம் பண்ணுபவர்கள் இலகுவில் தோல்வியடைவார்கள் என்பதை அவன் இளவயதிலேயே கற்றுக் கொள்ளட்டும். உங்களால் முடிந்தால் புத்தகங்களின் அற்புதங்களை அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள். அதே நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயத்துப் பறவைகள், வெயில் நேர தேனீக்கள், பசுமையான மலைப்பிரதேசத்துப் பூக்கள் போன்ற நிரந்தரமாகவுள்ள விளங்காப் புதிர்களை ஆழமாக சிந்திக்க அமைதியான நேரத்தையும் அவனுக்கு அளியுங்கள். பாடசாலையில் ஏமாற்றுவதை விட தேர்தலில் தோல்வியுறுவது மிகவும் மேன்மையானது என்பதை அவனுக்குப் போதியுங்கள். ஒவ்வொருவரும் அவனது சொந்தக்கருத்துக்களை தவறு என்று சொன்னாலும் கூட தனது சொந்தக் கருத்துக்களில் கூட நம்பிக்கை வைக்க கற்றுக் கொடுங்கள் கனிவான மக்களுடன் கனிவாகவும் கடும் போக்குள்ளவர்களுடன் கடுயையாகவும் நடந்துகொள்ள கற்பிங்கள். ஒவ்வொருவரும் குழுவாக சேருகின்ற போது அந்தக் கூட்டத்தைப் பின்பற்றிச் செல்லாத ஆற்றலை எனது மகனுக்குக் கற்றுக்கொடுக்க முயற்சி செய்யுங்கள். எல்லோருடைய கருத்துக்களையும் உற்றுக் கேட்கச் சொல்லுங்கள். ஆயினும் அவன் செவிமடுக்கும் அனைத்தையும் உண்மை எனும் திரையில் வடிகட்டி அதனூடாகவரும் நல்ல வற்றை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை அவனுக்கு உணர்த்துங்கள். உங்களால் முடிந்தால் அவன் துன்பத்திலிருக்கும் போது எப்படி சிரித்துக் கதைப்பது என்பதை கற்றுக்கொடுங்கள். கண்ணீரில் வெட்கமில்லை என்பதை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். ஓயாது குற்றம் காண்பவர்களை அலட்சியம் செய்யவும், மிகவும் இனிப்பாக பேசுபவர்களிடம் விளிப்பாக இருக்கவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அவனுடைய உடலாற்றலையும், அறிவாற்றலையும் உச்சவிலை கோருபவரிடமும் விற்கவும், அதேவேளை ஒருபோதும் இதயத்திற்கும், ஆன்மாவிற்கும் (மனச்சாட்சி) ஒருவிலைப்பட்டியலை இடவேண்டாம் எனவும் கற்றுக் கொடுங்கள். கூச்சலிடும் காளையர்களுக்கு தன்காதுகளை பொத்திக் கொள்ளவும், அவன் தான் சரி என நினைக்கும் காரியங்களில் உறுதியாக நின்று போரிடவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

அவனைப் பட்சமாக நடத்துங்கள். ஆனால் அவனை ஆரத்தழுவி செல்லம் கொஞ்சவேண்டாம். ஏனெனில் நெருப்பின் சோதனைதான் நல்ல இரும்பைத்தருகிறது. ஆத்திரமடையாமல் இருப்பதற்கு வேண்டிய பொறுமையையும் பெற அவனை அனுமதியுங்கள். தன்மீது உன்னதமான நம்பிக்கை வைக்க அவனுக்கு கற்றுக் கொடுங்கள். ஏனெனில் அப்போதுதான் உயர்ந்த நம்பிக்கை கொண்டிருப்பான்.

இது ஒரு பெரிய கட்டளை, ஆனால் உங்களால் என்ன செய்யமுடியுமென்று பாருங்கள். ஏனெனின் அவ்வளவு குட்டிப் பையன் என்மகன்.

இவ்வண்ணம்
தங்கள் உண்மையுள்ள
ஆபிரகாம் லிங்கன்

பிரித்தெடுப்பு
சு. தர்மரத்தினம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர் – பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நூற்றாண்டு விழாக்குழுவினர்


பாடசாலை அபிவிருத்திக் குழு - 2014









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி . றஜிதா தெய்வேந்திரம்
ஆசிரியர்
கிளி / வேரவில் இந்து மகா வித்தியாலயம்
ஆரம்பக்கல்வி.



# விசேட தேவையுடைய மாணவரை இனங்கண்டு கற்றலை விருத்தி செய்வோம்

**ஆசிரியரிடம்** இருந்து விசேட உதவி தேவைப்படுகின்ற மாணவர்களின் நடத்தைகளை இனங்காண்பது மிகவும் அவசியம். அவ்வாறு இனங்காணுகின்றபோதுதான் கற்றல் கற்பித்தலை சிறப்பாக நகர்த்திச் செல்ல முடியும். " இலைமறை காய்களாய்" மறைந்து கிடக்கும் ஒவ்வொரு மாணவனதும் திறமைகளை வெளிக்கொணர முடியும். விசேட தேவையுடைய மாணவர்களின் அறிவை கூர்மையாக்கும் பொழுது அவர்களது அறிவு பிரகாசிக்கத் தொடங்குகிறது. இத்தகைய விசேட தேவையுடைய மாணவர்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**விசேட தேவையுடைய மாணவர்கள்**

- உடல் ஊனமுற்றோர்
- மெல்லக்கற்போர்
- நெறிபிறழ்ந்தோர்
- மீத்திறன் உடையோர்
- பிழையான பொருத்தப்பாடுடையோர்
- குறைவளர்ச்சி / உளப்போக்கு

இவற்றுள் உடல் ஊனமுற்ற மாணவர்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் ஊனமுற்றோர்

- கேள்விக் குறைபாடு - (மந்தமாகக் கேட்டல், சாதாரணமாகக் கேட்டல்)
- பார்வைக் குறைபாடு - (குருடு, தூரப்பார்வையின்மை, மங்கலான பார்வை, மாறுகண்
- பேச்சுக் குறைபாடு - (சரியாகக் கூச்சப்படுதல், கொன்னை, கரகரப்பு)
- அங்கக் குறைபாடு - (உடல் அங்கம், உடல் ஊனமை)

### இவர்களுக்கு உதவும் முறை

- ♦ விசேடமாக அவதானித்தல்
- ♦ பெற்றோருடன் கதைத்து சிகிச்சைக்கு அனுப்புதல்
- ♦ கதைப்பதற்கு சந்தர்ப்பமளித்தல்
- ♦ சுயநம்பிக்கை ஊட்டுதல்
- ♦ முடியுமானவரை அவர்களது தேவையை நிறைவு செய்தல்.
- ♦ குழுவேலை, விளையாட்டுக்களில் ஈடுபடுத்தல்.
- ♦ மற்றப்பிள்ளைகளால் ஒதுக்கப்பட இடமளியாமை.

♦ பிறப்பு, நோய் விபத்து போன்றவற்றால் உடற்குறைபாடுடைய மாணவர்களின் இயல்புகள் வருமாறு.

| | |
|---|---|
| 01. | முடமானவர்கள் |
| 02. | கிரான்டீன் குறைபாடு - குள்ளமாக இருத்தல் |
| 03. | நோயுற்றிருத்தல் (இரத்தவாதம், சுவாசநோய்) |
| 04. | விபத்துக்களால் கை, கால் முறிதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதவும் வழிமுறை**

- வசதியான இருக்கைகளைக் கொடுத்தல்
- நடமாடும் போது மற்றைய பிள்ளைகள் உதவுதல்
- அவர்களது செயற்பாடுகளை மதித்தல்
- அவர்கள் உபயோகிக்கும் சாதனங்களை வழங்கல்
- மற்றவர்களது எரிச்சல்களுக்கு ஆளாவதைத் தடுத்தல்

## மெல்லக்கற்போர் பின்னடைவோர்

வகுப்பில் பின்னடைவான மாணவரை மெல்லக் கற்போர் என அழைக்கலாம். இவர்களது இயல்பினை அடிப்படையாகக் கொண்டு இரண்டு வகையாக வகைப்படுத்தலாம்.

**மெல்லக்கற்போர்**

**குறை வளர்ச்சி உடைய பிள்ளைகள்**

- கல்வி வழங்க முடியும்
- எழுத வாசிக்க கற்பிக்கலாம்
- சாதாரண ஒரு மட்டத்திற்கு கற்பிக்கலாம்
- அதிக மாணவர்களுக்கு எழுத வாசிக்க கற்பிக்கலாம்

**உளப்பிற்போக்குடைய பிள்ளைகள்**

- குறைந்த புலன் இயக்க வளர்ச்சி
- மொழி வளர்ச்சி இல்லை
- சமூக வளர்ச்சி இல்லை
- உடல் இயக்க வளர்ச்சி தாமதம்
- கருத்துக்களை வெளியிடும் ஆற்றல் குறைவு
- கதைத்தல் , உடல் இயக்க வளர்ச்சி தாமதம்

**உதவும் வழிமுறைகள்**

- பொருத்தமான தூண்டிமூலம் துலங்கலை ஏற்படுத்துவது
- பயிற்சிகளில் திரும்பத் திரும்ப ஈடுபடல்
- பிள்ளைகளை அழகியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அதில் கூடிய அக்கறை காட்டல்
- உளநிலைக்கு ஏற்ப மிக எளிமையான முறையில் கற்பிப்பதற்கு ஒழுங்கு செய்தல்
- பெற்றோருடன் ஒத்துழைத்து பங்குபெறச் செய்தல்


## நெறிபிறழ்ந்த பிள்ளைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் ஏற்றுக் கொள்ளாத நடத்தைகளில் ஈடுபடுவதையே நெறிபிறழ்வு என்ற சொல் குறிக்கின்றது. ஒருவனது ஆளுமையில் " அதியகம் எனும் சக்தியில் ஏற்படும் குறைவளர்ச்சி காரணமாகவே நெறிபிறழ்வு ஏற்படுகின்றது. " சிறில் பேர்ட்" கருத்துப்படி ஒருவனது நடத்தை சமூக விரோத நடத்தையாக மாறி இறுதியில் அந்நடத்தை சட்டத்தால் தண்டிக்கப்படுமாயின் இது நெறிப் பிறழ்வு நடத்தை

**ஸெல்டன் குளுஎக் ஆய்வு மூலம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீத்திறனுடைய பிள்ளைகள்

- மீத்திறமை என்பது விவேக ஈவை அடிப்படையாகக் கொண்டே கணிக்கப்படுகின்றது.
- 130 இற்கு மேற்பட்ட விவேக ஈவுடைய பிள்ளைகள் மீத்திறன் உடையோர் எனக் கூறலாம்.

**மீத்திறனுடைய பிள்ளைகளுக்கு உதவும் முறைகள்**

01) ஆற்றல்களை மதித்தல்
02) ஆலோசனை வழங்கல்
03) மாணவர்களை இனங்காணல்
04) செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்
05) ஓய்வு நேரத்தை சிறப்பாக அமைய வழிகாட்டுதல்

## பிழையான பொருத்தப்பாடுடையோர் / குறைவளர்ச்சி /உளப்போக்கு

- இவர்களால் சில நடத்தைகளைப் பின்பற்றி வாழ்வதற்கு இயலாது.
- எதிலும் தயக்கமான போக்கு
- ஒதுங்கி வாழ்தல்
- தாழ்வுச்சிக்கல்
- குறைவான ஊக்கம்
- உளச்சோர்வு
- சாதாரண கல்வி நடவடிக்கை இவர்களுக்குப் பொருந்தாது.

**உதவும் வழிமுறைகள்**

- உளநலத்தை விருத்தி செய்தல்
- அழகியல் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்
- தனிமையை விரட்டுதல்
- குழு வேலைகளில் ஈடுபடுத்தல்

மேற்படி விசேட தேவையுடைய மாணவரை இனங்காண்பதன் மூலம் கற்றல் இடர்பாடுகளை நீக்க முடியும். அவர்களது ஆற்றல்களை விருத்தி செய்வதற்கு பின்வரும் வழிமுறைகளை செயற்படுத்தலாம்.

01) ஆலோசனை கூறும் சேவையில் ஈடுபடுவதற்கு அவசியமான பயிற்சி, வழிகாட்டல் என்பவற்றை வழங்குதல்.
02) விசேட பயிற்சி பெற்ற ஆசிரியரால் உளவியலாளரால் பரிகாரம் செய்யும் வைத்தியரால் அறிவுறுத்தல்களை வழங்குதல்.
03) உபகரணங்களையும் , வேலைத்திட்டங்களையும் வழங்குதல்.
04) விசேட நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.
05) பொருத்தமான கற்பித்தல் நுட்பங்களை உபயோகித்தல்
06) சம வயது நண்பர்களிடம் இருந்து கணிப்பு, விருப்பு மனப்பாங்கை விருத்தி செய்தல்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்வி என்பது பாடசாலை , கல்லூரி, உயர்கல்வி நிலையங்கள் என்பவற்றில் கற்பதுடன் , கண் உள்ள வரையில் நூல்களைக் கற்று செவி உள்ளவரை அறிஞர்களின் சொற்களைக் கேட்டு வளர்வது தான் உண்மைக்கல்வி ஆகும். இதனை திருவள்ளுவர் "சாந்துணையும் கல்லாதவாறு"என்று நாம் நாள் முழுவதும் கற்றல் நன்று என்ற உண்மையை வலியுறுத்தியுள்ளார்.

கல்வி கல் என்ற முதனிலையிலிருந்து அமைந்தது கற்றல் கற்பது என்பதாகும். நட என்னும் முதனிலையிலிருந்து நடத்தல், நடத்தை , நடக்கை என பொருள் தருவது போல்



# கல்வியும், பாடசாலை முகாமையும்

MRS. ILAVENTHY NIRMALARAJ
B.BA, PGDM. MED
KN/ URUTHTHIRUPURAM M.V

கல்வி என்றால் நூல்களை கற்பதுடன் , வாழ்க்கைக்கான விளக்கங்களை தருவதாகும். அறிவு, அனுபவம் எனும் இரண்டையும் சேர்த்து உண்மை அறிவு பெற கல்வி வழியமைக்கின்றது.

இக்கல்வியானது கருவில் தொடங்கி இறக்கும் வரையில் நடைபெறுகின்ற ஓர் தொடர் செயற்பாடாகவுள்ளது. இக்கல்வியின் மூலம் மாற்றம் பெறுகின்றவையாகவும், கல்வியை மாற்றுகின்றமையாகவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கல்வி

2. குடிசனத் தொகை

3. தொழில்நுட்பம்

4. பொருளாதாரம், அரசியல், சமூகம் போன்றன காணப்படுகின்றன. இவை நாட்டின் அபிவிருத்தி போக்கில் தாக்கத்தினை உருவாக்குவதுடன் இவற்றின் உயர்பெறுமானங்கள் நல்ல சமூகத்தை உருவாக்கும்.

இத்தகைய கல்வியை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்காக பாடசாலைகள் முக்கியம் பெறுகின்றன. பாடசாலைகள் பிள்ளை வளர்ச்சி கட்டங்களை அறிவு ரீதியாக தத்துவ வாதிகள் வகுத்துக்காட்டிய பிரிவுகளுக்கமைய பாடசாலைகளை அமைத்துக் கல்வியை வழங்கி வருகின்றன. மனிதர்களை மனிதர்களாக்க வேண்டி முக்கிய பருவகாலங்களை பாடசாலை காலங்களாக்கி அவர்களுக்குத் தேவையான அறிவு, அனுபவம், ஆற்றல் என்பவற்றை வழங்குவதற்காக சமூக நிறுவனங்களாக பாடசாலை அமைகின்றது.

இப்பாடசாலையின் பயனாளிகளாக மாணவர்களும், பாடசாலையின் செயற்பாட்டை சேர்ந்து நடத்துபவராக , அதிபர், ஆசிரியர், பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள், கல்வி அதிகாரிகள் போன்றோர் காணப்படுகின்றனர். பாடசாலை என்ற சமூக நிறுவனத்தில் பலர் பங்கு கொண்டாலும் அவர்களின் செயற்பாட்டை திட்டமிட்டு, ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்தி மதிப்பீட்டு கட்டுப்படுத்தி அந் நிறுவனத்தைக் கொண்டு செல்வதில் முகாமைப் பங்கினை வகிப்பவர் அதிபர் ஆவார்.

இவ்வாறான செயலுபாயத் தலைமைத்துவத்தினை வகிக்கும் **செயலுபாயத் தலைவரான** அதிபர் தனது பாடசாலைக்கே உரிய தொலைநோக்கு ஒன்றினை உருவாக்கி அத் தொலைத்நோக்கினை முயன்று பெறுவதற்கு ஊக்குவித்து இணங்க வைக்கும் தலைவரின் **உள்ளார்ந்த ஆற்றலுடையவராக** இருக்க வேண்டும் என க்ரொங்கர் (1999ம் ஆண்டு ) குறிப்பிட்டுள்ளார். இங்கு அடையப்பட வேண்டிய தூர நோக்கானது நம்பக்கூடியது ஆனால், உடனடியாக அடைய முடியாத கவர்ச்சிகரமான ஓர் இலட்சிய எதிர்காலம் பற்றிய சிந்தனையாக இருக்க வேண்டும் இத்தூரநோக்கானது.

- கற்பனையானது
- எதிர்காலம் பற்றியது
- அளவு, கால வரையறை அற்றது
- உயர்மட்ட முகாமை தொடர்பானது
- முழுமையான கருமங்களின் பொழிப்பு
- நிறுவனத்தின் வழிகாட்டி

இவ்வாறான செயற்பாட்டை தலைமைத்துவம் செயற்படுத்த வேண்டும் இத் தலைவரானவர் ஆசிரியர்களின் முகாமைக்கும், செயலுபாயத்தினைப் பயன்படுத்தல், அமைப்பின் உறுப்பினர்கள் மீது செல்வாக்குச் செலுத்தவும், அமைப்பினுள் கொண்டு வருவதற்குமான உள்ளார்ந்த ஆற்றல் என்றார் மெல்சர் மற்றும் கேர்ஸ்னர் (1988ம் ஆண்டு) இதைவிட சிம்பஸன் 1995ம் ஆண்டு அமைப்பு ஒன்றின் வளர்ச்சிக்கும், வெற்றிக்குமான தொலை நோக்கினையும் மார்க்கத்தினையும் வழங்குதல் என்றார். இவற்றின்படி முகாமைத்துவம் செய்ய செயலுபாயத்தின் வினைத்திறனே செயலுபாயத் தலைமைத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான குறிக்கோளாகும். இவற்றை அடைய செயலுபாய தலைவரான அதிபருக்கு இருக்க வேண்டிய வகிபங்குகளாக.

♦ நிறுவனத்தின் கட்டமைப்பை உருவாக்கி வளங்களை ஒதுக்கி செயலுபாய தூரநோக்கினை வெளிப்படுத்துபவர் செயலுபாயத் தலைவர்.

♦ மிகக்கடினமான பிரச்சினைகளில் செல்வாக்கு மிகுந்த தெளிவற்ற சூழலிலும் அத்துடன் வெளிப்புற அமைப்புகள் காரணிகளின் ஆதிக்கத்தினால் ஏற்படும் சிக்கலான சூழலிலும் பணியாற்றுவர்.

♦ பணிப்பாளர்கள் தாம் பணியாற்றும் சந்தர்ப்ப சூழல்களுக்கமைய நிறுவனத்தின் தேவைகளை முன்கூட்டியே தெரிவிக்கக் கூடியதான சூழலை விருத்தி செய்வதை செயலுபாயத் தலைமைத்துவத்தின் இன்னொரு நோக்காகும்.

♦ நிறுவனத்தின் பணியாளர்கள் தமது சொந்தக் கருத்துக்களைப் பின்பற்றுமாறு செயலுபாயத் தலைவர் ஊக்குவிப்பர்.

♦ இத்தலைவர்கள் நிறுவனத்திற்கு மிக்க மேலான செயலாற்றலைப் பெறுவதற்காக வினைத்திறன் மற்றும் தரம் வாய்ந்த பணியாளர்களை ஊக்குவிப்பதற்கு வெகுமதி மற்றும் சன்மானம் வழங்கும் முறைமைகளை பெரிதும் பயன்படுத்துவர்.

♦ செயலுபாயத் தலைவர்கள் பணியாளரை அச்சுறுத்தி கொடுமைப்படுத்தாது அவர்களுக்கு வலுவளிக்கவும், உற்சாகப்படுத்தவும் வல்ல தத்துவ முகாமைத்துவத்தை பயன்படுத்துவர்.

இவ்வாறாக வகிபங்குகளை அற்ற வேண்டிய செயலுபாய தலைவரான அதிபர்களில் காணப்பட வேண்டிய சிறப்பியல்பு குணாம்சங்களாக.

**கருணை :-**

செயலுபாயத் தலைவராகவுள்ள அதிபர் ஒருவர் அவரின் கீழ் பணிபுரிவோரின் கருத்துக்களையும், உணர்வுகளையும் புரிந்து கொள்வதுடன் அவர்களைக் கருத்திற் கொண்டு தீர்மானங்களை இயற்றுதல் வேண்டும். உள்ளுணர்வால் அறியப்பெற்ற திறன்கள் அவர்களில் காணப்பட வேண்டும். கருணையை வெளிப்படுத்தும் பாடசாலை அதிபர்கள் தம்முடன் பணியாற்றும் ஆசிரியரின் நோய்வாய்ப்பட்டுள்ள பிள்ளையின் உடல் நலம் பற்றி விசாரித்தல், அல்லது காயப்பட்டுள்ள மாணவர் ஒருவரின் மேல் கரிசனையாயிருப்பர்.

**தன்னடக்கம்**

செயலுபாய அதிபர் கவனத்தை திசை திரும்புகின்ற குழப்புகின்ற மனோநிலைகள், ஆர்வங்களினின்றும் தம்மை கட்டுப்படுத்தக்கூடிய உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் செயற்படு முன்பு சிந்திக்கத்தக்கவர்களாக இருத்தல் சவாலாகவுள்ள காட்சிப்புலம் ஒவ்வொன்றிற்கும் பங்களிப்பதும் மறைந்துள்ளதுமான காட்சிப்புலங்களைக் காண்பர். தன்னடக்கத்தினைப் பேணும் பாடசாலை அதிபர்கள், தம்முடன் கோபத்துடன் தவறான வகையில் பேசும் பெற்றோரின் முன் அமைதியாக இருப்பதுடன் அவர்களுடன் சாந்தமாகவும், மெதுவாகவும், தர்க்க ரீதியாகவும் பேசுவார். தினசரி ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் பொழுது சக ஊழியர்களிடம் கூச்சலிட்டு அல்லது அவமரியாதையாக நடக்கமாட்டார்.

**சமூகத் திறன்கள் :**

செயலுபாயத் தலைவரான அதிபர்கள் தோழமை மற்றும் சிநேகிதம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்களது தலைமைத்துவப்பணி மக்களுக்கு மகிழ்வூட்டுவதாலே மக்கள் அவர்களைப் பின்பற்ற விரும்புவார்கள். தோழமையுள்ள அதிபர்கள் சக ஊழியர்களது பொது விருந்துபசாரங்களில் பங்குபற்றுவதுடன் சமூகத்திலுள்ள பெற்றோருடனும் பேசிப்பழகுவார்.

**சுய விழிப்பு :**

தனது மனநிலைகள் மற்றும் உணர்ச்சி வேகங்களையும் அத்துடன் மற்றவர் மீது இவை ஏற்படுத்தும் தாக்கத்தினையும் புரிந்துகொள்ளும் உள்ளார்ந்த ஆற்றல் மிக்கவர்களாக இருத்தல் வேண்டும்.

**விசுவாசம் :**

வினைத்திறனும், விளைதிறனுமிக்க அதிபர் தமது தொழிலுக்கான விசுவாசத்தை தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிலும் செயலிலும் வெளிப்படுத்துவர். அதிபர்கள் தமது பணியாளர்களிடமும் மாணவர்களிடமும் விசுவாசமாக இருப்பர். அதிபர், ஆசிரியர் , மாணவர்களை முதன்மைப் படுத்தப்படுவதுடன் , பாடசாலையின் நன்மை கருதியே அனைத்துச் செயற்பாடுகளும் செயற்படுத்தப்படுவதனை உறுதி செய்து கொள்வர்.

**அறிவைப் புதுப்பித்துக் கொள்ளல் :**

வினைத்திறனும் விளைதிறனுமுள்ள அதிபர் நிறுவனத்துக்குள்ளே அறிவைப் புதுப்பிக்கக்கூடிய செயற்பாடுகளை செயற்படுத்துவதுடன், தனது அறிவையும் மாறி வரும் உலக மயமாக்காலுக்கமைய புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் கொண்டராக அமைதல் வேண்டும். அதிபர் புதுப்புது அறிவுகளை தான் கற்பதுடன், மாணவர்களும் புது அறிவு மாற்றங்களை பெற வழிசமைப்பர்.

**மதிநுட்பத்துடன் அதிகாரப் பயன்பாடு :**

அதிபர் விவேகமானவராகவும் அவரது கருத்தை ஏற்கக் கூடிய வகையிலும் நடந்து கொள்ள வேண்டும். செயல்களில் அதிபர் தெளிவுபட்டு செயற்படவேண்டும் . அத்துடன் தனது அதிகாரத்தை ஏற்கத்தக்க வகையில் காட்டுதல் வேண்டும். ஆசிரியர்களினதும் , பணியாளர்கள், மாணவர்களின் மனநிலைகளை பாதிக்கக்கூடிய அதிகாரத்தை பிரயோகிக்கக் கூடாது.

**விசாலமான பார்வையும் , கண்ணோட்டத்தையும் கொண்டிருத்தல்**

அதிபர் என்பவர் ஆசிரியர்கள் , மாணவர்கள் போன்ற மனித வளத்துடன் செயற்படுகின்றவர். இவர் விடயங்களை புலக்காட்சிக்குள் கொண்டு வரும்போது ஒரு பக்கமான ஒரே பார்வையில் தனது சிந்தனையை ஏற்படுத்தி தீர்வு பெறக்கூடாது. ஒரு செயற்பாட்டுக்கு பல பக்க பார்வை இருக்கும். அப்பக்கம் எல்லாம் தனது பார்வையை செலுத்தி ஒடுங்கிய சிந்தனை தீர்வு இல்லாது விரிந்த பார்வை செலுத்தி விரிசிந்தனை மூலம் தீர்வு பெறவேண்டும். சில விடயத்தை அதிபர் கண்டும் காணாது போல் இருப்பதுடன் கண்ட விடயத்தில் கண்ணோட்டமானவராக அமைதல் வேண்டும்.

**செயற்தூண்டல் அல்லது சுய ஊக்குவிப்பு:**

ஆசிரியர், மாணவர்கள் தமது செயற்பாட்டை மேலாக செயற்படுத்த தக்க வகையில் அதிபர் தூண்டல் வழங்குபவர். ஆசிரியர் தாமாக வந்து செயற்படக்கூடிய வகையில் அதிபர் ஆசிரியர் தொடர்பாடல் , செயற்பாடுகள் அமைக்கக் கூடிய அதிபர் செயல்கள் அமைதல்.

**பக்கச்சார்பு அற்றவர்**

அதிபர் தனக்குக் கீழ் பணிபுரிவோர் மாணவர்களிடையே வேறுபாடுகாட்டி செயற்பட மாட்டார்.

## New Trends in Education

Have the following changes in the past few decades ( capital.....)

- Global context of Education.
- Role of teacher
- The role of school administration
- Student's Learning styles
- Curriculum, Text books



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Communicating information to possess
- Higher education

## Long term trends

Expansion of education through out the society and through out life time.

- Increasing dominance of technology in the economy and society
- Widening gap between have and have nots
- Shift in family structure
- Rise of knowledge dependent society and knowledge indutries
- Increase in global economy
- Growth in service sector empleyment
- Increasing personal and occupational mobility
- Growing demands for accountability of public funds
- Increasing privatization of government services

## Core Values and Competencies of Global Education

- ♥ Peace and non violence
- ♥ Social Justice
- ♥ Human Rights
- ♥ Economic well being and equity
- ♥ Cultural in trgrity
- ♥ Ecological Balance
- ♥ Democratic participation

## Core Skills and Competences

- ♦ Self worth and self affirmation
- ♦ Cultural and racial differences
- ♦ Critical thinking
- ♦ Effective Communication Skills
- ♦ Non Violent , Conflict resolution and mediation
- ♦ Imagination
- ♦ Effective Organising

## New Trends in Education

- ♣ Multiplicity of methods of teaching
- ♣ Life long Education
- ♣ Learning to learn
- ♣ Summative and formative assess
- ♣ Importance of literacy

## Implications For Learning

- Learning to learn
- Teacher a co - learner
- Importance of English
- IT Education
- World of Work
- Flexible Curriculum
- Community as learning resource



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்கு கற்பித்தல், கற்றல் , ஆதரவு வழங்குவதிலும் ஆசிரியரின் பங்கு

திருமதி ச.ஈஸ்வரநாதன்
கிளி / வேரவில்.இ.ம.வி

ஆசிரியர்கள் கற்பித்தல், கற்றல் ஆதரவு வழங்குதல் மிகவும் பிரதானமான தொன்றாகும். கற்பித்தல் , கற்றல் முறைகள்தொடர்பான தீர்மானங்களை மிகப்பொருத்தமான முறையிலே ஆசிரியர் தீர்மானித்தல் வேண்டும்.எமது பிள்ளைகளை கற்றலுக்கு ஊக்கப்படுத்துதல் வேண்டும். விளையாடுவதற்கு வாய்ப்புக்களை ஒதுக்குதல் ஆக்கச்செயற்பாடுகளிலும் பிள்ளைகளை ஈடுபடுத்தல். பிள்ளைகளுடன்அன்பாகபேசவும் அவர்கள் கூறுவதை செவிமடுக்கவும் மற்றும் மாணவர்களின் குடும்பங்களுடனும் சமூகத்துடன் தொடர்பைக் கொண்டிருக்கவும் கற்பித்தல், கற்றல் உபாயத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டசெயல் முறைகளை வகுப்பறையில் ஒவ்வொருஆசிரியரும் விளைதிறன் மிக்கவர்களாகசெயற்படுவதற்கு அவற்றைச் சீரமைத்துவிருத்தி செய்தல் இன்றியமையாதஒன்றாகும்.

சில உந்து சக்திப் பயிற்சிகளை பயன்படுத்துவதன் மூலம் எமதுமாணவர்களிற்கு நாம் ஆதரவைவழங்கமுடியும் எமதுமாணவர்களின் ஆற்றல்களை இனங்கண்டுஅவ் ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல் வேண்டும். எமதுவகுப்பறைபாடங்கள் மற்றும் இணைந்த பாடவிதானச் செயற்பாடுகள் என்பனவற்றின் தொடர்ச்சியான செயற்பாடுகளை வழங்குவதற்குஎமக்கு வாய்ப்புண்டு மாணவர்களுடனான உணர்வுத் தொடர்புக்கு இட்டுச்செல்வதால் பிள்ளையுடன் உரை யாடுவதற்குதனிப்பட்ட இடமொன்றைத் தேடல் எமதுமாணவர்களின் பிரச்சினைகள் பற்றிஅவர்களுடன் உரையாட வேண்டுமெனில் சிறந்ததொடர்பாடலைப் பேணுவதற்கு உண்மையான திறவுகோல் அவர்களுடைய ஆதரவு பராமரிப்பு பாதுகாப்பு தேவைப்படல் சிலபிள்ளைகளிற்கு தொடர்ச்சியாக காலாகாலாத்திற்கு ஆதரவு வழங்கல் வேண்டிய தேவை உண்டு.

பிள்ளையானது எதிர்நோக்கும் சிரமங்களை எம்முடன் பகிர்ந்துகொள்ள வாய்ப்பை உண்டு பண்ணல், இப்பிள்ளை நிம்மதியாக இருக்கவும் சூமகமாக உறவை ஏற்படுத்தவும் போதியளவு நேரம் கொடுத்தல் வேண்டும். கற்பித்தல் திறன்கள்யாவும் கற்பித்தல் நடத்தைகளின் குறிப்பான வகைகளாகும் .இக் கற்பித்தல் முறைகளாவன நேரடிப் போதனை, நேரில் போதனை அனுபவம் சார் கற்றல், சுதந்திரமான கற்கை இடைத்தாக்கத்துடன் கூடிய போதனை இவ் ஒவ்வொரு முறைகளும் கற்பித்தல், கற்றல் செயன்முறைகளில் வினாக்கேட்டல் பிரதானமானது. வகுப்பறையில் வினாக்கேட்டலைப் பயன்படுத்தும் போது பரவலாக பகிரப்படும். கல்வியின் பிராதான குறிக்கோள்களுள் திட்டமிடலும் ஒன்றாகும். நாம் கற்பித்தலை மேற்கொள்ளும் போது உரிய திட்டமிடலுடன் வகுப்பறைக்குள் மலர்ச்சியாக நுழைதல் இன்றியமையாத ஒன்றாகும்.

மாணவர்களின் ஆற்றல்களைக் கட்டியெழுப்ப அவர்களது சொந்த ஆற்றல்களை வெளிப்படுத்தவும் செய்து காட்டும் திறன்களைபெற்றுக் கொள்ளவும் வாய்ப்பைஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். ஆகவேமாணவர்கள் சிறந்தோங்க ஆசிரியர்களின் பங்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில்நுட்பம்

செல்வி. கந்தசாமி குணேஸ்வரி
தென்கிழக்கு பல்கலைக்கழகம்
முதலாம் வருடம்
பழைய மாணவி

21ம் நூற்றாண்டில் இலத்திரனியலால் நவீனமடைந்து வரும் உலகில் நாம் வாழ்ந்து வருகின்றோம் என்பதையிட்டு பெருமை கொள்ள வேண்டும். ஏனெனில் தகவல் தொழில்நுட்பம் மனிதனுடைய எந்த ஒரு நடவடிக்கையுடனும் தொடர்புபட்டு நிற்கின்றது என்பதனை அனைவரும் அறிந்து வருவதுடன் அதனை உணர்ந்தும் வருகின்றோம்.

தகவல் தொழில்நுட்பம் என்பது ஒரு தகவலினை இடமாற்றம் பெறுவதற்கு அதாவது தகவலினை ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு நகர்த்திக் கொள்வதற்கு அல்லது பரிமாற்றிக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் நுட்ப முறையினை தகவல் தொழில்நுட்பம் எனலாம்.

மேலும் இது ஒரு கருவிகளுடைய ஒழுங்குபடுத்தல் செயற்பாடாகவும், நவீன தொழில்நுட்பத்தினுடைய திட்டமிடலாகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட தரவுகளின் பரிமாற்றல் செயற்பாடாகவும், பரிமாற்றத்திற்கான இலகுமுறை செயற்பாடாகவும் காணப்படுகின்றது.




இத்தகைய தகவல் தொழில்நுட்பம் முகாமைத்துவத்துடன் எவ்வாறு இணைந்துள்ளது என்பதனை கற்கும் கற்கை நெறியினை முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் ( Management And Information Technology) என்கிறோம்.

அனைத்துத் துறைகளிலும் செல்வாக்குச் செலுத்திவரும் இத் தகவல் தொழில்நுட்பம்' பற்றிய அறிவினை அனைத்து மக்கள் மத்தியிலும் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்வி வரையான பாடத்திட்டங்களில் முக்கியமான ஒரு பாடத் திட்டமாக தகவல் தொழில்நுட்பத்தினைக் கொண்டு வந்துள்ளது.

இக் கல்வியினை மாணவர்களுக்கு கற்பிப்பதன் நோக்கம் இன்றைய உலகம் தகவல் தொழில்நுட்பத்தினால் சிக்குண்டுள்ளது. விரும்பியோ, விரும்பாமலோ அனைவரும் இதனை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். ஒன்றை பற்றி மக்கள் மத்தியில் சென்றடைய வேண்டுமாயின் அது தொடர்பான விளைவுகளை (நன்மை , தீமை) முதலில் எடுத்துரைக்க வேண்டும்.

எப்படி சொல்வது? எந்தவகையில் சொல்லப்பட்டால் மக்களிடையே தகவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றடையும் என்பதனை புரிந்து கொண்ட அரசாங்கம், மாணவர்களிடையே இதனை ஒரு பாடத்திட்டமாக அறிமுகப்படுத் தியது. தற்போது உயர் கல்வித்துறையில் தனியொரு துறையாக " தகவல் தொழில்நுட்பத்தினை"கொண்டு வந்துள்ளது.

தொடர்ந்து பல்கலைக்கழகங்களிலும் ஏனைய துறைகளுடன் இணைத்து அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தற்காலத்தில்,

"முகாமைத்துவமும் தகவல் தொழில் நுட்பமும்" [ Management And Technology Information] [MIT] என்ற பெயரிலும், " தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவம்" [ Information And Technology [ITM]என்ற பெயரிலும் துறைகள் ஆரம்பிக்கப்பட்டு " தகவல் தொழில்நுட்பத்தின்" முக்கியத்துவத்தினை கற்பித்து வருகின்றனர்.

தொடர்ந்து நாம் அன்றாட வாழ்வில் பிணைந்துள்ள தகவல் தொழில்நுட்பத்திற்கு துணைபுரியும் காரணிகளை நோக்குமிடத்து

Computing Technolog
(கணினித்தொழில்நுட்பம்)
Telecommunication technolog
( தொலைத்தொடர்புத் தொழில்நுடபம்)
Mobile technology
Net work technology
Web technology
Data communication technology
(தரவுத் தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்ற பல காரணிகள் துணை புரிந்து வருகின்றன.

மேலும் தகவல் தொழில்நுட்பம் ஆனது பின்வரும் துறைகளில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. Education (கல்விச் செயற்பாடு) , Planning (திட்டமிடல்) Banking (வங்கிச் செயற்பாடு) , Business (வர்த்தக நடவடிக்கை ) Medicine ( மருத்துவ செயற்பாடு) , Communication (தொடர்பாடல் செயற்பாடு ) Agriculture ( விவசாய செயற்பாடு) Entertainment (பொழுது போக்கு செயற்பாடு) போன்ற துறைகளிற்கு தகவல் தொழில்நுட்பம் செல்வாக்குச் செலுத்தி வருவதனை காண்கின்றோம்.

எந்த ஒரு விடயம் பற்றி நாம் நோக்கும் போதும் அதன் நன்மை தீமைகளை பற்றி நோக்குதல் அவசியமாகிறது. அந்த வகையில் தகவல் தொழில் நுட்பத்தினுடைய நன்மைகளை முதலில் நோக்குவோம்.

உலகளாவிய ரீதியில் போட்டித் தன்மையை எதிர்கொண்டு உலக மயமாதலுக்கு முகம் கொடுக்க முடிவதுடன், வேலைகளை இலகுவாக்க முடிகின்றது. வேலையாளர் மட்டத்தில் உற்பத்தித்திறனை அதிகரிக்கக் கூடியதாக உள்ளது. பொருட்கள், சேவைகளுடைய தரத்தினை அதிகரிக்கக் கூடியதாக உள்ளது.

நேரத்தினை சேமிக்கக் கூடியதாக உள்ளது. எந்த ஒரு தகவலினையும் நொடிப்பொழுதினில் பெற்றுக்கொள்ள கூடியதாக உள்ளது. இவ்வாறு இதனுடைய நன்மைகளினை எடுத்துரைக்கின்ற போதிலும்

இதன் மூலம் நாம் தீமைகளையும் பெறுகின்றோம் என்பதனையும் கூற வேண்டும்.

இயந்திர மயமாதலினால் மனிதர்களுக் கான வேலை வாய்ப்புக்கள் குறைவடைந்து போகின்றது. அனுப்பப்பட்ட தகவல்கள் உறுதியாக சென்றடைந்ததா? என்பதில் உள்ள நம்பிக்கையின்மை, தகவல் தொழில் நுட்பத்தினை கட்டியெழுப்புவது கடினமாக உள்ளது. பாதுகாப்பின்மை என பல தீமைகளை கூறிக் கொண்டே போகலாம்.

மேலும் இத்தகவல் தொழில்நுட்பத்திற்கு அவசியமாக விளங்கும் பகுதி கணினி (Computer) ஆகும் " சாள்ஸ்பபேஜ்" கணினியின் தந்தை எனப் போற்றப் படுகின்றார். கணினியுகத்திற்கு வித்திட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் சீனர்கள் ஆவர். முதல் கணினி இயந்திரம் " அபாகஸ்" ஆகும். கணினி மொழியை அறிமுகப்படுத்தியவர்கள் தோமஸ் கெனடி ஜோன் கெமனி ஆகியோராவர். முதல் முதலில் உருவாக்கப் பட்ட தனிப்பட்ட கணினியின் பெயர் அப்பிள் ஆகும். முதலாவது தானியங்கிக் கணினி "ENIAC" இது 1945 ல் கண்டுபிடிக்கப்பட்டது.

கணினிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களாக Apple , Hp Dell , Microsoft , IBM எனப் பல நிறுவனங்கள் காணப்படுகின்றன. கணினியில் ஏற்கனவே சேமித்து வைத்த தகவல்களை அழிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட நிகழ்ச்சி [programme] " Virus" ஆகும். இத்த கையை Virus யை முதல் முதலில் பரப்பியவர்கள் பாகிஸ்தானியர்கள் ஆவர். கணினி Virus முதலில் கண்டுபிடித்தவர் " பிரைட் கோஹறன்" என்பவர் 1984 ல் கண்டுபிடித்தார் கணினி விஞ்ஞானத்தில் Binary Codes எனும் குறியீட்டில் பயன்படுத்தப்படும் இலக்கங்கள் O,I ஏனெனில் கணினியால் இவ் இரண்டு இலக்கங்களை மட்டுமே புரிந்து கொள்ளும் தன்மை கொண்டது. இதனை இயந்திர மொழி எனக் கூறப்படும்.

கணினியின் கொள்திறனை அளவிட "Byte"அலகு பயன்படுத்தப்பட்டு வருகின் றது. மேலும் கணினியில் உட்படுத்தத்தக்க எண்கள் , சொற்கள் , ஒலிகள், படங்கள் ஆகியவற்றை "UNi Code"எனப் பொது பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. எல்லாப் பதிவுகளையும் கணினி O,1என்றே சேமித்து வைக்கும். கணினியின் (Computer) ஒரு பகுதியான மௌஸ் (Mouse) னை கண்டுபிடித்தவர் "டக்ளஸ் எங்கள்பார்" ஆவார். இவர் 1960ம் ஆண்டு இதனைக் கண்டுபிடித்தார். கணினி சிப் (Chip) தயாரிப்பில் முதன்மையான நிறுவனம் "இன்டடெல்" ஆகும். செல்போன் சிம்கார்டினை (Sim Card) தயாரிப்பதற்கு தாவரத்தில் இருந்து கிடைக்கும் "செலுலோசு" எனும் பொருள் பயன்படுத்தப்படுகின்றது.

கணினியின் பயன்பாடு எண்ணற்ற வையாக காணப்படுகின்றன. கணினியை உபயோகித்து இயந்திரத்தின் ஊடாக கடிதத்தை வேறு இடத்திற்கு அனுப்பும் செயற்பாட்டை E.Mail [Eletronic mail] என்கிறோம். குழந்தைகள் எடுத்துச் செல்லும் புத்தகங்களைக் குறைக்க புதிய தொழில்நுட்பமாக E-Book பயன்படுகின்றது. வலைப்பின்னலில் உலக விடயங்களை பெற்றுக்கொள்ள முடிகின்றது. இவ்வாறு பற்பல உபயோகங்களை நம்மால் கூறமுடியும்.

கணினியினை வைரஸ் இல் இருந்து பாதுகாப்பதற்கு உருவாக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலே Anti viras (அன்ரி வைரஸ்) ஆகும். உதாரணமாக Kaspersky, Avast, Mcafee, symantecnotion, Bit Defender 2010, TREND micro, AVG , NOD 32 F-SECERE போன்றவற்றைக் கூறலாம். இவ்வாறு கணினி பற்றிய தகவல்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

எனவே இன்றைய நவீன காலத்தில் "தகவல் தொழில்நுட்பம்' அனைவருடைய வாழ்வோடும் இணைந்து முக்கியம் பெற்று வருகின்றது. அதனை பற்றிய அறிவு அனைவரும் பெற்றிருப்பது முக்கியமாகி ன்றது. எனவே அபிவிருத்தி அடைந்த (DC) நாடுகளுக்கு தகவல் தொழில்நுட்பம் இல்லையேல் வாழ்வே இல்லை என்ற நிலை உருவாகி, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளான (LDC) நம் போன்ற நாடுகளுக்கும் அந்நிலை உருவாகி வருகின்றது. எனவே தகவல் தொழில்நுட்பம் பற்றி அனைவரும் கற்பது முக்கியமா கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பாடசாலை

மகாராசா மயூரன்
திட்டமிடல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(பழைய மாணவன்)



கிளிகளும்
நொச்சிகளும்
நிறைந்த மருத நிலம் தனிலே
சொந்த மண் வேரவில்
தொன்மையான ஊர்தனிலே
மையல் தானே
கொண்டதாய் விளங்கும்
எம் வேரவில் இ.ம.வி
உதித்தது

பல்கலை பயிலும்
போதினிலே
பழம் பொறுக்கும் - வயது பழம்
நினைவு வந்ததனால் வர்ணனை
யாய் சொல்கிறேன்
வருத்தமிலா வாழ்வியலை......

இயற்கையவன் சிரம்
கொண்டு - ஆராதவரம் கொண்டு
அழகுடனே அளிக்கப்பட்ட அழகான
எம்பதியில் குருவிகளும் குஞ்சுகளும்
வதியும் வேம்பும் - ஆலும்
நிறைந்த நிழல்தனிலே
- பள்ளிப்படிப்பை
தொடர்ந்தவர் தாம் பலமான
ஆசான்... பள்ளி

கட்டடமும் இல்லை
கட்டவும் வசதியில்லை.....
கட்டிடம் தான் இல்லை என்றால் ....
கற்றிடத்தான் முடியாதோ....?

பொருள் வளம் - தான்
இன்றிடினும் - சாதிக்க
மனபலம் மட்டும் போதுமென்று
- எமை
ஆளாக்கி அனுப்பியது- வளமான
எம் வேரவில் பள்ளியல்லவா.....

கட்டிளம் வயதினிலே
சுட்டி வேலை செய்து
தானே- கட்டில்லா
காளைபோல புத்தகம் -தான்
தொலைத்து விட்டு...
கெட்ரப்புல் கொண்டு
குருவி அடித்து - கேடுகெட்டு
திரிந்த என்னை - நவீன
கெட்டப்பில் மாற்றியது
எம் பள்ளியல்லவா...

பத்தாம் வகுப்பில் - எனக்கு
பத்து பாடமும் - சேர்த்து
எடுத்த புள்ளிதான்
ஒரு பாடத்தின் புள்ளியல்லவா...

படிக்கத் தந்த புத்தகம் - தான்
இலந்தைப்பழம் பறிக்கபோய்
மாட்டுக்கு இரையானது
என் வாழ்வில் தானல்லவா...

நாட்டை மாற்ற - நகரை
மாற்ற மாற்றத்தின் சக்தியான
திட்டமிடலின் நாயகனாய்- மாற
எம் வாழ்வை மாற்றி திட்டமிட்டு
அனுப்பியது என் பள்ளியல்லவா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம்
திரு.ந.செந்தூரன்
(ஆசிரியர்)
கிளி / வேரவில் இந்து ம.வி

# சிறந்த மாணவர்களே இலட்சிய மனிதர்கள்

இன்றைய மாணவர்களே நாளை சமூகத்தின் தலைவர்களாகவும், ஆணிவேராகவும் திகழ்பவர்கள் அவர்களுடைய தூய்மையான வாழ்வும் தெளிவான சிந்தனையும் நாளைய சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்குப் பசளையாக அமைவன மாணவப் பருவத்தில் பெறும் அறிவும் பண்பாடும், பழக்க வழக்கங்களும் அவர்களை வாழ்வின் இறுதிவரை வழிநடத்தும் னால் சீராகவும், சிறப்பாகவும் வளர்ந்து தனக்கும் சமூகத்திற்கும் பயன்படுவான். நாட்டப்பட்ட விதை முளைத்து செழித்து வளர்வதற்குப் போதிய நீரும், பசளையும் கிடைக்க வேண்டும்.

அப்போது தான் பயிர் முளைத்து வளர்ந்து பூத்துக் காய்த்துப் பலன் தரும். மாணவனும் அவ்வாறே வளர்த்தெடுக்கப்பட வேண்டியவன்.

எனினும், இலட்சிய மனிதர்களாக மாணவர்களை உருவாக்கும் கருவிகளாக அமைகின்றன. " தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற முதுமொழி நமக்கு இந்த உண்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

பாடசாலையில் மாணவன் பெறும் கல்வி வெறும் ஏட்டுக்கல்வியாக இருந்தால் மட்டும் போதாது. அவனுடைய அறிவு வளர்வதுடன் மனப்பண்பும் வளர்கின்ற கல்வியாகப் பாடசாலைக் கல்வி அமைய வேண்டும். " கல்வி, பயிற்சி அனைத்தினதும் முடிவு ஒரு மனிதனை உருவாக்குவதே" என்பது மகாத்மாகாந்தி யின் கருத்தாகும். தான் வாழும் சமூகத்துடன் ஒரு மாணவன் சேர்ந்து வாழக்கூடிய பண்பை உருவாக்குவதே கல்வியின் குறிக்கோள் எனத் தற்கால அறிஞர்கள் கருதுகின்றனர்.

வாழ்க்கை வசதிகளும் ஒழுங்கும் பண்பாடும் இல்லாத அடிமட்ட சமூகத்தில் பிறந்து வளர்ந்த பிள்ளையானாலும் அவனுக்கு ஒழுங்கான கல்வி கிடைக்குமா

முழுப் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு மட்டும் தான் உரியது எனவும் எண்ணிவிடலாகாது. அதற்குப் பெற்றோர்களும், மாணவர்களும் இசைந்து கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். ஏனெனில் ஏர் பூட்டிய மாடுகள் இரண்டும் ஒரே வழியில் சென்றால் மட்டும் தான் பூமியை உழ முடியும்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தமக்கென ஒரு வரையறையை வகுத்துக் கொண்டு கடின உழைப்புடனும் விடாமுயற்சியுடனும் கற்றலில் ஈடுபட வேண்டும். ஒருமுறை பரீட்சையில் குறைந்த புள்ளியைப் பெற்று விட்டேன் என்பதற்காக என்னால் முடியாது, எனக்குத் தெரியாது என்று மூலையில் முடங்கிவிடக் கூடாது " எட்டாவது தடவையாகவும் சறுக்கி விழுந்தவனை பூமித்தாய் முத்தமிட்டுச் சொன்னாளாம் மகனே! நீ ஏழு தடவைகள் விழுந்தாலும் எழுந்தவனல்லாவா?"

எனவே, மாணவர்கள் ஒவ்வொருவரும் தம்மைப்பற்றி குறைவாக எடைபோடுவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியோடு மறந்து விட வேண்டும். எம்மைப் பற்றி முழுமையாக அறிந்து கொண்டவர்கள் நாம் மட்டுமே. எனது பலம், எனது பலவீனம் பற்றி எனக்கு மட்டும் தான் தெரியும். எனவே எமது பலவீனங்களையும் பலங்களாக்கிக் கொண்டு முன்னேறிச் செல்பவனே எதிர்கால இலட்சிய மனிதனாவான்.

இலட்சிய மனிதனாகுவதற்கு பாடசாலையில் மாணவன் பெற்ற கல்வியும், அறிவும், அனுபவமும் வாழ்நாள் முழுவதும் அவனுக்குத் துணையாக அமைகின்றன. வீட்டுச் சூழலில் இருந்து விடுபட்டு பாடசாலைக்கு வரும் மாணவனை ஆசிரியர் வரவேற்று ஆதரித்து சமூகத்தில் சேர்த்து வைக்கின்றார்.

இதனால் மாணவரின் உளமுதிர்வுக்கும், வளர்ச்சிக்கும் ஏற்ப அறிவை வளர்க்கும் தளமாகப் பாடசாலை அமைகிறது. மாணவனை உருவாக்கும் சிற்பியாக ஆசிரியர் அமைகிறார். நல்ல மாணவன் நல்ல மனிதனாக வாழ்கின்றான். சிறந்த மாணவன் இலட்சிய மனிதனாக உருவாகி விடுகின்றான்.

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

ஆக்கம்:- ரா.ஜான்ரெய்சன்
மாணவன்
தரம்-01
கிளி / வேரவில் இ.ம.வி

*கல்வியைக் கற்போம்*
*கருத்தாய் நிற்போம்*
*உண்மையைப் பேசுவோம்*
*நன்மையை நாடுவோம்*




# நல்வழி நடப்போம்..!

*பெரியோரை மதிப்போம்*
*ஆசிரியரைப் பணிவோம்*
*தந்தை தாய் பேணுவோம்*
*தர்மம் செய்து வாழ்வோம்*

*அன்பாய் இருப்போம்*
*பண்பாய் வளர்வோம்*
*நல்லவர் சொல் கேட்போம்*
*நல்வழியில் நடப்போம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து சமூக சீர்திருத்த இயக்கங்கள்

ச.கஸ்தூரி
தரம் :- 13
கிளி / வேரவில் இ.ம.வி

இந்து சமயத்தைப் பொறுத்தவரைக்கும் சனாதன தர்மமாக விளங்கிய போதிலும் பல்வேறு குறைபாடுகளைக் கொண்டதாகக் காணப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் 18ம் நூற்றாண்டிலே இந்தியாவில் இந்து சமூக சமயம் பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தன. இதன் காரணமாக அவற்றைக் களையும் முகமாகத் தோன்றிய நிறுவனங்களே இவையாகும்.

இந்த சமூக சமயப் பின்னடைவுகளில் இருந்து விடுபடுகின்றதை நோக்காகக் கொண்டு செயற்பட்ட காரணத்தினால் 19ம் நூற்றாண்டில் இந்து சமய , சமூக மறுமலர்ச்சி அடைய இந் நிறுவனங்கள் பாரிய பங்கினை ஆற்றி இருந்தன. இவ்வாறு செயற்பட்ட சீர்திருத்த இய க்கங்களாகக் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- பிரம சமாசம் – ராஜாராம் மோகன்ராய்
- ஆரியசமாசம் – தயானந்த சரஸ்வதி
- இராமகிருஸ்ணமிஷன் இராமகிருஷ்ண பரமகம்சர்

இம் மூன்று நிறுவனங்களும் சமய, சமூகத் தொண்டுகளை ஆற்றிய போதும்" பிரமசமாசம் - ராஜாராம் மோகன்ராய்" சீர்திருத்த இயக்கமானது சமூகத்தில் மக்களைக் கொடுமைகளில் இருந்து மீட்பதற்காக நல்ல சமூக சேவைகளையே அதிகம் ஆற்றியுள்ளது. அச் சீர்திருத்த இயக்கம் ஆற்றிய பணிகளாக

1. குழந்தை மணத்தைத் தடுத்தமை
2. பெண்கள் விடுதலை அடையப் போராடியமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வர்ணப்பாகுபாட்டிற்கு எதிராகப் போராடியமை

4. உடன்கட்டை ஏறுவதைத் தடுத்தமை

5. பலகடவுட் கோட்பாட்டையும், பிறவழிபாடுகளையும் எதிர்த்தமை

6. பிறமதக் கருத்துக்கள் சிலவற்றை எதிர்த்தமை.

போன்றவற்றை குறிப்பிடலாம். அதாவது ராஜாராம் மோகன்ராய் காலத்தில் குழந்தைத் திருமணம் இடம்பெற்றிருந்தது. இது "பால்யவிவாகம்" என்று அழைக்கப்பட்டது. அதாவது வயது குறைந்த பிள்ளைப் பருவத்தினருக்குத் திருமணம் செய்து வைக்கப்படுகின்றமையானது ஜீரணிக்க முடியாது என்பதை தெளிவாக அறியப்படுத்தி அதற்கு எதிராகப் பிரச்சாரத்தை மேற்கொண்டார். இதன் தொடர்ச்சியாக 1827ல் குழந்தை மணத் தடுப்புச் சட்டத்தை முன்னெடுத்தார்.

இதன் தொடர்ச்சியாகப் பெண்கள் விடுதலையை முதன்மைப் படுத்தியதையும் குறிப்பிடலாம். பெண்கள் அடக்கு முறைகளில் இருந்து விடுபட்டு கல்வி கற்க வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தமை அத்தோடு பெண்ணிற் கொருநீதி ஆணிற் கொருநீதி என்ற கருத்தை முன் வைத்ததனூடாகப் பெண் நிலை வாதியாக குறிப்பிட்டார். அத்தோடு மறுமண திருமணத்திற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தார். அதாவது கணவன் இறந்தால் மனைவி விதவையாக வாழ தேவையில்லை அவள் விரும்பினால் மறுமணம் செய்வதை எவராலும் தடுக்க முடியாது எனக் கூறி "ஒருதாரமணத்தை" கண்டித்து மறுமணம் செய்ய வழிவகுத்துக் கொடுத்ததைக் குறிப்பிடலாம்.

சமூகத்திற்கு முரண்பாடான ஒன்றான வர்ணப் பாகுபாட்டிற்கு எதிராகப் போராடியமையைக் குறிப்பிடலாம். அதாவது வர்ணம் என்பது தொழில் ரீதியாக உருவானது எனச் சுட்டிக் காட்டி நல்ல சமூகத்திற்கு இது முறையானது இல்லை என்று குரல் கொடுத்து இப்பாகுபாட்டை வேரொடு அறுத்தெறிந்தார்.

இதைத் தவிர பிறமதக் கொள்கைகள் சிலவற்றை எதிர்த்தமையும் ஒரு சமூக சேவையாக உள்ளது. எடுத்துக் காட்டாக கிறிஸ்தவ மதத்தைப் பொறுத்தவரைக்கும் இயேசுவை கடவுளாக ஏற்றுக்கொள்ள முடியாது அவரைப் புனிதராகவே ஏற்றுக்கொள்ளலாம்என்பதைக் குறிப்பிட்டார். அத்தோடு பலகடவுட் கொள்கையையும் பிறமத வழிபாட்டையும் எதிர்த்தார்.

அடுத்து சமூகத்தில் உள்ள மக்களை அழிக்கின்ற ஒரு செயலான உடன்கட்டை ஏறுதலைத் தடுத்தார். இவரது சகோதரியின் கணவன் இறந்த போது சகோதரி உடன்கட்டை ஏறியதைப் பார்த்து கவலை அடைந்த " ராஜாராம் மோகன்ராய்" இதற்கெதிராகக் குரல் கொடுத்துப் போராடினார். 1815-1825 ஆண்டிற்கு இடையில் பிரபுவிடம் இதற்கெதிரான மனுவைக் கையளித்தார். 1829ல் உடன்கட்டை ஏறுவதைச் சட்டபூர்வமாகத் தடைசெய்தார்.

இவ்வாறு இராஜாராம் மோகன் ராயினது பிரமசமாசம் சமய சீர்திருத்தங்களைச் சாதனைப்படுத்தாவிட்டாலும் சமூக சீர் திருத்தங்களை மக்களிற்குத் தெளிவாக அறிவுறுத்தி இந்து சமூக மறுமலர்ச்சிக்கு உறுதுணையாகவுள்ளது அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ஜெ.ஸ்ரீரங்கன்
ஆசிரியர் (புவியியல்)
கிளி / வேரவில் இந்து ம.வி



# உலகமயமாதல் – ஒரு நோக்கு

# Globalization - A View

### 1.0 அறிமுகம்

உலகமயமாதல் என்ற பதமானது இன்று சர்வதேச ரீதியில் பேசப்படும் ஒரு விடயமாக காணப்படுகின்றது. உலகமய மாதல் செயன்முறைக்கு இன்று உலகின் எல்லா நாடுகளும் ஈர்க்கப்பட்டுள்ளன. உலகமயமாதல் (Globalization) கோள மயமாதல், புவிமயமாதல், அகிலமயமாதல் எனப் பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்படு கின்றது. இவ் உலகமயமாதலானது தொலைத்தொடர்பு, போக்குவரத்து அரசியல் பண்பாடு ஆகிய துறைகளின் முன்னேற்றங்களினால் உந்தப்பட்டு உலக சமூகங்களுக்கிடையே அதிகரிக்கும் தொடர்பையும் அதனால் ஏற்பட்டு வரும் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையையும் உண்டாக்கியுள்ளது. இக் கட்டுரையானது உலகமயமாதல் என்றால் என்ன அதன் வளர்ச்சிப் பின்னணி, உலகமயமாதலுக்கு வித்திட்ட காரணிகள், உலகமயமாதலின் சாதகபாதகத் தன்மைகள், புதிய உலக மயமாதல் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக அமையப் பெற்றுள்ளது.

### 2.0 உலக மயமாதல் எண்ணக்கரு

உலகமயமாதல் என்பது பூகோள அரசியல் எல்லைகள் தளர்த்தப்பட்டு பொருளாதாரம், அரசியல், சமூக பண்பாடு போன்ற சகல அடிப்படைகளிலும் பூகோளம் ஒருமைப் பாடடைதல் ஆகும். உலகளாவிய ரீதியில் போக்குவரத்திலும் தொடர்பாடலிலும் ஏற்பட்ட புதிய மாற்றங்கள் உலகை அரசியல் பொருளாதார பண்பாட்டு சமூக கலாசார ரீதியான விடயங்களில் புவியியல் எல்லைகளைத் தளர்த்தி பூகோளத்தை ஒரு மையக் கிராமமாக (Global Village) மாற்றி உலகமயமாதலை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு நாட்டின் எல்லையைக் கடந்து சர்வதேசம் என்ற எல்லைக்குள் நுழையும் போதே கோளமயமாதல் ஆக்கிரமித்துக் கொள்கின்றது. உலகமயமாதலினால் உலகம் சுருங்கி விட்டது. விஞ்ஞான தொழில்நுட்ப விருத்தியின் காரணமாக உலக மக்களிடையே தொடர்பாடல் துறையில் ஏற்பட்ட அபரீத வளர்ச்சி பௌதீக ரீதியான தூரத்தினைக் குறைத்து மக்களை நெருக்கமாக்கியுள்ளது. உலகின் எந்தவொரு பாகத்திலும் வாழும் மக்களும் எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்திலும் தொடர்பு கொள்ளும் வசதியும் தேவையான விடயங்களை உடனுக்குடன் பரிமாற்றிக் கொள்ளவும் போக்குவரத்து விருத்தியினால் விரும்பிய இடத்தினை விரைவாக அடைந்து கொள்ளவும் முடியுமாகையால் உலகம் கிராமம் என்ற நிலைக்கு சுருங்கிவிட்டது. மேலும் உலகமயமாதல் உலக மக்களை ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கம் நிலையையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம். கோளமயமாதல் வளர்முக நாடுகளுக்கு அதிகரித்த வாழ்க்கைத் தரத்தையும் , வளத்தையும் கொண்டு வருகின்றது. என்பதுடன் நாடுகளிடையே நிதிவளத்தைப் பெருக்கவும் உதவுகிறது.

### 3.0 உலகமயமாதலின் தோற்றமும் வளர்ச்சியும்

1960 களின் பின்னரே இவ் உலகமயமாதல் என்ற பதமானது பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. கைத்தொழில் புரட்சி விவசாயப்புரட்சி , தகவல் தொழில்நுட்பப் புரட்சி என்பன ஏற்படத் தொடங்கிய பிற்பாடே இவ் உலகமயமாதலானது அசுரவேகத்தில் வளர்ச்சியடையைத் தொடங்கியது.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பங்களில் பிரித்தானிய காலனித்துவம் உலகமெங்கும் வியாபித்து இருந்தவேளை பிரித்தானியாவை மையமாகக் கொண்டு உலகமயமாதல் ஏற்படும் என எதிர்பார்க்கப் பட்டது. எனினும் அக்காலப்பகுதியில் உலக பிரதேசங்களுக்கிடையில் தெளிவான போக்குவரத்து தொடர்பாடல் வலைப்பின்னல் விருத்தியடையாமையால் இதற்கான வாய்ப்பு இழக்கப்பட்டது. தொடர்ச்சியாக 1945-1990 காலப்பகுதியில் புவியியல் பனிப்போரை மையமாகக் கொண்ட (ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா ) இரட்டை ஒழுங்கு காணப்பட்டதனால் மீளவும் உலகமயமாதல் பின்னோக்கி தள்ளப்பட்டது. 1990 களின் ஆரம்பங்களில் சோவியத்தொன்றியத்தின் வீழ்ச்சியின் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார மாறுதல்களும் பனிப்போரை முடிவுக்கு கொண்டு வந்தவுடன் சோசலிச பொருளாதார நாடுகள் பலவீனம் அடைந்து அவற்றின் பொருளாதார மறு சீரமைப்புக்கும் வழிவகுத்தது. இதனால் 1990 களின் பின் உலகில் தனித்துவ வல்லாதிக்க நாடாகிய ஐக்கிய அமெரிக்காவை மையமாகக் கொண்டு உலகமயமாதல் ஏற்பட்டது எனலாம்.

குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதார பலம், பாதுகாப்புப் பலம், சக்தி பலம், மனித பலம் ஆகியகாரணிகள் இதற்கு உதவியது. அத்துடன் உலக பிரதேசங்களுக்கிடையில் தெளிவான போக்குவரத்தும் தொடர்பாடலும் விருத்தி பெற்றிருந்தமை இதை மேலும் வலுப்படுத்தியது எனலாம்.

இன்று உலகமயமாதல் மிகத்துரிதமாக வளர்ச்சியடைந்து உலகம் ஒரு மையக் கிராமமாகி விட்டது எனக் கூறும் அளவுக்கு சமூக கலாசார தொடர்பாடல் போக்குவரத்து மற்றும் இதர செயற்பாடுகளில் ஒரு நாடு மற்றைய நாடுகளுடன் தொடர்புகளை மேற்கொண்டும் சில சமயங்களில் தங்கி வாழவேண்டிய நிலைக்கும் தள்ளியுள்ளது. பொருளாதாரம் தொடர்பில் 1981ம் ஆண்டில் தான் உலகமயமாதல் என்ற பதமானது பயன்படுத்தப்பட்டது. இது தொடர்பான விடயங்கள் தியேட்டர் லெவிட் (Theartore Levit) என்பவர் எழுதிய "சந்தைகளின் உலகமயமாதல்" ( Globalization of Market) என்ற நூலில் உலகமயமாதலானது பொருளாதாரம் தொடர்பில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளதுடன் இது உலகம் தழுவிய சமூக ஆய்வுகளின் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய ஒரு தோற்றப்பாடாக காணப்படுகின்றது எனக் கூறப்பட்டுள்ளது. இன்றையகால கட்டத்தில் உலகமயமாதலானது புதிய உலகமயமாதல் என்ற புதிய பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

### 4.0 உலகமயமாதலில் தகவல் தொழில்நுட்பத்தினதும் போக்குவரத்தினதும் செல்வாக்குகள்

**4.1 தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பம் ( Information Communication Technology)** கோளமயமாதலில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுவாக செல்வாக்குச் செலுத்தி கோளமயமாதலை விரைவு படுத்தியுள்ளது. இன்று உலகில் காணப்படும் அனைத்துத் துறைகளிலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பிரயோகிக்கப்படுகின்றது. அவற்றுக்காக விசேட அதி உயர் சாதனங்கள் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இதனால் கோளமயமாதலில் ஆதிக்கம் அதிகரித்துச் செல்கின்றது. குறித்த கிராமம் அல்லது பிரதேசத்தில் இடம்பெறும் விடயம் ஒன்று குறுகிய நேரத்தினுள் உலகம் பூராகவும் அந்தச் செய்தி பரவலடையும் நிலை காணப்படுகின்றது. இதற்குக் காரணம் தொடர்பாடல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியாகும். வலைப்பின்னலை அடிப்படையாகக் கொண்ட ஊடகத்தின் செல்வாக்கு அதிகரித்த நிலை உள்ளது.

இதன் மூலம் கணினி இணைய அறிவுள்ள ஒருவரால் தனக்குத் தேவையான தகவல்களை இலகுவாக தேடிப் பெற்றுக் கொள்ளும் நிலை காணப்படுகின்றது. இதனால் அது தொடர்பான அனைத்து விடயங்களையும் அறியமுடியும். அதே போன்று கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் ஊடான தொடர்புகள், தொலைத்தொடர்பு வழியிலான கற்கை நெறிகளை கற்றல், ஆய்வுகளை சமர்ப்பித்தல், பரீட்சையில் பங்குபற்றுதல், நூலகம் பத்திரிகைகள் போன்றவற்றிலிருந்து விளக்கங்களைப்பெறுதல் என இணைய வழிப் பயன்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன. கட்டணம் செலுத்தியும் இலவசமாகவும் பல்வேறு சேவைகளை இணையம் மூலம் பெற்றுக்கொள்ளுதல் புத்தகங்களைப் பெறுதல், முற்பதிவுகளைச் செய்தல் விபரங்களை அறிந்துகொள்ளுதல், காலங்கடந்த விடயங்களை தேடிப் பெற்றுக்கொள்ளுதல் வழிகாட்டல் உபதேசங்களைப் பெற்றுக்கொள்ளுதல் பொருட்கள் கொள்வனவு விளம்பரங்களை பெறமுடிதல் போன்ற பலவசதிகளை உலகில் எப்பாகத்தில் இருந்தும் மிக விரைவாகப் பெறமுடியும்.

மேலும் பண்டங்களையும் சேவைகளை யும் பெறுதல் வழங்குதல் , வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுதல், பொருளாதார ஆய்வுகளை நடாத்துதல் என்பனவற்றிற்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் கைகொடுக்கின்றது. இதனை விட அரச நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலுக்கும் பயன்படுகிறது. பொழுதுபோக்கு நடவடிக்கை களில் திரைப்படங்கள், அரட்டை அடித்தல், சமூக வலைத்தளங்களில் பங்குபற்றுதல், கருத்துக்களைப் பரிமாறுதல் , திறமைகளை வெளிப்படுத்துதல் , செயற்பாடுகளில் ஈடுபட முடிதல் மேலும் புவி இடநிர்ணய ஒழுங்குமுறையினால் (GPS) போக்குவரத் துக்கள் ஒழுங்கமைக்கப்படுதல், ஆய்வுகள் மற்றும் இடங்கள் தொடர்பான தகவல்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிதல் அத்துடன் உள்நாட்டு விடயங்களையும் சில நிமிடங்களில் சர்வதேச மயப்படுத்த முடியுமாகவும் இருக்கின்றது. இவ்வாறு தகவல்களையும் சேவைகளையும் விரைவான முறையில் இலகுவாக பெறமுடிவதனால் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது உலகமயமாதல் செயல் முறைக்கு பாரிய பங்களிப்பை வழங்கி யுள்ளது எனலாம்.

**4.2 போக்குவரத்து** - இன்று போக்குவரத்து முறையானது சர்வதேச ரீதியாக துரிதப்படுத்தபட்டுள்ளதானாலும் போக்குவரத்து வலைப்பின்னல் ஏற்படுத்தப் பட்டுள்ளதனாலும் உலகின் எப்பாகத்தையும் குறிப்பிட்ட மணிநேரத்தில் சென்றடையக் கூடியதாக மாறியுள்ளது. குறிப்பாக விமான போக்குவரத்து வலைப்பின்னல் , தரை வழிப்போக்குவரத்து வலைப்பின்னல் என்பன மிகத் துரிதமான முறையில் காணப்படுகின்றது. போக்குவரத்து வலைப்பின்னல் மூலம் மேற்கத்திய நாடுகளும், கீழைத்தேய நாடுகளும் ஒன்றிணைந்துள்ளன. போக்குவரத்து துறையில் ஏற்பட்ட வலைப்பின்னல் மூலம் உலகமயமாதல் மிகத் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5.0 துறை சார் ரீதியான உலகமயமாதல்

உலகமயமாதல் என்ற பதத்தினை இலகுவாக விளங்கிக் கொள்ளும் பொருட்டு 1993 இல் வாங்கியோங் என்பவர் உலகமயமாதலை துறைரீதியாக பொருளாதார ரீதியான உலகமயமாதல் உயிரினவியல் ரீதியான உலகமயமாதல் தொழில்நுட்ப ரீதியிலான உலகமயமாதல் சமூக ரீதியிலான உலகமயமாதல் என்கின்ற நான்கு வகையான வகைப்பாட்டினுள் வகைப்படுத்தினார்.

### 5.1 சமூக ரீதியிலான உலகமயமாதல்

உலகமயமாதலின் விளைவினால் புதிய விடயங்களின் உள் வருகையால் மனிதனது கலாசார, சமூக பண்பாட்டு விழுமியங்களில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களே சமூக ரீதியிலான உலக மயமாதலாகும். இன்றைய கால கட்டத்தின் தொழில்நுட்ப வளர்ச்சியின் சர்வதேச போக்குவரத்து விருத்தியும் தொடர்பு சாதனங்களினதும் விளம்பரசாதனங்களினதும் செயற்பாடுகளும் சுற்றுலா துறை விருத்தியும் அரசு குடிப்பெயர்வுக் கொள்கைகளும் தற்போதைய காலகட்டத்திற்கு ஏற்றவாறு மக்களின் மனோ நிலையும் இச்சமூக ரீதியிலான உலக மயமாதல் ஏற்பட காரணமாகின்றது.

பால் நிலைச் சமத்துவம் உலகளாவிய கலாச்சார பண்பாட்டு ஒருமைப்பாடு மிக விரைவாக ஏற்படுகின்றது. இதன் விளைவுகள் சிறிய மொழிகள், பண்பாடுகள், சமய விழுமியங்கள் எதிர்காலத்தில் இழக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் மிக அதிகமாகக் காணப்படுகின்றது.

### 5.2 பொருளாதார ரீதியிலான உலகமயமாதல்

இன்றைய உலக மயமாதல் முழுமையாக பொருளாதார ரீதியான வாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டதாகும். உலக நாடுகளுக்கிடையில் தாராள ஏற்றுமதி இறக்குமதி பண்பு விருத்தி பெறுவதுடன் இலாப நோக்கம் கொண்ட தனியார் துறையின் அடிப்படையில் இயங்கும் முதலாளித்துவ பொருளாதாரம் உலகு எங்கும் வியாபித்தது. இதன் விளைவுகள் அதிக முதலீட்டு வாய்ப்புக்களைக் கொண்ட பல் தேசியக் கம்பனிகள் தமது செயற்பாடுகளை உலகம் முழுவதும் விரிவடையச் செய்தன. முதலாளித்துவ பொருளாதாரத்தின் நவ காலனித்துவ விளைவுகளே பொருளாதார உலகமயமாக்கலின் அடிப்படையாகக் கருதப்படுகின்றது.

மேலும் பிராந்திய ரீதியிலாக செயற்பாடும் பொருளாதார கூட்டுக்களான சர்வதேச நாணய நிதியம் (IMF) பெனலெக்ஸ் (BENELUX) உலகவங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களும் இப்பொருளாதார ரீதியான உலகமயமாதலில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

### 6.0 உலகமயமாதலில் விளைவுகள்

### 6.1 சாதகமான விளைவுகள்

- வளர்ச்சியடைந்த நாடுகள் சார்பான வேலைவாய்ப்புக்களுக்கு வளர்முக நாடுகளில் இருந்து தொழில் இடப்பெயர்வு ஏற்படுவதுடன் உலகின் திறந்த தொழில் சந்தை வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளமை.
- பூகோளமயமாக்கம் காரணமாக செல்வந்த நாடுகளின் உதவிகள் உலகளாவிய உலக நிறுவனங்களின் ஊடாக உலகின் சிறிய வறிய பொருளாதார நாடுகளுக்கு கிடைக்கின்றமை.
- தொழில்நுட்பத்திறன் படைத்த நாடுகளது தொழில்நுட்ப அறிவு உலகமயமாதல் செயற்பாட்டினூடாக தொழில்நுட்பப் பற்றாக்குறை நிலவும் நாடுகளுக்கு கடத்தப்படுகின்றது.
- உலகில் அருமையாக காணப்படுகின்ற வளங்களை பரிமாற்றிக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் விரிவடைதல்.
- வளர்முக நாடுகள் நோக்கிய மூலதனப் பாய்ச்சல் ஊடான முதலீட்டு வாய்ப்புக்கள் அதிகரித்ததுடன் இந்த நாடுகளின் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளும் வளர்ச்சியடைகின்றமை.
- முகாமைத்துவ நுட்பங்கள் திறன்கள் நாடுகளிடையே பரிமாற்ற முடிவதனால் முகாமைத்துவ இயலுமையை விருத்தி செய்யக்கூடியதாக இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ ஜனநாயகம், மனித உரிமைகள், உலகளாவிய அளவில் முதன்மை பெற்றுள்ளமை இதனால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பாதுகாப்பாக அமைந்துள்ளமை போக்குவரத்துத் தொடர்பாடல் சார்ந்த வாய்ப்புகள் உலக நாடுகளுக்கிடையில் விரைவாக விருத்தி பெற்று வருகின்றமை.

◆ சர்வதேச வர்த்தகத்தினை விரிவடையச் செய்துகொள்ளுவதற்கு உதவுகின்றமை.

**6.2 பாதகமான விளைவுகள்**

◆ உலகளாவிய அளவில் சர்வதேச வர்த்தகத்தில் பல் தேசிய கம்பனிகளின் ஆதிக்கம் அதிகரிப்பதுடன் இது அபிவிருத்தி அடைந்த பொருளாதார வல்லரசுகளுக்கு வாய்ப்பாக அமைகின்றமை அதாவது சர்வதேச வர்த்தகம் விருத்தி அடைந்த நாடுகளுக்கு வாய்ப்பாக அமைகின்றமை.

◆ உயர்மூலதன வாய்ப்புக்கள் உடைய விருத்தியடைந்த நாடுகளுக்கு குறைந்த மூலதன வாய்ப்புக்களை கொண்ட விருத்தி அடைந்து வரும் நாடுகளுடைக்கிடையில் வருமான சமமின்மை அதிகரித்துச் செல்லுதல்.

◆ மேற்கு உலகின் வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் கிழக்கின் சீனா ,யப்பான் ஆசிய நாடுகளுக்கும் இடையில் மேற்கு கிழக்கு வர்த்தக மோதல் அதிகரித்துச் செல்கின்றமை.

◆ சிறிய வறிய பலவீனமான பொருளாதாரங்களும் அவை சார்ந்த மொழி, இன பண்பாட்டு கலாசார கோலங்களும் மிக விரைவில் இழக்கப்படும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றமை.


◆ ஐக்கிய அமரிக்காவின் பொருளாதார பாதுகாப்பு தனித்துவம் முதன்மைப்படுத்தப் படுகின்றமையால் உலகளாவிய அளவில் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுகின்றமை.

◆ சிறுவர் துஷ்பிரயோகம், விபச்சாரம் தீமையான உணவுப்பானங்கள், மரபு உரிமைப் பாதிப்பு, தொடர்பாடல், தொழில்நுட்ப மோசடிகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லுதல்

---

# My School

The name of my school is Kn/ Veravil Hindu maha vidyalayam It is a mixed school. my school is very big. It has about 300 students and 21 teacher'S It has Four buildings and a playground there is an office, science Laboratory, Canteen , Computer room in my school. It is developing daily . I Love my school I want my school to be a leading school in sri lanka.



R. Jaan Harish
Grade - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி பரமேஸ்வரி சோதிலிங்கம்
அதிபர்
கிளி / வேரவில் இந்து ம.வி



**சமூக மயமாக்கல் என்றால் என்ன என பொதுவாகக் கருதும்போது ஒருவர் சமூகம் எனப்படுகின்ற மக்கள் கூட்டத்தினருடன் எவ்வாறாக தொடர்புகளைக் கொண்டுள்ளார். அவரின் நாளாந்தச் செயற்பாடு சமூக அங்கத்தவர்களை எவ்வாறு கவருகின்றது. ஒருவருக்கிடையே ஒருவர் தொடர்புகளை பேண வேண்டியதன் அவசியம் என்ன என்பன பற்றிய ஒரு ஆய்வே சமூகமயமாக்கலாக கொள்ளமுடியும்.**

# பிள்ளையின் சமூக மயமாக்கலில் குடும்பத்தின் பங்கு

சமூகமயமாக்கல் தொடர்பாக பல அறிஞர்களும் பலவிதமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். " அறியாப் பருவக் குழந்தை சுயவிழிப்புணர்வும் அறிவும் பெற்று மனிதனாக வளர்ச்சி பெறவும் தான் பிறந்த சமூகத்தின் கலாசார நடைமுறை களை அறிந்து அவற்றை பேணுவதில் திறன் பெறவும் இட்டுச்செல்லும் செயன்முறையே சமூக மயமாக்கல் ஆகும்" என்று இடபில்ஸ் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக மயமாக்கல் என்பது தனிநபர் சமூக உறுப்பினர்கள் ஆவதற்கு அல்லது சமூகத்தின் கூறுகளில் உறுப்பினர்கள் ஆவதற்கு நிகழ்த்தப்படும் செயன்முறை என்று பரந்த கருத்தில் பொருள் கொள்ளலாம். வாழும் கலாசாரத்தின் அல்லது உப கலாசாரத்தின் விழுமியங்கள் மரபுகள், நோக்குகள் என்பவற்றை தனி நபர்கள் எவ்வாறு கைக் கொள்கின்றார்கள். அல்லது விலக்கி வைக்கிறார்கள் என்ப துடன் இது தொடர்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிநபர்கள் தாம் சார்ந்த சமூகத்தின் கலாசாரத்தை கற்றறிந்து கொள்கின்ற செயன்முறையே சமூக மயமாக்கல் சமூக மயமாக்கலுக்கு உட்படுத்தப்படாத எவரும் அவர் வாழ்கின்ற சமூகம் விதித்த நியமங்களுக்கு ஏற்ப இயல்பான மனிதராக கருதப்படமாட்டார். சமூக மயமாக்கல் என்பது ஒரு செயன்முறையாகவே காணப்படுகின்றது. தனிநபரை மாற்றி அமைத்து சமூகத்தின் அல்லது கலாசாரத்தின் அங்கமாக மாற்றியமைக்கப்படுகின்றது. சமூக மயமாக்கல் எனும் செயன்முறையானது இரண்டு தெளிவான கருத்துக்களைக் கொண்டுள்ளது என "கெஸ்காஸ்" குறிப்பிடுகின்றார்.

1. சமூக தேவைகளுடன் ஒத்துப் போதலும் இசைவு பெறுதலும்
2. தன்னம்பிக்கை உடனான ஆளுமை நிறைந்த மனிதனாக தனிநபர் பரிணமித்தல்

அதாவது புதிதாக பிறந்த குழந்தை ஒன்று படிப்படியாக குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்வதாலும் இடைத்தாக்கத்திற்கு உட்படுவதாலும் தான் யார் என்பதை ஏனைய உறுப்பினர்கள் யார் என்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது. இந்நிலையிலேயே சமூக மயமாக்கல் ஆரம்பிக்கின்றது. இதன் பிரதான முகவர்களாக குடும்பம் ஒத்த வயது குழு பாடசாலை ஆகியன முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதில் குடும்பத்தின் வகிபங்கானது மிகவும் பிரதானமானதாக விளங்குகின்றது.

குடும்பம் ஒரு சமூக நிறுவனம் என்ற வகையில் பிள்ளைகளை சமூக மயப்படுத்தலும் பராமரித்தலும் அதன் பிரதான காரணியாகும். இதனால் தான் குடும்பம் சமூக மயமாக்கலுடன் அதிகம் நெருங்கிய தொடர்பு கொண்டதாகக் கருதப்படுகின்றது. குடும்ப உறுப்பினர் ஒருவர் சமூக உறுப்பினராக தகைமை பெறுவதற்கும் குடும்பத்தில் நிகழ்த்தப்படுகின்ற சமூக மயமாக்கல் முக்கியமானதும் பயனுறுதி வாய்ந்ததுமாக விளங்குகின்றது. காரணம் குடும்பத்தில் உறுப்பினர்களிடையே இறுக்கமான இசைவான நீண்ட காலம் நிலைத்திருக்கின்ற உறவு காணப்படுகின்றது.

குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்தது தொடக்கமே அதன் சமூக மயமாக்கலும் ஆரம்பமாகின்றது. பிறந்த குழந்தை தனது தாய் தந்தையை இனங்காணல் அவர்களுடனான பிணைப்புத் தனது சகோதரர்களை இனங்காணல் என எல்லாமே சமூக மயமாக்கல் செயற்பாடாகவே அமைகின்றது.

குடும்பபன்மைத்துவம் தொடர்பான ஆய்வில் றப்போவோர்ற் அவர்கள் ஐந்து வகையான பண்பைத் தத்துவங்களாக இனங்கண்டு விளக்கியுள்ளார்.

1. ஒழுங்கமைப்புச் சார்ந்தது
2. கலாசாரம் சார்ந்தது
3. வகுப்பு சார்ந்தது
4. வாழ்க்கை நெறி சார்ந்தது
5. கூட்டுத்தொடர்பு சார்ந்தது

இன்றைய அவசர யுகத்தில் மனிதன் இன்னொருவருடன் அன்பாக உரையாடவே நேரமில்லாமல் திண்டாடுகின்றார்கள். வாழ்க்கைச் சுமை வாழ்வியலின் தேவைகளை நிறைவு செய்ய குடும்பத்தில் இருவருமே வேலைக்குச் செல்லவேண்டிய அவசிய தேவை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமைப்பாடு சமூக மயமாக்கலில் பாரிய பின்னடைவை ஏற்படுத்துகின்றது. இதற்கு மேலதிகமான குடும்பங்கள் அவற்றின் குடும்ப கட்டமைப்புக்களையும் பரந்த சமூக சூழலுடனான தொடர்புகளையும் பல்வேறு விதமான கலாசார அடிப்படையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்களில் காணப்படும் நம்பிக்கைகள் விழுமியங்கள் என்பவற்றின் பின்னமை வுறும் பாங்கு சமூகமயமாக்கலில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அத்தோடு இன்னமும் நமது சமூகத்தில் ஆழப் புரையோடி இருக்கின்ற சமூகவர்க்க ஜாதி பேதங்கள் எல்லாமே குடும்ப அமைப்பில் பாரிய வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன.

குடும்பமானது பாலியல் இனவிருத்தி பொருளாதாரம் கல்வி என்பன தொடர்பான நான்கு அடிப்படை தொழிற்பாடுகளை ஆற்றுகின்றது என மே டொக் என்பவர் குறிப்பிடுகின்றார். இவை யாவும் சமூக வாழ்விற்கு முக்கியமானவையே. பாலியல் மற்றும் இனவிருத்தி செயற்பாடுகள் நடைபெறாவிட்டால் சமூகத்தின் உறுப்பினர் களே இருக்கமாட்டார்கள். பொருளாதார தொழிற்பாடு நடைபெறாவிட்டால் வாழ்க் கையே முற்றுபெற்றுவிடும். கல்விசார் தொழிற்பாடுகள் இல்லாது போனால் கலாசாரமே அழிந்து விடும். எனவே பிள்ளைகளைப் பராமரித்தலும் அவர்களை சமூக மயமாக்கலும் அதி முக்கியம் வாய்ந்த சமூகப் பணிகளாக குடும்பத்திடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கான சமூக மயமாக்கலில் குடும்பத்தின் ஒழுங்காக்க அமைப்பு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஒழுக்கமான சமூக அமைப்புக்கு கட்டுப்பட்டு நடக்கின்ற பெற்றோரின் பிள்ளைகள் ஒழுக்கமான சமூக மயமாக்கலை பெற்றுக் கொள்கின்றனர். அதேபோன்று பிறழ்வான நடத்தை கொண்ட பெற்றோரின் பிள்ளைகள் இந்த சமூக மயமாக்கலை பெறமாட்டார்கள்.

**உதாரணம்** -

தாய் தந்தை பிரிந்து வாழுதல் விவாகரத்து, மற்றும் மது பழக்கம் போன்ற பெற்றோரின் பிள்ளைகள் பிறழ்வான நடத்தையை கொண்டவர்களாக அடையாளம் காணமுடியும்.

மூன்று வகையான பெற்றோர் பற்றி போம்றின்ட் என்பவர் குறிப்பிடுகின்றார்.

1. கடுமையற்ற பெற்றோர்கள் பேரூக்கம் உள்ள பிள்ளைகள்.
2. அடக்கி ஆளும் பெற்றோர்கள் எளிதில் சினம் கொள்ளும் பிள்ளைகள்
3. அதிகார வன்மை பெற்றோர்கள் சிநேக பாவமான பிள்ளைகள்

இவ்வாறு பெற்றோரின் தன்மையை பெ..றுத்து பிள்ளையின் சமூக மயமாக்கலில் குடும்பத்தின் பங்கினை நாம் அறிந்து கொள்ளலாம். அவ்வாறே பிள்ளையின் சமூக மயமாக்கலின் பாலியல் சார் வேறுபாடுகள் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் பிள்ளைகளுக்கு சிறுபராயத்திலேயே தெளிவான விளக்கத்தினை பெற்றோர் விளக்குதல் அவசியம். அவ்வாறு செய்யாத காரணத்தினால் பிள்ளை வாழ்நாளிலே பல தவறுகளை விடுவதற்கு ஆளாகின்றான். அத்தோடு பணிவு நட்புடமை நேய மனப்பான்மைகள் மூலமாக சமூக மயமாக்கலுக்கு உள்வாங்கப்பட வேண்டும். இதுவும் குடும்பத்தின் பாரிய பொறுப்பாக உள்ளது.

ஒரு பிள்ளை பெற்றுக்கொள்ளும் சமூக மயமாக்கலானது அதன் குடும்பத்தின் ஒழுக்கங்களால் பின்னணி வகுப்பு வாழ்க்கை நெறிமுறை மற்றும் சமூக தொடர்பு பண்புகள் என்பனவற்றின் அடிப்படையிலான பிள்ளை வளர்ப்பு நடைமுறைகள் மொழிக்குறியீடுகள் மற்றும் விழுமியங்களின் போக்குகள் என்பவற்றை பிரதிபலிப்பாக சமூக மயமாக்கலில் குடும்பத்தின் வகிபங்கு அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு.தர்மரத்தினம்
B.A. Hones, MA, PGDE, PGDEM, (meri
M.ED (merit) SLPS
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
பூநகரி.



# மானிடமே இவர்களையும் வாழ விடுங்கள்..!

**"தோன்றிற் புகழோடு தோன்றுக, அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று"**

என்பது வள்ளுவர் வாக்கு. மானிடராகப் பிறந்த எல்லோருமே இன்பங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வாழ்வது இயற்கையின் நியதி. ஆனால் சிலருக்கு வாழ்வே சூனியமாக அமைவது இயற்கையின் நியதியல்ல. மானிடத்தின் மாண்பற்ற செயலாகும். அந்த வகையிலே நோக்கும் போது ஒரு பிள்ளையினுடைய வளர்ச்சிப்படிகளிலே முக்கிய பங்காற்றுபவர்களாக குடும்பம், பாடசாலை, சமூகம் என்னும் நிறுவனங்கள் விளங்குகின்றன. ஆனால் இம்மூன்று நிறுவனங்களும் விடுகின்ற சில தவறாலே சில பிள்ளைகளின் வாழ்க்கை மண்ணாகிப் போவதனை கண்ணூடே காணக் கூடியதாக உள்ளது.

முதலில் குடும்பம் என்ற அலகை நோக்குகின்ற போது குடும்பமானது தாம் ஈன்றெடுக்கும் மழலைச் செல்வங்களை சீராட்டிப் பாராட்டி வளர்த்து அவர்களை மனிதனாக்குகின்ற பாரிய பொறுப்பு அவர்களிலேயே தங்கியுள்ளது. ஆனால் குடும்பங்கள் விடுகின்ற தவறுகளாலே பிள்ளையினுடைய வாழ்க்கை சீரழிந்து விடுகிறது. தந்தை யாரெனத் தெரியாத பிள்ளை, தாய் யாரெனத் தெரியாத பிள்ளை, தாய் தந்தை யாரெனத் தெரியாத அநாதை. இதுமட்டுமல்ல குடும்ப உறவிலே ஏற்படுகின்ற பிளவுகள் குழந்தைகளை நீதிமன்றங்களின் முன்நிறுத்தி ஏலம்போடுகின்ற நிலை. இதுபோன்ற இன்னோரன்ன நீதியற்ற நடவடிக்கைகளால் சில பிள்ளைகளின் வாழ்க்கை சிறு வயதிலேயே சின்னாபின்னமாகி சீரழிந்து விடுகின்றது.

மேலும் குடும்பங்களிலே காணப்படுகின்ற மது, போதைப் பொருள் பாவனையால் நாளாந்தம் வேதனைப்படும் இளம் உள்ளங்களின் நிலையை எப்படிக்கூறுவது. இருந்தும் தாங்களும் வாழவேண்டும் என்ற மனத்தைரியத்திலே கல்வி என்ற மூன்றெழுத்தைக் கற்பதற்கு பாடசாலை என்ற நிறுவனத்துள் காலடியெடுத்து வைக்கின்றனர்.

ஆனால் பாடசாலை வாழ்க்கையும் தமக்கு சூனியமாக அமையப் போகின்றதை முன்கூட்டியே அறிய வாய்ப்பேதுமில்லை. பல்வேறு மாணவர்கள் மட்டுமல்ல படித்த புத்திஜீவிகள் கூட இவர்கள் மீது கூறுகின்ற வார்த்தைப் பிரயோகங்கள் எண்ணிலடங் காதவை. "அதுக்குத் தாய் தந்தை யாரென்று தெரியாது . அதுஒரு அநாதை . அதுஒரு தவறான வழியில் பிறந்த குழந்தை. அதுகளின் குடும்பம் உதவற்ற குடும்பம். தந்தை ஒரே குடியும் கூத்தாட்டமுந்தான்." இப்படி யாதுமறியாத அந்த இளம்பிஞ்சுகள் மீது கொட்டித்தீர்க்கும் பழி பாவங்கள் சொல்லில் அடங்காதவை. நாளொன்றிற்கு பாடசாலை வராவிட்டால் வழங்கப்படும் தண்டனைகள் ஏன் அந்தப்பிள்ளை பாடசாலைக்கு வரவில்லை. காரணம் என்ன? அப்பிள்ளையின் குடும்பப் பின்னணி யென்ன? எவற்றையுமே அறிவதில்லை. படிக்க வேண்டிய அந்தச் சிறு வயதிலே தானாவது உழைத்து அந்தக்குடும்பத்தை காப்பாற்றுவோம் என்று எண்ணும் அந்த ஜீவன்கள் ஒருகாலை பாடசாலையிலும் மறு காலை உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றுவதிலும் ஈடுபடுத்துகின்றனர். இதுதான் இவர்கள் செய்யும் பிழை. இதற்குத் தான் இத்தண்டனைகள், இப்படிப்பட்ட நடவடிக்கைகளால்தான் அப்பிள்ளைகளின் மனநிலை பாதிக்கப்பட்டு பிழையான சீராக்கம் பெற்றவர்களாக மாறுகின்ற சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இதனால் பாடசாலைக் கல்வியை இடையிலேயே நிறுத்தி சமூகம் எனும் நிறுவனத்திற்குள் நுழைகின்றனர். சமூகமும் இவர்களை சமூக அந்தஸ்து கொடுத்து மதிப்பதில்லை. படிப்பறிவு அற்றவர்கள், ஒழுக்கமற்றவர்கள், உதவாக்கரையென்று கீழ்த்தரமான வார்த்தைகளைக் கூறி அவர்களின் மனநிலையை மேலும் பாதிப்படைய வைக்கி ன்றனர். இதனால் அப்பிள்ளைகள் பிழையான சீராக்கத்திலிருந்து நெறி பிறழ்வுத்தன்மைக்கு தம்மையிட்டுச் செல் கின்றனர். இதன் காரணத்தால் பல்வேறு தீய நடத்தையிலே ஈடுபட்டு நீதி மன்றங்களாலே குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்டு



சமூகத்திலே ஏற்றுக் கொள்ளப்படாத வர்களாகத் தள்ளப்படு கின்றனர்.

இப்பிள்ளைகள் இந்நிலைக்காளா வதற்கு யார் காரணம்? பிள்ளைகளா? அல்லது குடும்பம், பாடசாலை, சமூகம் என்ற அமைப்புக்களா? சற்றுச் சிந்தி யுங்கள். இவர்கள் குற்றமற்றவர்கள் சமூக அந்தஸ்தோடு வாழவேண்டியவர்கள். தாங்களாக இந்த நிலைக்கு வந்தவர் களல்ல. எனவே இவர்களுக்கு மனிதர் களாக வாழ

**மானிடமே உதவி புரியுங்கள்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய மிலேனியத்தில் மனித குலம் எதிர்நோக்கும் தலையாய அச்சுறுத்தல் நாடுகளிடையில் இனம், மதம், மொழி ரீதியாக ஏற்பட்ட போட்டிகள் காரணமாக உலகநாடுகளிடையே ஏற்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகள் ஆகும். இவற்றையும் விஞ்சும் அளவிற்கு ஒலி எழுப்பாது எம்மையெல்லாம் அச்சுறுத்துவது உலகில் அதிகரித்து வரும் சனத்தொகை என்றால் இக்கருத்தில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. இவ்விரைவு இருக்கும் வேகத்திலேயே போய்க்கொண்டிருந்தால் பூமியில் மிஞ்சுவது பட்டினி, கொள்ளை நோய்கள், இயற்கை அனர்த்தங்கள் மட்டுமே. இவ்விடயம் குறித்து பலதசாப்தங்களுக்கு முன்பே அறிஞர்களால் பேசப்பட்டு வந்தாலும் தற்போது இது அதிகளவில் எல்லோராலும் உணரப்பட்டு வருகின்றது.

பூமி மட்டுமே மனித வாழ்க்கைக்கு மிகப் பொருத்தமான கிரகம் இன்று ஏறத்தாழ 7 பில்லியன் மக்கள் பூமியை ஆக்கிரமித்து உள்ளனர். 1950 ஆம் ஆண்டளவில் சனத்தொகை வெறுமனே 2.5 பில்லியன் மட்டுமே. 18 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி காரணமாக மருத்துவம், உணவு, உற்பத்தி உட்பட அனைத்து விடயங்களிலும் ஏற்பட்ட துரித வளர்ச்சி சனத்தொகையிலும் துரித வளர்ச்சி

# உலகின் சனத்தொகையும், அச்சுறுத்தல்களும்

திருமதி.கி.மதுரநாயகம்
உப அதிபர்
கிளி / வேரவில் இ.ம.வி



காணதூண்டுதலாக அமைந்தன. இப்போக்கின்படி அவதானிக்கும் போது 2050 ல் ஏறத்தாழ 9.2 பில்லியனை எட்டிப்பிடித்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகின் பொதுவான சனத்தொகைப் பரம்பலை அவதானிக்கும் போது உலக சனத்தொகையில் 64%ஆனோர் 10 % நிலப்பரப்பில் வாழ்கின்றனர். உலக மொத்த சனத்தொகையில் அரைவாசிப்பேர் ஆசியக் கண்டத்தில் வாழ்க்கின்றனர். உலகில் 90 % ஆனவர்கள் வட அரைக்கோளத்தில் வாழ்கின்றனர். உலக சனத்தொகையில் 60 % ஆனோர் பிரதான 10 நாடுகளில் வாழ்கின்றனர். குறிப்பிட்ட 10 நாடுகளில் 2050 ல் ஐக்கிய அமெரிக்கா தவிர ஏனைய 9 நாடுகளும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளாகும் இவ்வாறாக சனத்தொகை பரம்பலில் வேறுபாடுகளை அவதானிக்க முடிகின்றது.

உலக சனத்தொகை வளர்ச்சியை அவதானிக்கும் போது மனித இனம் பல மில்லியன் வருடங்களுக்கு முன் வாழ்ந்தாலும் முறையான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. பின்னர் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக ஒழுங்கான கணிப்பீட்டைப் பெறக்கூடியதாக உள்ளது. உலக சனத்தொகை வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் மந்தமானதாகவும்,கைத்தொழில் புரட்சியுடன் துரிதகதியிலும், அண்மைக்காலங்களில் ஒவ்வொரு நாடுகளும் கடைப்பிடித்து வரும் சனத்தொகை சார் சட்ட திட்டங்கள், தமது நாட்டில் உயர் வாழ்க்கைத் தரத்தை உருவாக்குவதற்காகவும் சமூகத்தில் பல விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் ஏற்படுத்தி வருகின்றன. இதனால் நாடுகளுக்கிடையே சனத்தொகை வளர்ச்சியானது மறைப்பெறுமானத்தில் உள்ளமையையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. குறிப்பாக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைவடைவதையும்,அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அதன் வேகம் உயர்மட்டமாகவே காணப்படுவதையும் கூறலாம். எவ்வளவுதான் சட்டதிட்டங்கள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொண்டாலும், இந்தியாவில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஒரு வாயுடன் மட்டுமல்ல இரண்டு கைகளுடனும் பிறக்கின்றன என்ற கருத்தில் சனத்தொகை அளவில் முதனிலை வகிக்கும் சீனாவைத் பின்னுக்குத் தள்ளிவிட்டு முதலிடத்திற்கு வரும் நிலையில்தான் இந்தியா உள்ளது. ஆனால், உலகை முழுமையாக நோக்கும் போது சனத்தொகை வளர்ச்சி வீழ்ச்சியடைந்து செல்வதாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

எனவே, சனத்தொகை வளர்ச்சி தொடர்பில் அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் வெவ்வேறான பிரச்சினைகளை அனுபவிக்கின்றனர். குறிப்பாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பொருளாதாரம் சார் பிரச்சனைகளாக வேலையில்லாப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிக செலவு ஏற்படல், உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய கூடிய நிதி வசதி ஏற்படல் என்பனவும், விவசாயம் சார் பிரச்சனைகளாக தனியாள் நில நுகர்வின் அளவு குறைதல், நிலம் துண்டாடப்படல், காடழிப்பதால் காட்டுவளம் அழிதல் என்பனவும் சமூகம் சார் பிரச்சினைகளாக வீட்டுப் பற்றாக்குறை, மூளைசாலிகள் வெளியேற்றம், சேரிகள் உருவாதல், குப்பை கூழங்கள் அதிகரித்தல், சுகாதாரம் சார் பிரச்சினைகளாக தொற்று நோய்கள் பரவல் துரிதமாதல், சுத்தமான குடிநீரைப் பெறமுடியாமை என்பன பிரச்சினைகளாக அமைகின்றன.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் போதுமான சனத்தொகை அங்கு இல்லாமையே முக்கிய பிரச்சினையாகும். ஏனைய ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் மறைப் பெறுமானத்தில் தான் சனத்தொகை வளர்ச்சி காணப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இருந்து ஐரோப்பிய நாடுகளை நோக்கி வெளியேறும் மூளைசாலிகளே அந்நாடுகளுக்கு முக்கியமான மனித வளமாகின்றனர்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வாழும் மக்களே உலகில் உள்ள உணவுகளையெல்லாம் உண்டு முடிப்பதாக குற்றம் கூறப்படுகின்றது. அமெரிக்க விவசாயத்துறை வெளியிட்ட அறிக்கையின்படி உலகில் பெரும்பகுதி மக்களின் வயிறு வெறுமையாக கிடந்து துடிக்க அமெரிக்கர்கள் எந்தச் சங்கடமும் இல்லாமல் தங்கள் வாகனங்களில் எரிபொருள் தாங்கிகளில் சோளத் தானியங்களை நிரப்பி வருகின்றனர். பெரும்பகுதியாக உற்பத்தியாகும் சோளம் விலங்குணவாகவும்,எதனோல் எரிபொருள் தயாரிப்பிற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

இவ்வாறாக ஒரு ஒத்திசைவு இல்லாத சனத்தொகைப் பெருக்கமே உலகை அச்சுறுத்தும் விளைவுகளைக் கொண்டு வரும் என இங்கிலாந்தைச் சேர்ந்த பொருளியல் நிபுணர் தோமஸ் மல்துஸ் என்பவர் ஏற்கனவே எச்சரித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக ஆய்வாளர்கள் அவரது கொள்கையை எதிர்த்தாலும் அதீத சனத்தொகை அதிகரிப்பு காரணமாக அதிகரித்த நுகர்வு காரணமாக இயற்கையின் மீது மனிதன் ஏற்படுத்தி வரும் அதீத செயற்பாடுகள் மனிதனுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தி வருகின்றன என்பது கண்கூடு.

தனக்கு பின்வரும் தலைமுறைக்கு கூட மிகுதி என ஒன்றையும் விட்டு வைக்காமல் இயற்கையைச் சூறையாடி வருகின்றான். வளங்கள் அனைத்தும் தேய்மானத்திற்கு உட்படுகின்றன. நிலைதகு பேண் அபிவிருத்தி பற்றிய எண்ணக்கரு அண்மையில் அனைத்து விடயங்களிலும் பேசப்பட்டாலும் உலக வல்லரசுகள் கூட அதைப் பற்றி கருத்தோடு செயற்படுவதில்லை என்பது தெளிவு. மேலும், சுற்றுச் சூழல் கழிவுகளால் நிரப்பப்படுகின்றது. வளிமண்டலத்தில் பச்சை வீட்டு வாயுக்கள் அதிகரிக்கின்றது. பூமி வரட்சி, ஓசோன்படை தேய்வு,உயிர்பல்வகைமை அழிவு, பனிக்கட்டி ஆறுகள் உருகுதல் அதன் காரணமாக நீர்மட்டம் உயர்வடைந்து பூமி வெப்பம் அதிகரித்தல் போன்ற எல்லா நெருக்கடிகளுக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சனத்தொகை அதிகரிப்பு காரணமாகின்றது என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

எனவே, இவ்வாறான நெருக்கடிகளில் இருந்து நாம் ஒவ்வொருவரும் தப்பித்துக் கொள்ள அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மட்டுமல்ல அபிவிருத்தி அடைந்த நாடுகளும் முன் வரவேண்டும். அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு இணையாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் வாழ்க்கைத் தரத்திலும், கல்வியறிவிலும் ஏற்படும் வளர்ச்சியே சனத்தொகையை தானாகக் ஒரு கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரும். அபிவிருத்தி அடைந்த நாடுகளும் தம் ஆடம்பரமான மிகை நுகர்ச்சியை ஓரளவுக்கு குறைத்துக் கொண்டு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு பரஸ்பர ஒத்துழைப்புக்களை வழங்கினால் அவை கல்வி அறிவிலும், வாழ்க்கைத் தரத்திலும் முன்னேற்றம் கண்டு விடும்.

---

## எனது பாடசாலை

ரா.யான்றெய்சன்
தரம் –01 மாணவன்
கிளி / வேரவில் இ.ம.வி

- எனது பாடசாலை கிளி / வேரவில் இந்து மகா வித்தியாலயம் ஆகும்.
- இது வேரவில் எனும் கிராமத்தில் அமைந்துள்ளது.
- எனது பாடசாலை அதிபரின் பெயர் திருமதி. சோதிலிங்கம் பரமேஸ்வரி.
- எனது பாடசாலை 21 ஆசிரியர்களையும் சுமார் 380 மாணவர்களையும் கொண்டதாகும்.
- எனது பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் உயர்தரம் வரையான வகுப்புக்கள் உள்ளன.
- எனது பாடசாலை அழகான தோற்றத்தில் சகல வசதிகளையும் கொண்டது.
- இங்கு கணினி அறை, விஞ்ஞானகூடம் , நூலகம், சங்கீத அறை எனப் பல வசதிகளைக் கொண்டது.
- எனது பாடசாலை மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாது போட்டிகளிலும் பங்கு பற்றி வெற்றி பெற்று பாடசாலைக்கு பெருமை தேடித் தருகிறார்கள்.
- நான் எனது பாடசாலையை மிகவும் நேசிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.டயானா
2ம் வருடம்
யாழ்- பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
(பழைய மாணவி)

# ஆளுமை

" எண்ணிய எண்ணியாங்கு எய்துப
எண்ணியார் திண்ணியராகப் பெறின்"

இளைஞர்களது ஆளுமை விருத்தியில் மனஎண்ணங்களும் தளராத மனவுறுதியுடன் கூடிய செயற்பாடுகளும் முக்கியத்துவம் பெறுகின்றது. மன உறுதி என்பது பயிற்சியின் மூலம் உருவாகக் கூடியது. எமக்குள்ளே உறங்கிக்கிடக்கின்ற பேராற்றலை வெளிக்கொணர்ந்து ஆக்கபூர் வமான செயற்பாடுகளை செய்வதற்கு அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் அடிப்படை அம்சங்களாகக் கொள்ளப்படு கின்றது.

சமுதாய சந்தர்ப்ப சூழ்நிலையில் ஒருவர் துலங்கும் போது அவர்வெளிக்காட்டும் உடல், உள, அறிவு, சமூக , ஆன்மீக செயற்பாடுகளின் ஒழுங்கமைந்த வளர்ச்சியை "ஆளுமை விருத்தி " என உளவியலாளர்கள் கூறுகின்றனர். உள்ளார்ந்த நிலையில் துடித்துக்கொண்டிருக்கும் மனிதனுக்கு சுதந்திரம் கிடைக்கும் போதுதான் ஆளுமை வெற்றி ஏற்படும்.



பெற்றோர் , ஆசிரியர், சமயகுரு ஆகியோர் ஆளுமையை கட்டியெழுப்புவதில் முதன்மையானவர்கள் . ஆரம்பத்திலிருந்து குழந்தைகளை தட்டிக் கொடுத்து பாராட்டி உற்சாகப் படுத்தும் போது குழந்தைக்கு தன்னம்பிக்கை ஏற்படுவதுடன் ஆளுமையும் வளர்ச்சியடையும்.

ஆளுமை வளர்ச்சியை ஊக்குவிக்கும் காரணிகளாக சுயஅன்பு, சுயசாயல், சுய ஏற்றல், சுயமதிப்பீடு, சுயபாராட்டு , பெற்றோர், பரம்பரை சூழல் காரணிகள், பொருளாதார நிலை என்பன அமைகின்றன. 5 வயது அல்லது 7 வயது வரையான காலம் ஆளுமை வளர்ச்சிக்கு முக்கியமான காலப் பருவமாகக் கருதப்படுகிறது.

இளமைப் பருவம் அழகானது ஆனால் சிக்கல்கள் நிறைந்தது. இப்பருவத்தில் பாலியல் உடல்கூற்று வளர்ச்சியோடு உணர்வுகளும் வளர்ச்சி பெறுகின்றன. பெற்றோர் ஏதோவொன்றை எதிர்பார்க்க இளைஞர்கள் வேறு ஏதோவொன்றை எதிர்பார்க்கின்றனர். "ஒருவனை நேசிக்க வேண்டுமாயின் முதலில் அவனைப்பற்றி நன்கு தெரியவேண்டும்" என உளவியலாளர்கள் கூறுகின்றனர். பெற்றோர், பிள்ளைகளுடன் நன்கு உரையாடி அவர்களைப்பற்றி அறிய வேண்டும் சிறுசிறு விடயங்களினால் பெற்றோர், பிள்ளைகள், உறவு பாதிக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமை வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. பெற்றோர் , பிள்ளைகளுடன் நன்கு உரையாடி அவர்களைப்பற்றி அறிய வேண்டும் சிறுசிறு விடயங்களினால் பெற்றோர், பிள்ளைகள், உறவு பாதிக்கப்பட்டு ஆளுமை வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. பெற்றோர், பிள்ளைகளது உறவில் பாரிய இடைவெளி காணப்படுவதற்கு புரிந்துணர்வின்மை முக்கிய காரணியாக அமைவதை அவதானிக்க முடியும். சிறுவர்களை பொறுத்த வரை பாதுகாப்புத்தேவை, அன்புத்தேவை, கணிப்புத்தேவை ஆகியன ஆளுமை வளர்ச்சியில் முக்கியமான இடத்தை வகிக்கின்றது.

வீட்டிலிருக்கும் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியில் பெற்றோர்களின் செல்வாக்கு முக்கியமாக அமைகின்றது. பாடசாலை செல்லும் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியில் பாடசாலைச் சூழல் முக்கியமாக அமைகின்றது. பதின்ம வயது சிறுவர்களில் சகபாடிகளது செல்வாக்கு முக்கியமாக இருக்கின்றது. இந்தப் பருவத்தில் தான் அனேகமான மதுபான போதைவஸ்து பாவனை அறிமுகமாகின்றது. காதல் தோல்விகளால் நம்பிக்கையின்மை எனும் நிலை ஏற்படுவதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

உடலியற்காரணிகள் தன்னம்பிக்கை, முயற்சி, உறுதியான இலட்சியம், திட்டமிட்டு செயற்படுதல் மனத்துணிவு ஆகியவையும் ஆளுமை விருத்தியில் பிரதான காரணி களாக அமைகின்றன. தோல்விகள் ஏற்படும் போது மனதை தளரவிடாது தோல்வி தான் வெற்றிக்கான முதற்படி தோல்வி ஏற்பட்டாலொழிய வாழ்க்கையில் எவரும் முன்னேற முடியாது என்ற எண்ணத்துடன் அனுபவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இலட்சியத்தில் உறுதியுடனும், பயமற்றும் ஆர்வத்துடன் அனுபவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இலட்சியத்தில் உறுதியுடனும் பயமற்றும் ஆர்வத்துடன் இருக்கும்போது துன்பத்தை இன்பமாக மாற்றக்கூடிய சக்தி கிடைக்கின்றது. சிறுசிறு விடயங்களில் வெற்றியடையும் போது அதேபோல் மேலும் வெற்றியடைய வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாகும்.

சாத்தியமில்லை என்ற விடயத்தை ஏன் சாத்தியமில்லை? சாத்தியமாக்க என்ன செய்யவேண்டும் என்று ஆராய வேண்டும் கோபம், பேராசை, பொறாமை ஆகியன ஆளுமை வளர்ச்சியை பாதிக்கும் பிரதான காரணிகளாக அமைகின்றன. கோபமாக இருக்கும் போது முடிவெடுக்கக் கூடாது. மேலும் குறித்த நாளில் செய்ய வேண்டிய விடயங்களை குறித்த நேரத்தில் செய்து வாழ்வில் முன்னேறுவதற்கு முக்கியமான விடயமாகும். உடல் உழைப்பாளி ஓய்வு நேரத்தில் மூளைக்கு வேலை கொடுக்கும் விடயங்களான நூல்களை வாசித்தல் போன்றவற்றை மேற்கொள்ளலாம். உள உழைப்பாளிகள் ஓய்வு நேரத்தில் வீட்டுத்தோட்டம் போன்ற உடலுழைப்பு வேலைகளில் ஈடுபடுதல் நன்று.

பூரணமான நித்திரை விரைவான செயற்பாட்டிற்கு அவசியமாகும். நல்லதே நடக்கும் என்ற நேர்முக சிந்தனை சோர்வில்லாமல் பயமின்றி செயற்படுதலும் ஆளுமை விருத்திக்கு அவசியம். கடந்த காலத்தையோ அல்லது எதிர்காலத்தையோ பற்றி அதிகம் கவலை கொள்ளாது நிகழ்காலத்தில் செய்ய வேண்டிய வேலைகளை சரிவர முறையாக செய்து வருவது வாழ்க்கை முன்னேற்றத்தின் அடிப்படை அம்சமாக அமைகிறது.

"இயற்கையை குற்றம்சாட்ட வேண்டாம். அது தனது பங்கை செய்து முடித்துவிட்டது. நீ உனது பங்கை செய்" என்கிறார் கவிஞர் மில்டன் ஆற்றல் என்பது அவனுக்குள்ளேயே இருக்கின்றது. அசையாத நம்பிக்கை ஆளுமைவிருத்திக்கு முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹெலன் கெல்லர்"என்ற அம்மையார் கண்பார்வை, செவிப்புலன் என்பன அற்று இருந்தும் தன்னம்பிக்கையால் வாழ்க்கையில் வெற்றி பெற்றார்.

வாழ்க்கைக்கல்வி ஏட்டுக்கல்வி என கல்வியை இருவகையாக நோக்கக்கூடியதாக வுள்ளது. பாடசாலைக் கல்வியானது விடயங்களை நினைவுபடுத்தும் கல்வியாக அமைகின்றதே தவிர தன்னம்பிக்கை , மன வளர்ச்சி ஆகியவற்றை விருத்தி செய்து வாழ்க்கையை வளப்படுத்தும் ஆக்கச் சக்தியுடன் கூடிய சிந்தனாசக்தியை வளர்க்கும் கல்வியாக அமையவில்லை. இளைஞர்கள், பரீட்சைக்காகவும் , பட்டங்களுக்காக மட்டும் கற்காமல் வாழ்க்கையுடன் கூடிய தொழிற்கல்வியை கற்பது இன்றைய நெருக்கடியான காலகட்டத்தின் முதன்மையான தேவை. ஊக்கமின்மை, ஆர்வமின்மை, பயம், பொருளாதாரப் பிரச்சினைகள், சமூக அந்தஸ்து , கவனக்குறைவு திட்டமிட்டு குவியப்படுத்தி செயற்படாமை , மனவளர்ச்சி குறைபாட்டு நிலைகள் ஆகியன பரீட்சையில் மாணவர் வெற்றியடையாமைக்கான முக்கிய காரணிகளாகக் கொள்ளலாம்.

இயல்பான சமூக நடத்தையிலிருந்து விலகிய நிலையை அசாதாரண ஆளுமை எனலாம். அமைதியான உள்ளத்திருந்தே ஆழமான சிந்தனை உருவாக முடியுமென்பதால் தியானம், யோகாசனம் போன்ற உளமருத்துவ செயற்பாடுகளும், இன்னோரன்னவும் ஆளுமை விருத்தியில் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

---

# My Pet

Puppy is my pet
He is my heart
It s' black and white
Sleep with me all night

When I go to shop
He will be there
When I go to school
He will be there

It eats Fish and meat
I don't Forget to Feed
It drinks milk too
when we are asleep

We play together
We walk together
We run together
We sleep together

I Like it very much
He too love me well
I want him in all my life
because he is my lovely pet



**E.Pavithira**
**Grade - 05**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம்:- சி. பரண்யா
தரம்-11
கிளி / வேரவில் இ.ம.வி

நான் போன பின்பு என்ன தான் மிஞ்சும்?
புல்லின் வெள்ளி முடிகளில் வெண்பனி
தேயும் சந்திரனின் மெல்லிய கீற்று
ஊற்று நீர் இலையுதிர் காலத்து மயக்கம்
கொன் வென் வியூலஸ் மலர்கள் உதிர்ந்த கம்பளம்

அந்தி வானில் மிதக்கும் பறவைகள்
அமைதி கொலுவிருக்கும் இடங்கள்
மரங்களின் மீது மழை பொழியும் ஒலி
தொலைவில்
கடலில் விளிம்பில் குவியும்
பொங்கும் முகிற் குவியல்

கோடை காலத்து
செம்மஞ்சள் ஒளியைப் பிரதி பலிக்கும்
மெழுகுவர்த்தி போன்ற பூக்கள்



# என்னதான் மிஞ்சும் ?

ஒளியைப் பொதிந்திருக்கும் பனி
இரவிவெளை நெருப்பின்
ஒளிவீசும் ஊசிமுனை போன்ற உடுக்கள்
நான் போன பிறகு என்னதான் மிஞ்சும்?

கைவிடப்பட்ட வீடு
திறந்த கதவு
உடைந்து விழும் சுவரில் விழும்
கறுப்பு நிழல்கள்
வெறிச்சோடிய மண்டபத்தின் ஊடே
வீசிய காற்றில் அடிபட்டு
நிலத்தில் கிடக்கும்
முற்றுப்பெறாத கவிதை ஒன்று..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா. கீர்த்தன்
தரம் -13
கலைப்பிரிவு

# " நனோ உயர் தொழில்நுட்பம் பற்றிய அறிமுகம்...

நனோ உயர்த் தொழில்நுட்பம் என்பது "நனோ"தொழில்நுட்பத்தின் பயன்பாடாக உயிரியல் மற்றும் உயர்வேதிச் செயல் முறைகளின் தொகுப்பாகும். நனோ உயர்த் தொழில் நுட்ப மானது எளிய மற்றும் நுண்ணிய உயர் வேதிச் செயற்பாடுகளைப் பற்றிக் கற்றல் மற்றும் பயன்பாடுகளை அறிதலாகும்.

நனோ தொழில்நுட்பத்தின் மருத்துவப் பயன்பாடு " நனோ" மருந்தியலாகும். நனோ மருத்துவத்தில் நனோ அளவு கொண்ட பொருள்களின் மருத்துவச் செயற்பாடு மற்றும் அவற்றின் சுற்றுச்சூழல் விளைவு விரிவாக அறியப்படு கின்றது. இம் முறையில் " நனோ" அளவில் புதிய மருந்துகளைக் கண்டறிதல், புதிய மருத்துவ முறைகள் மேம்படுத்தப்பட்ட மருந்து செலுத்தும் அமைப்புக்கள் மற்றும் நரம்பு மண்டல மின்னணு ஆகியவற்றில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் 3.8 மில்லியன் டாலர்கள் இம் மருத்துவத்திற்காகச் செலவிடப்படுகின்றது.

புற்றுநோயைக் குணப்படுத்துவதில் கார்பன் " நனோ" துகள்கள் பயன்படுத்தப் படுகின்றன. புற்றுநோயால் தாக்கப்படும் செல்கள் போலிக் அமிலத்தை அதிக அளவில் உறிஞ்சக் கூடிய தன்மை உடையவை.

கார்பன் நனோ இத்தகைய புற்றுநோய்ச் செல்களை அடைந்து, அவற்றுள் ஊடுருவி விடுகின்றது. அந்தப் பகுதியில் வெளிக் காந்தப் புலத்தினால் அதிர்வுகளை ஏற்படுத்தும் போது புற்று நோய்ச் செல்கள் இறந்து விடுகின்றன. எனவே புற்று நோயைக் குணப்படுத்த " நனோ" உயர் தொழில் நுட்பம் உதவுகின்றது.

மேலும் தற்போது " நனோ" சீரியம் ஆக்னைஸ்டுகளின் பயன்பாடுகள் மருத்துவ உலகில் மகத்தான பணியாற்றுகின்றது.

நனோ மருத்துவத்தின் மூலம் உருவாக்கப்படும் " நனோ" ரோபோக்கள் உடலில் செலுத்தும் போது குறிப்பிட்ட இடத்தில் செயலாற்றி நோயைக் குணப்படுத்துகின்றது. இவ்வாறு " நனோ" தொழில்நுட்பமும் உயர்த்தொழில் நுட்பமும் இணைந்த நனோ உயர் தொழில்நுட்பமானது மனித குலத்திற்குப் பல்வேறு நன்மைகளைப் புரியும் என்பதில் ஐயம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துவோம் இந்துவை...



வடபால் ஈழத்தில்
வளம் பல கண்ட பூமி
நெல்லின் களஞ்சியம்
கிளிநொச்சி என்றே - பலரும்
போற்றிடும் மாவட்டத்தில்
பழம் பெரு மக்கள்
பலம் தந்த பூநகர்
இணைந்திட்ட வேரவில்
வியர்வை சிந்தி உழைத்து
உழைப்பின் பயனாய்
அமைந்த கல்லூரியது
வேரவில் இந்து மகாவித்தியாலயம்
இன்று மனங் களிக்கின்றாள்
கல்வியால் கலையால் ஒ

நூற்றாண்டு கண்டு சிரிக்கிறாள்
வாழ்த்துவோம் வணங்குவோம் - அவள்
பாதம் பணிந்து கொள்வோம்
ஆற்று நீரென ஊற்றிய
கல்வியால் உயர்ந்தவர் போற்ற
ஏற்றுவோம் தீபம் எங்கும்
ஒளியால் மிளிரட்டும் பள்ளி
சோதனைகள் பல கடந்து
சாதனைகள் தான்புரிந்து
சரித்திரம் படைக்கின்றாள் -அவளை
வாழ்த்திசை பாடி மகிழ்வோம்.

செக்கநாதன் தொடக்கிய பள்ளி
கைகொடுத்து இந்து போட்
வந்தனர். போயினர் கற்றதால்
பெருமை கண்டவர் ஆயிரமாயிரம்
உரிமையோடு பேசுவோர் பலரிங்கு
சிரிக்கிறாள் இந்து அன்னை
பெருமை அவளுக் கின்று
உரிமை கொண்டாடி மகிழ்வோம்
இந்து அன்னாய் எம் மண்ணில்
ஆழப் பதித்தாய் கால் இங்கு
உயர்வாய் உயர்வாய் உயர்வாய்!

திருமதி. சூ இராசேந்திரம் (அதிபர்)
கிளி / இராமகிருஸ்ண
வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக் கவிதை நோக்கும் போக்கும் 40 கள் முதல் 60 கள் வரை ஒரு பார்வை!

ஆக்கம்
சி.இளந்திரையன்,
கிளி/ பூநகரி மத்திய கல்லூரி
(ஆசிரியர்)

ஈழத்து இலக்கியச் செல்நெறியில் விதந்து குறிப்பிடத்தக்க துறைகளுள் ஒன்று கவிதையாகும். இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ்க் கவிதை என்று பேசும்போது நவீன தமிழ்க்கவிதையையே நாம் கருதுகிறோம். நவீன கவிதை என்பது பழைய பண்டித மரபுவழிப்பட்ட நிலபிரபுத்துவ வாழ்க்கை அம்சங்களை உள்ளடக்கமாகக் கொண்ட பிரபந்த இலக்கியங்களிலிருந்து மாறுபட்டு, நிகழ்கால வாழ்க்கை நிலைமைகளையும் அதன் அடிப்பிறந்த வாழ்க்கை நோக்கங்களையும் கருத்தோட்டங்களையும் உள்ளடக்கமாகக் கொண்ட கவிதைகளைக் குறிக்கும். இத்தகைய நவீன கவிதையை அணிமிக்கும் போக்கு 1930 இல் தொடர்ந்து ஊற்றெடுத்து 1940 இல் பிரக்ஞை பூர்வமாக முகிழ்த்து 1950 இல் ஏற்பட்ட சமூக அரசியல் மாற்றங்களால் வீச்சுப் பெற்று உன்னத நிலையைப் பெறுவதையும் தரிக்கலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மரபுவழிப் புலவர்கள் சிலர் இந்த நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலும் வாழ்ந்தனர். சுன்னாகம் குமாரசாமிப்புலவர், க.மயில்வாகனப்புலவர், ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை, நவநீத கிருஷ்ண பாரதியார், அருள்வாக்கி அப்துல்காதிறுப் புலவர் முதலியோர் இவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பாரதியின் சமகாலத்தவரான பாவலர் துரையப்பா பிள்ளை, சோமசுந்தரப்புலவர், விபுலானந்த அடிகள் ஆகியோரும் பழைய மரபுக்கும் புதியமரபுக்கும் இடையிலான பாலமாக விளங்குகின்றனர்.

ஈழத்து நவீன கவிதையின் நோக்கையும் போக்கையும் கண்டுகொள்வதற்கு பத்தொன்பதாம் நூற்றாண்டின் மரபுத்தளத்தில் நின்று ஓரளவு சமூக சார்புடைய, நெகிழ்ச்சித் தன்மை பொருந்திய பாடல்மரபு துளிர்விடுவதை தி.த சரவணமுத்துப் பிள்ளையின் தத்தை விடு தூதில் காணலாம். இத்தகைய சமூகப்பார்வை பாவலர் துரையப்பாப்பிள்ளை, விபுலானந்தர், சோமசுந்தரப்புலவர் முதலியோரிடம் பட்டுத்தெறிப்பதை அவதானிக்க முடிகிறது. பாவலர் துரையப்பா பிள்ளையின் இதோபதேச, கீதசார மஞ்சரி முதலியவற்றில் சமூகசார்பு, எளிமைப் பண்பு, ஓசைப்பண்பு மிகுந்துள்ளன. யாழ்ப்பாணம் சுவதேசக் கும்மியின் அவையடக்கத்தில் காணலாம். எடுத்துக் காட்டாக

" தேசோப காரங் கருதியிக் கும்மியைச்
செப்புகின் றேனாத லாலெவரும்
லேசாய் விளங்க இலகு தமிழில்
இயம்புவதே நலம் சங்கமின்னே"

இத்தகைய தன்மையினை விபுலானந்த அடிகளின் நீரரமகளிர், கங்கையிலே விடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலை, ஈசன் உவக்கும் இன்மலர்கள் மூன்று போன்ற கவிதைகளில் சமயச் சார்பு காணப்படும். அதேவேளை ஓசைச்சிறப்பும், எளிமையும் கவித்துவ வீச்சும் இடம்பெறு கின்றமையை அறிய முடிகிறது.

பொதுவாகக் கவிதையிலே நவீனத்துவம் என்ற கருத்துநிலை பாரதியுடனேயே ஆரம்பமாகின்றது.

" சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை யெந்நாளுமழியாத
மாகவிதை....."

எனத்தன் கவிதையைக் குறிப்பிடுகின்றார். நவகவிதைக்கு வரைவிலக்கணம் கூறிய பாரதி பாஞ்சாலி சபதத்திற்கு வழங்கப்பட்ட முன்னுரையில் அவரது கவிதைக் கொள்கையைக் காணலாம்.

" எளிய பதங்கள், எளியநடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு அவற்றினை யுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்கு புதிய உயிர் தருவோனாகிறான். ஓரிண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும் படி எழுவதுடன்" என்று

பாரதி குறிப்பிட்ட நவக்கவிதை மரபு ஈழத்தில் 1940 களை அண்டிய காலப்பகுதியிலேயே தோற்றம் பெறுகின்றது. பாவலர் துரையப்பாப் பிள்ளைக்குப் பின்னர் 1930 இல் உருவான ஈழகேசரிக் காலக் கவிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுள் யாழ்ப்பாணன் மு.நல்லதம்பி, சத்தியநாதன் அகிலேஸ்வர சர்மா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஈழகேசரிக் காலத்திலே ஈழத்தின் மற்றொரு நவீன கவிதை ஊற்று மலையகத்திலிருந்து பிரவாகித்திருப்பதனையும் காணலாம்.இவ்விதத்தில் மீனாட்சியம்மாள் நடேசையர் முதலியோர் தொழிலாளர் நிலை பற்றிப் பாடியதனை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய ஊற்றுக்களின் சங்கமிப்பே ஈழத்தில் 1940 இல் நவீன கவிதை பிரவாகித்திருப்பதற்கு வழிவகுத்தது.

ஈழத்தில் நவீன கவிதை தோற்றம் பெற்ற பின்புலத்தில் யாழ்ப்பாணத்தில் (1943 இல்) நிறுவப்பட்ட " மறுமலர்ச்சி சங்கம்" முக்கியபங்கு வகிக்கின்றது. இவ்வழி மறுமலர்ச்சி சங்கம் வெளியிட்ட " மறுமலர்ச்சி" சஞ்சிகைக்கு மிக முக்கியபங்குள்ளது. பாரதியின் கவிதைச் செல்வாக்குக்குட்பட்ட தமிழகத்துக் கவிதை மரபினால் ஈர்க்கப்பட்ட மறுமலர்ச்சிச் சங்கத்துடன் தம்மை அணைத்துக் கொண்ட இளைஞர்கள் சிலர் ஈழத்துத் தற்காலத் தமிழ்க்கவிதைகளின் முன்னவராகத் தோற்றம் பெற்றனர். இவர்களது பிரதான வெளியீட்டு சாதனமாக மறுமலர்ச்சி இதழ் விளங்கியது எனலாம்.

மறுமலர்ச்சி இதழில் கவிதை படைத்தவர்களில் நாவங்குழியூர் நடராசன், சோ.நடராசன் அ.ந.கந்தசாமி, மகாகவி, சாரதா, செ.கதிரேசப்பிள்ளை, யாழ்ப்பாணன் முதலியோர் முக்கிய கவிஞர்களாவர். இவர்களது கவிதைகள் ஆரம்பநிலையில் காதல், இயற்கை கிராமிய வாழ்க்கை முதலான விடயங்களை அனுபவம் சார்ந்து வெளிப்படுத்துபவையாக விளங்கின. இக்கவிதைகளில் பேச்சோசைப் பண்பும், முகிழ்க்கத் தொடங்கியது. இவற்றை ஆய்வாளர்கள் ஈழத்தின் ஆரம்பகால நவீன கவிதைப் பண்புகளாக இனங்கண்டு வந்துள்ளனர்.

மறுமலர்ச்சி (யாழ்ப்பாணம்) சஞ்சிகை தவிர ஈழத்தின் பலபாகத்திலிருந்தும் பல்வேறு இலக்கியச் சஞ்சிகைகள் கவிதை வளர்ச்சிக்கு உதவியுள்ளன. அவற்றுள் (கொழும்பு) பாரதி, (மண்டூர்) எரிமலை (திருகோணமலை முதலிய சஞ்சிகைகள் கவனத்துக்குரியன. இவற்றில் வெளிவந்துள்ள கவிதைகள் நவீன கவிதைக்குரிய வேறுசில பண்புகளைக் கொண்டுள்ளன. மார்க்சிய சித்தாந்தச் சார்புடைய சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குடைய - முற்போக்குச் சார்ந்த கவிதைகள் பிரக்ஞை பூர்வமாக "பாரதி"சஞ்சிகையிலே 1946-1948 முதல் முதலாக வெளிவந்தன. இவ்விதத்தில் கவீந்திரன் (அ.ந.கந்தசாமி) எழுதிய மலையகத் தொழிலாளர்கள் பற்றிய கவிதை விதந்துரைக்க வேண்டியது எடுத்துக்காட்டாக.

" பானையிலே தண்ணீரில் இட்டிருந்த
பழையதனை எடுத்தே உண்டு மிஞ்ச
மானை நிகர் கண்ணாள் தன் மணவாளர்க்கு
மற்றதனை வைத்துவிட்டு விரைந்து சென்று
கானகத்து மூங்கிலிலே வேய்ந்த கூடை
கழுத்தினிலே பின்புறமாய்த் தொங்கவிட்டு
தான் எழுந்து விரைவாள் தன் வேலைக்காக
தன் கண்ணின் துயரத்தைதுடைத்துக்
கொள்வாள் "

-தேயிலை தோட்டத்திலே-
- அ.ந. கந்தசாமி-

இக்கவிதையினை நோக்கும் போது பிரக்ஞை பூர்வமாக ஈழத்து மக்களது பிரச்சினை முதன்முதலாகப் பேசப்படும் போது ஈழத்துக்கவிஞரது சமூகப்பார்வை முதன்முதலாக யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கு வெளியே வெளிப்படுதல், மலையகத் தொழிலாளரது பிரச்சினை நவீன கவிதையூடாக முதன்முதலில் வெளிப்படுத் தல் என்ற விதங்களில் முக்கியத்துவம் பெறுகின்றது.

மறுமலர்ச்சிச் சஞ்சிகை சார்ந்த கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் சாரதா. இவரது கவிதைகளில் நவீன கவிதைகளின் அடிப்படைப்பண்புகளில் ஒன்றான அன்றாட அனுபவத்தின் வெளிப்பாடுகளைக் கொண்டு ள்ளது. இவரது பிரயாண கவிதையை எடுத்துக் காட்டலாம்.

" பிரயாணம் செய்வதென்றால் எனக்கோர் ஆசை
பேசாமல் போய்வருவேன் எங்கென்றாலும்
அரைநாளின் மேலாக ஒருவர் வீட்டில்
ஆறிநிற்ப தென்னியல்புக் கடுக்காதப்பா...."

சாரதாவினுடைய கவிதைகளில் நவீன கவிதைகளின் மற்றொரு பண்பான எதிர்ப்புக் குரல், தொன்மங்களை மறுவாசிப்புச் செய்தல் முதலியனவும் காணப்படுகின்றன.

1940 களில் ஏற்பட்ட சமகால அரசியல் சமூக மாற்றங்கள் ஈழத்தின் கவிதைகளில் பாதித்துள்ளமையைக் காணலாம். இலவசக்கல்வி அறிமுகம் நிறுவனக்கல்வி வருகையால் பாரம்பரியக்கல்வி பாதிக்கப்பட் டமை. முற்போக்குக்கட்சி, கம்யூனிஸ்ற் கட்சி, சோஷலிச கட்சிகளின் தோற்றம், சோல்பரி ஆணைக்குழுவின் வருகை ஈழத்தின் கவிதையிலும் தாக்கம் செலுத்தியுள்ளன. மறுமலர்ச்சி இதமுடன் நெருங்கிய தொடர்புபட்டிருந்தவரான மஹாகவியின் கவிதைப்பயணம் நாற்பதுகள் தொடங்கி எழுபது வரை தொடர்ந்து ஈழத்துக்கவிதை மரபுக்கு வளம் சேர்த்துள்ளது.

" இன்னவைதாம் கவி எழுத
ஏற்றபொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்
சொல்லாதீர் சோலைக்கடல்
மின்னல் முகில் தென்றலினை
மறவுங்கள் மீந்திருக்கும்
இன்னல் உழைப்பு ஏழ்மை உயர்வு
என்பவற்றைப் பாடுங்கள்"

என்ற மகாகவியின் கூற்று ஈழத்துத் தமிழ்க்கவிதையின் நோக்கையும் போக்கை யும் காட்டுகிறது. இவர் பல நூற்றுக்கணக் கான கவிதைகளையும் பொய்மை, சிற்பி ஈன்ற முத்து, கோலம் முதலிய வானொலிப்பா நாடகங்களையும், கோடை, புதியதொரு வீடு முதலிய மேடைப்பா நாடகங்களையும் சடங்கு, கண்மணியாள் காதை, கல்லழகி ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் முதலிய கவிதைகளையும் சிறுவர் கவிதை, சிறுகதை, குறுப்பா முதலியனவும் இவரால் படைக்கப் பட்டவையாகும். மஹாகவி யாழ்ப்பாணத்துக் கிராம மக்களின் வாழ்வைத் தம் கவிதைப் பொருளாகக் கொண்டு யதார்த்த நெறியில் நின்று பழைய யாப்பு வடிவங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சோசைப் பாங்கில் எளிமைப்படுத்தினார். கிராமிய வழக்கச் சொற்களை கவிதையில் பயன்படுத்தி மனித வாழ்க்கையின் ஆழமான நம்பிக்கையையும் மனிதாபிமா னத்தையும் தம்கவிதையில் பிரதிபலித்தார். மரபுத்தளத்தில் நின்று நவீனத்துவத்தை ஏற்படுத்திய இவர் தனக்குப்பின் வந்த பல கவிஞர்களில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தினார். இக்காரணங்களினால் ஈழத்து நவீன கவிதையில் ஒரு பெரிய ஆளுமையாக விமர்சகர்களால் நிலைநிறுத் தப்படுகின்றார்.

மறுமலர்ச்சிக்குழுவினரால் முன்னெடுக் கப்பட்ட தற்காலக்கவிதை மரபு 1950களைத் தொடர்ந்து வீச்சுடன் வெளிவரத் தொடங்கி யது. சமூகப்பார்வை விரிவடைந்தும் தேசிய இனப்பிரச்சினை பாடுபொருளாகியதும் இக்கவிதை வீச்சுக்குரிய காரணங்களாகும். 1940 களில் உருவான கவிதை மரபோடு கைகோர்த்து 1950 களில் ஒரு கவிஞர் பரம்பரை உருவாகியது. இவர்களுள் நீலவாணன், சில்லையூர் செல்வராசன், அண்ணல், புரட்சிக்கமால் முதலியோர் விதந்து குறிப்பிடத்தக்கவர்கள். 1940 களில் தோன்றிய மஹாகவியும் ஐம்பதுகளில் உலாவரத்தொடங்கிய முருகையன், நீலவாணன் ஆகியோர் ஈழத்துத் தமிழ்க் கவிதையின் போக்கிலும் நோக்கிலும் பாரியதாக்கத்தினை ஏற்படுத்தியவர்களாவர். அவர்கள் ஈழத்துத் தமிழ்க்கவிதையின் மும்மூர்த்திகள் என்று அழைக்கப்படுகின்ற னர். அவர்கள் மூலம் ஈழத்துதமிழ்க் கவிதையின் உயிரோட்டமான பயணம் ஆரம்பிக்கப்பட்டது எனலாம்.

ஈழத்துத்தமிழ்க்கவிதை வரலாற்றில் 1950 களில் ஏற்பட்ட தேசிய உணர்வு, மொழிப்பிரச் சினை முதலியன இக்காலக்கவிதைகளில் உருவ உள்ளடக்கத்தினை பாதித்துள்ளன. எடுத்துக்காட்டாக சச்சிதானந்தனின்

"தேவர்க்கு அரசு நிலை வேண்டியதில்லை-அவர்
தின்னும் சுவை அமுது வேண்டியதில்லை
சாகில் தமிழ் படித்துச் சாகவேண்டும்- என்
சாம்பலிலும் தமிழ் கமழ்ந்து வேக வேண்டும்

என்னும் கவிதையினைக் குறிப்பிடலாம்.

ஒருவகையில் சமூக அரசியல் விழிப்புணர்ச்சி தோன்றிய காலப்பகுதியாகக் கொள்ளலாம்.

விஞ்ஞானப் பட்டதாரியான முருகையன் கவிதைகளில் சிந்தனைக் கனதியே பிரதான அம்சமாகும். இவர்பல கவிதைகளையும் பாநாடகங்களையும் காவியத்தையும் தந்தவர் நெடும்பகல் இவரது காவியமும் கவிதையும் அடங்கிய தொகுப்பு நூலாகும். இவரது சமூக முற்போக்குச் சார்ந்த கவிதைக்கு எடுத்துக் காட்டாக " மாடும் கயிறறுக்கும்" என்ற கவிதையினைக் கூறலாம்.

" மாடு மாடு என்று பல ஏசி
திட்டிக் கொட்டித் துரத்தி விரட்டி
சாமம் வரைக்கும் சாறு பிழிந்து
சக்கை வாங்குவார்கள்
பொடியனை "

முருகையனின் கவிதைகள் முற்போக்குச் சிந்தனை உடையனவாகவும் விஞ்ஞான அறிவின் செல்வாக்கைக் கொண்டதாகவும் குறியீடு, படிமப் பாங்கு உடையதாகவும் காணப்படுகின்றது.

ஐம்பதுகளில் எழுதத் தொடங்கிய நீலவாணன் 1975 வரை பயணம் செய்தார். இவர் ஏராளமான கவிதைகளையும் சில பாநாடகங்களையும் வேளாண்மை என்ற முடிவுறாத காவியத்தையும் படைத்துள்ளார். நீலவாணன் தனது ஆரம்பகாலக் கவிதை களை பாரதியின் தாக்கத்திற்கு உட்பட்டு காதல் கவிதைகளைப் படைத்த போதும் 1960 களில் கிழக்கிலங்கைக் கிராமங்களின் வாழ்க்கை முறைகள் முரண்பாடுகள் பலவற்றையும் மட்டகளப்புப் பேச்சோசைப் பாங்கில் வெளிப்படுத்தியவர். இவர் காலத்தவரான சில்லையூர் செல்வராசன் அங்கத பாணியிலான கவிதைகள் எழுதுவதில் வல்லவராக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடைக்கவிஞரான இவர் சிலேடை போன்ற மொழிவித்தைகளிலும் அக்கறை காட்டியுள்ளார்.

இவர் காலத்தில் இராஜபாரதி, அண்ணல் முதலியோர் உவமைச் சிறப்புமிக்க கவிதை களைப் படைத்துள்ளனர்.

ஈழத்தில் ஐம்பதுகளின் பிற்பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் குறிப்பாகத் தனிச்சிங்களம் மட்டும் என்ற அரசியல் கோசத்தின் எதிரொலியாகத் தமிழ்மக்கள் மத்தியில் மொழி உணர்வும் இனரீதியான அரசியல் எழுச்சியும் தீவிரமடைந்தன. இதனால் மொழி உணர்வு வெளிப்பாட்டுக் கவிதைகளுக்கு களம் அமைக்கும் பணியில் சுதந்திரன் தீவிரமாக இறங்கியது. அக்காலக்கவிதைகளின் ஊடாக சமகாலக் கவிஞர்களின் சமூக அரசியல் சார்புகளை யும் அவர்கள் இலக்கியம் பற்றிக் கொண்டி ருந்த கருத்து நிலையும் அறியலாம்.

" வானைப் பார்த்து நிலவைப் பார்த்து
வையங் களிக்கப் பாடும் புலவ
மானம் இழந்த தமிழர் இன்று
வாழும் நிலையை எண்ணிப்பாடு "

என்னும் கவிதை இதற்குச் சான்றா கின்றது. இந்நிலையில் யாழ்ப்பாணத்து சமூகப் பிரச்சினையான சாதிப்பிரச்சினையும் கவிஞர் பாடுபொருளாயின. பசுபதி, சுபந்திரன், மஹாகவி முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள். மஹாகவியின் " தேரும் திங்களும்" விதந்து குறிப்பிடத்தக்கது. முற்போக்குச் சித்தாந்தங்களை உள்வாங்கி சமூக நிலைப்பட்ட கவிதைகளும் படைக்கப் பட்டன. எம்.ஏ.நுஃமான் சண்முகம் சிவலிங்கம் , புதுவை இரத்தினதுரை முதலானோர் கவிதையில் ஈழத்தில் நிலவிய முதலாளி. தொழிலாளர் பிரச்சினைகள், சுரண்டல்கள், சமூக ஏற்றத்தாழ்வுகள் , ஏழை மக்களின் வாழ்வியல் அவலங்கள் முதலானவை மேலோங்கியுள்ளன.

அதேவேளை முற்போக்குச் சித்தாந்தங் களுடன் இணையாது சமூகச் சீர்திருத்தக் கருத்தை படைத்தவர்களாக காரை சுந்தரம் பிள்ளை கவிஞர் நந்தவனம் மு.பொன்னம்பலம் பிள்ளை முதலியோரைக் குறிப்பிடலாம்.

1970 களில் ஈழத்து தமிழ் கவிதை மரபு மிக விரைவாகப் பரிணமிக்கிறது. பலத்த வாதப்பிரதிவாதங்களின் பின் இம்மரபுநிலை பெறுகிறது. தமிழகத்துப் புதுக்கவிதைகளை ஆதர்ச்சமாகக் கொண்டு ஈழத்தில் கவிதை படைக்கப்பட்ட போதும் தமிழகத்துப் புதுக்கவிதைகளை விட ஈழத்துப் புதுக்கவிதைகள் தரமானது என்று கருதப்படுகிறது. இதற்கு கவியரங்கக் கவிதைகளும் கைகொடுத்து உதவியுள்ள மையை மறக்க முடியாது. இம்மரபைத் தொடர்ந்து பேணுபவர்களாக த.இராமலிங்கம், வ.ஐ.ச.ஜெயபாலன் முதலியோர் காணப்படுகின்றனர். எண்பது களில் ஈழத்துக்கவிதை பெரும்பாலும் புதுக்கவிதையாக மாறிவிடு கிறது. இதற்குச் சமகால சமூக அரசியல் நிலை கைகொடுக்கி றது. தொடர்ந்து புலம்பெயர் கவிதைகள் பெண்ணிய கவிதைகள் , மொழி பெயர்ப்பு கவிதைகள் என ஈழத்து தமிழ்க்கவிதை செழுமை அடைகிறது.


எனவே ஈழத்துத்தமிழ்க் கவிதை வரலாற்றில் 1940 முதல் 1960 வரையான காலப்பகுதி மிக முக்கியம் பெறுகின்றது. ஏனெனில் பண்டித மரபு நெறிப்பட்ட நிலப்பிரபுத்துவ வாழ்க்கை அம்சங்களை உள்ளடக்கிக் கொண்ட பிரபந்த இலக்கிய மரபில் இருந்து விடுபட்டு சமகால நிலைமைகளையும் முரண்பாடுகளையும் கொண்ட நவீன இலக்கிய மரபு 1940 களில் உருப்பெறுவதும் இதற்கான அடி பத்தொன் பதாம் நூற்றாண்டில் இடப்படுவதும் அதனைத் தளமாகக் கொண்டு நவீன கவிதை மரபு ஊற்றெடுத்து ஐம்பதுகளில் பிரவாகித்து அறுபதுகளில் வீறுநடை போடுவதையும் பின்னர் ஒருவாறு புதுக்கவிதையாகவே ஓட்டம் எடுப்பதையும் காணலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளத்தின் வெளி மேற்பரப்பளவுற்கான சூத்திரம் - புதிய சிந்தனை

கோளத்தின் வெளி மேற்பரப்பிற்கான $= 4\pi r^2$
பைதகரசின் சூத்திரம்



முழுக்கோளத்தின் வெளிமேற்பரப்பளவு $= 2x$ அரைக்கோளத்தின் விளைமேற்பரப்பளவு




அரைக்கோளத்தின் வளைமேற்பரப்பளவு

$$= \pi r x \frac{\pi r}{2}$$
$$= \frac{(\pi r)^2}{2}$$

முழுக்கோளத்தின் பரப்பளவு

$$= 2x\frac{(\pi r)^2}{2}$$
$$= (\pi r)^2$$


S. Gunaseelan
ஆசிரியர்
கிளி / வேரவில் இந்து மகா வித்தியாலயம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம்:- வை.மதுஜா
மாணவி
தரம்-08
கிளி / வேரவில் இ.ம.வி

நம் அன்னையாம் தமிழ் மொழியில் காலத்திற்குக் காலம் பல்வேறு நூல்கள் தோன்றிய வண்ணமுள்ளன. அவற்றுள் கால வெள்ளத்தில் மறைந்தன சில உண்டு. காலத்தை வென்று வாழும் சிறப்புக்குரியன சிலவும் உண்டு அத்தகு சிறப்புக்குரிய ஈடு இணையற்ற நூலாக போற்றப்படுவது திருக்குறள் ஒன்றே ஆகும்.

திருவள்ளுவர் இரண்டு அடிகளால் உலக மக்கள் அனைவரதும் உள்ளங்களை அளந்துள்ளார் என்றால் அது மிகையல்ல. இதனாலேயே புரட்சிக்கவி பாரதியும் 'வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' எனப்போற்றினார். வள்ளுவன் தந்த முதற் குறளே பரந்த நோக்குடையதாக உலக சமுதாயம் அனைத்தையும் ஒன்றாகக் கருதும் பண்புடையதாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்துடையதாக மிளிர் வதைக் காணலாம்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்கே உலகு'




# நான் விரும்பும் நூல் திருக்குறள்

காலத்தை வென்று வாழும் இந்நூல் உலகமக்கள் அனைவருக்கும் வழிகாட்டும் பெருமைக்குரியது. இந்நூலே நான் விரும்பும் நூலாகும். அதற்குரிய காரணங்கள் பல உண்டு அவற்றை இக்கட்டுரை மூலம் தரவிரும்புகின்றேன்.

திருமால் ஈரடியால் உலகளந்தார் என்றுரைப்பார் புராண வித்தகர்கள். ஆனால் என்கின்றார் வள்ளுவர். இது இன்றைய நிலையில் மிக முக்கியமான நோக்கத்திற் குரிய கருத்தாகும். சமய பொதுமைக்கும் முற்போக்குச் சிந்தனைக்கும் தொடர்பாக அமைகின்றது. திருக்குறள் குறளின் அமைப்பு, அதன் சீரிய சிந்தினைகள் மக்கள் மனதில் பதிக்கும் வகையில் அமைந்துள்ளன எனலாம். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமத்துப் பால் எனும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. 133 அதிகாரங்களையும் அதிகாரம் ஒன்றுக்கு 10 பாடல்கள் வீதம் 1330 குறட்பாக்களையும் கொண்டு விளங்குகின்றது. திருக்குறளின் அறத்துப்பால் 38 அதிகாரங்களையும் பொருட்பால் 70 அதிகாரங்களையும் காமத்துப் பால் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளது. இது அற நூலாகவும் வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியுரைக்கும் சீரிய இலக்கியமாகவும் திகழ்கிறது. வாழ்க்கைக்குச் சிறந்த வழிகாட்டியாகத் திருக்குறள் விளங்குகின்றது.

மனித வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்து வாழும் வழி இது என வையகத்தாருக்கு வள்ளுவர் வழி காட்டுகின்றார். அவரது திருக்குறள்கள் ஒவ்வொன்றும் மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதாகவே அமைகின்றது.

'தோன்றிற் புகழோடு தோன்றுக
அஃதிலர் தோன்றலித் தோன்றாமை
நன்று'

(குறள் 291) என்கிறார் . தோன்றினால் புகழோடு தோன்றுக எனக் கூறும் வள்ளுவர் புகழோடு தோன்றிப் புகழோடு வாழ்ந்து புகழோடு மறைதலே மனிதராய்ப் பிறந்தோருக்கு மாண்புடைத்து என அறிவுரை பகர்கிறார். மனிதராய் பிறந்தோர் வாய்மையுடையோராய் வாழ வேண்டும் வாய்மையே எல்லாவற்றிலும் உயர்ந்ததும் சிறந்ததுமான அணிகலமாகும். அதன் பண்பினைக் கூற வந்த வள்ளுவர் "வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும் தீமை இல்லாத சொலல்"(குறள் 291) என அழகுற விளக்குகிறார். நிகழ்ந்ததை நிகழ்ந்தபடி அல்லது கேட்டதைக் கேட்டபடி கூறுதல் அன்று வாய்மை கேட்போருக்கு ஒரு சிறிதேனும் தீமை தராத ஒன்றே வாய்மை என்பது வள்ளுவர் தரும் கருத்தாகும்.

---

விருப்புடனே வித்தை பல - அள்ளிவழங்கிடும்
பாடசாலையாம் நம் பாடசாலை!
அரவணைக்கும் நல்லதிபர்
அகமகிழ்ந்து அறிவூட்டும்
நல் ஆசான்கள்

ஆக்கம்:- ஈ.பவித்திரா
மாணவி
தரம்-05
கிளி / வேரவில் இ.ம.வி

இற்றைவரை சிறப்புடனே
இனிதாய் விளங்கும் - நம்
பாடசாலை
ஏணிப் படிகளிலே எம்மை
உயர்த்தி விட்டு
குறையாத கல்வி வழங்கிடும்
நம் பாடசாலை
நூற்றாண்டு காணும்
நம் பாடசாலையை
வாழ்த்துவோம் போற்றிடுவோம்.



## எனது பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்





வேலாவில்

முத்துக்குமாரசாமி வித்தியாசாலை

# பிரவேசகொண்டாட்டம்.

ஐயா,

நிகழும் ஆனந்த வருஷம் ஆவணிமீ உ[illegible] [illegible]
இரவு பத்து மணியளவில் வருந்தபாதகர்த்தத்தில் புதிதாகக் கட்டப்பட்ட
பிரவேசஞ்செய்து அடுத்த புதன்கிழமை இரவு [illegible]
சைவப்பிரசங்கமும் சைவப்பிரபந்தங்கள் [illegible]
நடத்தப்படும். அத்தருணம் தாங்களும் வந்து [illegible]
[illegible]
[illegible]

ஆனந்த வருடம் ஆவணிமீ உ[illegible] | இங்ஙனம், [illegible]

14 Sep 1914

யாழ்ப்பாணம் சுருணையந்திரசாலை.

15 Sep 1914 [illegible]

S. T. ELANCKUMARAN
Lecturer - SLTES class - III
National College of Education
Vavuniya




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
பல்லவராயன்கட்டு, பூநகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org